# மாயமோ நான் அறியேன்



அருணா நந்தினி

# மாயமோ நான் அறியேன்




சௌம்யாவிற்கு தலைக்கு மேல் வேலை இருந்தது. மதிய உணவை சீக்கிரம் முடித்துக் கொண்டு வந்தவள்.. தன் வேலையில் மூழ்கிப் போனாள்.

அந்த நேரத்தில்தான் அவளுக்குப் போன் வந்தது. வீட்டிலிருந்து அம்மாதான் பேசியது. குரலில் பதற்றம் தெரிந்தது.

"சௌமி.. உடனே புறப்பட்டு வாயேன்..."

"என்னம்மா விஷயம்.." வேலை மத்தியில் இதென்ன தொல்லை என்ற எரிச்சலுடன் கேட்டாள்.

"பேசறதுக்கு நேரம் இல்லைடீ.. நீ உடனே புறப்பட்டு வா... சொல்கிறேன்..."

அப்படிச் செல்லும்போதே ஏதோ சீரியஸ் விஷயம் என்று தெரிந்தது. அம்மாவுக்கு உடம்பு சரியில்லையோ.. இல்லை.. யாராவது வீட்டிற்கு வந்து.. ஊகூம்... இருக் காது.. வாடகையிலிருந்து ஒன்றையும் பாக்கி வைக்காமல் கொடுத்து விட்டோமே.. பின்னே.. எதுவாக இருக்கும்.

பொறுமையிழந்தவளாய் தாயிடம் கேட்டாள். "என் னன்னு சொல்லும்மா.. நினைத்த போதெல்லாம் புறப் பட்டு வரமுடியாதும்மா... தெரிஞ்சுக்கோ.."

"உன் அக்காவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார் களாம்.. அவள் வீட்டிலிருந்து போன் வந்தது.. அதைக் கேட்டதும் நான் ஆடிப்போயிட்டேன்டீ... உடனே புறப் பட்டு வா... நீ வந்ததும் புறப்படணும்" அதற்கு மேல் பேசாமல் வைத்துவிட்டாள் தாய்.

அதைக் கேட்டு அவளுக்கு அதிர்ச்சியோ.. திகைப்போ வரவில்லை. ஏனோ சலிப்புதான் வந்தது.

ஆரம்பத்தில் அக்காவிற்கு காயம் பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரியில் இருக்கிறாள்.. கையில் பிராக்சர்.. கட்டுப் போட்டிருக்கிறார்கள் என்று கேட்டதும் துடித்துப்போய் ஓடுவாள்.

கட்டுடன் இருக்கும் அக்காவைப் பார்க்கும்போது மனம் வலிக்கும்.. வேதனையில் தவிப்பாள்.

ஓரிரு முறையாக இருந்தால் சரி...

ஆனால் அதுவே வழக்கமாகிப் போய்விட்டதும்... அக் காவைப் பார்க்க எரிச்சலாக இருந்தது.



தினமும் சாகிறவர்களுக்கு அழுவார்களா... என்ன... பார்த்துப் பார்த்து உள்ளம் மரத்து விடுமே.. அதுமாதிரி தான்..

வாயில்லாப் பூச்சியாய்.. தன் கணவனின் அடிகளைத் தாங்கிக் கொண்டு.. தன் கையாலாகாத தனத்தை கண்ணீரில் காட்டும் அக்காவைப் பார்க்க ஆத்திரமாய் வரும்.

ஏன்க்கா... இப்படி அநியாயமா சாதுவா இருக்கே.. குனியக் குனியக் குட்டுவார்கள்னு தெரியாதா உனக்கு.. ஓடுகிற வரைக்கும் தான் துரத்துவார்கள்.. நின்று.. திரும்பி முறைத்துப் பார்... அப்படியே அடங்கிவிடுவார்கள்.. என்று கூடச் சொல்லிப் பார்த்து விட்டாள்.

ஊகூம்... சாது மிரண்டால் தானே..

அதான்.. முதலில் "அய்யோ.. அக்காவிற்கு அடிப்பட் டிருக்கிறதா.." என்று துடித்தவள்.. பின்பு.. என்ன அக்கா விற்கு அடிப்பட்டிருக்கிறதா.." என்று பரிதாபம் அடைந்து.. இப்போது.. "ஓகோ.. அப்படியா... சரி.." என்று சாதாரண மாய் எடுத்துக் கொள்ளும் அளவில் இருந்தாள்.

அதற்காக சந்தியா மீது பாசம் இல்லை என்று சொல்ல முடியாது. அக்காவின் மீது கொள்ளைப் பிரியம்தான்...

ஆனால்.. கல்யாணம் ஆகி ஆறு வருடங்கள் ஆகியும்.. முதுகெலும்பு இல்லாத பிராணியா இருக்கிறாளே என்ற கோபமும் ஆவேசம் தான் அதிகம்.

ஏன்க்கா.. அந்த வீட்டில் அவஸ்தைப் பட்டுக் கொண்டு இருக்க வேண்டும்... பேசாமல் வந்துவிடு.. உன்னையும் குழந்தைகளையும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றும் சொல்லிப் பார்த்தாள்.. மாட்டேன் என்று பிடிவாதம் வேறு.

அத்தனை செலவு பண்ணிக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தபின்... அதை உதறிவிட்டு வந்து.. பாரமாய் இருக்க விரும்பவில்லையாம்.. அடுத்து 'வாழா வெட்டி' என்று மற்றவர்கள் தூற்றுவார்களாம்.. அதுமட்டுமல்ல.. பெத்தது இரண்டும் பொண்ணுங்க.. அவர்களுடைய எதிர்காலத்துக்காகவாவது அத்தனை கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள வேண்டுமாம். பற்களை நறநறவென்று கடித்தாள் சௌம்யா.

இதற்கு அம்மாவும் ஒத்து ஊதுகிறாள்... கஷ்டமோ நஷ்டமோ.. அவள் அங்கேதான் இருக்கணும்.. அடிக்கிற கைதான் அணைக்கும் என்று வியாக்கியானம் வேறு.

அங்கே அரவணைப்பு ஏது.. வெறும் அடிமட்டுமே...

சே! பெண்களுக்கு சகிப்புத்தன்மை வேண்டும்தான். அதற்காக அநியாங்களைப் பொறுத்துப் போகவேண்டும் என்று இருக்கிறதா..

அந்த பூமாதேவியே.. சில சமயம் பொறுமையிழந்து சிலுப்பிக் கொள்கிறாள்... அதனால்தான் பூகம்பமும்.. சுனாமியும் வருகிறது..பொறுமைக்கு உதாரணம் என்று சுட்டிக் காட்டப்படும் பூமித்தாயே தன் கோபத்தைக் காட்டுகிறாள் எனும்போது.. சாமானிய மனிதன்.. இல்லை.. மனுஷி காட்டுவதில் தப்பேது...

காட்டக்கூடாதாம்.... பெண்கள் அடங்கிப்போக வேண்டுமாம்.. காலம் காலமாய் இப்படி பெண் இனத்தை அடக்கியே வைத்து.. உணர்ச்சியில்லா ஜடமாய் ஆக்கிவிட்டார்களே என்ற கொந்தளிப்பு சௌம்யாவிற்கு...

கல்லானாலும் கணவன்.. புல்லானாலும் புருஷன் என்ற பழமொழியில் அவளுக்கு உடன்பாடு இல்லைதான்.



சொல்லப்போனால்.. அவற்றை இன்னும் மாற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைப்பாள்.

கழுதையானாலும் கணவன்.. பேயானாலும் புருஷன் என்று கழுதையையும் பேயையும் கட்டிக்கொண்டு அழ என்ன தலையெழுத்தா.. பெண்களுக்கு நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து வாழ கற்றுத் தர வேண்டும்.. அப்போதுதான் ஆணாதிக்கத்தை துணிவுடன் எதிர்கொள்ளவும்.. அதை சமாளித்துக் கொள்ளவும் முடியும்...

எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன.. பெண்களின் கண்ணீருக்கு விடிவே இல்லை.. ஆணாதிக்கமும் ஒழிந்த பாடில்லை.

அன்று அம்மா... இன்று அக்கா.. சே.. பெண்களுக்கு சகிப்புத்தன்மை இருக்கவேண்டும்தான்...அதற்காக அநியாயங்களைப் பொறுத்துப்போக வேண்டும் என்று இல்லையே...

''என்னடீ விஷயம் சௌமி.. முகம் ஒரு மாதிரியா இருக்கிறது..'' அவளுடன் பணியாற்றும் ரேவதி விசாரித்தாள்.

''ப்ச்சு.. அக்காவிற்கு உடம்பு சரியில்லையாம்.. ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்களாம்... தகவல் வந்திருக்கிறது. அதைப் போனில் சொல்லி.. உடனே வா என்று சொல்கிறாள் அம்மா. இத்தனை வேலைகளை விட்டுவிட்டு நான் எப்படிப் போவேன்.. அதான்.. குழப்பத்தில் இருக்கிறேன்..'' என்றாள் சௌம்யா.

''இதில் என்ன குழப்பம்.. முதல்ல அக்காவைப் போய் பார் சௌமி..ஆஸ்பத்திரியில் இருக்கிறாங்க என்றால் ஏதாவது சீரியஸா இருக்கலாம்.. இந்த நேரத்தில் வேலை..

அது இது என்று தயங்காதே... எல்லாவற்றையும் ஒதுக்கி வச்சுட்டுப் புறப்படு... நாளைக்கு பண்ணுவியாம்.. முடிஞ்சா நானும் உனக்கு 'ஹெல்ப்' பண்ணுகிறேன்.. ம்ம்... புறப்படு...'' என்று சொல்லிவிட்டு.. அவளும் சௌம்யாவுக்கு உதவ வந்தாள்.

கம்ப்யூட்டரை 'ஷட் டவுன்' பண்ணிவிட்டு அவளும் கிளம்பினாள். நல்லவேளையாய் 'எம்.டி' எதுவும் பேசாமல் 'ஓகே' என்று சொல்லிவிட்டார்.

வெளியே வந்து ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு நேரே வீட்டிற்கு போனாள் சௌம்யா. ஆட்டோ விலிருந்து இறங்கியது தான் தாமதம்... பாக்கியம் அவளைப் பார்த்துவிட்டு அழ ஆரம்பித்துவிட்டாள்.

''என்ன ஆச்சம்மா... கொஞ்சம் விஷயத்தை சொல்லி விட்டு அழேன்..''என்றாள் சௌம்யா பொறுமையிழந்து போய்...

''எனக்கும் சரியாத் தெரியாதுடீ.. திடீர்னு சந்தியாவோட மாமனார் பக்கத்து வீட்டுக்குப் போன் செய்து.. சந்தியாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கோம்.. விஷயத்தை அவங்க வீட்டில் சொல்லிடுங்கன்னு சொன்னாராம்.. எனக்கு கையும் ஓடலை.. காலும் ஓடலை..'' என்றாள் பாக்கியம்... கண்ணீரைத் துடைத்தவாறு...

''சரி... எந்த ஆஸ்பத்திரின்னு சொன்னாரா... அது தெரியாமல் எங்கே போவது.. இரு வருகிறேன்..'' என்ற வள்.. சற்றுத் தொலைவில் இருக்கும் 'பூத்'தை நோக்கி சென்றாள்.

பிடிக்காவிட்டாலும்... பேச வேண்டிய நிர்பந்தம்.. சந்தியாவின் வீட்டிற்கு போன் செய்து மருத்துவமனையின் பெயரைக் கேட்டாள்.



பேசியது சந்தியாவின் மாமனார்.. அழுத்தக்காரர்... அடிப்பட்டிருப்பது சொந்த மருமகள் என்ற வேத னையோ.. வருத்தமோ இன்றி.. பட்டும் படாமல் பதில் சொன்னார்.

''வரலட்சுமி நர்ஸிங் ஹோம்!''

பரவாயில்லை... அத்தனை மோசமான ஆஸ்பத்திரி யில்லை தான்.. அந்த லொகாலிட்டியில்.. நல்ல பெயர் வாங்கிய ஆஸ்பத்திரி.

அதே சமயம்.. கணிசமான தொகையை 'பில்'லாக போட்டு கறந்து விடுவார்கள் என்ற பதைப்பும் உண் டானது நிச்சயம்.. அந்த மனுஷன். அக்காவின் புருஷன் என்ற பெயரில் இருக்கும் இரண்டு கால் மிருகம் கட்ட மாட்டான்.. பில்லை மெல்ல இந்த பக்கம் தள்ளப் பார்ப் பான்... அந்தத் தொகை இவள் தலைமேல் தான் விழும்.. அதுமட்டும் நிச்சயம்.. இது எப்போதும் நடக்கும் விஷயம் தான்.

விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள்.

அக்காவிற்கு விடிவுகாலம் வருகிறதோ இல்லையோ தனக்கு இல்லவே இல்லை.

தாயையும் அழைத்துக் கொண்டு அதே ஆட்டோவில் புறப்பட்டாள்.

வழியெல்லாம் தாயின் புலம்பலைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டு வந்தாள் சௌம்யா.

பெற்ற வயிற்றின் தவிப்பு அது.

பாவம்.. அம்மாவும் என்ன சுகத்தைக் கண்டாள்... சின்ன வயசில் கல்யாணம்... அடுத்தடுத்து மூன்று பிள்ளை

களைக் கொடுத்துவிட்டு... என் பொறுப்புத் தீர்ந்தது என்று குடும்பத்தை நிராதரவாய் விட்டு விட்டு ஓடிபோய் விட்டான் தாலிகட்டிய மகராஜன்.

அம்மாவிற்கும் சாமர்த்தியம் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.. கணவனைக் கட்டி வைக்கும் கலையறியாத வெகுளி.

போன ஆள் எங்கிருக்கிறார்..என்ன செய்கிறார். அவர் இருக்கிறாரா.. இல்லையா.. தனியாகவா.... வேறு ஒரு குடும்பம் அமைத்துக் கொண்டா என்று எதுவும் தெரிந்து கொள்ளாமல் பரப்பிரம்மமாய் வாழும் பேதை.. அம்மா விற்கு பிள்ளைகள்தான் உலகம்.. தாயை நினைக்கையில் பரிதாபமாய் இருந்தது.

அவளுக்குத் துன்பங்கள் என்றும் தொடர்கதை தான்.. தினமும் ஒரு பிரச்சனை அவளை வாட்டும். அம்மாவின் முகத்தில் கவலை ரேகைகள் நிரந்தரமாய் விழுந்து விட்டது.

அவளது முகத்தில் சிரிப்பைப் பார்த்ததில்லை... எப்போதும் எதையாவது நினைத்து கலங்குவாள்.

தொலைந்து போன கணவனை.. புகுந்த வீட்டில் துன்பப்படும் அக்காவை.. பொறுப்பு உணராமல்.. விளை யாட்டுத்தனமாய் இருக்கும் மகனை... வீட்டுக்காக ஓடாய் உழைக்கும் இளைய மகளை... இப்படி எல்லோரையும் நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் அவளுக்கு.. தன்னைப்பற்றிய சிந்தனை இல்லவே இல்லை.

சௌம்யாவிடம் சொல்லுவாள்.

"உனக்கும் கல்யாணம் ஆகிவிட்டால்.. அக்காடான்னு இப்பேன்டீ... சௌமி.. உனக்கும் வயசு ஏறிக் கொண்டே



போகிறது... காலா காலத்தில் முடித்துவிடவேண்டும்" அதைக்கேட்டு கையெடுத்துக் கும்பிட்டாள் சௌம்யா.

"என்ன விட்டுவிடும்மா.. எனக்கு இந்தக் கல்யாணம் கண்றாவியெல்லாம் வேண்டாம்.. தெரிஞ்சும் பாழும் கிணத்தில் விழச் சொல்கிறாயா.. புதை மணலில் குதிக்கச் சொல்லு.. தயார்... இந்தக் கல்யாணம்.. வேண்டவே வேண் டாம்.." என்றாள் உறுதியுடன்.

"எத்தனை நாள் இப்படிக் கல்யாணம் இல்லாமல் இருப்பே.. பெண்ணிற்கு கல்யாணம் அவசியம்மா."

"ஆகா.. ரொம்ப அவசியம்.. ஆமாம்.. நீயும்.. அக்காவும் கல்யாணம் பண்ணிக்கொண்டு என்ன சாதித்தீர்கள்.. பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டது தான் பெரிய சாதனை.. மற்றபடி பூஜ்யம்... உன் கடந்த கால வேதனை களையும்.. அக்கா படும் கஷ்டங்களையும் பார்க்கும்போது 'கல்யாணம்' என்ற வார்த்தையே கசக்கிறது. ஆண் ஜென்மங்களைப் பார்க்கும்போது எரிச்சலாக வருகிறது. தயவு செய்து என்னை இப்படியே விட்டுவிடும்மா.. அது போதும்" அவள் குரலில் இருந்த உறுதியைப் பார்த்து விட்டு பாக்கியம் அடங்கி விட்டாள்.

"என்னடீ.. நான் என்ன சொல்கிறேன் என்பதை காதில் வாங்கிக் கொள்ளாமல்.. எங்கோ நினைவை வைத்துக் கொண்டு வருகிறாயே..." அவளை உலுக்கியது போல வந்தது அம்மாவின் வார்த்தைகள்.

கவனத்தை திருப்பினாள் சௌம்யா.

"என்னம்மா கேட்டே..."

"இத்தனை நேரம் நான் பேசினது எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காட்டம் தானா.. இங்கே தொண்டை

வரள.. என் வேதனையைப் புலம்பிக் கொண்டு வரு கிறேன். நீ அதைக் காதில் போட்டுக்காமல்...''

''சரி.. என்னன்னு சொல்லும்மா... ப்ளீஸ்..''

''உன் அக்காவிற்கு ஏதும் ஆகிடாதே.. அதை நினைச்சா.. எனக்கு வயித்தைக் கலக்கிறதுடீ... சௌமி..''

''அக்காவிற்கு ஒண்ணும் இருக்காதும்மா.. கவலைப் படாமல் வா..'' என்று வாய் சொன்னாலும்.. ஒருவேளை.. அடிபலமாய் பட்டிருந்தால்.. பயம் உள்ளுக்குள் எலியாய் பிராண்டியது.

மனதில் படபடப்புடன் அந்த நர்ஸிங் ஹோமிற்குள் சென்றனர்.

சந்தியா ஜெனரல் வார்டில் சேர்க்கப்பட்டிருந்தாள்... தலையில் பலத்த கட்டுடன்... நினைவிழந்து கிடந்த வளைப் பார்க்கும்போது.. சௌம்யாவிற்கு தொண்டை அடைத்து வந்தது.. துக்கம்..

அவள் நினைத்தது போல சாதாரண அடியில்லை என்று தெரிந்தது.

தாங்கியிலிருந்து 'டிரிப்ஸி'ன் வழியே மருந்து போய் கொண்டிருந்ததாலோ என்னவோ.. வலியை மறந்து கிடந்தாள் அவள்.

அவளை அந்த நிலையில் பார்த்ததும் பாக்கியம்,

'ஓ!'வென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

கண்களில் கண்ணீர் தளும்ப.. அருகே நின்றிருந்த மாமியாரைப் பார்த்துக் கேட்டாள் சௌம்யா.

''என்ன நடந்தது ஆன்ட்டி.. அக்காவிற்கு எப்படி அடிப்பட்டது. வழக்கம் போல உங்க பிள்ளை அடித்து



விட்டாரா... உண்மையைச் சொல்லுங்கள்...'' உரத்த குரலில் அவள் கேட்க...

அந்த அம்மாள் என்ன சொல்வது என்று தெரியாமல் திரு திருவென்று விழித்தாள். அவரைப் பார்க்கையில் பாவமாக இருந்தது.

அந்த வீட்டில் வாயில்லாப் பூச்சியாக இருப்பவள் அந்த அம்மாள்.. அக்காவிற்கு அவர்தான் ஆதரவு என்றும் தெரியும்...

கணவனின் கோபத்திற்கும்.. மகனின் ரௌத்ரத் திற்கும்... அவராக இருக்கக் கண்டு சமாளித்துக் கொண்டு அமைதியாக நாட்களைக் கடத்துகிறார்.

அவரது இளைய மகன் சம்பத்.. தாயைப்போல பொறுமைசாலி.

அவரைக் கேட்டால் தெரியும்..

இந்த மாதிரி அக்காவை அடித்துப் போட்டிருக்கிறானே அந்த மனுஷன்.. ஊகூம்.. மனித உருவில் இருக்கும் ராட்சசன்..

செய்வதையும் செய்துவிட்டு.. இங்கே அக்காவைக் கொண்டு வந்து போட்டுவிட்டு.. கைத்துடைத்துக் கொண்டாரா... பற்களைக் கடித்தாள்.

அந்த ஆளை சந்தித்து நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போல நாலு வார்த்தை சொல்ல வேண்டும். இவனுக் கெல்லாம் எதுக்கு கல்யாணம்.. எதுக்கு குடும்பம்...

கல்யாணம் செய்து கொள்ளாமல்.. தெருக்காளை மாதிரி ஊர் திரியலாமே... சே.

அக்காவைப் பற்றி விசாரிக்க வேண்டும்.. யாரிடம்.. டாக்டரை பார்த்துக் கேட்டால் என்ன.. அதுதான் சரி... என்ற

எண்ணத்துடன் வெளியே செல்ல எட்டு வைத்தபோது தான் ஃபிளாஸ்க்குடன் வந்தான் சம்பத்.. சந்தியாவின் மைத்துனன்.

ஏறக்குறைய சௌம்யாவின் வயசுதான். வாட்ட சாட்டமாய் இருந்தான்.

அவர்களைப் பார்த்ததும்.. அவனது முகம் கன்றியது.. அவமானத்தில் கூனிக் குறுகினான்.

''இப்போதுதான் வந்தீர்களா...'' என்று விசாரித்தவன் தாயிடம் ஃபிளாஸ்க்கை நீட்டினான்.

''சம்பத்... என் அக்காவிற்கு என்ன ஆச்சு என்று நீங்களாவது சொல்வீர்களா.. அக்காவிற்கு எப்படி அடிப்பட்டதுன்னு சொல்லுங்க சம்பத்...''

அவனிடம் தடுமாற்றமும்.. தயக்கமும் கண்டு விட்டு அவளே பேசினாள்.

''ஏதோ நடந்திருக்கிறது.. உங்க அண்ணாதான் அடித்திருக்க வேண்டும்.. அப்படித்தானே..''

''சௌம்யா.. நான் சொல்வதைப் பொறுமையாகக் கேளுங்கள்.. என் அண்ணா ஒரு மூர்க்கன். கோபம் வந்தால் என்ன செய்கிறோம்.. ஏது செய்கிறோம் என்று தெரியாமல் நடந்து கொள்கிறான். நானும் அம்மாகிட்ட சொல்லிப்பார்த்தேன்.. வேண்டாம் அம்மா.. அண்ணாவுக்கு கல்யாணம் பண்ணிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையெல்லாம் வைத்துக் கொள்ளாதே.. வருகின்ற பெண்தான் கஷ்டப்படுவாள்.. இந்த வீட்டில் நீ ஒருத்தி படுவது போதாதா என்று கூடச் சொன்னேன். அப்படி இல்லைடா.. ஒரு பெண்டாட்டின்னு வந்துட்டா அடங்கிடுவான்னு சொல்லி.. தான் ஆசைப்பட்ட மாதிரியே



பிள்ளைக்கு கல்யாணமும் பண்ணிட்டா அம்மா.. ஆனால்.. இப்போ தினமும் ஏச்சும் பேச்சும்... அடியும் உதையும் வாங்கி.. அண்ணி அவஸ்தைப் படுவதைப் பார்த்து விட்டு.. ஏண்டா பண்ணினோம்னு வருத்தப்படுகிறாள்.''

சௌம்யா ஏதோ சொல்ல வாயெடுக்கும்போது,

''நான் சொல்வதைக் கேட்டு விட்டு அப்புறம் பேசுங்கள் சௌம்யா.. தப்பை நியாயப்படுத்தவோ... நடந்ததை மறைக்கவோ நான் விரும்பவில்லை... யார் செய்தாலும் தப்பு தப்பு தான்.. இன்னிக்கு என் அண்ணா புதுசா ஒரு 'டாபிக்' எடுத்தான். அண்ணி அவனுக்கு ஏற்ற மனைவி இல்லையாம்... பெற்றெடுத்தது இரண்டும் பொட்டைகளாகி விட்டதாம்.. அதனால் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கப்போகிறேன்.. உன்னைத் தொலைத்து விட்டு அந்த வேலையைத்தான் செய்யப் போகிறேன் என்று குதித்தான்... இது கிளைமாக்ஸ் பேச்சு... அதுக்கு முன் ஏதேதோ வாக்குவாதம்... அண்ணியும் பொறுமையிழந்து ஏதோ பேசிவிட்டாங்க போல் தெரிகிறது. ஆத்திரத்தில் கண்மண் தெரியாமல்.. சொல்லவே கஷ்டமா இருக்கிறது.. என் கிரிக்கெட் 'பேட்'டால் அண்ணியை ஓங்கி அடித்துவிட்டான் சந்தானம்... அதனால் அடிப் பட்டதா.. இல்லை விழும்போது அடிப்பட்டதா என்று தெரியாது.. ஏன்னா.. நான் அப்போது அங்கில்லை.. இருந்திருந்தால் தடுத்திருப்பேன்... ப்ச்சு.. மண்டையில் பலத்த காயம்.. பயங்கரமா ரத்தம் வழிந்துபோய்.. மயங்கி கிடந்தவங்களைப் பார்த்து அலற ஆரம்பித்தாங்க அம்மா.. ரத்தத்தைப் பார்த்துவிட்டு என் அப்பாவும் பீதியடைந்து போய் உடனே அண்ணியைக் கொண்டு வந்து இங்கே

சேர்த்துவிட்டார்.. நடந்தது இவ்வளவுதான்.. இனிமே உங்க முடிவில்தான் இருக்கிறது...

அதைக் கேட்டு "அய்யோ... பாவி!" என்று அலறி னாள் பாக்கியம்.

கேட்க கேட்க ரத்தம் கொதித்தது சௌம்யாவிற்கு.

என்ன திமிர்.. மனைவியை ஒழித்துவிட்டு.. இன் னொரு கல்யாணம் செய்துகொள்வானாமா.. அத்தனை நெஞ்சழுத்தம்... யாரும் தட்டிக் கேட்க மாட்டார்கள் என்ற தைரியம்...

சௌம்யாவின் முகம் செவ செவ என்று சிவப்பது கண்டு சம்பத் சொன்னான்.

"இதைக் கேட்டு உங்களுக்கு கோபம் வந்ததில் ஆச் சர்யம் இல்லை சௌம்யா.. இரத்த சம்பந்தமே இல்லாத எனக்கே என் அண்ணாவின் கழுத்தை நெறித்து விட வேண்டும் என்று கொதித்தபோது.. உடன் பிறந்த தங்கை நீங்கள்.. உங்களுக்கு எப்படி இருக்கும்.. நீங்கள் நினைத் தால்... இதைப் பற்றி போலீஸில் புகார் கொடுத்து.. சந்தானத்தை கம்பி எண்ண வைக்கலாம். அதுவும் அவ னுக்கு வேண்டியதுதான்... ஆனால் நான் யோசிப்பது என் அம்மாவைப் பற்றிதான்.. அவமானத்தால் கூனிக் குறுகி போய்விடுவார்கள். இதயம் வெடித்துச் செத்து விடுவார்கள். அந்த பயம் மட்டும்தான்.. என் எண்ணம் என்ன என்று கேட்டால்... உங்க அக்காவை உங்களுடன் அழைத்து செல்வதுதான் நல்லதுன்னு சொல்வேன்..."

"அதெப்படி தம்பி.. அத்தனைக் கஷ்டப்பட்டு.. கடன்பட்டு என் பெண்ணுக்கு கல்யாணம் நடத்திவிட்டு.. இப்போ அத்தனையும் வீண்போல அவளை வீட்டுக்கு



அழைத்துப் போயிட முடியும். என் பொண்ணோட, பேத்திகளோட எதிர்காலம் பத்தி யோசிக்க வேண்டாமா... உன் அண்ணனுக்கு என்ன.. 'ஜம்'முன்னு இன்னொரு கல்யாணம் பண்ணிக்கொண்டு ஜாலியாக இருந்துவிடு வார்.. என் பொண்ணோட கதி.. சொல்லுங்க தம்பி.." தாங்க முடியாத வருத்தத்துடன் கேட்டாள் பாக்கியம்.

"எனக்கு மட்டும் அதில் விருப்பமா ஆன்ட்டி... அண்ணி எங்க வீட்டில் இருந்தாதான் வீட்டிற்கு களையும்.. சந்தோஷமும் என்று நினைப்பவன் நான். நான் சொல்வது நிரந்தர தீர்வு இல்லை. கொஞ்ச நாள் அண்ணி உங்கள் வீட்டில் இருந்தால்.. என் அண்ணாவிற்கு அண்ணியின் அருமை தெரிய வரும் என்றுதான் சொல் கிறேன். அண்ணிக்கும் கொஞ்சம் மாற்றம் தேவை என்பது என் கருத்து."

சில வினாடிகள் மௌனமாக இருந்தாள் சௌம்யா.

"என்ன யோசிக்கிறீர்கள் சௌம்யா.. நான் சொல்வது சரியாகப் படவில்லையா உங்களுக்கு..."

"ஊகூம்... அதில்லை... உங்களுடைய பேச்சுத் திற மையைப் பார்த்துவிட்டு அசந்து போயிருக்கிறேன் சம்பத்... எப்படியோ சாமர்த்தியமாப் பேசி.. எங்களை போலீசுக்கு போகவிடாமல் தடுத்து விட்டீர்கள்.. அப்படித்தானே..."

"என்னைத் தப்பாக நினைக்க வேண்டாம் சௌம்யா. எங்க வீட்டில் எந்தவித நிம்மதியும் இல்லை.. இன்னும் போலீசு.. கோர்ட்டு என்று வந்து விட்டால்.. எல்லாம் போச்சு.. இன்னொன்றையும் நினைத்துப் பாருங்கள் சௌம்யா.. என் அண்ணன் அதாவது.. தீபா.. ரூபாவின் அப்பா.. ஜெயில்ல இருந்துவிட்டு வந்தால்.. அவர்க

ளோட எதிர்காலம் பாதிக்கப்படாதா.. ஸ்கூல்ல.. அவர் களின் மனம் நோகும்படி டீச்சரோ.. மாணவர்களோ கேள்வி கேட்கமாட்டார்களா.. அந்தப் பிஞ்சு மனசில் தன் அப்பா ஜெயில்ல இருந்திருக்கிறார் என்ற விஷயம் நஞ் சாகப் பரவிடாதா.. நாம் ஆத்திரத்தில் எதிர்காலத்தைப் பற்றி மறந்துவிடக்கூடாது சௌம்யா.. எல்லாவற்றையும் ஆழமாய் யோசித்துப் பார்த்து தான் உங்களிடம் இப்படிப் பேசினேன்..'' நிதர்சனத்தை எடுத்துரைத்தான் சம்பத்.

''சௌம்யா.. சம்பத் தம்பி சொல்வதிலும் நியாயம் இருக்கிறதுடீ.. கோபப்படாம.. நிதானமா யோசிச்சு முடிவு எடுத்தாகணும்.... தம்பி.. நீங்க சொல்ற மாதிரி சந்தியா எங்க வீட்டில் கொஞ்ச நாள் இருக்கட்டும்.... அவளுக்கும் மனசுக்கு ஆறுதலாக இருக்கும்..'' என்று மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டாள் பாக்கியம்.

''அம்மா.. அதைப் பத்தி அப்புறமா பேசி முடிவு பண்ணலாம்.. இப்ப.. அக்கவோட 'கன்டிஷன்' எப்படி இருக்கிறது சம்பத்.. அடி ரொம்ப பலமா பட்டிருக்கிறதா.. டாக்டர் என்ன சொல்கிறார். இதைப் பற்றி அவர் எதுவும் விசாரிக்க வில்லையா..'' என்று வினவினாள் சௌம்யா.

''முதல்ல.. அண்ணியை 'அட்மிட்' பண்ணிக்க முடி யாது. இது போலீஸ் கேஸ்.. நாளைக்கு எங்களுக்குத்தான் பிரச்சனை வரும் என்று டாக்டர் சொல்லிவிட்டார்... இல்லை.. அண்ணி... துவைக்கிற இடத்தில் வழுக்கி விழுந்து தலையில் அடிபட்டு விட்டது என்று சொன் னதை அவர் நம்பத் தயாராகவும் இல்லை. யாரோ தலை யில் அடித்திருக்க வேண்டும். இல்லை தள்ளி விட்டிருக்க வேண்டும். அதனால் எதற்கும் போலீசுக்கு சொல்லி விடுகிறோம்.. அவர்கள் வந்த பிறகு 'ட்ரீட்மெண்ட்' கொடுக்கிறோம் என்று தீர்மானமா சொல்லிவிட்டார்கள்..''



சௌம்யாவின் மனசுக்குள் பகீர் என்றது...

''ஒரு உயிர் போராடிக் கொண்டிருக்கும்போது அவசர சிகிச்சையும் கொடுக்காமல்... கேட்கவே ஆத்திரம் வருகிறது சம்பத்.. அவர்களுக்கு உயிரைக் காப்பாத்துவது முக்கியமாகப் படவில்லையா.. சே.. இவர்களெல்லாம் டாக்டர்கள்..''

''நாங்கள் அவர்களைக் கெஞ்சிக் கேட்டதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா... 'உங்களுடைய கெஞ்சு தலுக்கு தலை சாய்த்து சிகிச்சை செய்கிறோம்னு வைத்துக் கொள்ளுங்கள்.. நாளைக்கு ஏதாவது பிரச்சனையானால்... இந்த நர்ஸிங்ஹோம் பெயர்தான் மீடியாவில் அடிபடும் பேஷன்டின் தலையில் அடிப்பட்டு இருப்பதால் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது.. மூளையில் ஏதாவது சேதம் ஆகியிருக்கலாம்., மூளையில் ரத்தக் கசிவு கூட இருக்கலாம். திடீர் என்று கோமாவுக்கு போய்.. பேஷண்ட் டுக்கு ஏதாவது ஆனால்.. உங்க கோபமெல்லாம் எங்க பக்கம் திரும்பும். உடனே மீடியா ஓடிவந்து படம் பிடிக்கும்.. அவர்கள் விஷயத்தை குடைந்து.. ஊதி.. ஊதி பெரிசாக்கி விடுவார்கள்... அப்போ கேள்வி எழும். விபத்து நடந்த நோயாளியை எப்படி 'அட்மிட்' பண்ணினீர்கள்... போலீஸில் ஏன் 'கம்ப்ளெயிண்ட்' தரவில்லை. ஒரு வேளை 'மர்டர் அட்டெம்ட்'டாகக் கூட இருக்கலாம். 'டௌரி டெத்'தாகவும் இருக்கலாம்.. இப்படியெல்லாம் வில்லங்கம் வரும்.. இப்போ.. உங்க கண்களுக்கு நாங்க இரக்கமில்லாத அரக்கர்களாகத் தெரிவோம்.. ஆனால் உண்மை இதுதான்... புரிந்து கொள்ளுங்கள் சார்..' என்று அவர்கள் பக்கத்து நியாயத்தை எடுத்துச் சொன் னாங்க...''

அதைக் கேட்டதும் பாக்கியம் முகத்தில் கலவரம் தெரிந்தது... ஏன்.. சௌம்யாவிற்கும் நடுக்கம் வந்தது.. டாக்டர் சொல்வது போல நிலைமை விபரீதம் ஆகுமோ என்ற அச்சம்...

''அப்புறம் என்ன செய்தீர்கள் சம்பத்..'' என்று வினவினாள்.. கலவரத்துடன்.

''வேறு வழியில்லை சௌம்யா.. போலீஸ் 'கம்ளெயிண்ட்'டுக்கு ஒத்துக் கொண்டதும் சிகிச்சையை ஆரம்பித்தார்கள். போலீசும் வந்து விசாரித்தார்கள். டாக்டரிடம் சொன்னதையே அவர்களிடமும் சொன்னோம். கணவரை விசாரிக்க வேண்டும். பேஷண்டின் குடும்பத்தினரை விசாரிக்க வேண்டும் என்றார்கள். நீங்கள் வந்திருப்பதை இப்போ அவர்களுக்கு தெரிவித்தாக வேண்டும். அதற்குமுன் எல்லாவற்றையும் சொல்லிவிடலாம் என்றுதான்.. உங்களுக்கு நிலைமை புரிந்திருக்கும்.. இல்லையா சௌம்யா...'' என்று நிதானமாய் சொல்லி விளக்கினான் சம்பத்.

''நன்றாகப் புரிகிறது சம்பத்.. அதுசரி டாக்டர் அக்காவுக்கு சிகிச்சை செய்தார்களே... அக்காவின் நிலைமையை பத்தி ஏதாவது சொன்னார்களா..'' கலங்கிய மனதுடன் கேட்டாள் சௌம்யா.

அவன் என்ன சொல்லப்போகிறானோ என்ற பயத்தில் நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது.

'அண்ணியின் தலையில்.. முன் பக்கம் ஆழமாய் அடிப்பட்டிருக்கிறதாம்.. அதற்கு தையல் போட்டிருக்கிறார்கள். எம்.ஆர்.ஐ டெஸ்ட் எடுத்துப் பார்த்துவிட்டுத் தான் எதையும் சொல்ல முடியும் என்கிறார் டாக்டர். அண்ணிக்கு நினைவு வந்ததும்.. அவர் எப்படிப் பேசுகிறார்.



ஞாபக சக்தி இருக்கிறதா என்று கவனிக்க வேண்டுமாம்...''

பாக்கியத்திற்கு மயக்கம் வருவதைப்போல இருந்தது.

''அய்யோ... என் பொண்ணுக்கு என்ன ஆச்சு.. என்னன்னவோ சொல்கிறாரே டாக்டர்.. தம்பி.. அவளுக்கு ஆபத்து ஒண்ணும் இல்லையே.. உண்மையை சொல்லுப்பா..'' என்று புலம்ப ஆரம்பிக்க...

அதே நேரம் ட்யூட்டி நர்ஸ் உள்ளே வந்தாள்.

''யாரம்மா சத்தம் போட்டுப் பேசுவது.. மத்த பேஷண்டுக்குத் தொந்தரவாக இருக்கும் இல்லையா.. இங்கே கூட்டம் போடாமல் கொஞ்சம் வெளியே இருங்க. டாக்டர் வரும் நேரம்.. இங்கே கும்பலா நின்னா கத்துவார்.. ம்ம்.. வெளியே போங்க..'' என்று அதட்டினாள் நர்ஸ்.

நோயாளிகளின் உறவினர்களும்.. பார்க்க வந்தவர்களும்.. எழுந்து வெளியேறினார்கள்.

சௌம்யா அக்காவின் அருகே சென்று.. அவளைக் கூர்ந்து பார்த்தாள். அவளது கரத்தை வருடித்தந்தவளின் மனம் அக்கா.. உனக்கு எதுவும் ஆகாது.. வாழ்க்கையில் ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்ட உனக்கு இனியும் சோதிக்கமாட்டார் கடவுள்.. உன் குழந்தைகளுக்காகவாவது நீ எழுந்திருக்கணும்.. பழைய சந்தியாவாக..'' என்று அரற்றியது.. மனதின் வலி.. கண்களில் கண்ணீராய் வழிய, சந்தியாவின் கரத்தில் முத்து சிதறலாய் கண்ணீர் துளிகள் விழுந்தன.

அக்கா விழித்துப் பேசமாட்டாளா என்று ஏங்கினாள் தங்கை.

# 2



அடித்துப்போட்ட மாதிரி உடம்பெல்லாம் வலித்தது சௌம்யாவிற்கு...

எத்தனை அலைச்சல்.. உடம்புக்கு மட்டுமா களைப்பு.. மனதுக்கும் தான்.. சோர்வில் துவண்டு போனது.

அடிபட்டு நினைவின்றி கிடக்கும் சந்தியாவை நினைத்து உள்ளம் வேதனைபடுவது போதாது என்று..

இந்தப் போலீஸ் ரோதனை வேறு..

அம்மாடி! எத்தனைக் கேள்விக் கணைகள்.. அத்தனைக்கும் சாதுர்யமாய் பதில் சொல்லியே அலுத்துப் போய் விட்டது.

எல்லாவற்றையும் விட கொடுமை என்னவென்றால்.. அவர்களுக்கு சந்தியாவின் கணவன் மீது சந்தேகம் வரக் கூடாது என்று சந்தானத்துக்குப் பரிந்து பேசி.. அடச்சே.. நினைக்கவே மனம் கசந்தது... அவளுக்கு இருக்கும் கொதிப்பில்..அவனை நிற்க வைத்துச் சுடவேண்டும்... குறைந்த பட்சம் அவன் மீது புகார் தந்து சிறைக் கம்பி களை எண்ண வைக்க வேண்டும் என்று ஆவேசம் வந்தாலும்.. அதை அடக்கிக் கொண்டு.. முகம் சுளிக்காமல்.. அவர் மீது எந்தத் தப்பும் இல்லை.. அவர் நல்லவர் என்று சான்றிதழ் தரவேண்டி வந்ததை நினைத்து மனதில் கடலின் கொந்தளிப்பு.



அப்போதும் போலீஸுக்கு நம்பிக்கை வரவில்லை போலும். சந்தியா கண்விழிக்கக் காத்திருக்கிறார்கள்.. அவளது வார்த்தைகளுக்காக.. ப்ச்சு எல்லாமே பொய் வேஷம்... மனிதர்கள் பொய் வேஷதாரிகள் என்பது நிஜம்.. இந்த உலகம் நாடக மேடை என்பது சத்தியம்...

சலிப்புடன் நினைத்துக் கொண்டாள் சௌம்யா.

அன்று இரவு அக்காவுடன் நான் தங்கிக் கொள்கிறேன் என்று பாக்கியம் சொல்லிவிட்டதால்.. நர்ஸிங்ஹோம் கேன்டீனிலிருந்து தாய்க்கு தோசையும்... காபியும் வாங்கித் தந்து விட்டு அங்கிருந்து கிளம்பினாள். பாக்கியத்திடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு.. கிளம்பிவிட்டார்கள் சம்பத்தும் அவனது தாயும்..

''அம்மா.. அக்காவுக்கு நினைவு வந்ததும் உடனே டாக்டரிடம் சொல்லு... டாக்டர் இல்லாவிட்டால்.. நர்ஸை அழை.. அவர்கள் வந்துபார்க்க வேண்டும்... அப்புறம் 'டிரிப்ஸ்' விழுகிறதா என்று பார்த்துக் கொள்.. அது தீரும் நிலையில் இருந்தால்.. நர்ஸிடம் தெரிவித்து விடு. ஏதாவது அவசரம் என்றால்... யசோதா மாமி வீட்டுக்குப் போன் பண்ணிச் சொல்லு..'' என்று எடுத்துச் சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

சரியான சாப்பாடு இல்லை.. அலைச்சல்.. மன உளைச்சலில் 'டென்ஷன்' கவலை.. எல்லாமாய் சேர்ந்து அவளைத் துவள வைத்தது.

ஒரு வழியாய் பஸ் பிடித்து வீடு வந்து சேரும்போது மணி எட்டரை...

தம்பி வந்திருப்பானோ என்ற பதைப்பில்.. பஸ்ஸில் நின்று கொண்டு வந்தவளுக்கு.. இன்னும் தம்பி வராதது கண்டு நிம்மதியடைந்தாள்.

பாவம்.. பசியுடன் வருவான்.. அம்மா ஏதாவது சமைத்து வைத்திருக்கிறாளா என்று பார்க்கலாம்... இல்லையென்றால் இருக்கவே இருக்கிறது.. உப்புமா! அவசரத்திண்டி!

வீட்டினுள் நுழைந்து மின் விளக்கை பொருத்திவிட்டு.. சமையலறைக்குள் புகுந்து.. மேடையை ஆராய்ந்தாள்.

சாதமும்.. ரசமும் இருந்தது. பீன்ஸை அரிந்து பாத்திரத்தில் போட்டு வைத்திருந்தாள் பாக்கியம்.. பரவாயில்லை.. விரைவில் பீன்ஸ் பொரியலைப் பண்ணி விடலாம்.

முதலில்.. அலுப்புத் தீரக் குளிக்க வேண்டும் போல் இருந்தது. உடம்பு முழுக்க தூசியும். கூடவே மருந்து நெடியும் வீசுவதுபோலப் பிரமை.

குளித்துவிட்டு.. புத்துணர்ச்சியுடன் பொரியலை வதக்க ஆரம்பித்தவள்... ஏன் இன்னும் ராஜேந்திரன் வரவில்லை என்று கவலையுடன் யோசித்தாள்.

மணி ஒன்பதாகப் போகின்றதே..இது மாதிரி தாமதமாய் வந்ததில்லையே அவன்.

சே.. இப்படி ஒவ்வொருத்தரைப் பற்றியும் கவலைப் பட்டே வயசு ஏறிக் கொண்டிருக்கிறது.. தவிர எந்தக் கவலையும் தீர்ந்தபாடில்லை.. உள்ளுக்குள் சலித்துக் கொண்டாள் அவள்.

அந்த நேரத்தில் வாசல் கதவை 'தட் தட்' என்று பலமாய் அடிக்கும் சத்தம்.

ராஜேந்திரனா..

''வருகிறேன்'' என்று கூவிக்கொண்டே.. ஸ்டவ்வின் உலையை குறைத்தாள்.



மீண்டும் 'தட் தட்' என்று இடியாய் வந்தது சத்தம். யாரோ பொறுமையிழந்து.. கதவை இடித்துத் தள்ளுவது போல இருந்தது.

ஊகூம்.. நிச்சயம் ராஜேந்திரனாக இருக்க முடியாது.

''யார் அது..'' என்று உரக்கக் கேட்டாள் அவள். அதற்கு பதில் வரவில்லை. தொடர்ந்து கதவை உலுக்கித் தள்ளுவதுபோல சத்தம் தான்.

யாராக இருக்கும்.. எரிச்சலுடன் கதவைத் திறந்தாள் சௌம்யா.

அங்கே நின்றிருந்தவன்.. யாரோ அறிமுகமில்லாதவன். அவனைப் பார்த்த ஞாபகமும் இல்லை. ஒரு வேளை தவறான விலாசத்துக்கு வந்துவிட்டானா. நெடு நெடுவென்று தென்னை மரம் போல அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் இருந்தவனை குழப்பத்துடன் பார்த்தவள் ''யார் வேணும்.. உங்களுக்கு...'' என்று கேட்டாள்.

அவனோ.. அவளை உறுத்து விழித்துவிட்டு கையால் நெட்டித் தள்ளினான்.

அவன் ஒதுக்கிய வேகத்தில்... அவள் விழாத குறையாய் ஓரத்துக்கு சென்றாள்.

அவனது செய்கை அவளுக்கு திகைப்பைத் தந்தது என்றால்... அவனது அடுத்த நடவடிக்கை அதிர்ச்சியை தந்தது என்று சொல்ல வேண்டும்,

விறு விறு என்று வீட்டிற்குள் நுழைந்தவன்... அந்த வீட்டை அளவெடுப்பவன் போல ஒவ்வொரு இடமாய் சுற்றி வந்தான். கண்கள் அங்கும் இங்கும் அலைபாய்ந்து யாரையோ தேடின.. யாரை?

ஸ்தம்பித்துப் போய் நின்ற சௌம்யா.. உடனே சுதாரித்துக் கொண்டாள்.

இதென்ன அராஜகம்.. திறந்த வீட்டில் நாய் புகுந்த மாதிரி? உள்ளே வந்தது மட்டுமின்றி.. வீட்டினுள் உரிமையாய் சுற்றி வருகிறானே...

ஒருவேளை.. கொள்ளைக்காரனோ.. 'சட்'டென்று பயம் கவ்விப் பிடித்தது.

அடுத்த கணமே.. இருக்காது.. பார்த்தால் கொள்ளைக்காரனாய் தெரியவில்லை... 'ஜென்டில்மேன்' மாதிரி தெரிகிறான்.

ஆனால்.. அவனது செயலில்தான் கண்ணியம் இல்லை. பக்கா ரௌடித்தனமாய் இருக்கிறது.

இனியும் பொறுக்க முடியாது என்று எண்ணியவளாய்,

"ஏய்.. மிஸ்டர்.. என்ன இது.. ரௌடித்தனமாய் உள்ளே வந்து அக்கிரமம் செய்வது.. உங்களுக்கு என்ன வேண்டும்.." என்று சீற்றத்துடன் கேட்டாள்.

அவனும் அலட்சியமாய் அவளைப் பார்த்தான்.

"எங்கே அவர்கள்" என்று உறுமலாய் கேட்டான்.

அவர்களா.. யார் அவர்கள்...

இவன் யாரை விசாரிக்கிறான்.. என்று விழித்துவிட்டு..

"யாரைக் கேட்கிறீர்கள்.. இங்கே நான் மட்டும் தான் இருப்பது.. இப்போது என் அனுமதி இல்லாமல் உள்ளே வந்தது மட்டுமின்றி.. மிரட்டவும் செய்கிறீர்கள்.. இதென்ன காட்டு மிராண்டித்தனம்.." என்றாள் கடுப்புடன்.



"முதலில் அவர்கள் எங்கே என்று சொல்.. அப்புறம் போகிறேன்.." என்றான் அவன்.. விடாப்பிடியாய்...

"உங்களைப் பார்த்தால்.. ஏதோ வலுச்சண்டைக்கு வந்த மாதிரி இருக்கிறது.. ஒரு வேளை.. தவறான விலாசத்துக்கு வந்துவிட்டீர்களோ.. என்னவோ.. சாரி.. நீங்கள் வெளியே போகலாம்" என்று வாசல் பக்கம் கையை நீட்டினாள்.

அவளை அளவெடுப்பது போல மேலும் கீழுமாய் பார்த்த அவன் இறுகிய தாடையுடன் அடிக் குரலில் கேட்டான்.

"அவர்களுக்கு நீயும் உடந்தையாக்கும்."

அவள் விழித்தாள்.. மறுபடியும் அவர்கள்...!

அடக்கடவுளே.. பைத்தியமோ.. சித்தம் பேதலித்தவன் போலிருக்கிறது.. அதுதான் திரும்ப திரும்ப அதையே புலம்புகிறான்.

அய்யோ.. இவனிடம் சிக்கிக் கொண்டோமே.. எப்படித் தப்புவது.. பரிதவித்தாள் அவள்.. மேனிக்குள் நடுக்கம் ஓடியது.

இவனை எப்படி வெளியேற்றுவது.. அம்மாவும் இங்கில்லையே.. ஒருகுரல் கொடுத்தால்.. யாராவது ஓடிவர மாட்டார்களா.. ஆனால் குரலும் எழமாட்டேன் கிறதே.

உலர்ந்து போன தொண்டையைக் கனைத்தவள் மெல்லிய குரலில் சொன்னாள்.

"வந்து.. இதோ பாருங்க.. மிஸ்டர்.. இங்கே நீங்க தேடிவந்த அவர்கள் யாரும் இல்லை.. நான் மட்டும் தான்" என்று சொல்லிவிட்டு.. பதைத்தவளாய்,

''அய்யோ.. நான்மட்டும் என்றால்.. என்.. என் அம்மா இங்கே.. பக்கத்துக் கடைக்கு.. அய்யோ'' என்று பயத்தில் அலறினாள்.

ஏன் என்றால் அவன் அவளருகே வந்து நின்றிருந்தது மட்டும் அல்லாமல்.. தன் கரத்தால் அவளது தொண் டையைப் பிடித்துக் கொண்டது தான்...

பயத்தில் அவளுக்கு வியர்வை வழிந்தது. விழிகள் சாஸராய் விரிந்தன. அவனையே அச்சத்துடன் வெறித் தாள் சௌம்யா.

பீதியில் இதயம் பலமாய் அடித்துக் கொண்டது.

என்னவோ நடக்கப் போகிறது.. நாளைக்கு செய்தித் தாளில்... கொட்டை எழுத்தில் தான் செய்தியாகப் போவதை அப்போதே உணர்ந்தாள் அவள்.

'வீட்டில் தனியாக இருந்த பெண்ணின் கழுத்தை நெரித்துக் கொலை...' என்ற செய்தியில் தன் சாவுச் செய்தி வரப்போகிறது...

அய்யோ.. இருந்திருந்து இப்படியா சாக வேண்டும்.

அம்மாடி! கழுத்து நெறிப்பட்டால்.. எப்படி வலிக் குமோ.. வாயில் ரத்தம் வருமோ..

பயத்தில் கண்களை மூடிக் கொண்டாள் அவள்.

ஆயிற்று நெரிக்கப்போகிறான்.. முருகா.. முருகா.. ஆனால்.. சுவாசம் தடைபடவில்லை.. கழுத்தில் அழுத்தம் இல்லை. அட! வலியும் இல்லையே...

அப்போதுதான் தெரிந்தது... கழுத்திலிருந்து தனது கரத்தை அவன் எடுத்துவிட்டான் என்று.

மெல்ல கண்களைத் திறந்தாள் சௌம்யா.



''பயம் இருக்கிறது இல்லையா... இப்போது சொல் அவர்கள் எங்கே ஒளிந்து இருக்கிறார்கள்.. உண்மையை சொல்லாவிட்டால்... நான்..''

போச்சுடா.. மறுபடியும் அதே தானா!

இவன் யார்.. யாரைப் பற்றிக் கேட்கிறான்.. எதற்காக என்று புரியவில்லையே.. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்..

அவன் கொள்ளைக்காரனும் இல்லை.. பைத்தியமும் இல்லை போலத்தான் தெரிகிறது.

''மிஸ்டர்.. வந்ததிலிருந்து அவர்கள்.. அவர்கள் என் கிறீர்கள்... யார் அந்த அவர்கள்.. உங்க நண்பர்களா.. விரோ திகளா.. மொட்டையாய் அவர்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்'' என்றாள் கொஞ்சம் துணிவு வந்து.

அவளை நம்பாததுபோல ஒரு பார்வை பார்த்தான், வந்தவன்.

''உண்மையிலே உனக்குத் தெரியவில்லையா...''

''தெரியாததால்தான் கேட்கிறேன்.. சொல்லுங்கள்''

''என் தங்கை எங்கே..''

உதட்டை இகழ்ச்சியாய் சுளித்தாள் அவள்..

''இதென்ன விசித்திரக் கேள்வி.. உங்க தங்கை உங்க வீட்டில்தான் இருப்பாள்.. என்னிடம் கேட்டால்..''

அவன் பற்களைக் கடித்து.. தன் ஆத்திரத்தை அடக்கப் பார்க்கிறான் என்பது அவனது தாடையின் இறுக்கம் சொன்னது.

''உன் தம்பி.. அந்த ராஸ்கல் எங்கே..'' என்றான் அடுத்ததாய்...

''இது என்ன அசட்டுக் கேள்வி.. எனக்கு ஞானதிருஷ்டி யிருக்கிறதா என்ன.. பார்த்துவிட்டு.. இந்த நேரத்தில் அவன் எங்கே.. என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று உடனே சொல்வதற்கு.. அதிருக்கட்டும் மிஸ்டர்.. நீங்க யார்.. இப்படி என் வீட்டிற்குள் நுழைந்து என்னையே மிரட்டிக் கேட்பதற்கு.. முதல்ல வெளியே போங்கள்.. இந்த ராத்திரி நேரத்தில்.. யாரும் இல்லாத போது.. வம்பு பேசினால் என் பெயர் அல்லவா கெட்டுப்போகும்.. ப்ளீஸ் கெட் அவுட்''

கோபத்தில் அவன் முகம் கன்றியது.

''இதோ பார்.. நான் எப்படிப்பட்டவன் என்று உனக்குத் தெரியாது.. நான் நல்லவனுக்கு நல்லவன் கெட்டவனுக்குக் கெட்டவன்.. உன் தம்பி என்னைச் சீண்டுகிறான்.. என் தங்கை ஏதும் அறியதாவள்..காதல் கத்தரிக்காய் என்று பிதற்றி..அவளது மனசைக் கெடுத்துவிட்டிருக்கிறான்.. என் தங்கைக்கு கோடிக்கணக்கான சொத்தில் பங்கு இருக்கிறது என்று தெரிந்து கொண்டு அவளை வளைத்துப் போடப் பார்க்கிறான்.. அந்த அயோக்கிய ராஸ்கலுக்கு சொல்லி வை. அவன் தலைகீழாக நின்றாலும் அவனது எண்ணம் ஈடேறாது என்று.. இதுதான் என் கடைசி எச்சரிக்கை.. இனிமேலும் என் தங்கையைச் சுற்றி வந்தால்.. நான் போலீசுக்கு போக வேண்டி வரும்.. உஷார்..!''

அவன் சொல்லச் சொல்ல சௌம்யாவிற்கு கோபம் உச்சி மண்டையில் நிலைக் குத்தி நின்றது...

இவன் என்ன சட்டாம்பிள்ளையா.. இஷ்டம் போல மிரட்டுவதற்கும்.. அதட்டுவதற்கும்...

இவன் தங்கையை அடக்கி வைக்க யோக்கியதை இல்லை. இங்கே வந்து பூச்சாண்டி காட்டுகிறான்.



அந்தக் கோபத்தில் அவளும் எச்சரித்தாள்.

''ஹலோ... மிஸ்டர்.. இங்கே நின்று அனாவசியமாய் கலாட்டா பண்ணிக் கொண்டிருந்தால்... நானே போலீசுக்கு புகார் பண்ண வேண்டியிருக்கும்.. தெரிந்து கொள்ளுங்கள்...''

அவன் அவளை முறைத்துப் பார்த்துவிட்டு வெளியேறினான்.

அவனது முகத்தில் அறைவதுபோல நினைத்து கதவை அறைந்து சாத்தினாள் சௌம்யா.

மனதில் படபடப்பு.. நல்லவேளை.. போய் தொலைந்தான்... பாவி!

என்ன திமிர்..! என்ன அகம்பாவம்..!

ஏதோ இவனது அப்பன் கட்டிவைத்த வீடு மாதிரி நினைத்து உள்ளே வந்தது மட்டும் இல்லாமல்... அதிகாரம் வேறு. மொட்டை அதிகாரம்!

ராஸ்கலாமே.. அதுவும் அயோக்கிய ராஸ்கல் வேறு! அம்மாவே தம்பியை அப்பிடித் திட்டியதில்லை...

ஆமாம்.. தம்பியை இன்னும் காணோமே...

எங்கே போனான்... ஏதாவது ஸ்பெஷல் கிளாஸ் இருந்து...

அப்போதுதான் 'மடேர்' என்று உறைத்தது அவளுக்கு.

இன்று மட்டுமில்லையே.. இதோ போல் தினமும் அல்லவா நேரம் கழித்து வருகிறான்.

ஆனால் இன்றைக்கு ரொம்பவும் தாமதம்.. ஏன்.. ஒருவேளை.. வந்தானே.. உலகளந்த பெருமாள் மாதிரி நெட்டையாய்.. அவன் சொல்வதுபோல..

அவனது தங்கையுடனா சுற்றிவிட்டு வருகிறான்.

லேசாய் சந்தேகம் தலைத் தூக்கிப் பார்க்க.. ஆத்திரத்துடன் அதன் தலையைத் தட்டி அடக்கினாள்.

சே.. அவன் எதையோ பிதற்றினான் என்றால்... நானும் என் தம்பியைப் பத்தித் தவறாக நினைக்கிறேனே.

தேர்வு நெருங்கும் நேரம்.. ஏதாவது லைப்ரரிக்கு போயிருப்பான்.. இல்லை.. நண்பர்களுடன் 'கம்பைன்டு ஸ்டடி' பண்ணுகிறானோ என்னவோ...

அவனுக்குக் காதல் செய்ய வேறு நேரம் இருக்கிறதாக்கும்.. சரிதான்...

பாவம்... அலுத்துச் சலித்து வருவான்.. அவனுக்கு... அய்யோ.. பொரியல்.. உலையை அணைக்காமல் வந்தேனே...

ஓடினாள் சமையலறைக்கு..

பொரியல் அடிப்பிடித்து.. கன்னங்கரேல் என்று உரு மாறி அவளைப் பார்த்து இளித்தது... பெருமூச்சு விட்டாள் அவள்.

அவன் மட்டும் இருந்திருந்தால்.. அதை எடுத்து சுட சுட அவன் மீது கொட்டியிருப்பாள்... அத்தனை ஆத்திரம்...

வாணலியை 'சின்க்'கில் எடுத்துபோட்டுவிட்டு சின்ன வாணலியை அடுப்பில் வைத்தாள்.

எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தபோது மறுபடியும் கதவை தட்டும் ஓசை...

தம்பியாகத்தான் இருக்கும்....

மறக்காமல் உலையை அணைத்து விட்டு வாசலுக்கு விரைந்தாள் சௌம்யா.



கதவை திறந்தவள்.. களைப்புடன் நின்றிருந்த தம்பியைப் பார்த்துவிட்டு "ஏண்டா லேட்.. உள்ளே வா.. சீக்கிரம்.. இங்கே பெரிய கலாட்டாவே ஆயிடுச்சு.. தெரியுமா.. யாரோ ஒருத்தர் உன்னைத் தேடி இங்கு வந்தார்.. அவருடைய தங்கையுடன் நீ சுற்றுகிறாயாம். அந்தக் கோபத்தில் கன்னா பின்னான்னு பேசினார் பார்.. எனக்கு வந்ததே எரிச்சல்.. அந்த ஆளோட அசட்டு கற்பனையை நினைத்தால்..."

அப்போதுதான் கவனித்தாள்..

வெளி இருட்டில் தம்பியை மட்டுமே பார்த்தவள்.. அவனுடன் இளம் வயது பெண்ணொருத்தி நிற்பதைக் கவனிக்கவில்லை.

அவள் சற்றுத் தள்ளி நின்றிருந்ததால் கண்களில் படவில்லையோ என்னவோ.. திகைத்துப் பார்த்தாள்.

யார் அவள்.. இரவு நேரத்தில் தம்பியுடன் வந்திருக்கிறாளே...

கேள்வியுடன் தம்பியைப் பார்க்க...

"அக்கா.. இவள் ரஞ்சிதா.. இங்கே வந்து உன்னிடம் சண்டை போட்டார் என்றாயே.. அவரோட ஒரே தங்கை.. நாங்க ரெண்டு பேரும் ஒத்தரையொருத்தர் விரும்புகிறோம். நீங்கதான் எங்களை சேர்த்து வைக்க வேண்டும்..." என்று சொல்லிவிட்டு... அக்காவின் காலில் விழ.. அந்தப் பெண்ணும் ஓடிவந்து அவளது காலில் சேர்ந்து விழுந்தாள்.

அவளோ.. தலையில் பெரிய இடி விழுந்தது போல ஸ்தம்பித்து நின்றிருந்தாள்.

''நான் போலீசுக்குப் போக வேண்டிவரும். உஷார்'' அவளது காதில் சிம்மக் குரல் ஒன்று உறுமலாய் ஒலித்தது...

சௌம்யாவிற்கு தலைச் சுற்றுவது போல் வர... வாசல் கதவைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.




சௌம்யாவின் உள்ளம் எரிமலையாய் கொந்தளித்தது.

மடையன்.. மடையன்.. அறிவு கெட்ட மடையன்.. என்ன காரியம் செய்துவிட்டான்.

காதலாமே.. மண்ணாங்கட்டி.. படிக்கிற வயசில் காதலா.. அதற்கு ஒரு தகுதி வேண்டாம்.

தலைகுனிந்து நின்றிருந்தவனை கண்களால் எரிப்பது போலப் பார்த்தாள்.

அருகே.. அந்தப் பெண்.. என்ன செய்வது என்று தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தாள். நல்லது.. கெட்டது தெரியாத அறியாத வயசு.. காதல் எது.. இனக்கவர்ச்சி எது என்று புரிந்து கொள்ளத் தெரியாத பருவம்.. அவர்களை குற்றம் சொல்லிப் பயனில்லை... வயசுக் கோளாறு.. எடுத்து சொன்னால்தான் அவர்களுக்குப் புரியும்.

சினிமாவையும்.. தொலைக்காட்சியையும் பார்த்து விட்டு வாழ்க்கையும் அப்படித்தான் என்று நினைத்து விட்டார்கள் போலும்.



நிதானமாய் அவர்களுக்குப் புரிய வைக்க முயன்றாள் சௌம்யா.

''நம் வீட்டோட நிலைமைத் தெரிந்தும் இந்த அசட்டுக் காரியத்தை செய்யத் துணிந்தாயே டா.. நீ படிப்பை நல்ல விதமாய் முடித்துவிட்டு.. ஒரு நல்லவேலையில் அமர ணும்.. முன்னுக்கு வரணும்னு நானும் அம்மாவும் காத்திருக்கிறோம்.. என்னை விடு.. பெத்தவளை நல்லா வச்சுக்கணும்னு உனக்குத் தோணவில்லையா.. உனக்கு என்ன... வயசாகிவிட்டதா.. கல்யாணத்துக்கு குதிக்கிறே.. ஒருவேளை பணக்காரப் பெண்ணை மணந்து கொண்டு.. அவர்கள் வீட்டில் வீட்டு மாப்பிள்ளையாய் 'செட்டில்' ஆகி விடலாம்ங்ற எண்ணமா.. ஊகூம்.. அது நடக்கவே நடக்காதுப்பா.. உன்னை ஒழித்துக் கட்டணும்னு திரிகிறார் ரஞ்சிதாவோட அண்ணா.. அவரது கையில் சிக்கினே... அவ்வளவுதான்.. துவம்சம் செய்து விடுவார்.. ஏம்மா.. ரஞ்சிதா.. அதெப்படி இந்தக் கல்யாணத்திற்கு சம்ம திச்சே... எதைக் கருதி இவனைக் கட்டிக் கொள்ள முடிவு பண்ணினே.. இன்னும் படிப்பு முடியவில்லை.. வேலை கிடைத்தால் தானே.. உன்னை வைத்துக் காப்பாற்ற முடியும். .. அதுவரைக்கும் என்ன செய்வீர்கள்...''

பதில் சொல்லத் தெரியாமல்.. திகைத்து நின்றாள் ரஞ்சிதா.

அவளுக்குப் பதிலாய் ராஜேந்திரனே பேசினான்.

''அக்கா.. எங்களுக்கும் இப்போது கல்யாணம் அவசர மில்லைதான்.. எனக்கும் வேலை கிடைத்து.. வாழ்க் கையில் 'செட்டில்' ஆன பின்பு.. காதலைப் பற்றி அம்மா கிட்ட சொல்லலாம்னுதான் நினைச்சேன். ஆனால்.. எங்கள் காதல் விஷயம் எப்படியோ இவளோட அண்ணனுக்கு

தெரிந்து விட்டது. ரஞ்சிதாவுக்கும்.. இவளோட அத்தை பிள்ளைக்கும் சின்னவயசிலே பேசி முடிச்சிருக்காங்க. அவன் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருக்கிறானாம். படிப்பு முடிந்து... வேலை கிடைத்தவுடன் கல்யாணம் என்ற பேச்சு.. ஆனால் ரஞ்சிதாவுக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லை.. இந்தக் காதலை எதிர்க்கிற இவள் அண்ணா.. இப்போ இவளை கனடாவில் இருக்கும் சித்தி வீட்டுக்கு அனுப்புவதாய் இருக்கிறாராம். அதனால்தான் இந்த முடிவு எடுத்தோம்க்கா.. என்னால் இவளைப் பிரிந்து இருக்க முடியாது செளமிக்கா.. இவளுக்கும் அப்படித் தான்.. இல்லையா ரஞ்சிதா..'' என்றான் அவன்.

அவளும் ஆமாம் என்று தலையாட்டினாள்.

''இதோ பார் ராஜேந்திரா... இந்த வசனமெல்லாம் சினிமாவுக்குத்தான் லாயக்கு.. நிஜவாழ்க்கைக்கு ஒத்து வராதுடா... சினிமாவில்தான் பணக்காரக் காதலியும் ஏழைக் காதலனும் இணைவதுபோல முடிப்பார்கள்.. எந்தப் படத்திலாவது.. அதற்குப் பிறகு வாழ்க்கையை எப்படிச் சமாளித்தார்கள் என்பதைச் சொல்லியிருக்கிறார்களா.. சொல்லு.. ரஞ்சிதா செல்வத்தில் வளர்ந்தவள்.. எந்தக் கஷ்டத்தையும் அறியாதவள்.. உன்னால் அவளை வசதியாக.. சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடியுமா ராஜேந்திரா.

காதல் மயக்கத்தில் இப்போ முடியும்பே.. ஊகூம்.. இது காதலோ.. ஊதலோ இல்லை என்பேன்.. வெறும் இனக்கவர்ச்சிதான்.. அம்மா ரஞ்சிதா.. உன்னிடம் 'செல்' இருக்கிறதா... உன் அண்ணனோட நம்பரை அழுத்தி விட்டு என்கிட்டே கொடு.. நான் அவர்கிட்டே பேசு கிறேன்'' என்று சொன்னாள் செளம்யா.



''அய்யோ.. வேண்டாம்.. என்னை அவர் கொன்றே போட்டு விடுவார்...'' என்று அலறலுடன் கூறினாள் ரஞ்சிதா.

''உன் அண்ணாவோட கோபத்திலும் நியாயம் இருக்கு ரஞ்சிதா.. எந்த அண்ணனுக்கும் தன் சகோதரியின் வாழ்க்கை மகிழ்ச்சியா அமையணும் என்றுதான் நினைப்பான்.. அதையேதான் உன் அண்ணனும் விரும்பு கிறார்... இதில் தப்பில்லை. உன் 'செல்'லைக் கொடு... உன் அண்ணனோட நம்பரை சொல்லு.. ம்ம்.. வேண்டாம்.. இதில் 'ஸ்டோர்' பண்ணியிருக்கே இல்லை... உன் அண்ணாவோட பெயர் என்ன..''

''நிரஞ்சன்.. நிரஞ்சன்குமார்.. ப்ளீஸ்.. நான் இங் கிருப்பதை அவருக்குத் தெரிவிக்க வேண்டாம் செளம்மி யாக்கா..'' பயத்துடன் ஒலித்தது அவள் குரல்.

''உனக்கும் அக்காவா.. சரிதான்.. ஆங்.. 'ரிங்' போகிறது.. பார்க்கலாம்...''

''அக்கா.. ப்ளீஸ் வேண்டாம்... 'கட்' பண்ணிவிடு'' கத்தினான் ராஜேந்திரன்.

அவனது கூவலைப் பொருட்படுத்தாமல் பேசினாள் செளம்யா.

''அலோ.. மிஸ்டர் நிரஞ்சன்குமார்...''

''............''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் வந்து சிவதாண்டவம் ஆடிவிட்டுப் போனீர்களே.. ஞாபகம் இருக்கிறதா... யெஸ் அந்த விஷயம்தான்... உங்கள் தங்கை இப்போது இங்கே.. என் வீட்டில்தான் இருக்கிறாள்.. நீங்கள் தாராளமாய் வந்து அழைத்துப் போகலாம்...''

"............."

"இப்போது உங்களுக்கு புரிந்திருக்குமே.. இந்த விஷயத்தில் நான் உடந்தை இல்லை என்று.. சீக்கிரம் வாருங்கள்..." என்று சொல்லிவிட்டு 'செல்'லை அணைத்தாள்.

"அக்கா.. நீ செய்வது கொஞ்சமும் நல்லதில்லை.. உன்னை நம்பித்தானே நாங்க வந்தோம்.. இப்படி கழுத்தறுத்து விட்டாயேக்கா.. நீ யெல்லாம்..." என்ற ராஜேந்திரனை இடைமறித்தாள் சௌம்யா.

"வாயை மூடுடா... இப்போ வீட்டு நிலைமை என்னன்னு தெரியுமா உனக்கு.. சந்தியா தலையில் அடிப்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறாள். அவளுக்கு என்ன ஆகுமோ என்ற பதைப்புடன் நாங்கள் இருக்கிறோம்.. இந்த நேரத்தில் இப்படி சுயநலமா நடந்துக் கொள்கிறாயே உனக்கு வெட்கமாயில்லே..." என்றாள் கோபத்துடன்.

"இது என் வாழ்க்கைப் பிரச்சனைக்கா... அக்காவோட பிரச்சனை எப்போதும் இருப்பதுதான்..அதுக்கு முடிவே கிடையாது. அப்படி வாழறது தான் அவளுக்கும் பிடிக்கிறது போல.. சரி.. நான் என் எண்ணத்தை மாற்றிக் கொள்வதால் அக்காவோட துன்பம் தீர்ந்து விடுமா என்ன.. ஏதோ எங்களுக்கு ஆதரவா இருப்பேன்னு வந்தா.. இப்படி எட்டப்பனாய் காட்டிக் கொடுத்துவிட்டாயேக்கா. அதுசரி.. உனக்குத்தான் காதல்.. கல்யாணம் இதிலெல்லாம் நம்பிக்கை இருந்தால்தானே.. விடு.. ரஞ்சிதா.. நாம் இங்கே வந்தது நம்ம முட்டாள்தனம்.. வா... போயிடுவோம்" என்று அவன் சொல்லும்போது.. சௌம்யா வாசல் கதவை சாத்தி அதற்கு ஒரு பூட்டையும் போட்டு வைத்தாள்.



"நீங்கள் ரெண்டு பேரும் எதுவும் பேசாமல்.. போய் பக்கத்து அறையில் இருங்கள். நான் கூப்பிடும் வரை வரக்கூடாது... தெரிகிறதா... ரஞ்சிதா.. உன் அண்ணன் வந்ததும் உங்களை அழைக்கிறேன்.. ஆமாம்... நீங்க ரெண்டு பேரும் ஏதாவது சாப்பிட்டீர்களா.. இல்லையா.. சாப்பிடவில்லை.. அப்படித்தானே.. இருங்கள். சாதம் பிசைந்து வருகிறேன்.." என்றவள் சமையலறை நோக்கி விரைந்தாள்.

இருவருக்கும் தட்டு நிறைய ரசம் சாதம் பிசைந்து.. அப்பளம் பொரித்து.. அதைத் தட்டில் போட்டு எடுத்து வந்து அவர்களிடம் கொடுத்தாள்.

ராஜேந்திரன் கோபத்துடன் இருப்பதை பார்த்துவிட்டு "கூல் டவுன்' ராஜேந்திரா.. கோபத்தில் வயிற்றை காயப் போடுவது தப்புப்பா.. இதை சாப்பிட்டுவிட்டு அப்புறம் என்மேல் கோபப்படுவியாம்." என்றாள் கேலியாக.

வயிற்றில் 'கபகப' வென்ற பசி.. அவனை பேசவிடாமல் செய்தது.. வேறு வழியின்றி தட்டை வாங்கிக் கொண்டான்.

ரஞ்சிதாவும் தான்...

அவளும் சாப்பிட்டுவிட்டு.. சமையலறையை ஒழுங்கு படுத்தினாள்.

அந்த ஆசாமி எப்போது வருவானோ.. வந்ததும் காச்சு மூச்சு என்று கத்துவான்.. ராஜேந்திரனை அடிக்கவும் பார்ப்பான்.

"என் தம்பி உன் வீட்டுக்கு வரவில்லையே.. உன் தங்கை தான் இங்கே வந்திருக்கிறாள்.. பார்த்துக் கொள்.. எதுவும் பேசாமல் உன் தங்கையை அழைத்துச் செல்.. இங்கே

நின்று கத்தி.. கலாட்டா பண்ண வேண்டாம்..''என்று சொல்லிவிட வேண்டும்...

சே... சரியான தலைவலி.. அதுவும் அந்த ஆளை மறு படியும் பார்க்க வேண்டுமே ஈசுவரா.. சரியான சிடுமூஞ்சிப் பேர்வழி.. கடுவன் பூனை.. சண்டைக்கோழி... ஊகூம்.. சண்டைச் சேவல்! நினைக்கும்போது உதட்டில் ஏளனப் புன்னகை உதித்தது.

வாசலில் 'சர்க்க' என்று பிரேக் போடும் சத்தம்...

அய்யா வந்தாச்சு.. போய் வரவேற்க வேண்டும்.. சே! வாசலுக்கு விரைந்தாள்.

அவன் இடிப்பதற்குள் கதவைத் திறந்துவிட வேண் டும் என்ற வேகத்தில் ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

''எங்கே..எங்கே அவர்கள்..'' என்ற கூக்குரலுடன் உள்ளே நுழைந்தான் அந்த நெடியோன்.

''ஹலோ.. பொறுமை.. அவர்கள் எங்கேயும் போய்விட வில்லை. பத்திரமாய் உள்ளேதான் இருக்கிறார்கள். உங்க தங்கையை அழைத்துப் போவதற்கு முன் ஒரு பேச்சு.. என் தம்பியை என்னால் அடக்கி வைக்க முடியும். அது நிச்சயம். அதே மாதிரி நீங்களும் உங்க தங்கையை அடக்கி வையுங்கள்.. இன்னொரு தடவை இப்படி வீட்டை விட்டு உங்கள் தங்கை ஓடி வந்து இங்கே நின்னால்.. அதுக்கு நானும்.. என் தம்பியும் பொறுப்பல்ல.. அதைத் தெளிவாக புரிந்து கொண்டு.. உங்கள் தங்கையை அழைத்துப் போங்கள்..'' கண்டிப்பு தெரிய அவள் சொல்லவும்.. அதை ஏற்கப் பிடிக்காமல் அவளை முறைத்தான் அவன்.

''எங்கே என் தங்கை.. முதலில் அவளைக் கூப்பிடு..'' என்று அதிகாரத்துடன் சொன்னான்.



''சந்தேகம்.. ம்ம்.. உண்மையாகவே இங்கு இருக் கிறாளா... இல்லை.. ரீல் விடுகிறேனா என்ற சந்தேகம்.. இதோ பாருங்கள் மிஸ்டர்.. உங்களுக்குப் போன் செய்து அழைத்து.. உங்கள் நேரத்தையும் என்னோட நேரத் தையும் 'வேஸ்ட்' பண்ணும் உத்தேசம் எனக்கில்லை.... உங்களை மீண்டும் சந்திக்கவும் சத்தியமாய் எனக்கு விருப்பமில்லை. ஆனால் வேற வழியில்லாமல்...'' என்று தோள்களைக் குலுக்கினாள்.

''எனக்கும் அதே எரிச்சல்தான்.. இன்றோட நம் சந்திப்பு முடிந்தது.. தாங்க் காட்! இப்போ.. என் தங்கையை கூப்பிடுகிறாயா.. இல்லே நானே போய்..''

''அதற்கு அவசியமில்லை.. ரஞ்சிதா.. இங்கே வரு கிறாயா.. உங்கண்ணா வந்தாச்சு..'' என்று குரல் கொடுத்து விட்டு.. அவன் பக்கம் திரும்பி,

''வந்து விடுவாள் இருங்கள்.. பாவம்.. பயந்து போயிருக் கிறாள்... அவளிடம் மென்மையாகப் பேசி உங்கள் வழிக்குக் கொண்டு வாங்கள்...'' என்றாள் அவள்.

''எல்லாம் எனக்குத் தெரியும்.. எனக்கு யாரும் சொல் லித்தர வேண்டியதில்லை.. ஏய்.. ரஞ்சி... ரஞ்சிதா.. வரு கிறாயா.. இல்லையா..'' என்று கூவினான் அவன்.

''மெதுவாய்.. அவள் தான் அரண்டு போயிருக்கிறாள் என்றேனே.. இப்படிக் கூப்பிட்டால் வருவாளா. ஊகூம்.. ரஞ்சிதா.. வாயேன்.. பயப்படாமல் வாம்மா.. உன் அண்ணா ஒன்றும் சொல்லமாட்டார்... ரஞ்சிதா..''

ரஞ்சிதா வரவே இல்லை...

அவனது பார்வை அவளை உற்று நோக்கியது. எங்கே அவள்.. காணோமே.. என்ற அர்த்தத்தில்.

''ரஞ்சிதா..'' அவளது குரலில் இப்போது பிசிறு தட்டியது.

அவனது கண்களின் ஈட்டிப் பார்வை தன்னைத் துளைப்பது போல உணர்ந்தாள்.

ரஞ்சிதாவின் மேல் ஆத்திரமாய் வர.. அவள் இருந்த அறையை நோக்கி நடந்தாள்.

கூடவே அவனும்...

வராமல் அழிச்சாட்டியம் செய்யும் அவளை இழுத்து வைத்து கன்னத்தில் அறைய வேண்டும் போலத் தோன்றியது.

பெரியதாய் அவனுக்கு பொறுமையை போதித்தேனே. என் பொறுமைக்கே சோதனை வைக்கிறாளே.. இந்தப் பெண்..

''ரஞ்சிதா.... வெளியே வராமல்.. என்ன..'' என்று கேட்டுக் கொண்டே நுழைந்தவளின் வார்த்தைகள் தொண்டையிலே கரைந்து போயின..

அறையில் ரஞ்சிதாவும் இல்லை... ராஜேந்திரனும் இல்லை.

இருவரையும் காணாது திகைத்துப் போனாள் சௌம்யா. இங்கே தானே இருந்தார்கள். சாப்பாட்டுத் தட்டை வாங்கிச் சாப்பிட்டார்களே.. இதோ.. தின்ன தட்டுக்கள் கூட கிடக்கின்றதே.. அதெப்படி மாயமானார்கள்.

அவர்கள் என்ன கற்பூர பொம்மைகளா.. காற்றில் கரைந்து போக.. விழித்தாள் அவள்.

அவளது திகைப்பை பார்த்துவிட்டு அவன் எரிச்சலுடன் சொன்னான்.



''தெரியும்.. அப்போதே நினைத்தேன்.. என்னை அழைத்து வைத்து நாடகம் போடுகிறாய் என்று... நான் நினைத்தது சரியாகிவிட்டது'' என்றான்.

''இல்லை.. இங்கேதான் அவர்கள் இருந்தார்கள்.''

''அதை நான் நம்பணும்.. ம்ம்..'' ஏளனத்துடன் அவன் சொன்னான்.

''நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்.. மணி இப்போ எத்தனை தெரியுமா.. பத்தரை.. இந்த வேளையில் உங்களை அழைத்து.. பொய் சொல்ல எனக்கு என்ன தலையெழுத்தா அவர்கள் இங்கிருந்து எப்படிப் போனார்கள் என்று..ஆங்.. அதோ.. பின் கதவு திறந்து கிடக்கிறது... அந்த வழியாய் தான் போயிருப்பார்கள்.. நான் ஒன்றும்...''

''நிறுத்து.. நடித்தது போதும்.. நான் பெண் இனத்தையே நம்ப மாட்டேன்.. வெறும் பொய்.. பித்தலாட்டம் நடிப்பில் கைத்தேர்ந்தவர்கள்.. நீ மட்டும் விதிவிலக்கா என்ன.. உன் தம்பியோடு என் தங்கையை எங்கோ அனுப்பி விட்டு.. இங்கே.. நல்லவள் மாதிரி நடிப்பு.. ம்ம்.. அதை நம்பவதற்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்லை.. உண்மையை சொல்.. எங்கே போனார்கள்.. எந்த ஊருக்கு அனுப்பி வைத்தாய்..''என்று அதட்டலாய் வினவினான் அவன்.

மறுபடியும் இவனிடம் மாட்டிக் கொண்டோமே என்ற எரிச்சல் வேறு.. அதைவிட... இப்படி ஒரு சிக்கலில் தன்னை மாட்டிவிட்டு சென்றுவிட்டானே என்று தம்பியின் மீது படுகோபம்.. ரஞ்சிதாவின் மீது ஆத்திரமும்...

அதையும் மீறி உள்ளுக்குள் பயமும் வந்தது. சின்னஞ் சிறுசுகள்.. இந்த இரவு நேரத்தில் எங்கே அலைந்து கொண்டிருக்கிறார்களோ...

மனக் கொந்தளிப்பை மறைத்துக்கொண்டு அவனிடம் கூறினாள்.

''வார்த்தைகளை அளந்து பேசுங்கள்.. மிஸ்டர்.. நிரஞ்சன்...''

தன் பெயரை அவள் உச்சரிப்பதைக் கேட்டு புருவங்களை உயர்த்தினான் அவன். என் பெயர் கூட உனக்கு தெரிந்துவிட்டதா என்று...

''அளந்து பேசிய வார்த்தைகள் தான் இது. இன்னும் பேச நினைத்ததை வெளியிட்டால் நீ தாங்கமாட்டாய். தெரிந்து கொள்...''

''ஓ.. இப்போது புரிகிறது. ஏன் ரஞ்சிதா.. இத்தனை சின்ன வயசில் வீட்டை விட்டு ஓடி வந்தாள் என்று.. உங்களை மாதிரி காட்டுமிராண்டி அண்ணனிடம் இருக்கப் பிடிக்காமல் தான் அப்படிச் செய்திருக்கிறாள். அய்யோ.. பாவம்.. அவள் மீது எனக்குப் பரிதாபம் தான் வருகிறது..'' என்று அவள் கிண்டலாய் பேச...

''ரொம்பவும் பரிதாபப்பட வேண்டாம் அம்மணி.. பின்னால் வருத்தப்பட வேண்டிய வரும்...'' என்றான்.. மிரட்டுவதுபோல...

அதெற்கெல்லாம் அசைய மாட்டேனாக்கும் என்பது போல அவனை அலட்சியமாய் பார்த்தாள் சௌம்யா.

''என்னை என்ன செய்துவிடமுடியும் உங்களால்.... உங்க தங்கை தான் விருப்பப்பட்டு ஓடிவந்தது... சட்டம் கூட அவளுக்கு துணையாக இருக்கும். உங்களால் சுண்டு விரலைக் கூட ஆட்ட முடியாது மிஸ்டர்..'' பதிலுக்கு அவள் சவாலாய் சொன்னாள்.



அவளுடைய பேச்சு அவனை உசுப்பி விட்டதோ.. பதிலுக்கு சீறினான்.

''நான் ஆண் பிள்ளை. என்னிடம் சவால் விடாதே..''

''அட... ஆண் என்றால்.. என்ன.. கொம்பா.. ஆண் இனத்திற்கு பெண்ணினம் ஒன்றும் இளைத்தது இல்லை. அதைப் புரிந்து கொள்ளுங்கள்..''

''அப்படித் தெரியவில்லையே.. சேவல்தான் கொக்கரிக்கின்றது.. கோழி இல்லையே.. ஆண் மயில்தான் தோகை விரித்தாடுகிறது.. பேடை இல்லையே.. ஆண் சிங்கம் தான் கர்ஜிக்கிறது.. பெண் சிங்கம்.. ஊகூம்... அம்மணிக்கு இந்த விஷயமெல்லாம் தெரியாதோ..'' ஏகத்தாளமாய் ஒலித்தது அவனது குரல்.

''மிஸ்டர்.. ராணி தேனீ என்று ஒன்று இருக்கிறது அதை தெரிந்து கொள்ளுங்கள்..'' பதிலுக்கு குத்தினாள் அவள்.

''இருக்கிறதே.. தண்டமாய்.. கூடு கட்டுவதும்.. தேன் சேகரிப்பதும் ஆண் தேனீக்கள்தான்... ஆக.. ஆண் ஆண் தான்.. பெண் பெண் தான்.. அதனால்தான் சொல்கிறேன்.. என்னிடம் மோதிப் பார்க்காதே.. பொடியாகிவிடுவாய்.. உஷார்'' எச்சரித்தான் அவன்.

''உங்களால் என் செய்ய முடியும்.. மிஸ்டர் நிரஞ்சன்.. நான் நினைத்தால் இந்தத் திருமணத்தை நடத்திக் காட்ட முடியும்.. சாலன்ஜ்? ஆகா... இப்போது தோணுகிறது... இதை ஒரு சவாலாய் நினைத்து ஏன் செய்யக் கூடாது என்று..''

''ஏன்.. குடும்பத்துடன் ஜெயிலுக்குப் போய் களி தின்ன ஆசையாக்கும்... அப்போ.. செய்.''

"நாங்கள் ஏன் ஜெயிலுக்கு போகணும்... எங்களுக்கும் சட்டம் தெரியும்.. ஒரு பெண்.. தானே விருப்பப்பட்டு வந்தால்.. அவளைத் தடுத்து நிறுத்த யாருக்கும் உரிமையில்லை. பெற்றவர்களுக்கும் தான்.."

"கரெக்ட்... அந்தப் பெண் மேஜராக இருந்தால்... ஆனால் என் தங்கை மைனராயிற்றே... அம்மணி... நீ சொல்வது இங்கே பொருந்தாதே.."

"வாட்!" விழிகள் அகல.. அலறினாள் அவள்.

" உண்மையைத்தான் சொன்னேன். என் தங்கை பதினெட்டு வயதை அடையவில்லை. சட்டப்படி அவள் இன்னும் மைனர்.. ஒரு கோடீஸ்வரர் வீட்டு மைனர் பெண்ணைக் கடத்தி வந்து... மணம் முடித்த குற்றத்திற்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா.. அதற்கு தயார் தானா.." என்று கொக்கரிப்பது போல அவன் சொல்ல...

அவளுக்கு தலை கிறுகிறுத்தது.. தன்னைச் சுற்றி உலகமே சுழல்வது போல இருந்தது. கால்கள் துணிகளைப் போல துவள.. அப்படியே நாற்காலியில் அமர்ந்தாள் சௌம்யா... உடம்பெல்லாம் வியர்வையில் தெப்பலாய் நனைந்தது.




பெரிய சுனாமி வந்து.. வாரியெடுத்து சுருட்டிப் போட்டது போல இருந்தது சௌம்யாவிற்கு.



நிரஞ்சன் வந்துவிட்டுப் போனது...

ஒரு வழியாய் தொலைந்தான்.. பாவி!

தாங்க்ஸ் டூ ராமசாமி அங்கிள்..

அவர் மட்டும் வந்திராவிட்டால்.. இன்னும் இருந்து வார்த்தைகளால் சித்திரவதை பண்ணியிருப்பான் அந்த மகா கர்வி...

போகும்போது 'மறுபடியும் வருவேன்' என்ற எச்சரிக்கை வேறு...

பக்கத்து வீட்டு ராமசாமி... போனில் வந்த செய்தியை சொல்லுவதற்காக வந்தார்.

"சௌம்யா.. உங்கம்மா போன் பண்ணியிருந் தாங்கம்மா.. ஆஸ்பத்திரியில் உங்க அக்காவுக்கு நினைவு திரும்பி விட்டதாம்.. கண் விழித்ததும் குழந்தைகளைப் பற்றிதான் கேட்டாளாம்... டாக்டர் வந்த பார்த்துவிட்டு.. எந்தப் பிரச்சனையும் இல்லை என்றார்களாம்.. அதைச் சொல்லத்தான் வந்தேன்.. ஆமா.. ராஜேந்திரன் இன்னும் வரவில்லையா என்ன.. துணைக்கு என் மனைவியை இருக்கச் சொல்லட்டுமா.. சௌம்யா.." என்றவர்.. அங்கே அலட்சியமாய் நின்றிருந்தவனை ஒரு பார்வை பார்த்தார்.

அதற்குமேல் அங்கிருக்க பைத்தியமா நிரஞ்சனுக்கு "வருகிறேன்.." என்று கிளம்பியவன்.. அடிக்குரலில் "விடமாட்டேன். மறுபடியும் வருவேன்" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

"யாரம்மா இந்தத் தம்பி.. இதற்கு முன் பார்த்ததில் லையே" பொறுப்புடன் கேட்டார் ராமசாமி.

என்ன சொல்வது என்று திகைத்துவிட்டு...

''ராஜேந்திரனுக்கு தெரிந்தவர் மாமா.. அவன் இருக்கிறானா என்று விசாரித்தார்.. இன்னும் வரவில்லை என்றேன்'' பொய் சொல்லாமல் பாதி உண்மையை சொன்னாள்.

''ஓ.. பத்திரம்மா.. காலம் கெட்டுக் கிடக்கு.. பயப் படாதே.. யசோதாவை அனுப்பி வைக்கிறேன். ராஜேந் திரன் வரும் வரை துணையாக இருப்பாள்...'' என்று சொல்லிய அவரை நன்றியுடன் பார்த்தாள்.

யசோதா மாமி கேட்கும் கேள்விகளுக்கு எந்திரமாய் பதில் சொன்னாளே தவிர.. மனம் என்னவோ நடந்து நிகழ்ச்சியை நினைத்து உழன்றது.

இது எதில் போய் முடியுமோ.. ரஞ்சிதா இன்னும் மைனர் தான் என்ற விஷயத்தை ராஜேந்திரன் சொல்லாமல் மறைத்துவிட்டானே என்ற கோபமும் அவளுக்கு வந்தது. ஒருவேளை.. அவனுக்கே அது தெரியாதோ என்று கூட நினைக்கத் தோன்றியது.

அய்யோ.. இருவரும் அவசர முடிவெடுத்துவிட்டால்... நிலைமை விபரீதம் ஆகிவிடுமே என்று உள்ளுக்குள் பதைப்பும் உண்டானது.

ரஞ்சிதாவின் அண்ணன்.. அந்த அகம்பாவி.. சும்மா விடமாட்டானே... கண்ணில் விரலைவிட்டு நோண்டி யெடுத்து விடுவானே.. அந்த ராட்சசன்.

ராஜேந்திரனை உண்டு இல்லை என்று பண்ணி விடுவான்... அந்த நினைப்பில் உடம்பெல்லாம் அச்சத் தில் அதிர்ந்தது.

சே.. எதையும் தெரிந்து கொள்ளாமல்.. ஏதோ எல்லாம் தெரிந்த மாதிரி சவால் விட்டுப் பேசினேனே.. என்னைச்



சொல்ல வேண்டும்.. எண்ணச் சுழற்சியில்.. யசோதா மாமி எப்போது உறங்கினார்கள் என்று அவளுக்குத் தெரியாது. அவளுக்கு ராத்திரியெல்லாம் தூக்கமும் இல்லை. எப்படி வரும்... தம்பியும். ரஞ்சிதாவும் எங்கே இருக்கிறார்களோ.. பாதுகாப்பான இடத்திலா.. இல்லை ஆபத்தான.. மேனி நடுங்கியது.

கடவுளே.. அவர்களைப் பாதுகாக்க வேண்டியது உன் பொறுப்பு என்று வேண்டிக் கொண்டாள்.

இப்போது அக்காவின் பிரச்சனை சுண்டைக் காயாகத் தெரிந்தது.. இந்தப் புதுப்பிரச்சனை தான் இமயமலையாய் உயர்ந்து நின்றது. கரும் பூதமாய் நின்று பயமுறுத்தியது.

எங்கேயோ.. தப்பான இடத்தில் இருவரும் சிக்கிக் கொண்டது போலவும்.. தம்பியை அடித்துப்போட்டு விட்டு.. ரஞ்சிதாவை இழுத்துக் கொண்டு போவது போல வும் ஒரு பயங்கரக் கற்பனை அவளை அலறச் செய்தது.

கடவுளே.. என்ன செய்வேன்.. எங்கே போய் அவர் களைத் தேடுவேன்.. உள்ளம் துடித்தது.

ஒரு வழியாய் விடிந்ததும்.. அரக்கப் பரக்க எழுந்து வேலைகளை செய்தாள்.

யசோதா மாமி தன் வீட்டுக்கு சென்று விட்டாள். மனித இயந்திரமாய் செயல்பட்டு.. அக்காவிற்கும் அம்மாவிற் கும் காபி போட்டு ஃபிளாஸ்கில் ஊற்றிக் கொண்டாள்.

இட்லியை வேகவைத்து.. சட்னியும் செய்து.. அவற்றைக் கேரியரில் அடைத்தாள்.

இதைக் கொடுத்துவிட்டு.. ஆபீஸுக்கு போக வேண் டும்.. நேற்றே வேலைகளை பாதியில் போட்டுவிட்டு

வந்தாயிற்று. அத்தோடு இன்னும் புதுசாய் சேர்ந்திருக்கும்.. எல்லாவற்றையும் முடித்தாக வேண்டும்.

நினைக்கும்போதே மலைப்பாக இருந்தது. சரியாக தூங்காததால் கண்கள் எரிந்தன. உடம்பெல்லாம் பிழிந்தாற்போல வலித்தது. சோர்வையும்.. வலியையும் பொருட்படுத்தாமல் கிளம்பினாள்.

வாசல் கதவு தாழிடும் வேளையில்.. யசோதா மாமி வந்து சொன்னாள்..

''சௌம்யா... போன் வந்திருக்கும்மா...''

பூட்டிக் கொண்டே கேட்டாள்.. ''யார் மாமி.. அம்மாவா..''

''இல்லேம்மா.. யாரோ நாராயணனாம்... உன் தம்பி ராஜேந்திரன் விஷயமா பேசணுமாம்...''

உடனே பரபரப்புடன் ஓடினாள் அவள்.. எதற்கு இந்தப் பதட்டம் என்று யோசித்தவாறு பின்னே சென்றாள் மாமி.

''அலோ.. நான் ராஜேந்திரனின் அக்கா பேசறேன்.. என்ன விஷயம் என்று சொல்லுங்கள்'' மூச்சை இழுத்துப் பிடித்தவாறு.. கொஞ்சம் கலக்கத்துடன் கேட்டாள் அவள்.

''அம்மா.. சொல்றேன்னு தப்பா நினைக்காதே. உன் தம்பி பண்றது எனக்கு அசிங்கமாகப் படுகிறது... நேத்து திடீர்னு ஒரு பொண்ணை அழைத்துக் கொண்டு என் பையன்கிட்டே வந்திருக்கிறான்.. கண்றாவி.. இந்த வயசில் அவனுக்கு காதலாம்.. கைகூடா விட்டால் செத்து விடுவார்களாம்... கழுதைகளுக்கு புத்தியில்லை. நல்ல வேளையாய்.. என் பையன் என்னிடம் சொல்லிவிட்டான். என்கிட்டே அத்தனை பயம். இரண்டு பேருக்கும் புத்தி சொல்லி இருக்கிறேன். உன் தம்பியிடம் பேசுகிறா



யாம்மா..'' மறுமுனையில் அந்த மனிதர் பேசினார். ரிஸீவரை ராஜேந்திரனிடம் கொடுத்திருப்பார் போல..

''அக்கா..''

''டேய்.. என்ன காரியம் செய்தே..'' என்று ஆரம்பித்து விட்டு.. எங்கே இருக்கிறோம் என்பதை அப்போதுதான் உணர்ந்தவளாய்..

''அக்காவுக்கு அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறாள்.. அவளைப் பார்க்கணும்னு உனக்குத் தோணவில்லையா.. அதைவிட என்னடா முக்கிய வேலை உனக்கு.. உன்னைத் தேடி நிரஞ்சன் குமார் வந்து கேட்டுவிட்டுப் போனார்... நீ வந்ததும் போன் பண்ணச் சொல்லி இருக்கிறார். இருக்கிற 'டென்ஷனை' இன்னும் கூட்டாமல் உடனே வா...''

பற்களைக் கடித்துக் கொண்டாள் சௌம்யா.. சே.. வெளிப்படையாய் நாலு வார்த்தை அவனைத் திட்டவும் முடியாமல் போனதே..

கேட்க வேண்டும் என்ற நினைத்த விஷயங்களை மனசுக்குள் அப்படியே புதைத்துவிட்டு... சாதாரணமாய் உரையாடுவதுபோல பேச வேண்டியுள்ளதே.. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்.

''இதோ பார்.. உன் விஷயத்தை அப்புறம் யோசிக்கலாம். இங்கே.. உன் உதவி இப்போ தேவை. என்னால் ஒண்டியாய் ஆஸ்பத்திரி.. வீடு.. ஆபீஸ் என்று அல்லாட முடியாதுடா.. நீ வந்தால் ஒத்தாசையாக இருக்கும். என்ன.. புரிந்ததா..'' ராமசாமி மாமாவிற்கோ.. யாசோதா மாமிக்கோ சந்தேகம் வராதபடி சொன்னாள் அவள்.

ஆனால் மறுமுனையில் ராஜேந்திரன் வெகு அழுத்தமாய் பதில் சொன்னான்.

''நான் அங்கு வரமாட்டேன்.. வந்தால் நீ என்ன செய்வாய் என்று எனக்கு நல்லாவேத் தெரியும். என்னால் ரஞ்சிதாவை கைவிட முடியாது. அவள் என்னை நம்பி வந்தாச்சு. இனி எங்கள் வாழ்க்கையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். உங்களுக்கு சிரமத்தைக் கொடுக்க மாட் டோம்.. பை...!''

செயலிழந்துபோன ரிஸீவரை வெறித்துப் பார்த்தாள் சௌம்யா.

''என்னம்மா விஷயம்.. ராஜேந்திரனிடம் என்ன கோபம் உனக்கு.. அவன் படிப்பு தான் முக்கியம்னு நண்பன் வீட்டில் தங்கிப் படிக்கிறான்னா.. இருக்கட்டும் விடும்மா.. படிக்கிற பையனை ஏன் தொந்தரவு பண்றே.. ஏதாவது உதவின்னா.. சொல்லும்மா.. நாங்க இருக்கோம் இல்லே..'' என்றார் ராமசாமி.

என்ன பதில் சொல்வது என்று யோசித்தவள்...

''இல்லை அங்கிள்.. அம்மாவுக்கு அவனைப் பார்க் காமல் இருக்க முடியாது. தவிர.. அவன்தான் வீட்டில் ஆண் பிள்ளை.. இருந்தால் தெம்பாய் இருக்குமேன்னு தான்'' என்று சமாளிப்பாய் பேசினாள்.

நிரஞ்சன் இதைக் கேட்டிருந்தால் விசிலடித்திருப் பான்... காலரைத் தூக்கி விட்டிருப்பான்.. பார்த்தாயா.. உன் வாயால் சொல்லிவிட்டாய் என்று கொக்கரித்திருப்பான்.. சே.. இப்படிச் சொல்லித்தானே சமாளிக்க வேண்டும்.

அதிருக்கட்டும்.. இப்போது எந்த திக்கை நோக்கி செல்வது.. ஆஸ்பத்திரியை நோக்கியா.. இப்போ பேசி னாரே.. அந்த நாராயணன்.. அவர் வீட்டிற்கா.. அவரது விலா சமும் தெரியாதே.. போன் நம்பர்.. கண்கள் 'பளிச்'சிட்டன. காலர் ஐ.டி. இருக்கிறதே.



இப்போது வந்த போன் காலை... அதன் எண்ணைக் குறித்துக் கொண்டாள்.

நேரே நர்ஸிங்ஹோம் போய் அக்காவைப் பார்த்து விட்டு...அப்புறம்.. இந்த விலாசத்தை தேடிக் கொண்டு போய் தம்பியை பார்க்க வேண்டியதுதான். ராஜேந்திரன் எங்கே போயிடப்போகிறான்.. என்று நினைத்தவள் மருத்துவமனைக்கு புறப்பட்டாள்.

அம்மாவின் முகத்தில் கலக்கம் மறைந்து.. தெளிவு வந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாள்.

அக்கா விழித்து.. பேசியது கண்டு வந்த நிம்மதி போலும்.. சந்தியாவும் எழுந்து உட்கார்ந்திருந்தாள். அருகே குழந்தைகள்.. தீபாவும் ரூபாவும்.. குழந்தைகளைப் பார்த்து ஆனந்தப் பூரிப்பில் இருந்தாள்.

அந்த நிலையில் அக்காவைப் பார்த்ததில் சௌம்யா விற்கு சந்தோஷம்.

''அக்கா.. எப்படி இருக்கே.. தலையில் வலி இல் லையே.. அப்படியே இருந்தாலும் இந்தக் குட்டிங்களைப் பார்த்ததும் பறந்தோடி இருக்குமே...ஏய்.. குட்டீஸ்களா அம்மாகிட்ட தொண தொணன்னு பேசாமல் சமத்தா இருக்கணும்.. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை இல் லையா.. அம்மா.. இந்தா.. சூடா காபி கொண்டு வந்திருக் கிறேன். அப்புறம்.. இதில் இட்லி இருக்கு.. அக்காவுக்கு கொடு. குட்டிங்க ஏதாவது சாப்பிட்டார்களா.. இல்லையா..'' என்று கேட்ட சித்தியைப் பார்த்து.. ''ஓ.. சாப்பிட்டாச்சு'' என்று தலையாட்டினார்கள் இருவரும்.

''சௌமி.. இன்னும் கொஞ்ச நேரத்தில் டாக்டர் ரவுண்ட்ஸ் வருகிறாராம்.. நர்ஸ் சொல்லிவிட்டுப் போனாள்.

தீபாவையும் ரூபாவையும் அழைச்சிட்டு வெளியே போறேயா.. நானும் இதை சந்தியாவுக்கு ஊட்டிவிட்டு வருகிறேன்..'' என்றாள் தாய்.

''வாங்கடா.. செல்லங்களா... வெளி நடப்பு செய்யலாம்.. முன்னால் பெஞ்ச் போட்டிருக்கிறார்கள்.. அங்கே போய் உட்கார்ந்து பேசலாம்.. டாக்டர் வந்து விட்டுப் போனதும் ஓடிவரலாம்.. வாங்க வாங்க..'' சிறுமிகளை அழைத்துக் கொண்டு வெளியேறினாள் அவள்.

தட்டில் இட்லிகளை வைத்து.. கொஞ்சம் சட்னி ஊற்றி மகளின் அருகே சென்றாள் பாக்கியம்.

''என்னம்மா.. இன்னும் இங்கேயே இருக்கீங்களே... டாக்டர் வந்தா கோபிச்சுப்பாங்க... புறப்படுங்க.. எங்களுக்கு திட்டு வாங்கித் தராதீங்கம்மா'' என்றாள் மாத்திரையுடன் அங்கு வந்த நர்ஸ்.

''அம்மா.. ஒரு ஸ்பூன் போட்டுக் கொடு.. மெல்ல நானே சாப்பிட்டுக்கறேன்..'' என்றாள் சந்தியா.

பாக்கியமும் ஸ்பூனை தந்துவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

அந்த நர்ஸிங்ஹோமின் முன் பகுதியில்.. அடர்ந்த மரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன.. அவற்றின் கீழ் பெஞ்சுகள்...

தீபாவும் ரூபாவும் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.. அதை ஒரு பெஞ்சில் அமர்ந்திருந்த சௌம்யா பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். அவளை நோக்கிச் சென்றாள் பாக்கியம்.

''உட்காரும்மா..'' என்று அழைத்தாள் சௌம்யா.



''குழந்தைகள் முகத்தில் இப்பத்தான் சந்தோஷம் தெரிகிறது சௌம்யா.. அடிப்பட்ட அன்னிக்கு.. ராத்திரி வந்திருந்தார்களே.. அப்போ பார்க்கணும்.. பேயறைந்த மாதிரி இருந்தார்கள்.. அம்மாகிட்டே பேசினதும் தான் பசங்களிடம் கலகலப்பு வந்தது'' என்றாள் பாக்கியம்.

''யாரும்மா இவர்களை அழைத்து வந்தது. சம்பத்தா...'' என்று வினவினாள் மகள்.

''ஊகூம்.. இவங்களோட அப்பாதான்.. என்னம்மா பார்க்கிறே.. ஆச்சர்யமா இருக்கிறதா.. உனக்கு மட்டும் இல்லை..எனக்கும்தான்.. இந்த மாதிரி வரமாட்டானே.. அப்புறம் தான் தெரிஞ்சுது.. அவனை போலீசு விசாரிக்க வேண்டி இருந்ததால் வந்திருக்கிறான் பாவி..''

''தப்பை ஒத்துக் கொண்டாராம்மா.. எனக்கு அது சந்தேகமாத்தான் இருக்கு.. தான் செய்ததை தப்புன்னு அவர் எப்போது உணர்ந்து பேசியிருக்கிறார்.. ப்ச்சு..''

''அப்படித்தான் நானும் நினைக்கிறேன் சௌமி.. ஆனால் போலீசு அத்தோடு நிக்காமல் நம்ம சந்தியா கிட்டேயும் விசாரிச்சாங்கடீ..''

''அக்கா என்ன சொன்னாள்ம்மா.. உண்மையை சொல்லிட்டாளா.. இந்தத் தடவை விட்டிருக்கமாட்டாள்... நடந்ததை எடுத்துச் சொல்லியிருப்பாள்.. அப்படித் தானே...'' பெருமூச்சு விட்டாள் பாக்கியம்..

''அதான் இல்லே.. என் புருஷன் மேல் எந்த தப்பும் இல்லை.. நான்தான் வழுக்கி கீழே விழுந்துவிட்டேன்.. அதனால்தான் என் தலையில் அடிப்பட்டதுன்னு சொல் விட்டா..''

''வழக்கம்போல.. கணவன் செண்டிமெண்ட்ஸ் தான். சரி விடும்மா.. சம்பத் சொன்ன மாதிரி.. இந்தக் குழந்தை களுக்காக பார்க்கணும்.''

''அதனால்தான் நானும் சும்மா இருந்துட்டேன்டீ.. ஆனால் ஒரு விஷயம் கவனிச்சேன் சௌமி.. இந்தத் தடவை.. சந்தானம் ரொம்பவே பயந்து போயிட்டான்னு நினைக்கிறேன்.. இப்படி போலீசு கேஸ் ஆகி.. மானத்தை வாங்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை போல.. ஒருவேளை சந்தியா போலீஸிடம் உண்மையை சொல்லி விட்டால் ஜெயிலுக்குப் போக வேண்டி வருமே என்ற அச்சமும் இருந்திருக்க வேண்டும்.. ஏன்னா.. போலீஸ் சந்தியாவை விசாரிக்கையில்.. முகத்தில் பீதியும்.. கைகால் நடுக்கமும் தெரிந்தது... சௌமி.. பொண்டாட்டி முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். சந்தியா தன்னைக் காட்டிக் கொடுக்கவில்லை என்று தெரிந்ததும் தான் சரியானான்..''

''அய்யோ.. விடும்மா.. இதெல்லாம் எத்தனை நாளுக்கு.. கொஞ்ச நாளைக்கு வாலை சுருட்டிக் கொண்டு இருப்பார்.. அப்புறம்.. நாய் வால் மாதிரி தான் ஆகும்.. பாவம் அக்கா..''

''என்னவோ அவ தலையெழுத்து.. கிறுக்கலா இருக்கு.. நாம் என்ன செய்ய முடியும். ஆமாம் எங்கே ராஜேந் திரன்.. அக்காவை வந்து பார்க்காமல்.. அப்படியென்ன வேலை அவனுக்கு.. அவனை வரச் சொன்னாய் தானே..'' தாயின் திடீர் கேள்வி சௌம்யாவைத் தடுமாற வைத்தது.

என்ன சொல்வது என்று முழித்தவள்.. சமாளிக்க முயன்றாள்.



''வந்தும்மா.. அவனுக்கு இன்னிக்கு எக்ஸாமாம்... எழுதியே ஆகணும்.. நாளைக்கு முக்கியமான பாடம்.. அதுவும் கஷ்டமான சப்ஜெக்ட்.. படிக்க வேண்டும் என் றான்.. முடிந்தால் வருகிறேன்னு சொல்லியிருக்கிறான்ம்மா.. சரி.. டாக்டர் வந்து போயிருப்பார்னு நினைக்கிறேன். எனக்கும் நேரமாச்சு.. அக்காவை பார்த்துவிட்டுக் கிளம்பு கிறேன். குழந்தைகளா.. வாங்க.. போகலாம்'' என்று சொல்லிவிட்டு எழுந்தாள்.

சந்தியாவிடம் விடைப் பெற்றுக் கொண்டு புறப்பட் டவள்.. நேரே டெலிபோன் 'பூத்'துக்குச் சென்று அங் கிருந்தவரிடம் தான் எழுதி வைத்திருந்த நம்பரைக் கொடுத்தாள்.

''சார். இந்த போன் நம்பரின் விலாசம் தெரியவில்லை. கேட்க மறந்துவிட்டேன்..'' டைரக்டரியில பார்த்து சொல்ல முடியுமா.. பெயர் வந்து நாராயணன்..'' என்று சொல்ல.. அவரும் உதவினார்.

அதை வாங்கிக் கொண்டு.. தன் அலுவலகத்திற்கு போன் செய்து.. ஏதோ அவசர வேலை வந்துவிட்டதால் ஒரு மணி நேரம் அனுமதி வேண்டும் என்று சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

பஸ் நிலையத்தில்.. பேருந்துக்காக காத்திருக்கும் போது.. சே.. இதென்ன நிம்மதியில்லாத பிழைப்பு.. எப்பவும் ஏதாவது ஒரு பிரச்சனை கஷ்டம்.. என்று வந்து கொண்டே இருக்கிறது.. எப்போது நிம்மதியாக இருப் போமோ என்ற சலிப்பு வந்தது அவளுக்கு.

அருகே இருந்த டீக்கடையிலிருந்து.. ஒலி நாடாவோ இல்லை வானொலி நிகழ்ச்சியோ.. அதிலிருந்து பாடல் ஒலித்தது.

அவளது மனநிலைக்கு பொருத்தமாய்..

"வாழ்க்கையே அலைபோலே.. நாம் எல்லாம் அதன் மேலே.. ஓடம் போல ஆடிடுவோமே.. வாழ்நாளிலே.."

அவளுக்கு சிரிப்புத்தான் வந்தது.

சரியான பாடல்தான் என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

## 5



ஆபீஸுக்கு வந்த சௌம்யா.. தன் இருக்கையில் 'தொப்' என்று அமர்ந்தாள்.

அலைச்சலும்.. ஏமாற்றமும் அவளை அலைக்கழித்தது.

போதுமடா சாமி.. இந்த வாழ்க்கை என்று உள்ளூர சலிப்பு வந்தது.

ஒருத்தியாய்.. எதையெல்லாம் சமாளிப்பது.

ஒரு பக்கம் அக்கா... ஆஸ்பத்திரியில்.. இன்னொரு பக்கம் தம்பி.. காதல் என்ற பெயரில் கழுதையாய் திரிகிறான். இங்கே ஆபீஸில் தலைக்கு மேல் வேலை வேறு.. சே...

ரேவதி அவளைப் பார்த்துவிட்டு அருகே வந்தாள்.

"என்னடீ.. ஒரு மாதிரியா இருக்கே.."

"ப்ச்சு.. பல மாதிரியா இருக்கேன்டீ.. அக்கா தலையில் அடிப்பட்டதைப் பார்த்துவிட்டு ஆத்திரத்தில் கொதித்து போயிருக்கிறேன்.. தம்பி பண்ணியிருக்கும் வேலைக்கு..



அவமானத்தில் குறுகிப் போயிருக்கிறேன்.. நாயாய் அலைந்து அவனைப் பார்க்க முடியாமல் ஏமாற்றத்தில் இடிந்து போயிருக்கிறேன்..என்ன நடக்குமோ என்கிற பயத்தில் ஆடிப்போயிருக்கிறேன்டீ.. சே.. வாழ்க்கையே வெறுத்துப்போச்சு ரேவதி.."என்று விரக்தியுடன் அவள் பேசவும்.. அவளருகே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள் ரேவதி.

"உன் அக்காவிற்கு தலையில் பலமா அடிப்பட்டு இருக்கிறதா சௌமி.. இப்போது எப்படி இருக்கிறார்கள்.. பயப்படுகிற மாதிரி எதுவும் இல்லைதானே.. அப்ப.. இப்போதைக்கு அந்தக் கவலையை ஒதுக்கித் தள்ளு... இப்போ.. உன் தம்பி விஷயத்துக்கு வா.. அப்படி என்ன செய்தான் அவன்.." என்று அக்கறையுடன் விசாரித்தாள் தோழி.

"ப்ச்சு... சொல்வதற்கே கூச்சமா இருக்குடீ... இருபத்தி மூன்று வயதில் காதலாம்.. உடனே கல்யாணம் வேறு வேண்டுமாம்.. மென்டல் மெச்சூரிட்டி இல்லாமல் என்ன கல்யாணம் வேண்டி இருக்கு. சரி.. அதுதான்போகிறது என்றால்.. காதலிக்கிற பொண்ணு கோடீசுவரியாம்.."

"அடி சக்கை.. புளியங்கொம்பாய் பிடித்திருக்கிறானாக்கும்.."

"புளியங்கொம்பாய் இருந்தால் பரவாயில்லையே.. புளியஞ்செடி.. ஊகூம்.. இளந்தளிர்.. அதைப்போய் பிடித்திருக்கிறான் எங்க வீட்டு மடையன்.. அத்தோடு இல்லாமல் இருவரும் எங்கேயோ சென்றுவிட்டார்கள்..."

"குழப்பாதேடீ.. புரியும்படி சொல்லேன்.."

"அந்தப் பெண் மேஜர் வயசு இல்லைடீ.. அதாவது மைனர்.. அந்தப் பெண்ணோட அண்ணன்காரன்

வீட்டுக்கு வந்து காச்சு மூச்சுன்னு கத்தறான். என்மேல் சந்தேகம்.. அவர்களுக்கு நானும் உடந்தையாம்.. பணக்கார வீட்டுப் பெண் என்று இந்தக் காரியத்திற்கு நானும் 'சப்போர்ட்' பண்ணி.. அவர்களை எங்கேயோ அனுப்பி வைத்திருக்கிறேனாம். என்னைத் துளைத் தெடுக்கிறான்.''

''சிக்கலான விஷயம்தான்.. ஆமாம்.. உன் தம்பியும் அந்தப் பெண்ணும் எங்கிருக்கிறார்கள் என்ற தகவல் உனக்குக் கிடைக்கவில்லையா.. தெரிந்தவர்களிடம் மறைமுகமாய் விசாரித்திருக்கலாம் தானே..''

''இன்றைக்கு விஷயம் கிடைத்தது.. யாரோ ஒருத்தர் இன்றைக்கு போன் பண்ணி.. உன் தம்பி இப்போ என் வீட்டில் இருக்கிறான். என் பையன்கிட்டே உதவிகேட்டு வந்திருக்கிறான். இதெல்லாம் சரியில்லை என்று கத்தினார்.. பக்கத்து வீட்டிற்கு போன் வந்ததால் என்னால் நேரிடையாகப் பேச முடியவில்லை. இந்த வெட்கக் கேடான விஷயம்.. பக்கத்து வீட்டினருக்கு தெரிய வேண் டாமே என்றுதான்.. ஆனால்.. அந்தப் போன் நம்பரை குறித்து வைத்துக் கொண்டு.. எப்படியோ.. விலாசம் அறிந்து கொண்டு போனால்.. ப்ச்சு..''

''என்ன ஆச்சு.. விலாசம் சரியில்லையா..''

''அதில்லை.. நான் போவதற்குள் என் முட்டாள் தம்பி அந்தப் பெண்ணுடன் கம்பி நீட்டிட்டான்.. போனதுக்கு அந்த மனிதர்கிட்டே மூட்டை மூட்டையாய் வாங்கிக் கட் டிக் கொண்டதுதான் மிச்சம்.. இந்த மாதிரி பிள்ளை இருப்ப தற்கு பதில்.. கழுத்தை நெறித்துக் கொன்னு போட்டு விடலாமாம்... அவனால், தன் பிள்ளையும் கெட்டுப் போயிடுவானாம்... இன்னும் எவ்வளவோ...''



''உன் நிலைமை எனக்குப் புரியுதுடீ.. சௌமி.. மனசுக்கு கஷ்டமாகத்தான் இருக்கு.. சரி.. உன் அம்மாவுக்கு விஷயத்தை சொன்னாயா.. அவங்க என்ன சொன்னார்கள்.''

''அம்மாவுக்கு இந்த விஷயத்தை சொல்லவில்லை.. அவங்க ஆடிப்போயிடுவாங்க.. ஏற்கனவே அக்காவோட விஷயத்தில் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள்.. இதையும் சொன்னால் அவ்வளவுதான்.. இரத்த அழுத்தம் எகிறிவிடும்..''

''சரி.. எத்தனை நாள் இதை மறைப்பே.. எப்படியும் அம்மாவுக்கு தெரிந்துதானே தீரும்.. எங்கே ராஜேந் திரன்னு விசாரிக்க மாட்டாரா..''

''நண்பன் வீட்டில் சேர்ந்து படிக்கிறான்னு சமாளித் திருக்கிறேன்.. தேர்வு வருவதில் ஒரு அனுகூலம். எப்படி யாவது அவனைத் தேடிப்பிடித்து.. தரதரவென்று இழுத்து வந்து.. ஆனால் அவனை 'கான்டாக்ட்' பண்ண வழிதான் தெரியவில்லை.. என் வீட்டில் போனும் இல்லை.. என்னிடம் 'செல்'லும் இல்லை.. அதான்.. கஷ்டம்...'' அங்கலாய்ப்புடன் சொன்ன சௌம்யாவை பரிதாபத்துடன் பார்த்தாள் தோழி.

''ஒன்று செய் சௌமி.. உன் வீட்டு நிலைமை சரியாகும் வரை என் 'செல்'லை உபயோகித்துக் கொள்.. அப்புறம் தருவேயாம்..''

சௌம்யாவின் கண்கள் பளிச்சிட்டன.

''தாங்க்ஸ்டீ.. ஆனால் உனக்கு..''

''வீட்டில் என் தங்கையோடது இருக்கு.. விடு..'' என்ற தோழியை நன்றியுடன் பார்த்தாள் அவள்.

''சரி.. இப்போ... கவலைகளை ஒதுக்கி வைத்து விட்டு.. வேலையைத் தொடங்கு.. நேத்தே 'பாஸ்' கேட்டார்..

வேலைகளை எப்போது முடிக்க முடியும் என்று. இன்று எல்லாம் தயாராகிவிடும் என்று சொன்னேன். எனக்கு எந்த வேலையும் இல்லை... உனக்கு உதவியா ஏதாவது செய்கிறேன்.. கொடு..'' என்று சொன்னாள் ரேவதி.

இருவரும் வேலையில் ஆழ்ந்தனர்.

வேலை முடிந்ததும்.. அலுவலகத்திலிருந்து நேரே நர்ஸிங் ஹோமிற்கு போனாள் சௌம்யா.

வீட்டுக்குப் போய்.. பிறகு மருத்துவமனைக்குப் போய் வர நேரமாகிவிடும் என்பதால் மட்டுமல்ல...

வீட்டில் இருந்தால் அவன்.. தலைகனம் படைத்தவன் வந்து 'டார்ச்சர்' பண்ணுவானோ என்ற பயம்..

தான் இல்லாதபோது வந்து காத்திருந்துவிட்டு.. பின் பொறுமையிழந்து ஓடட்டும் என்ற நினைப்பில் வீட்டுக்கு செல்வதை தவிர்த்து விட்டு.. மருத்துவமனைக்கு சென்றாள்.

சந்தியா அவளைப் பார்த்ததும் புன்னகைப் பூத்தாள். முகத்தில் பழைய தெளிவு திரும்பியிருந்தது.

''எப்படி இருக்கேக்கா.. தலையில் வலி இல்லையே இப்போ..'' என்று பரிவுடன் விசாரித்தாள்.

''ஊகூம்.. படுத்து.. எழுந்திருக்கும்போதுதான் தையல் போட்ட இடம் 'சுருக்' என்கிறது. மற்றபடி வலியொன்றும் இல்லை..'' என்றாள் சந்தியா.

''அம்மா எங்கே காணோம்..'' என்று கேட்டாள் தங்கை.

''சுடு நீர் கொண்டு வருகிறேன்னு போயிருக்கிறாங்க. ஆமாம்... ராஜேந்திரன் ஏன் வரவில்லை.. அவனுக்கு இந்த விஷயம் தெரியாதா சௌமி..'' என்று சந்தியா கேட்டதும்.. 'பக்'கென்றது அவளுக்கு.



திரும்பத் திரும்ப எப்படிச் சமாளிப்பது.

''தேர்வு என்று விழுந்து விழுந்து படிக்கிறான்... அதான் வரவில்லைக்கா.. என்னிடம் கூடச் சொன்னான். எனக்கு தேர்வு முடியும் வரை டென்ஷன் தான்.. அப்புறம் வந்து சந்தியா அக்காவை பார்க்கிறேன் என்று..'' அம்மாடி! எப்படியே சமாளித்தாகிவிட்டது.

அதைக் கேட்டதும் சந்தியாவின் முகத்தில் வாட்டம் வந்தது.

''அக்காவை விட அவனுக்குத் தேர்வு தான் முக்கியமாகி விட்டது.. இல்லே..''என்றாள் ஏமாற்றத்துடன்.

''ஆண்பிள்ளை இல்லையா.. நம்மை மாதிரி பதற்றமும் பயமும் அவனுக்கு இருக்காதுக்கா. விடு..'' என்று சமாதானம் சொன்னாள் சௌம்யா.

அப்போது உள்ளே வந்த பாக்கியம்...

''சௌமி.. இப்பத்தான் வந்தாயா.. சூடா காபி வாங்கி வந்திருக்கேன். நீயும் குடிம்மா.. இங்கே.. பக்கத்துல நல்ல ஓட்டல் இருக்கு.. நீ அடிச்சுப் பிடிச்சு ஓடிவர வேண்டியதில்லை... இங்கேயே வாங்கிக் கொள்கிறோம்.. இந்தா குடி.. ஆபீஸிலிருந்து அலுத்து வந்திருப்பே.. பாவம்..'' என்று நீட்டிய காபியை வாங்கி அருந்தினாள்.

வரண்டு போயிருந்த தொண்டையுள் அந்த சூடான திரவம் இதமாய் இறங்கியது.

''அக்காவை என்றைக்கு டிஸ்சார்ஜ் பண்ணுகிறார்களாம்.. கேட்டாயாம்மா..'' என்று தாயிடம் விசாரித்தாள்.

''தெரியலைம்மா.. இன்னும் இரண்டு நாள் ஆகும் போலத் தெரிகிறது.. ஏதோ டெஸ்ட் இருக்காமே.. அது என்ன டெஸ்ட்... சந்தியா..''

''சி.டி.ஸ்கேன்னிங்கம்மா.. அதை ஒரு தடவை எடுத்து விடலாம்னு சொன்னார் டாக்டர். பின்னால் ஏதாவது பிரச்சனை வராமல் இருக்க... 'ப்ளட்' க்ளாட்டாகி இருந்தால் தெரிந்துவிடுமாமே.. பணம்தான் நீராக செலவழிகிறது..''

''அதைப் பத்தி நீ ஏன் கவலைப்படுகிறேக்கா.. நாங்க எப்படியோ சமாளித்து கட்டுகிறோம் விடு.. நீ 'டிஸ்சார்ஜ்' ஆனதும் நேரே நம் வீட்டுக்கு வந்துவிடு நம்ம வீட்டில் தான் உனக்கு 'ரெஸ்ட்' கிடைக்கும்.''

''நானும் அதைத்தான் சொன்னேன் சௌமி... உடம்பிலிருந்த ரத்தம் போய்.. பலம் இல்லாமல் இருக்கிறாள்.. நம் வீட்டில் வந்து இருந்து சுதாரித்துக் கொள்ளட்டும்.. என்றேன்... ஆனால் மாட்டாளாம்..'' என்றாள் பாக்கியம் வருத்தத்துடன்.

''ஏன்க்கா... உனக்கு நம் வீட்டில் என்ன குறைச்சல்.. மறுபடியும் அந்த வியட்நாம் வீட்டுக்கு ஏன் போகத் துடிக்கிறேக்கா..''என்று கேட்டாள் தங்கை.

''எப்படியிருந்தாலும் அங்கேதான் போயாகணும் சௌமி... அதை இப்போவே செய்யலாமே.. திரும்ப.. திரும்ப உங்களுக்கு தொந்திரவு கொடுக்க எனக்கு மனசில்லைடீ..'' குரல் கம்ம சொன்னாள் சந்தியா.

''நீ என் அக்கா.. அது உன் வீடுக்கா.. எப்படி வேறாகி விடும்.. நாங்க என்ன மூன்றாம் மனிதர்களா சொல்லு... இப்ப.. உனக்கு அடிப்பட்டு.. இப்படி ஆஸ்பத்திரியில் இருக்கையில் நாங்கதானே அருகில் இருக்கோம்.. அவர்களா இருந்தார்கள்.. என்ன இருந்தாலும் நாம் எல்லாம் ஒண்ணுதான்க்கா.. தயக்கத்தை உதறிவிட்டு வா..'' என்று வற்புறுத்தினாள் சௌம்யா.



''உன் தங்கை வருந்தி வருந்தி அழைக்கிறாள்.. இன்னும் என்ன தயக்கம்டீ.. சந்தியா.. அங்கே போனா.. திரும்ப உன் புருஷன் கொம்பேறி மூர்க்கனா ஏதாவது செய்து விடுவான்.. தேவையா..''

''வேண்டாம்மா.. குழந்தைகளை விட்டுட்டு என்னால் இருக்க முடியாது.. இப்பவே அவர்கள் முகம் வாடி போயிருக்கிறாங்க.. அவர்களை அழைத்தும் வர முடியாது. 'எக்ஸாம்' நெருங்குகிறது. லீவு போட முடியாது. வேண்டாம்மா.. நான் அங்கேயே போகிறேன்..''

''என்னவோ போம்மா.. உன் ஆரோக்கியம் கெட்டு விடுமேன்னு பார்த்தேன்... சந்தியா.. உன் புருஷனோட கோபத்தை கிளறுகிற மாதிரி எதுவும் பேசிடாதேம்மா.. அந்தக் கோபக்காரனுக்கு கண்மண் தெரியாது. ஏதாவது செய்துவிடப் போகிறான்.. ஏற்கனவே அடிப்பட்ட உடம்பு தாங்காது.. கூடியவரைக்கும் மௌனமாக இருந்து விடும்மா.. நீ எப்படி அங்கே இருக்கப்போகிறாயோ.. அதை நினைக்கையில் என் அடிவயிறு கலங்குகிறது'' கலங்கிய கண்களுடன் சொன்னாள் பாக்கியம்.

''என்னம்மா பேசறே... இத்தனை நாள் அக்கா வாயில்லா பூச்சியா இருந்தது போதும்... இனியாவது நிமிர்ந்து நிற்கட்டும்... அநியாயத்தை தட்டிக் கேட்கட்டும்.... அக்கா நீ தைரியமா இருக்கப் பார்... குனியக் குனியக் குட்டு விழும். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்...''

''ஆமா... ஜான்சி ராணி சொல்றா... கேட்டுக்கோம்மா... சந்தியா... உருப்பட்ட மாதிரிதான்...'' என்று கேலியாய் சொன்னாள் பாக்கியம்...

''ஒருவிதத்தில் சௌமி சொல்றது சரிதான்னு தோணு கிறதும்மா... எனக்கும் துணிச்சல் வேண்டியது தான்... இல்லாவிட்டால் என் மாமியாரின் கதிதான் எனக்கும்... என்னை மூட்டைப் பூச்சியாய் நசுக்கி மூலையில் போட்டு விடுவார்கள்... இனிமேல் அவர்கள் பார்க்கப் போவது புது சந்தியாவைத்தான்... பாரேன்...'' குரலில் உறுதி தெறிக்கச் சொன்னாள் சந்தியா.

''அப்படீன்னா... சண்டி சாமுண்டியா இருக்கப் போகிறேன்கிறாயா...'' கலவரத்துடன் கேட்டாள் தாய்.

''இல்லேம்மா... மௌன கௌரியா இருக்கப் போறேன்.. மௌனப் புரட்சி செய்து... அந்த மௌனத்திலேயே எல் லோரையும்... முக்கியமாய் என் புருசனை அசர வைக்கப் போறேன்... பாரும்மா, வாய் வார்த்தைகளை விட மௌனத்திற்குத் தான் சக்தி அதிகம்'' என்று வெகு அமைதியாகச் சொன்னாள் சந்தியா.

''வெரிகுட்... அக்கா... இதைத்தான் எதிர்பார்த்தேன்...'' என்றாள் இளையமகள்...

''என்னடீ... வெரிகுட்... எதையாவது சொல்லி இவளை உசுப்பி விட்டுவிடு... கஷ்டப்படப் போறது யாரு.. ஆமாம்... உனக்கு நேரமாகல்லை... சீக்கிரமா புறப்பட்டு வீடு போய் சேர்... ராஜேந்திரன் வந்து காத்திருக்கப் போகி றான்... நாளைக்கு 'எக்ஸாம்' இல்லேன்னா வரச் சொல்லு அவனை... என்ன பிள்ளையோ... கொஞ்சமும் அக்கறை யில்லாம...'' தாய்... தம்பியின் பெயரைச் சொன்னதும்... உள்ளூர தவிப்பு வந்தது...

எங்கே இருக்கிறானோ... என்ன செய்கிறானோ என்று பாசம் அடித்துக் கொண்டது.



வீடு போய் சேர ஒன்பது மணி ஆகும். ஏன்.. ஒன்ப தரையும் ஆகலாம்... அதற்குள் அந்த மகானுபாவன் வந்து பார்த்து விட்டுப் போயிருப்பான். வேண்டும் அவனுக்கு...

''சரிம்மா... நான் புறப்படுகிறேன். கையில் பணம் இருக்கா. கொடுக்கட்டுமா... எதுக்கும் வச்சுக்கோ...'' என்று ரூபா நோட்டுகளை எடுத்து நீட்டினாள்.

''அப்புறம்... என் தோழியோட 'செல்'லைக் கொண்டு வந்திருக்கிறேன்... நம்பர் குறித்துத் தரேன்... அவசியம்னா அந்த நம்பருக்குப் போன் பண்ணும்மா... அப்போ... நாளைக்குக் காபி... டிபன் எதுவும் கொண்டு வர வேண் டாம்... அப்படித்தானே...'' என்று உறுதி செய்து கொண் டவள்... 'செல்' நம்பரை எழுதிக் கொடுத்தாள்.

ஒரு வழியாய் அவள் புறப்பட்டபோது மணி எட்டரை ஆகி விட்டது...

வீடு வந்து சேரும்போது மணி பத்து!

அவள் வருவதற்காகவே காத்திருந்தது போல... யசோதா மாமி அவளைப் பார்க்க வந்தாள்.

''என்னம்மா... ஆஸ்பத்திரிக்கு போயிட்டு வந்தேயா... சந்தியாவுக்கு இப்போ பரவாயில்லையா.. பாவம்... எப்போதான் அவளுக்கு நல்ல காலம் வரப்போகிறதோ. சரி.. சாப்பிட்டாயா சௌம்யா... இல்லேன்னா சொல்லு... சாதமும் குழம்பும் இருக்கிறது... கொண்டு வரேன்...'' என்றாள் கரிசனத்துடன்.

''வேண்டாம்... மாமி... காலையில் செய்த சாப்பாடு கொஞ்சம் மிகுந்திருக்கிறது... அது போதும்.. யாராவது வந்திருந்தார்களா... மாமி...'' என்று கேட்டாள் அவள்... கதவைத் திறந்தவாறு.

''யாரும் வந்த மாதிரி தெரியல்லேம்மா... ஆனால் யாரோ போன் பண்ணியிருந்தாங்க... வீடு பூட்டி இருக்குன்னேன்... அவங்க போன் நம்பரைக் கொடுத்து அந்த நம்பருக்கு பேசச் சொல்லிட்டு வச்சுட்டாங்க.. இரு... கொண்டு வருகிறேன்'' என்று சென்றாள் அந்த அம்மாள்...

ஆனால் அது சௌம்யாவின் கவனத்தில் இல்லை. யாரும் வரவில்லை என்ற விஷயம் தான் அவளது கவனத்தில் சுற்றி வந்தது... வரவில்லையாமே அந்த ஆசாமி... ஒருவேளை அலுத்துப் போய்விட்டானா என்ன... அப்படித்தான் இருக்கும்... ஓடிப்போன தங்கை எக்கேடு கெட்டுப் போகட்டும் என்று முடிவு பண்ணி விட்டான் போலும்...

அம்மாடி! நான் பிழைத்தேன்.... இனி அவனது இம்சை இருக்காது.

''இந்தா சௌம்யா... போன் நம்பர்... ஒண்டியா இருப்பாயா... இல்லை துணைக்கு வரட்டுமா...'' என்று கேட்டாள் யசோதா.

''எனக்கு பயம் இல்லை மாமி... தனியாகப் படுத்துப் பேன்...'' என்று சொல்லி.. மாமியை அனுப்பி வைத்து விட்டு... கையில் இருந்த காகிதத்தைப் பார்த்தாள்.

யாருடைய நம்பர் இது... தெரிந்த நம்பராக இல்லையே...

ஒருவேளை... அந்த அகம்பாவியின் திருவிளையாடலாய் இருக்குமோ... ஆனால்... மாமியின் நம்பர் அவனுக்கு எப்படித் தெரியும்...

இருக்காது... அவன் புயலாய் வந்து நிற்பானே தவிர... இப்படிப் போன் மூலம் பேசமாட்டான்.

அந்தத் துணிவில் 'செல்'லில் நம்பர்களை அழுத்தினாள்.



'ரிங்' போனது...

'ஹலோ' என்றது ஒரு ஆண் பிள்ளையின் குரல்.

''ஹலோ... உங்கள் 'செல்' நம்பரைக் கொடுத்திருக்கிறீர்கள்... அதனால் தான் 'கால்' செய்தேன்... என்ன விஷயமாய் பேச நினைத்தீர்கள்...'' என்று அவளே விசாரிக்க...

''ஓ... நீங்களா... ஏதோ புது நம்பராக இருக்கிறதே என்று பார்த்தேன்... என்னை உங்களுக்குத் தெரியாது. நான் ராஜேந்திரனின் நண்பன்... கார்த்திக்...'' உடனே பரபரப்புடன் வினவினாள்...

''கார்த்திக்... உனக்கு அவன் இருக்கும் இடம் தெரியுமா...''

''அது விஷயமா தான் உங்களுக்கு போன் செய்தேன். அவன்... திங்கள்கிழமை ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொள்ள ஏற்பாடு பண்ணியிருக்கிறான்... நண்பர்கள் வட்டம்தான் அதற்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள்... இந்த விஷயம் உங்களுக்குத் தெரியட்டும் என்று போன் செய்தேன்...''

''அய்யோ... கார்த்திக்... இந்தத் திருமணம் பெரிய சிக்கலில் மாட்டி விட்டுவிடும்ப்பா... அந்தப் பெண் இன்னும் மேஜராகவில்லை.... இது அவனுக்குத் தெரியுமா...''

''தெரியும்க்கா... திங்கட்கிழமை அந்தப் பொண்ணோட பிறந்த நாள்... பதினெட்டு வயது பூர்த்தியாகிறது... அன்று தான் திருமணத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு அவன் இப்படிச் செய்வது கொஞ்சம்கூட பிடிக்கவில்லைக்கா... எதுக்கும் உன் வீட்டில் பேசிப் பார்த்து விட்டுச் செய்... குடும்பத்தினர் யாரும்

இல்லாமல் இப்படி அனாதையாட்டம் திருமணம் செய்து கொள்வது நல்லதல்ல... பின்னால் அதை நினைத்து வருத்தப்படுவேன்னு சொன்னேன்... அதற்கு... என் காதலை என் வீட்டார் புரிந்து கொள்ள மாட்டேன்கிறார்கள். எனக்கு மட்டும் என்ன ஆசையா... இப்படி மொட்டை மர மாய் நின்று கல்யாணம் செய்து கொள்ள... என்கிறான்..."

"கார்த்திக்... நான் வேண்டுமானால் அவன்கிட்டே பேசிப் பார்க்கட்டுமா..." என்று கேட்டாள் அவள்.

"வேணாம்க்கா... அவன்கிட்டே பக்குவமா பேசி... அவனோட காதலுக்கு நீங்க சம்மதம் சொல்லியாச்சுன்னு எடுத்துச் சொல்கிறேன். அவனே மனம் மாறி உங்க கிட்டே பேசலாம் இல்லையா."

"உன் போன் நம்பர் எனக்கு எப்படித் தெரியும் என்று கேட்பானே கார்த்திக்..."

"பயப்படாதீங்கக்கா. நான்... சமாளிச்சுப்பேன். இந்தக் கல்யாணத்தை நிறுத்தி வைக்க முடியாவிட்டாலும்... அட்லீஸ்ட்... உங்களுக்குத் தெரிந்து நடக்கட்டுமே என்பதுதான் என் விருப்பம்... எனக்கும் கூடப் பிறந்த வர்கள் இருக்கிறார்கள் அக்கா..."

"ரொம்ப தாங்க்ஸ் கார்த்திக்... எனக்கும் ராஜேந்திர னிடம் பேசணும்னு தான் இருக்கு... அவன் பேசணுமே கார்த்திக்..."

"பேசுவான்க்கா... நம்பிக்கையோடு இருங்க... இது உங்க 'செல்'தானே... அப்போ... சரிக்கா..."

ஏனோ மனசு கொஞ்சம் அமைதியடைந்த மாதிரி இருந்தது சௌம்யாவிற்கு.

எதனால் என்று குறிப்பிட்டுச் சொல்லத் தெரிய வில்லை. ராஜேந்திரன் இருக்குமிடம் தெரிந்து விட்டது



என்றா... அந்தப் பெண் இன்னும் இரண்டு நாளில் 'மேஜர்' ஆகி விடுவாள் என்றா...

இனி அந்த நிரஞ்சன் வந்து பூச்சாண்டி காட்ட முடியாது என்றா... ஆனால் மனதின் அலை ஓய்ந்து அமைதி வந்து சேர்ந்தது நிஜம்...

ஆனால்... அம்மா இதை எப்படி ஏற்கப் போகிறாளோ... படித்துக் கொண்டிருக்கும்போது எதுக்குக் கல்யாணம் என்று கோபப்படுவாள்...

இவனை வைத்து சாப்பாடு போடுவதே பெரிய விஷயம்... இப்போ.. இவனுடைய மனைவிக்கும் சேர்த்தா என்று ஆத்திரம் கூட வரலாம்... கூடவே... கோடீசுவரர் வீட்டுப் பெண்ணாச்சே... எப்படி இருப்பாளோ என்ற பயமும் இருக்கும்...

ஆக... இந்த வீட்டுக்கு மருமகள் ரெடி...

விதியின் விளையாட்டை நினைத்து அவள் சிரிக்க... விதி அவளைப் பார்த்து புன்னகைத்தது.




மறுநாள் காலையில் சீக்கிரமே எழுந்து விட்டாள் சௌம்யா... தூக்கம் முட்டி மோதிக் கொண்டு வந்ததால் ஆழ்ந்த உறக்கமும் இல்லை... மனதின் பரபரப்புதான் காரணம்...

அது மட்டுமல்ல... ஒரு வேளை ராஜேந்திரனிட மிருந்து போன் வரலாம்... அதான் கார்த்திக் சொல்லி

யிருந்தானே... நல்ல பிள்ளை... விஷயத்தைச் சொல்லி யாக வேண்டும் என்ற பொறுப்புணர்வு...

'செல்' ஒலிக்குமா... ஒலிக்குமா என்று தவித்துக் காத்திருந்தவளுக்கு... அது சிணுங்கல் ஓசையில்லாமல் 'சிவனே' என்று உறங்கிக் கொண்டிருப்பது பார்த்து எரிச்சல்...

அவன் செய்யமாட்டான்... அதை எதிர்பார்ப்பதும் முட்டாள்தனம்... பெருமூச்சு விட்டாள் அவள்.

ஒன்பது மணிக்கு... அவள் அலுவலகத்திற்கு கிளம்பிக் கொண்டிருக்கையில்... 'செல்' கூவியது...

தம்பி! அவன்தான் இருக்க வேண்டும்... தாவிப்போய் எடுத்து காதில் வைத்தாள்.

"சௌமி... நான்... அம்மா பேசறேன்..."

அவளுக்கு 'சப்'பென்று ஆனது... இருந்தும் அதை காட்டாமல் வினவினாள்.

"என்னம்மா விஷயம்..."

"டாக்டர் 'ரவுண்ட்ஸ்' வந்தப்போ சொன்னார்டீ. இன் னிக்கே வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகலாம். 'டிஸ்சார்ஜ்' செய்கிறோம்னு..."

"சரி... எவ்வளவு கட்டணும்னு கேட்டு... எனக்கு போன் செய்கிறாயாம்மா... அரேன்ஜ் பண்ணி... எடுத்து வரு கிறேன்" என்று வாய் சொன்னாலும் மனம் முழித்தது... எப்படிச் செய்வாய்... யாரிடம் கேட்பதாய் உத்தேசம்...

"தேவையில்லைடீ... பணத்திற்காக நீ அலைய வேண்டிய அவசியம் இல்லை..."



அவளுக்கு திகைப்பு... பணம் வேண்டாமா... இலவச சிகிச்சையா... அதுவும் நர்ஸிங் ஹோமிலா... அது சாத்தியமில்லையேம்மா...

"என்னம்மா சொல்றே... பணம் கட்ட வேண்டாமா..."

புரியாமல் தாயிடம் கேட்டாள் அவள்.

"அதில்லைம்மா... மாப்பிள்ளையே கட்டி விடுகிறா ராம். இப்போ... வந்திருந்தார்... குழந்தைகளை அழைத்துக் கொண்டு... டாக்டர் அவரிடம் தான் சொன்னார்... உடனே அக்காவிடம் பணத்தோட வந்து 'டிஸ்சார்ஜ்' பண்ணு கிறேன் என்றார்."

இதென்ன அதிசயம்... பிரமிப்பில் தன் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். வலித்தது. ஆக காதில் விழுந்தது நிஜம்தான்.

"என்னடீ... திகைச்சுப் போயிட்டியா... இதுக்கே திகைச் சேன்னா... இப்ப சொல்லப் போகும் சமாச்சாரத்தைக் கேட்டா பிரமிச்சிடுவே... ஆமாம்டீ... என்னை வாய் நிறைய அத்தைன்னு அழைச்சு... கொஞ்ச நாள் நீங்களும் வந்து சந்தியாவுக்கு துணையா இருந்தா நல்லது. அவளுக்கும் ஆறுதல்ன்னாரே பார்க்கலாம்... நான் மலைச்சுப் போயிட்டேன்."

இதென்ன வினோதம்... தென்னை மரத்திற்கு அடிப் பட்டால்... பனை மரத்தில் நெறிக்கட்டுகிற மாதிரி... அக்காவிற்கு தலையில் அடிப்பட்டதில்... அந்த மனி தருக்கு ஏதாவது ஆகிவிட்டதா என்ன... இதுநாள் வரை இல்லாத கரிசனமும் அக்கறையும் எப்படித் திடீர் என்று உதித்தது...

ஒருவேளை... குற்ற உணர்வோ...

ஊகூம் அந்த மனுஷனுக்காவது... குற்ற உணர் வாவது... இருக்காது...

நடிப்பு... நாடகம்... எல்லோர் முன்னே... முக்கியமாய் டாக்டர்... போலீஸ் முன் அன்பான கணவனாய் காட்டிக் கொண்டு... நான் எந்தத் தப்பும் பண்ணவில்லை என்று காட்டிக்க வேண்டாமா... அய்யோ... இதை உண்மை என்று நம்பி அக்கா ஏமாந்து...மோசம் போகக் கூடாதே... முதலில் அக்காவிடம் சொல்லி வைக்க வேண்டும்...

அக்கா... நம்பாதே... அவர் மாறினார் என்றால்... சூரியன் தடம் மாறி மேற்கே உதிக்க ஆரம்பித்து விடு வான் என்று எச்சரிக்க வேண்டும்.

"நீ என்ன சொல்றே சௌமி... அக்காவோட இருந்து பார்த்துக்கறது பரவாயில்லையா... உன்னால் சமாளிக்க முடியுமா... ராஜேந்திரனை உனக்கு துணையா வச்சுக்க என்ன... இந்த மட்டும் அதிசயமா கூப்பிடுகிறாரே... போய் பார்க்கிறேன்..."

அம்மாவிற்கும் ஆசைதான் என்பது அவளது குரலில் தெரிந்தது... பாவம்... போய் இருந்து விட்டு வரட்டும்.

அதுவும்... இங்கே ராஜேந்திரன் பிரச்சனை சரியாகும் வரை அங்கிருப்பதே நல்லது.

ஒருவேளை... அம்மா இங்கு வரும் வேளையில் மருமகள் இங்கு இருக்கலாம்... யார் கண்டது... அப்போது அம்மாவின் முகம் எப்படி மாறும் என்பதை கற்பனையில் பார்த்து... சிரித்துக் கொண்டாள்...

எதுவும் நம் கையில் இல்லை... விதி வழிதான் வாழ்க்கை... பெருமூச்சு விட்டாள்...



"சரிம்மா... ஆபீஸிலிருந்து வந்ததும் போன் செய் கிறேன்ம்மா... அப்போ... அக்கா வீட்டில் தானே இருப் பீர்கள்... ஓகேம்மா..."

'செல்'லைக் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள்.

அடடா... 'செல்'போன் இருப்பது எத்தனை வசதி... சீக்கிரம் நானும் ஒன்று வாங்க வேண்டும்... என்று நினைத்தாள்.

ராஜேந்திரனிடம் இருந்து இன்னும் போன் வரவில் லையே என்ற ஆதங்கமும் இருந்தது... அந்த வருத்தத் துடன் அலுவலகத்திற்கு சென்றாள் அவள்.

அப்பாடா... வேலை முடித்துவிட்டு நேரே வீட்டுக்குப் போய் விடலாம் என்று நினைக்கையில் சந்தோஷம் வந்தாலும் மனசுக்குள் கொஞ்சம் திக்.. திக்... தான்...

நேற்று என்னவோ அவன் வரவில்லைதான்... அதற் காக இன்றைக்கும் வரமாட்டான் என்பது என்ன நிச்சயம்... அந்தப் பயத்துடன் தான் அவள் வீட்டிற்கு வந்தது...

சரியாக ஏழுமணி!

சூறாவளி மையம் கொண்டது மாதிரி வந்து விட்டான் அவன். கதவைத் திறக்காமலே இருந்தால்... அடுத்த நிமிஷமே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்... கதவைத் திறக்காவிட்டால் என்ன நடக்கும் என்று அவளுக்குத் தெரியாதா... அவன்... கதவைப் 'படார்... படார்' என்று இடிப்பதை அக்கம் பக்கத்தவர்கள் பார்த்துத் தப்பாய் நினைத்து விட்டால்... அந்த இங்கிதம் கிஞ்சித்தும் இல்லாதவனாயிற்றே...

கதவைத் திறந்தவள்... அவனை சுட்டெரிப்பது போல ஒரு பார்வை பார்த்தாள்.

''எதுக்கு இங்கே வந்தீர்கள்'' என்று எரிச்சலுடன் அவனைக் கேட்டாள்.

''சொல்லத்தானே வந்திருக்கிறேன்'' என்றவன்... அவளை விலக்கிக் கொண்டு... உரிமையுள்ளவன் போல வீட்டினுள் நுழைந்தான்.

''நில்லுங்கள்... மிஸ்டர்... உங்களைத்தான்'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்க...

அது காதில் விழவே இல்லை என்பது போல... அங்கிருந்த இருக்கையில் அமர்த்தலாய் அமர்ந்து... கால் மேல் கால் போட்டுக் கொண்டு அவளை அலட்சியமாய் பார்த்தான்...

அவளோ தன் கோபத்தை பற்களில் காட்டினாள்... பற்கள்தான் வலித்தன.

''இதோ பாருங்கள் மிஸ்டர் நிரஞ்சன்... உங்கள் தங்கை இங்கே இல்லவே இல்லை என்று ஆயிரம் தடவை சொன்னாலும்... அது ஏன் உங்களுக்கு புரிய மாட்டேன் என்கிறது...'' என்றாள் படுகோபமாய்.

''தெரியும்... அவர்கள் இந்த ஊரில் இல்லை... கோயமுத்தூரில் இருக்கிறார்கள்... சீக்கிரமே கல்யாணம் செய்து கொள்ளும் முடிவில் இருக்கிறார்கள்... சரி தானே...''

அதைக் கேட்டு அவள் அயர்ந்து போனாள்... கண்கள் அகல விரிய... வாயை பிளந்தவாறு அவள் நிற்பதைப் பார்த்துவிட்டு ஏளனமாய் சிரித்தான்.

''தெரிந்தும் இங்கு ஏன் வந்தேன் என்று நினைக்கிறாய்... அப்படித்தானே... திருமணம் எங்கே... எப்போது என்ற விபரம் வேண்டும்... உனக்கு அது தெரிந்திருக்குமே... நீயும் கூட்டுக் களவாணி தானே. என்றுதான் வந்தேன்.''



அதைக் கேட்டதும் அவளுக்கு ஆத்திரம் பொங்கியது.

கூட்டுக் களவாணியாமே... எனக்கே விஷயம் யாரோ சொல்லிதான் தெரிகிறது... என்னவோ என்னைக் கேட்டுக் கொண்டுதான் எல்லாம் நடக்கிறது என்பது போல அல்லவா இருக்கிறது இவன் பேச்சு.

''இத்தனையெல்லாம் தெரிந்து கொண்டவருக்கு இது தெரியாமல் போனது ஏனாம்... உங்க பணபலத்தைக் கொண்டு அதையும் தெரிந்து கொண்டிருக்கலாமே...'' என்று வினவினாள்.

''நீ சொன்னது சரி... பணத்தை வீசித்தான் இத்தனை விஷயங்களையும் சேகரித்தேன்... இப்போது தான் மூலைக்கு மூலை 'டிடெக்டிவ்' ஏஜன்ஸீஸ் இருக்கிறார்களே... பணத்தால் நடக்காத காரியமே இல்லை... மீதி விஷயங்களும் தெரிந்திருக்கும்... ஆனால் அதுவரையில் காத்திருக்கும் பொறுமை எனக்கில்லை. இங்கே வந்து உன்னை உலுக்கியாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்று வந்தேன்... ஆமாம்... உன் தம்பி உன்னை அழைக்கவில்லையா.. இந்தத் திருட்டுக் கல்யாணம் நடந்தால் தானே... அது பற்றி யோசிக்கணும்...'' அவளுக்கும் அந்தத் திருமண ஏற்பாடு பிடிக்கவில்லை தான்... ஆனால் அவனது அகம்பாவப் பேச்சு... ஆணவச் சிரிப்பு... அவளை வாதாட வைத்தது.

''ஏன் நடக்காது... நீங்கள் சொன்ன 'மைனர்' விஷயம் 'மைனர்' சமாச்சாரமாகி விட்டது மிஸ்டர்... உங்க தங்கை மேஜர் வயதை அடைய இருக்கிறாள்... உங்களால்

எதுவும் செய்ய முடியாது... திருமணத்தை முடிவு செய்யும் உரிமை அவளுக்கு நிச்சயம் உண்டு..."

அவனது உதட்டில் ஒரு மாதிரியான சிரிப்பு... நடந்தால் தானே என்பதுபோல நமுட்டுச் சிரிப்பாய் தெரிந்தது. ஏன்...

"உனக்கு யார் சௌம்யா என்று பெயர் வைத்தது. கொஞ்சமும் பொருத்தமாக இல்லையே... சாமுண்டி என்ற பெயர்தான் உனக்குச் சரியான பொருத்தம்... எதையும் யோசிக்காமல்... சண்டைக் கோழியாய் சிலுப்பிக் கொள் கிறாய் பார்... அதுதான் சிரிப்பு வருகிறது... நீ நினைப்பது போல... இன்னும் மூன்று நாளில் என் தங்கை மேஜர் வயதை அடையப் போவதில்லை... இருபத்தியொன்று என்று அவள் ஸ்கூலில் சேர்க்கும்போது எழுதி விட் டார்கள்... உண்மையான தேதி இருபத்தியொன்பது... 'பர்த் சர்ட்டிபிகேட்' இருக்கிறது.. பார்க்கிறாயா... ஆக... இன்னும் பதினோரு நாட்கள் முழுசா இருக்கிறது... அது போதுமே... உன் தம்பியை சிக்க வைக்க... சம்மட்டியால் தலையில் ஓங்கி யாரோ அடித்தாற்போல இருந்தது அவளுக்கு... எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்...

அச்சத்திலும்... அவன் தந்த அதிர்ச்சியிலும் உடம்பு முழுக்க அதிர்ந்தது.

காட்டுத் தீயில் சிக்கிக் கொண்ட விலங்கைப் போல தவித்தாள்.

"இப்ப என்ன செய்யலாம்... நீயே சொல்..." என்று அசட்டையாகக் கேட்டான் அவன்... அவளால் எதுவும் பேச முடியவில்லை. நாக்குப் புரள மறுத்தது... வாயைத் திறந்தால் வார்த்தைகளுக்கு பதில் காற்றுதான் வரும் என்று நிச்சயமாகத் தெரிந்தது. அதைவிட பேசாமல் இருப்பது மேல்.. தன்னை இந்த நிலைக்கு கொண்டு



வந்தவன் மீது கோபம் வந்தது. ஆக்டோபஸ் மாதிரியல் லவா... எல்லா வழிகளிலும் பிடித்து மடக்குகிறான்.

நல்ல வேளையாய் 'செல்' ஒலித்தது அவளுக்கு அனு கூலமாய் இருந்தது. கொஞ்சம் சுதாரித்துக் கொள்ள லாமே...

எடுத்துப் பேசினாள்.

"அலோ..."

"அக்கா... நான் ராஜேந்திரன் பேசறேன்..."

தம்பியா... சட்டென்று கலக்கத்துடன் எதிரே அமர்ந் திருப்பனை ஒரு பார்வை பார்த்தாள்... இருந்திருந்து இப்பவா அவன் பேசணும்...சே!

"வந்து... நான் இப்போ..." அவள் தடுமாறுகையில்... பாய்ந்து 'செல்'லை வாங்கி... தன் காதருகே வைத்துக் கொண்டான் நிரஞ்சன்.

"சாரிக்கா... இன்னும் என் மேல் கோபம் போகவில்லை போலிருக்கிறது... நான் போய் உனக்குப் போன் செய்ய வில்லைன்னுதானே... பயம் தான்க்கா... விஷயத்தைச் சொல்லத்தான் போன் பண்ணினேன். என் நண்பன் சொல்லியிருப்பான்னு நினைக்கிறேன். நாளை மறுநாள் எங்களுக்குக் கல்யாணம். மருதமலை முருகன் கோவி லில்... காலையில்... அப்புறம் ரிஜிஸ்டர் ஆபீஸில் பதிவுத் திருமணம்... நீ வருவதை எனக்கு முன்னறிவிப்பா சொன்னால்... ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப் போக ஏற்பாடு செய்கிறேன்... தயவு செய்து இதை அம்மாவுக்கு சொல்லிடாதேக்கா... அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவா... எல்லாம் நல்லபடியா முடிந்ததும் சொல்லிக்கலாம்... வச்சிடட்டுமா."

நிரஞ்சனின் தாடை இறுகுவது கண்டு அடிவயிற்றில் ஏதோ புரட்டிப்போட்டது...

கேட்டு விட்டானே... இனி என்ன சொல்லி வதைப் பானோ... தெரியவில்லையே... ஜெயிலரிடம் மாட்டிக் கொண்ட கைதி மாதிரியல்லவா இவனிடம் சிக்கிக் கொண்டு விட்டேன். இனி எப்படித் தப்புவது... உள்ளம் படபடக்க நின்றிருந்தாள்.

"ஆக... நான் சொன்னது உண்மை என்று நிரூபணம் ஆயிற்று... இல்லையா... ஒன்றுமே தெரியாத அப்பாவி மாதிரி நடித்தாயே... இப்போ என்ன சொல்கிறே... உன்னைத் திருமணத்திற்கு அழைத்திருக்கிறான் உன் அருமைத் தம்பி... போவதாக உத்தேசமா... இதையெல் லாம் ஏற்பாடு செய்தவளாயிற்றே... நீ அங்கே இருக்க வேண்டாமோ..." எகத்தாளமாய் சொன்னான் நிரஞ்சன்.

"இல்லை... நான் போவதாய் உத்தேசமில்லை..."

"ஊகூம்... போகிறாய்... இல்லை... போகிறோம்... இன்றைக்கே புறப்பட்டுச் செல்கிறோம்... என்ன அப்படிப் பார்க்கிறாய்... இருவருமாய் போய் ஆசீர்வாதம் செய்ய வேண்டாமா... செய்வோம்.. செமத்தியாய்..." கடைசி வார்த்தையை உச்சரிக்கும்போது அவனது உதடுகள் விஷமமாய் சிரித்தன...

அடுத்து அவன் செய்தது திகைப்பைத் தந்தது. உடனே 'செல்'லில் ஏதோ ஒரு டிராவல்ஸுக்குப் பேசி... கோயமுத் தூருக்கு ஏர் டிக்கெட் உடனே கிடைக்குமா என்று கேட்டான்... வேண்டாம்... டிரெயின் பர்ஸ்ட் கிளாஸ் ஏஸி... இரண்டு டிக்கெட்... என்றான் உடனே...

தன்னிடம் எதுவும் கலந்தாலோசிக்காமல்... வேண் டாம்... தன் சம்மதத்தையும் கேட்காமல் இவனாக முடிவு



எடுக்கிறானே... என்று சினம் வந்தாலும்... அதைக் காட்ட முடியாமல் அடக்கினாள்...

அவனது கை ஓங்கியிருக்கறது. அவன் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

உடனே போலீஸை வரவழைத்து தன்னைப் பிடித்துக் கொடுக்கலாம்... தம்பி கடத்திச் சென்றான்... அதற்கு அக்கா உடந்தை என்று புகார் கொடுக்கலாம்...

இப்போது அவனது கோபத்தையும் ஆத்திரத்தையும் கிளறும்படியாய் எதையும் பேசக் கூடாது.

உரலில் தலை சிக்கி விட்டது. உலக்கையின் இடிக்கு பயப்பட்டால் ஆகுமா...

"என்ன யோசனை... எப்படித் தப்பிக்கலாம் என்றா... ஊகூம்... அது முடியாது... நாம புறப்படுவது நிச்சயம். காரில் போகலாம் என்றால் அங்கு அலைந்து தேட வேண்டி வருமே... அதான் டிரெயினில் புக் பண்ணி னேன். ஏன் சொல்... உன் அருமைத் தம்பி ஸ்டேஷனுக்கு வந்து உன்னை அழைத்துப் போவதாய் சொல்லி இருக்கிறான். ஸ்டேஷனில் அவனை 'கப்'பென்று பிடித்து... கோழிக் குஞ்சை அமுக்குவது போல அமுக்கி விடமாட்டேன்... அதுதான் என் திட்டம்... இப்போ நீ என்ன செய்கிறாய்.. உன் அயோக்கிய தம்பிக்கு ஒரு கால் போட்டு... நான் சொல்லும் டிரெயினில் புறப்படுவதாய் தெரிவித்துவிடு... நீ மட்டும் தான்... என்ன... இப்பவே... என் கண் முன்னால்..."

முடியாது என்று கத்த வேண்டும் போல் இருந்தாலும் வேறு வழியின்றி அவன் சொன்னபடி தம்பியிடம் பேசினாள். அவன் சொன்ன டிரெயின் பெயரையும்... புறப்படும் நேரத்தையும் சொன்னாள்.

அதற்கு மேல் அவளைப் பேச விடாமல் அந்த 'செல்'லை வாங்கி தன்னிடம் வைத்துக் கொண்டான் அவன்.

ஏண்டா 'செல்'லை வாங்கி வந்தோம் என்று கூடத் தோன்றியது அவளுக்கு.

நல்லது என்பதெல்லாம் ஏன் தொல்லையாக மாறு கிறது என்று சலிப்புடன் நினைத்துக் கொண்டாள் சௌம்யா.

''என்ன... மசமசவென்று நின்று கொண்டு இருக் கிறாய்... உடனே புறப்படு... பத்தரை மணிக்கு டிரெயின்... இப்பவே மணி எட்டு இருபது ஆகிவிட்டது. இரண்டு செட் உடைகள் போதும்... போறோம்... கல்யாணத் தடை செய்து அவர்களை இழுத்து வருகிறோம். ம்ம்... குவிக்...''

சட்டாம் பிள்ளை போல் தன்னை அதிகாரம் செய்வது கண்டு முறைத்தாள் சௌம்யா...

''நான் வர முடியாது என்றால்...'' என்றாள்... மிரட்டுவது போல்...

''சிம்பிள்... போலீஸை அழைத்துக் கொண்டு போவேன்.. எனக்கு கமிஷனர் வரைக்கும் தெரியும்... சொன்னால்... மஃப்டியில் அனுப்பி வைக்க மாட்டாரா... ஸ்டேஷனில் உன் தம்பியை கையும் களவுமாய் பிடித்து... அங்கேயே பின்னி எடுத்து...''

''நான் வருகிறேன்...''

''அப்படி வாம்மா வழிக்கு... மயிலே மயிலேன்னு சொன்னால் இறகு போடாதாமே... பெண்களும் அப்படித் தான் போல... சரி... சரி பேசுவதற்கு நேரமில்லை. ட்ராவல்ஸுக்கு போய் டிக்கெட் 'கலெக்ட்' பண்ணனும்... இப்போதே புறப்பட்டால் சரியாக இருக்கும்...''



''எனக்குப் பசிக்கிறது... ஏதாவது சாப்பிட வேண்டும்.''

''எனக்கும் தான்... போகிற வழியில் அதையும் பார்த்துக் கொள்ளலாம்...''

வேண்டா வெறுப்புடன்... அவனுடன் புறப்பட்டாள் சௌம்யா...

''யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்... இப்படி யாருடனோ போகிறாளே இவள் என்று எண்ண மாட் டார்களா... நினைக்கவே அருவருப்பாக இருக்கிறது எனக்கு...'' என்று அவள் முணுமுணுப்பாய் கூற...

''எனக்கும் தான்... நம்மை நினைத்து இல்லை... என் தங்கை யாரோ ஒருவனுடன் போய் விட்டாள் என்று நினைக்கும் போது அசிங்கமாகத் தெரிகிறது... என்ன செய்வது... பதிலுக்கு பதில் என்று வைத்துக் கொள்...'' என்றான் ஏளனமாக. அவள் 'கப்சிப்' என்று வாயை மூடிக் கொண்டதும் உரக்கச் சிரித்தான் நிரஞ்சன்.

''தலைவலியும் காய்ச்சலும் தனக்குன்னு வரும்போது தான் தெரியுமாம்... உனக்கொரு நியாயம்... ஊருக்கொரு நியாயம்... இல்லை... என்னைப் பொறுத்த வரை... நம்மை நாலு பேர் பார்க்க வேண்டும். பார்த்துத் தப்பாய் நினைக்க வேண்டும் என்ற எண்ணம்தான். எங்கே... பார்க்கிறார்களா... அட! ஆமாம்... யாரோ ஒரு கிழவி எட்டிப் பார்க்கிறாள்... ஆகா... நம்மைப் பார்த்து விட்டாளே... இது போதும்... நாளைக்கே எல்லோருக்கும் தண்டோரா போட்டுச் சொல்லி விடுவாள்... வெரிகுட்... எனக்கும் அதுதான் வேண்டும்...'' என்று காரைத் திறந்து டிரைவர் இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

'உம்'மென்ற இறுகிய முகத்துடன் அவளும் அமர்ந்து கொள்ள... காரை உயிர்ப்பித்தான்.

"ஏன் இந்த மௌனம்... ஏதாவது ரகசிய திட்டமோ" என்றான் சீண்டுவது போல...

"இல்லை... எப்போதடா உங்க தொல்லை முடியும்... நீங்கள் தொலைவீர்கள் என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்... இத்துடன் நம் சந்திப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்தால் அதுவே போதும்... அதைத்தான் கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன்" 'வெடுக்'கென்று வந்தது பதில்...

"அப்படியே ஆகக் கடவது... ஓகே... இப்போ நம் இனிய பயணத்தை தொடங்குவோமா..." என்று கிண்டலாய் சொல்லிவிட்டு காரை இயக்க... அது சீறிப் பாய்ந்தது...

ஆனால்... அது இனிய பயணமாக முடியவில்லையே... துன்பமாய் அல்லவா முடிந்தது.

# 7



ரயிலின் சத்தம் தடக்... தடக் என்று ஒலித்துக் கொண்டிருந்தது... அது... தன்னுடைய இதயத்து ஓசையை எதிரொலிக்கிறதோ என நினைத்தாள் சௌம்யா...

உண்மைதான்... இந்தப் பயணம் எதில் முடியுமோ...

நாளை என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சத்தில் இதயம் 'தக்... தக்' என்று பலமாய் ஒலித்தது.



ஸ்டேஷனுக்கு வருகிறேன் என்றானே... ராஜேந்திரன். அப்படி வந்து விட்டால்... நிரஞ்சன் சும்மா இருப்பானா... ஏதாவது ரகளை செய்து... அய்யோ... என்ன களேபரம் நடக்கப் போகிறதோ... கடவுளே...

பெருமூச்சு விட்டாள்.

எல்லா கவலைகளையும் ஒட்டு மொத்தமாய் குத்தகை எடுத்து விட்டது போல் இருந்தது அவளுக்கு... அதனால் வந்த 'டென்ஷன்' அவளை இறுக்கிப் பிடித்து இம்சித்தது.

குளுகுளு வசதியும்... சுகமான பெர்த்தும் இருந்தும் உறக்கம் வரவில்லை... எப்படி வரும்...

மனம் நிம்மதியாக இருந்தால்தானே... நித்திரை வருவதற்கு... சமுத்திரத்தில் பொங்கும் அலைகளைப் போல... உள்ளத்தில் ஏதேதோ கவலைகள் அலையோடும்போது... இமைகள் ஒட்டுமா என்ன... ஊகூம்... மன இறுக்கத்தினால் ஏ.ஸி.யிலும் தகித்தது... படுக்கையும் முள்ளாய்க் குத்தியது அவளுக்கு.

தன் கவலைகளுக்கு காரணமானவனை ஓரக்கண்ணால் பார்த்தாள் அவள்.

எதிர் 'பெர்த்' அவனுடையது... கீழ் 'பெர்த்' என்பதால்... வசதியாக அமர்ந்து... கொண்டு வந்திருந்த 'லாப்டாப்'பில் எதையோ தட்டிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு 'டென்ஷன்' ஏதும் இல்லையா... இருந்தும் காட்டிக் கொள்ளவில்லையா... அழுத்தக்காரன் தான் அந்த நேரத்தில் அங்கு வந்தார் டிக்கெட் பரிசோதகர்...

அவன் தந்த டிக்கெட்டை 'செக்' செய்தவர்...

"மிஸஸ்... அண்ட் மிஸ்டர் நிரஞ்சன் குமார்... கரெக்ட்" என்று சொல்லிவிட்டு 'டிக்' செய்து கொண்டார்...

'விலுக்' என்று எழுந்து அமர்ந்தாள் சௌம்யா...

பரிசோதகர் நகர்ந்ததும் கோபத்துடன் அவனிடம் வினவினாள் அவள்.

"இதென்ன கூத்து..." ஆத்திரத்துடன் அவள் கேட்க...

''எந்தக் கூத்து...'' என்று அமைதியாகக் கேட்டான் அவன்.

"மிஸஸ் அண்ட் மிஸ்டர் நிரஞ்சன்குமார் என்று பெயர் கொடுத்ததைத்தான் சொல்கிறேன்... அது ஏன்?"

''ஓ... அதுவா... நாம் இருவரும் இப்படி சேர்ந்து பயணம் செய்வதை யாராவது தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றுதான்... எனக்கு ஒன்றும் இல்லை... உனக்குத்தான் அது அருவருப்பாய் இருக்கும்...'' என்று அவன் சொல்லும்போது உதட்டோரம் ஏன் வளைய வேண்டும்... நக்கலா...

ஓ... என் வார்த்தைகளை எனக்கே திருப்புகிறான் கோபத்துடன் அவனை முறைத்தாள்.

''எனக்கு இது பிடிக்கவில்லை'' என்றாள் முகத்தை சுளித்தவாறு.

''எனக்கும் பிடிக்கவில்லை தான்... என்ன செய்வது... சரி... அப்படி வேண்டாம்... உனக்கு அது பிடிக்கவில்லை என்றால் இந்த மாதிரி நினைத்துக் கொள்... உன் தம்பி... என் தங்கையை இழுத்துச் சென்று... அவப் பெயர் வாங்கித் தந்தது போல... நானும் அவனுடைய அக்காவை என்னோட அழைத்துச் சென்று... களங்கம் வருகிற மாதிரி செய்ய... இந்த ஏற்பாடு. எப்படி.. அருமை இல்லே... இப்போ... உங்க தெரு முழுக்க இதேதான் பேச்சாக இருக்குமே... ராத்திரி வேளையில் யாரோ ஒருத்தனுடன் இந்தப் பெண் கையில் ஏர் பேக்கோடு காரில் ஏறிப் போய் விட்டாள்... அடக் கண்றாவியே... கலிமுத்திப் போச்சு... இந்தக் காலத்துப் பெண்களுக்கு ஒழுக்கம் என்பது சல்லி காசு சமாச்சாரம் ஆகிவிட்டது... க்ர்மம்... க்ர்மம்...'' வம்புக் குரல் போலவே 'மிமிக்' செய்ய...



காதைப் பொத்திக் கொண்டு ''நிறுத்துங்கள்... கேட் கவே சகிக்கவில்லை'' என்று கொஞ்சம் உரக்க அவள் சொல்ல... அவன் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு... ''உஷ்... மெல்ல... யாராவது தூக்கம் கலைந்து வந்து விடப் போகிறார்கள். இது பர்ஸ்ட் கிளாஸ் கம்பார்ட்மெண்ட்... அதுவும் ஏ.ஸி. வேறு. கொஞ்சம் 'டீஸன்டாக' நடந்து கொள்...'' என்றான் அடிக்குரலில்.

''ஆகா... சாத்தான் வேதம் ஓதுகிறதே... தேவைதான்... 'டீஸென்ஸி' பத்தி நீங்க பேசுகிறீர்களாக்கும்... அதற்கு உங்களுக்கு யோக்கியதை இல்லை மிஸ்டர்... உங் களுக்கு மட்டுமில்லை. மொத்த ஆண் இனத்துக்கும் இல்லவே இல்லை'' என்றாள் வீறாப்பாக.

''அப்படியா... அப்போ... உன் அப்பா.. உன் தம்பி... அவர்களுமா... இல்லை... அவர்கள் ஆண்களில் சேர்த்தி இல்லையா...'' என்று கிண்டலாய் கேட்டான் அவன்.

''அவர்களையும் சேர்த்து தான் நான் சொல்வது... பெண் களை அழ வைக்கத்தான் அவர்களுக்குத் தெரியும்...'' என்று சொன்னவளை வியப்புடன் பார்த்தான் அவன்...

ஆண்கள் அனைவரையும் வெறுக்கிறாள் என்றால்... ஏதோ சரியில்லை... எங்கோ பிசகு...

உடனே தலையை உதறிக் கொண்டான். நான் மட்டும் என்ன... ஒட்டு மொத்தப் பெண்களையும் வெறுக்கவில் லையா...

நச்சுப் பாம்பையாவது இழுத்து சுற்றிக் கொள்வேன்... ஆனால் அதைவிட கொடிய விஷத்தை மனசுக்குள் வைத்துக் கொண்டு பழகும் பெண்மணிகளை நம்பவே மாட்டேன்... அது போலத்தான்...

ஆகா... என்ன ஒத்துமை இந்த ஒத்துமை...

என்னப் பொருத்தம் இப்பொருத்தம்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

தன்னைப் பார்த்து அவன் எகத்தாளமாய் சிரிக்கிறான் என்று நினைத்தவள்... கோபத்துடன் முதுகைத் திருப்பிக் கொண்டு படுத்துக் கொண்டாள்.

அவன் முகத்தைப் பார்க்கவும் பிடிக்கவில்லை.

எப்போதும் நக்கலும்... நையாண்டியுமாய் இருக்கும் இவனுடன் சேர்ந்து செல்வதைவிட...

''என்ன... அதுக்குள் பேச்சு அலுத்து விட்டதா... இல்லை... இனிப் பேசி ஜெயிக்க முடியாது என்று தோன்றி... திரும்பிக் கொண்டாயா... இரண்டாவது தான் சரி... அப்படித்தானே சௌமி...'' என்று சீண்டினான் அவன்.

சௌமியாமே... சௌமி... உள்ளுக்குள் பொருமியவள்... திரும்பாமலே சொன்னாள்.

''கோ டூ ஹெல்'' எரிச்சல் மண்டிய குரலில் அவள் சொன்னதும்...

''ஓ... கண்டிப்பாய் அங்கும் உன்னை அழைத்துச் செல்வேன்... மை டியர்'' என்று பதில் வந்தது.

ரயில்வே நிர்வாகம் கொடுத்த கம்பளிப் போர்வையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டாள் சௌம்யா...



அவளால் முடிந்தது அவ்வளவுதான்...

அதைப் பார்த்துவிட்டு... அவனும் நகைத்தான்... பின் தன் வேலையில் மும்முரமாய் மூழ்கிப் போனான்.

வண்டி கர்மமே கண்ணாக வேகத்துடன் ஓடியது.

நடுராத்திரி தாண்டிய வேளையில்தான் அந்த அசம் பாவிதம் நடந்தது...

வண்டியை புரட்டிப் போட்டது போல் ஒரு ஆட்டம் ஆடி வண்டி நின்று போனது...

முழு வண்டியே ஆடியபோது... பெட்டிகள் எம்மாத் திரம் தூங்கிக் கொண்டிருந்த சௌம்யா... தன்னை யாரோ உலுக்கி கீழேபோட்டது போல உணர்ந்தாள்... விழுந்த வேகத்தில் முகம் எதிலோ மோத... உடனே சூடான திரவம்... இரத்தமோ... எங்கிருந்தோ முகத்தில் வழிந்தது... கூடவே... சுற்றிலும் அய்யோ... அம்மா என்ற முனகல்... தீனக்குரல்கள்...

கண்களை விழித்துப் பார்க்க முயன்றாள்... ஏதோ இருட்டாகத் தெரிய... அப்படியே நினைவிழந்து விழுந் தாள்.

கண் விழித்த சௌம்யா... மருந்தின் நெடியில் முகம் சுளித்தாள்.

எங்கே இருக்கிறேன் என்று புரியாமல் பார்வையைச் சுழல விட்டவள்... தான் ஏதோ ஒரு மருத்துவமனையில்... ஸ்பெஷல் வார்டில் படுத்திருப்பதை உணர்ந்தாள்.

தனக்கு என்ன ஆயிற்று...

ஏதோ... தன்னை இழுத்துப் போட்ட மாதிரி இருந் ததே...

எதிலோ அடிப்பட்டு விழுந்தது...

நடந்தது நினைவுக்கு வர... பதைப்புடன் எழுவதற்கு முயற்சி செய்தாள்... ஆனால் முடியவில்லை... தலைப்பக்கம் 'விண்'ணென்று வலி.

அதைப் பார்த்து அங்கிருந்த நர்ஸ் ஓடி வந்தாள்.

''படுத்துக்கம்மா.... 'டிரிப்ஸ்' ஏறிக் கொண்டிருக்கிறது. கையை அசைக்கக் கூடாது...'' என்றாள்...

''ஸிஸ்டர்... எனக்கு என்ன ஆச்சு... என்ன நடந்தது...'' என்று விசாரித்தாள் சௌம்யா...

''நீங்க வந்த ரயில் தடம் புரண்டு நின்று விட்டது மேடம்... இரண்டு பெட்டிகள் கவிழ்ந்து விட்டன. அருகி லேயே உங்க பெட்டியும் இருந்ததால்... உங்களுக்கு அடிப்பட்டிருக்கிறது... எதிலோ உங்க முகம் மோதியிருக் கிறது போல... வலது நெற்றியிலும் சதை கிழிந்து போய் கண்ணுக்குக் கீழே இரத்தம் கட்டி இருக்கிறது... ஆனால் பயப்படும்படி ஏதும் இல்லை... கிழிந்த இடத்தில் தையல் போட்டிருப்பதால்... கொஞ்சம் வலிக்கும்... பொறுத்துக் கொள்ளுங்கள்.

''யாருக்கும் உயிர்ச்சேதம் இல்லையே...'' நடுங்கிய குரலில் கேட்டாள் அவள்...

''இல்லை மேடம்... எலும்பு முறிவு... சதை பிய்ந்து... 'ஸ்ப்ரெயின்' இப்படித்தான்... பாலத்தின் மேல் போயி ருந்தபோது ஏதாவது ஆகியிருந்தால்.... பெரிய சேதம் ஆகியிருக்கும்... நல்லவேளை... அப்படி இல்லை...''

டிரிப்ஸ் ஓட்டத்தை சரிப்படுத்தியவாறு சொன்னாள் அந்த நர்ஸ்.



ஆமாம்... நிரஞ்சனைக் காணோமே... அவனுக்கும் ஏதாவது அடிப்பட்டு படுக்கையில் படுத்திருக்கிறானோ.

அய்யோ... பாவம்... இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டான்...

ஆர்வத்துடன் விசாரித்தாள் சௌம்யா.

''சிஸ்டர்... நிரஞ்சன்னு ஒருத்தர்... என்னுடன் பயணம் செய்தவர்... அவருக்கு...''

''ஓ... உங்கள் கணவரைக் கேட்கிறீர்களா... அவருக்கு முழங்கையில் அடிப்பட்டு லேசாய் வீக்கம் அவ்வளவு தான். அவர் படுக்கையில் உருண்டு விழுந்ததால்.... அடி அவ்வளவு இல்லை மேடம்.''

நர்ஸ் சொல்லச் சொல்ல அவளுக்கு எரிச்சலோ எரிச்சல்.

கணவராமே... அப்படிச் சொல்லிக் கொண்டானாக் கும்... அவனை... பற்களைக் கடிக்க முயன்று... வலியால் 'ஆ'வென்று அலறினாள்.

கடவுளுக்கு கூட ஓரவஞ்சனை அதிகம் தான்... எனக்கு அடிபடும்படி வைத்துவிட்டு... திமிர் பிடித்த நிரஞ்சனை மட்டும் சின்ன வீக்கத்தோடு விட்டு விட்டாரே... அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது...

தன்னை அடித்துப் படுக்க வைத்த ரயிலின் மீது கோபமாக வந்தது... ரயிலும் ஆண் இனம் போலும்... அதான்... பெண்களை மட்டும் காயப்படுத்தி... சட் டென்று வந்த கோபம் உடனே மறைந்து போனது. அட! இதுவும் நன்மைக்கே... இந்த விபத்து ஏற்பட்டதும் நல்லதுக்குத்தான்... ராஜேந்திரன் தப்பிக்க முடிந்தது.

நான் நினைத்து பயந்தது இனி நடக்க சான்ஸ் இல்லை அம்மாடி! பிழைத்தேன்.

பாவம் அந்த நிரஞ்சன் குமார்... நினைத்தது ஒண்ணு... நடந்தது ஒண்ணு... அதனால ஆசாமி... என்ன செய்வ துன்னு புரியாமல் முழித்து நிற்பார்... அதை நினைக் கையில்.... உள்ளுக்குள் உற்சாகம் பொங்கியது. முதலில்... தம்பிக்கு போன் செய்ய வேண்டும்... என்ன நடந்தது என்று சொன்னால்... அவனும் புரிந்து கொள்வான்... கையால் துளாவினாள் அவள்.

'செல்... எங்கே... காணோம்...'

''என்ன தேடுகிறாய்... இதையா...'' நிரஞ்சனின் குரலில் பார்வையைத் திருப்பினாள்.

அவனது கையில்... அவளது 'செல்'!

''அதைக் கொடுங்கள் இங்கே...''

''எதுக்கு... எஸ்.எம்.எஸ்... பண்ணவா...''

''அதெல்லாம் எனக்கு வராது... என் தம்பிக்கு விஷ யத்தைச் சொல்ல வேண்டும்... ஸ்டேஷனுக்கு வந்து பார்த்து ஏமாந்து விடுவான். நான் வரவில்லையோ என்று நினைப்பான்.''

''டோன்ட் வொர்ரி டியர்... உன் தம்பிக்கு தகவல் சொல்லியாச்சு...''

அவள் திகைப்புடன் பார்த்தாள்... அவனே பேசி னானா... அப்படியென்றால்...

''ரொம்பவும் யோசிக்காதேம்மா... அடிப்பட்ட தலை வலிக்கப் போகிறது... என்னைக் காட்டிக் கொள்ளாமல்... ரயில் விபத்து நடந்து... உன் அக்கா அடிப்பட்டு சீரியஸ்



கண்டிஷனில் படுத்திருக்கிறார்கள் என்று யாரோ ஒருவர் போலப் பேசினேன். நினைவு இழக்கு முன் உன் அக்கா இந்த நம்பரை சொன்னதால் போன் பண்ணினேன் என்று ஒரு 'பில்ட் அப்'பும் கொடுத்தேன் பார். அய்யோன்னு அலறிவிட்டான் உன் தம்பி... உடனே புறப்பட்டு இந்த ஹாஸ்பிடலுக்கு வருவதாய் சொன்னான் அவன். பரவா யில்லை.. அவனுக்கும் உன் மீது பாசம் இருக்கிறது...''

அய்யோ... முயல் தப்பி விட்டது என்று நினைத்தால் அது சிங்கத்திடமே ஓடி வருகிறதே... இவனிடம் ராஜேந்திரன் சிக்கி விட்டால்... உண்டு இல்லை என்று செய்து விடுவானே...

கடவுளே... எப்பவுமே என்னை ஏன் தோற்க வைக் கிறாய்... நெஞ்சில் அடைத்த துக்கத்தை அடக்க சிரமப் பட்டாள் அவள்.

''நீங்கள் சொன்னதை அவன் நம்பாமல் போனால்...'' நப்பாசையுடன் அந்தக் கேள்வியைக் கேட்டாள். 'அய்யோ' என்று அவன் அலறிய விதத்திலேயே அவன் நம்பி விட்டான் என்று தெரிந்து விட்டது... அப்படியே சந்தேகம் வந்தாலும்... ஸ்டேஷனில் விசாரித்து தெரிந்து கொள்ள மாட்டானா... விபத்து நிஜம் என்று... வருவான் அவன்... பார்...'' அழுத்தமாய் சொன்னான் நிரஞ்சன்.

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''சிஸ்டர்... என் மனைவிக்கு சோர்வு போல் தெரிகிறது. கொஞ்சம் ஹார்லிக்ஸ் கலந்து தருகிறீர்களா... பாவம்... அவள் பசி தாங்க மாட்டாள்...'' என்றான் ஒரு அழகான புன்னகையை சிந்தியபடி.

''இதோ சார்...'' என்று ஓடினாள் அந்த நர்ஸ்... அவள் கொண்டு வந்த அந்த சூடான திரவத்தை வாங்கி அவன்

முகத்தில் கொட்ட வேண்டும் போல ஆவேசம் வந்தாலும் முடியாதே... எழுந்து உட்காரவே ஒத்தாசை தேவைப்படுகிறது... இந்த நிலையில்... சே... கோபத்துடன் மடக்... மடக்கென்று அந்த பானத்தை விழுங்கி வைத்தாள்.

சோர்வா... இல்லை... மருந்தின் வேகமோ... தெரியவில்லை... தன்னை மறந்து உறங்கி விட்டாள்... மறுபடியும் விழிக்கும்போது நண்பகல் ஆகி விட்டிருந்தது.

"மணி எத்தனை" என்று சிஸ்டரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

இரண்டரை மணி!

தம்பி வந்தானா... ரஞ்சிதாவை அழைத்து வந்தானா... நிரஞ்சனையும் காணோம்... வாசலில் மடக்கி... பிடித்துக் கொள்ள நினைத்து... அங்கே காத்திருக்கிறானோ...

கடவுளே... என் தம்பியைக் காப்பாற்று... அவன் சின்னப் பிள்ளை... நிரஞ்சனின் கோபத்தை எதிர்கொள்ளும் சக்தி அவனுக்கில்லை... நிரஞ்சனின் கண்களில் அவன் படக்கூடாது. மனம் வேண்டியது.

ஆனால்... அது சாத்தியமில்லையே என்று மனக்குரல் முணுமுணுத்தது.

அடிப்பட்ட சிறுத்தையாய் திரிந்து கொண்டிருக்கும் நிரஞ்சன்... எங்கே... எங்கே என்று காத்திருக்கையில்... தம்பியாவது... அவன் கண்களில் படாமல் தப்புவதாவது... இம்பாஸிபிள்...

பேதை உள்ளம் நடக்காததை நினைத்து ஏங்குகிறது.

வேதனையுடன் காத்திருந்தாள் அவள்.



பார்வை வாசல் பக்கமே தவமிருக்க... தம்பியின் வரவை எதிர்நோக்கிப் படுத்திருந்தாள்.

நான்கு மணியளவில் ராஜேந்திரன் வந்தான். உள்ளே நுழையும் போதே... "அக்கா... உனக்கு ஒண்ணும் இல்லையே... தாங்க் காட்! என்னால் தான் உனக்கு இந்த நிலை என்று பதறிப் போயிட்டேன் சௌமிக்கா..." என்று சொல்லி... அவளது கரத்தை வருடினான்.

பின்னால் வந்த ரஞ்சிதா... அவளை பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தம்பியின் பாசமும்... பதற்றமும் அவள் நெஞ்சை விம்மச் செய்தது...

அதே சமயம்... அவனுக்காக வலை விரித்து காத்திருக்கும் நிரஞ்சனின் நினைவும் நண்டாய் உள்ளுக்குள் குடைய... 'ராஜேந்திரா... இங்கே இருக்காதே... போய் விடு...' என்று அவசரமாய் சொன்னாள். அதைக் கேட்டதும் ராஜேந்திரன் அதிர்ந்து போனான். ஓடி வந்த என்னை... போ என்கிறாளே அக்கா... அடிபட்டதில் புத்தி கெட்டு விட்டதா... அவள் தானே என் நம்பரைக் கொடுத்தது... இப்போது ஏன் இந்த பேச்சு மாற்றம்... குழம்பிப் போய் நின்றான்.

"நான் சொல்வதை..." என்று சொல்ல ஆரம்பித்தவள்... அறைக்குள் நுழைந்தவனைப் பார்த்துவிட்டு 'கப்'பென்று வாயை மூடிக் கொண்டாள்...

காலடியோசைக் கேட்டுத் திரும்பிய ராஜேந்திரன் நிரஞ்சனைப் பார்த்ததும் கல்லாய் மாறிப் போனான். கண்கள் இரண்டும் வெளியே வந்து விடும் போல பிதுங்கி நின்றன.

ரஞ்சிதாவின் நிலையோ... வேண்டவே வேண்டாம். முகம் வெளுத்து... சாம்பல் பூசிக் கொள்ள... உடம்பெல்லாம் மழையில் நனைந்த கோழியைப் போல வெட வெடக்க... கண்களில் அச்சம் தெரிய... பரிதாபக் கோலத்தில் நின்றிருந்தாள்.

''என்ன... மாப்பிள்ளை... எப்படி இருக்கிறீர்கள்'' என்று கிண்டலாய் கேட்டவாறு அருகே வந்தான் நிரஞ்சன்.

சௌம்யா... தடதடக்கும் இதயத்துடன் அவனையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

''என்னத் திமிர் இருந்தால்... என் தங்கையை அழைத்துக் கொண்டு ஊர் ஊரா திரிவாய்...''

முஷ்டியை இறுக்கிக் கொண்டு அவன் கையை ஓங்க...

''அய்யோ... வேண்டாம்'' என்று அலறினாள் சௌம்யா.

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு... ராஜேந்திரனிடம் திரும்பினான்...

''உன் அக்கா இப்போ 'பேஷண்ட்...' அவளுக்காக பார்க்கிறேன்... இல்லாவிட்டால் உன் எலும்புகளை முறித்துப் போட்டிருப்பேன். தெரிந்து கொள்...'' என்று சொல்லிவிட்டு.. ரஞ்சிதா பக்கம் பார்த்தான். அவளது பார்வையில் நடுங்கிப் போனாள் தங்கை.

''ஒரு நல்ல குடும்பத்துப் பெண் செய்கிற செயலா இது... கல்யாணம் என்று அலைய உனக்கு வெட்கமாக இல்லை.... வீட்டில் அம்மாவை அழ வைத்துவிட்டு.... நீ சந்தோஷமா இருந்து விட முடியுமா... எதுவும் பேசாமல் என்னுடன் புறப்படு...'' என்று அதட்டலாய் அவன் சொல்ல...



''நில்லுங்க... ரஞ்சிதாவை அதட்டவோ... மிரட்டவோ உங்களுக்கு அதிகாரமில்லை... தெரிந்து கொள்ளுங்கள்...'' என்று கத்தினான் ராஜேந்திரன்.

''ராஜேந்திரா... எதுவும் பேசாதே... ப்ளீஸ்'' என்று சன்னக் குரலில் கெஞ்சினாள் சௌம்யா...

''நீ சும்மா இருக்கா... இனியும் இவரது மிரட்டலுக்கு பயப்பட வேண்டியதில்லை... ரஞ்சிதாவுக்கு நாளையோட பதினெட்டு வயசு ஆகிறது... இனி ஒண்ணும் பண்ண முடியாதுக்கா...''

''அய்யோ... ராஜேந்திரா... சும்மா இரேன்...'' மறுபடியும் கெஞ்சினாள் சௌம்யா.

''ஏன் சும்மா இருக்கணும்... நம்ம பக்கத்து நியாயத்தைச் சொல்ல வேண்டாமாக்கா... நீ ஏன் பயப்படுகிறாய்...''

முகம் சிவக்க... தாடை இறுக... அவனையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்த நிரஞ்சனின் தோற்றம் அவளை பயமுறுத்தியது.

வெடிக்கக் காத்திருக்கும் எரிமலையைப் போல கொதித்துப் போயிருந்தான் அவன்.

''வெட்டிப் பேச்செல்லாம் எதற்கு... நீ நினைப்பது போல இல்லை தம்பி... பிறப்புச் சான்றிதழ் படி... ரஞ்சிதா... மேஜர் ஆவது இருபத்தியொன்பதாம் தேதி தான்... பார்க்கிறாயா...'' என்று தன் பாக்கெட்டிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து நீட்டினான். இடி விழுந்தது போல உறைந்து நின்றான் ராஜேந்திரன் ரஞ்சிதாவிற்கும் அந்த செய்தி அதிர்ச்சியைத் தந்தது என்பதை அவளது முகமே காட்டியது...

"பொய்... பித்தலாட்டம். இதை நான் நம்பமாட்டேன். பொய் சான்றிதழைக் கொண்டு வந்து... காட்டி என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்..."

"நம்பிக்கை இல்லையென்றால்... பிறந்த ஆஸ்பத்திரி பெயர் இருக்கிறது... போய் விசாரித்துக் கொள்.... உண்மை விளங்கும்... இதோ பார்... நீ எதுவும் பேசாமல் விலகிக் கொண்டால் உனக்கு நல்லது. எதாவது இடக்கு செய்தால்... நேரே... இந்த சர்டிபிகேட்டுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு போவேன்... அப்புறம் உன்பாடுதான் திண்டாட்டம்... யோசி... ஏதோ என் கோபத்தை அடக்கிக் கொண்டு... அமைதியாக பேசுவதைப் பார்த்து அடங்கி விட்டேன் என்று நினைக்காதே. இது ஆஸ்பத்திரி. உன் அக்கா பேஷண்ட். இங்கே எதுவும் செய்யக்கூடாது என்று பார்க்கிறேன்.... இல்லாவிட்டால்... உனக்கு நல்ல மரியாதைக் கிடைத்திருக்கும்... இனியும் என் வழியில் குறுக்கிட்டால்... அவ்வளவுதான்... உன்னால் எழுந்திருக் கவே முடியாதபடி செய்து விடுவேன்... ஏய்... வாடி என்னோட...." என்று சொல்லிவிட்டு கிளம்பியவன்... திரும்பி அவனிடம்... "நாளைக்கே உன் அக்காவை 'டிஸ்சார்ஜ்' பண்கிறார்களாம்... பணம் எல்லாம் கட்டி விட்டேன். உன் வீட்டுக்கு அழைத்துப் போ..." என்றான்.

பிறகு... சௌம்யாவை ஒரு ஆழப் பார்வை பார்த்து விட்டு... "தாங்க்ஸ்... பலியாடை வைத்து தொல்லை கொடுக்கும் கொடிய மிருகத்தை வளைத்து... பிடிப்பது போல... உன்னை வைத்து உன் தம்பியை பிடிக்க வேண்டியதாயிற்று... இனி... உன் பாதையில் எதிர்ப்பட மாட்டேன். வருகிறேன்... அப்புறம்... அந்த நர்ஸ் கேட்டால்... என் கணவருக்கு அவசர வேலை வந்து



விட்டது. அதான் சென்றுவிட்டார் என்று சொல்லிவிடு என்ன" என்றான்... கடைசி வார்த்தைகளைச் சொல்லும் போது கண்களின் சிமிட்டல் வேறு...

அதற்குபின் ஒரு நிமிஷமும் நிற்கவில்லை... தங் கையை இழுத்துக் கொண்டு வெளியேறினான்.

அக்காவும் தம்பியும் செயலற்று அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்... வேறு என்ன செய்ய முடியும்...




சௌம்யாவும் ராஜேந்திரனும் தாயிடம் வாங்கிக் கட்டிக் கொண்டிருந்தார்கள்...

பாக்கியம் தன் கோபத்தை வார்த்தைகளில் காட்டி னாள்.

"இத்தனை நடந்திருக்கு... ஒரு வார்த்தை எங்கிட்டே சொன்னாயா... அம்மான்னு ஒருத்தி இங்கு எதுக்கு இருக்கேன்... வடிச்சுக் கொட்டறதுக்கா... தெருவே நாறுகிறது. நீங்கள் நடத்திய கூத்தைக் கண்டு... எங்கே போய் முகத்தை வைத்துக் கொள்வதுன்னு தெரியல்லே... அவனுக்குத்தான் புத்தி புல்திங்கப் போச்சு... உனக்கு என்ன வந்ததுடீ... யாரோ ஒருத்தன் வந்தானாம்... அவன் அழைத்ததும் கூடப் போயிட்டாளாம்... தம்பி கல்யாணத் திற்கு..."

''அம்மா...''

''வாயை மூடுடா... முளைச்சு மூணு இலை விடலை... அதுக்குள் உனக்கு காதலும்... கல்யாணமும் தேவையாயிடுச்சு... இல்லே... வீட்டில் இருக்கிற ஒரே ஆண் பிள்ளைன்னு செல்லம் கொடுத்ததுக்கு இந்தத் திமிர்... காலணா சம்பாதிக்கத் துப்பில்லை... அதற்குள் கல்யாண ஆசையாக்கும்... உன்னால் அக்கா பட்ட அவதியைப் பார்த்தாய்தானே... கண்டவன் கிட்டே யெல்லாம் பேச்சு வாங்கற மாதிரி செஞ்சுட்டேயடா... நாக்கை இழுத்துகிட்டு சாகலாம் போல இருக்கு...

''நீ இப்படிச் சங்கடப்படுவேன்னு தானம்மா நான் உன்கிட்டேயிருந்து மறைச்சேன்...'' என்றாள் மகள்.

''ஏண்டி.... இதெல்லாம் மறைக்கிற விஷயமா... கத்தரிக்கா முத்தினா கடைத்தெருவுக்கு வந்துதான் ஆகணுங்கற மாதிரி இந்த விஷயத்தை மூடி வைக்கிறதில் பிரயோசனமே இல்லைடீ... குடும்ப மானம் தான் நாறிப்போகும்... இதெல்லாம் இந்த அரைவேக்காடுக்கு எங்கே புரியும்... சரி... அவன் தான் புத்தி கெட்டுப் போனான் என்றால்... நீயுமா... என்கிட்டே சொல்லியிருந் தால்...''

''என்ன செய்திருப்பாயாம்...''

''என்னவோ... அவன் கையை... காலைப் பிடிச்சு கெஞ்சியிருப்பேன்... இவன் கன்னத்தில் நாலு அறை கொடுத்து புத்தியை தெளிய வச்சிருப்பேன்... இந்தப் பிரச்சனையை வளர விடாமல்.. முளையிலேயே கிள்ளி யிருப்பேன்... இப்ப என்னாச்சு... ஊருக்கெல்லாம் தமுக்



கடிச்சு சொன்ன மாதிரி ஆச்சு... சே... டேய்... இனிமே காதல்... மண்ணாங்கட்டி என்று பேச்செடுக்காமல் படிக்கப்பாரு... 'எக்சாமி'ல் பாஸ் பண்ற வழியைப் பார். எத்தனை நாள் உன் அக்கா உழைப்பில் சாப்பிடுவே... இதெல்லாம் அவனவனுக்காத் தெரியணும்... சொல்லிக் கொடுத்து வர்றதில்லை...''

ர்ராஜேந்திரன் எதுவும் பேசாமல் தலை குனிந்து அமர்ந்திருந்தான்.

சௌம்யாவிற்கும் கொஞ்சம் உறுத்தல்தான்... அம்மாவிடம் சொல்லியிருக்கலாமோ... சொல்லியிருந் தால் இந்த அளவுக்கு நடந்திருக்காதே...

மறுகணமே... அதையும் சொல்ல முடியாது... இப்போ... என்னவோ தைரியமாய் பேசுகிறாள்... அக்கா வோட பிரச்சனையில் கலங்கிப் போயிருந்தவளிடம்... இந்த விஷயத்தைச் சொல்லியிருந்தால்... அவ்வளவு தான்... அழுது ஆர்ப்பாட்டம் செய்திருப்பாள்... என் பிள்ளை இப்படிச் செய்து விட்டானே என்று நொந்து போய் மூலையில் விழுந்து கிடந்திருப்பாள்... யாருக்குத் தெரியும். இப்போது... என்னவோ வீறாப்பாகப் பேசு கிறாள்..

இந்த மட்டும்... போலீஸ் கலாட்டா என்று எதுவும் ஆகாமல் இருந்ததே... அந்த அளவில் நிம்மதிதான். அது மட்டுமில்லை... அந்த மகானுபாவனின் இம்சையும் தொலைந்ததே... அம்மாடி! சரியான விடாக் கொண் டான்...

அவனை மறக்க வேண்டும் என்று கஷ்டப்பட்டு முயன்றாலும்... அவன் நினைவு சிந்தையில் இருந்து

தொலைய மறுக்கின்றதே. சே... தலையை உதறிக் கொண்டாள் சௌம்யா...

தாயின் உபதேசத்தைக் கேட்டுக் கொண்டு... எந்த வித சலனமும் இல்லாமல் அமர்ந்திருக்கும் தம்பியைக் காண அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

கல்லாக இறுகிப் போயிருந்தவனை... பழையபடி கலகலப்பாக மாற்றுவது எப்படி... தவித்தாள் அவள். பாக்கியம் சென்றதும் அவனருகே அமர்ந்து... அவனது கேசத்தை வாத்சல்யத்துடன் வருடித் தந்தாள்.

''ராஜேந்திரா... மனசைத் தளர விடாதே... வயசுக் கோளாறு உன்னை இந்த மாதிரி ஆட வைத்து விட்டது... இந்த வயசில் காதல் பெரிய விஷயமா படும்... அது தான் முக்கியமா படும்... ஆனா... அதுவே வாழ்க்கைன்னு நினைத்து விடக் கூடாது... வாழ்க்கைக்கு ஆதாரம்... காதல்னு நினைக்கிறது பேத்தல்டா... படிப்பு... நல்ல வேலை... கை நிறைய சம்பளம்.. அதுக்கப்புறம் காதல் என்றால்... வாழ்க்கை இனிக்கும்... அரை குறையான படிப்புக்கு நல்ல வேலையும் கிடைக்காது... வாழ்க்கையும் இனிக்காது... அப்புறம் காதல் கசக்குதய்யான்னு பாடுவே... அதான்... சொல்கிறேன்... படிப்பில் கவனம் வை. அந்தப் பெண்ணை மறந்துவிடு...'' நிதானமாய்... இதமாய் எடுத்துக் கூறினாள்.

''என்னால் முடியலைக்கா... அவளை மறக்க முடியாது... அதைவிட உயிரை விட்டுடலாம்னு தோணுகிறது...'' முகத்தை மூடிக் கொண்டு கேவினான் ராஜேந்திரன்.

''ச்சீ... ஒரு ஆண் மகன் பேசுகிற பேச்சா இது. வெட்கக் கேடு. என் தம்பி இப்படிக் கோழையா இருப்பான்னு நான் நினைக்கவில்லை... பார்க்க அசிங்கமா இருக்கு... கேட்கவே சகிக்கவில்லை. முதல்ல கண்ணைத் துடைத்துக் கொள்... ஆண் பிள்ளை இப்படி அழுதால் கேவலம்... சரி... உன் வழிக்கே வருகிறேன்... உன் விருப்பப்படி கல்யாணம் நடந்தால்... உன்னால் அவளை மகிழ்ச்சியாய் வைத்துக் கொள்ள முடியுமா... சொல்லு.''



''மூட்டைத் தூக்கியாவது அவளைக் காப்பாத்துவேன்.''

''அடச்சே... எல்லாப் பசங்களும் ஏன் தான் இப்படி ஒரே மாதிரி வசனம் பேசுகிறீர்களோ... வேறே நல்ல வேலையே கிடையாதா... சரி... மூட்டைத் தூக்கி... எவ்வளவு சம்பாதிப்பே... அதில் அவளுக்கு என்ன வாங்கித் தருவே... காதல் மயக்கத்தில் வரும் ஜால வார்த்தைகள் இவை... உன்னை நம்பி வருகிறவள் குடிசையில் வாழணும்... கஞ்சிக் குடிக்கணும்... கந்தல் உடுத்தணும்... பாயில் படுக்கணும்... இந்த ராஜ வாழ்க்கைக்காக அவள் உன்னைக் கட்டிக்கணும்... வேடிக்கைத்தான். அதற்கு ரஞ்சிதா என்ன புண்ணியம் செய்தாளோ... நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது... இதோ பார்... எனக்குத் தோன்றியதை நான் சொல்லி விட்டேன்... இனி உன் இஷ்டம்...'' என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றாள் சௌம்யா.

சந்தியா குழந்தைகளுடன் வந்திருந்தாள். முன்னைப் போல அவள் முகத்தில் வாட்டமோ... வேதனை ரேகையோ இல்லாதது கண்டு திருப்தி வந்தது.

''என்னடீ ஆச்சு சௌமி... ரயில் விபத்து என்று கேட்டதும் பதறிப்போய் விட்டேன்... அடியொன்றும் பலமாக இல்லையே... ஆமாம்... ரயிலில் பயணம்

செய்யப் போவதாய் எங்களுக்கு நீ சொல்லவில்லையே... ஏன் மறைத்தாய்...'' என்று தமக்கை கேட்க...

''ப்ச்சு... எல்லாம் என் கெட்ட நேரம்... ஆஸ்பத்திரியில் இருக்கிறாயே.. உனக்குச் சொல்ல வேண்டாம்... அம்மாவுக்குத் தெரிந்தால் கவலைப்பட்டு சுருண்டு விடுவாள்னு நினைத்தேன்க்கா... இல்லாவிட்டால் நான் ஏன் மறைக்கப் போகிறேன்...'' என்று பதில் சொன்னாள் தங்கை...

''சரி... இப்பவாவது சொல்லேன்... எங்கே... எதுக்கு போனேன்னு... திடீர் என்று புறப்பட வேண்டிய அவசியம் ஏன் என்று...''

''அதுவா... என்னைக்கேளடீ... தம்பின்னு ஒருத்தன் இருக்கான் பாரு... அவனால் வந்த வினை... என்ன காரியம் செய்திருக்கிறான் தெரியுமா...'' என்று கோபத்துடன் பேச ஆரம்பித்த பாக்கியம்... சௌம்யா சொன்னதையெல்லாம் திருப்பி அவளுக்கு சொன்னாள்...

''என்னடா... வீட்டில் ஆண் பிள்ளைன்னு தான் ஒருத்தன் தான்... நல்லா படிச்சு... முன்னுக்கு வந்து... குடும்பத்தைக் காப்பாத்துவோம்ங்கற எண்ணம் இல்லை. கல்யாணத்துக்கு குதிக்கிறான்... எல்லாம் என் தலையெழுத்து... கடைசி வரைக்கும் கஷ்டப்படணும்னு என் தலையில் எழுதியிருக்கு... நீயும் அவனுக்கு உறைக்கிற மாதிரி எடுத்துச் சொல்லு சந்தியா... அப்படி என்ன வயசாச்சு இவனுக்கு... கல்யாணம் பண்ணிக்க...''

''அம்மா சொல்ற மாதிரி... கல்யாணத்திற்கு இப்ப என்னடா அவசரம் ராஜேந்திரா... உன்னால என்னவெல்லாம் நடந்திருக்கு... இது தேவையா... அந்த ஆள் யாரு...



வீட்டுக்கு வந்து மிரட்ட... பாவம்... சௌம்யா... அவனுடைய மிரட்டலுக்கு பயந்து அவனோட போயிருக்கா. இதெல்லாம் தேவையா... இதோ பாரு ராஜேந்திரா... பெரிய மனுஷங்களோட சகவாசம் வேண்டாம்டா... அவங்களோட மோதினா.. நமக்குத்தான் தலைவலி... இதையெல்லாம் யோசிக்காமல் இப்படியொரு காரியத்தைச் செய்து விட்டாயே... போகட்டும்... இனி மேலாவது... உன் எதிர்காலத்தைப் பத்தி யோசி... என்ன புரியுதா... வாய் திறந்து பேசுடா... இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்திருக்கியே...'' எரிச்சலுடன் சொன்னாள் தமக்கை.

''ரஞ்சிதா இல்லாமல்... எதிர்காலமே சூன்யமா தெரியுது. அவளும் என்னை உயிரா நேசிக்கிறாள்... அவள் இல்லாமல் என்னாலும்...''

''அடச்சே... என்னம்மா இவன்... கீறல் விழுந்த ரெக்கார்டு மாதிரி அதையே பேசுகிறான்... இவனுக்கு புத்தி பேதலிச்சு போச்சுன்னு நினைக்கிறேன். இவன் உருப்படுகிற மாதிரி தெரியலை... இவன் கிட்டே பேசறது... கெட்டி சுவத்தில் முட்டிக் கொள்கிற மாதிரி தான்... விடும்மா... இவன் எக்கேடாவது கெட்டுப் போகட்டும்... அண்ணன் கூப்பிட்டான்னு அவனோட போயிட்டா... அவளை நினைச்சு உருகுகிறான் மடையன்...'' கோபத்துடன் சொன்னாள் சந்தியா.

''ஏன் என்னைப் புரிஞ்சிக்க மாட்டீங்கிறீங்க... ஒருத்தியை மனசாரக் காதலித்து விட்டு திடீர் என்று மறந்து விடு என்று சொன்னால்... அது எப்படி முடியும்... அடித்து... உதைக்கும் கணவனை விட்டு வரவே உனக்கு மனமில்லை... என்னை உண்மையாகவே நேசிப்பவளை

எப்படி உதற முடியும்... அம்மாவுக்கு காதல்னா என்னன்னே தெரியாது. தெரிஞ்சிருந்தா... அப்பாவைப் பிரிந்திருப்பாளா... இல்லை அப்பாதான் அம்மாவை விட்டுப் போயிருப்பாரா... உன் கதையோ... சொல்ல வேண்டாம்... எப்பவும் சண்டையும்... சச்சரவும்... உனக்கு காதலைப் பத்தி என்ன தெரியும்... சரி சௌம்யாக்கா.. காதல் என்றாலே விஷமா நினைப்பாள். ஏதோ எட்டிக்காய் சாப்பிட்ட மாதிரி முகத்தைச் சுளிப்பாள்... காதலின் அருமை அவளுக்கும் தெரியாது... இந்த வீட்டில்... ஒருத்தர்... ஒருத்தரே ஒருத்தர்... காதலுக்கு மரியாதை தந்திருந்தால் எனக்கு ஆதரவா இருந்திருக்கும். இல்லையே... காதலை மறந்துடு... அந்தப் பொண்ணை விட்டுடு... இதையேத்தான் சொல்கிறீர்கள். ரஞ்சிதாவும் என்னையே நினைத்து வேதனைப் பட்டுக் கொண்டிருப் பாள் தெரியுமா... ப்ச்சு... உங்களிடம் சொல்கிறேன் பார்... என்னைச் சொல்லணும்..."

படபடவென்று பொரிந்து தள்ளியவனை திகைப்புடன் பார்த்தார்கள் மூவரும்...

ஒரு பெண்ணிற்காக... எல்லோரையும் இப்படி எடுத்தெறிந்து பேசுகிறானே இவன்... இப்படியெல்லாம் பேசவும் வருமா இவனுக்கு... குடும்பத்தினரை விட... அந்தப் பெண் அத்தனை முக்கியமானவளாகிப் போனாளா...

மூவரின் திகைப்பையும்... மௌனத்தையும் பார்த்து விட்டு... முகம் சிவந்தான் ராஜேந்திரன்... அப்போது தான்... கொஞ்சம் அதிகமாகவே பேசி விட்டதை உணர்ந் தான்.



"சாரி... சாரிக்கா... என்னால் தாளவில்லை... அதான்... ஏதேதோ பேசிவிட்டேன்... சந்தியாக்கா... அந்தப் பெண்ணை... ரஞ்சிதாவை நீயும் பார்த்தால்... உன் மனசும் மாறிவிடும்... அத்தனை நல்ல பெண்... கோடீசு வரியானாலும்... கொஞ்சமும் கர்வமில்லை தெரியுமா... வேணும்னா... சௌம்யா அக்காவை கேட்டுப் பாரேன்..." என்றான் கெஞ்சலாய்...

"இருக்கட்டும்டா... அவளோட அண்ணன் மூர்க்கனா இருக்காரே... எங்களை சொல்கிறாயே... ராஜேந்திரா... உன் காதலுக்கு முதல் சத்ருவே அவர்தான். அதை ஏன் புரிஞ்சுக்க மாட்டேன்கிறே..." என்று சொன்னாள் சௌம்யா.

"என்னக்கா... அவள்தான் மேஜர் வயதுக்கு வந்தாச்சே... இன்னும் என்ன பயம்..."

"இன்னும் பத்து நாள் கழித்து... அதற்கான ஆதாரத் தையும் காட்டினார் அந்த மனிதர்... நாம் எதுவும் செய்ய முடியாது... தெரியும் தானே...!" கொஞ்சம் எரிச்சலுடன் சொன்னாள் சௌம்யா...

பேசியதையே திரும்பப் பேசுவது... அரைத்த மாவை அரைப்பது மாதிரி... அவளுக்கு சலிப்பைத் தந்தது.

"சரி... இந்த வருஷம் தேர்வு எழுதும் 'ஐடியா' எதுவும் இல்லையா ராஜேந்திரா... எம்.சி.ஏ... கடைசி வருஷம்... கோட்டை விட்டே உன் எதிர்காலமே போச்சு... இதைப் பாஸ் பண்ணினால் தான் உனக்கு நல்ல வேலை கிடைக்கும்... அதை யோசிக்க மாட்டாயா நீ... சந்தியா தன் பங்குக்கு அவனிடம் எடுத்துச் சொன்னாள்.

''அதற்கு இன்னும் 'டைம்' இருக்குக்கா... நிச்சயம் பிடித்து விடுவேன்... அதைப் பற்றிய கவலை இல்லை...''

''ஆமாம்... ஆமாம்... அவனுக்கு இருப்பது ஒரே ஒரு கவலை... கல்யாணம் சீக்கிரம் முடிக்கனும்... அவளோட ஊர் சுத்தனும்... அப்புறம் எங்கே படிப்பது... இனி இவன்கிட்டே பேசிப் பயன் இல்லை சந்தியா. ஒண்ணு சுயபுத்தி வேண்டும்... இல்லே சொல் புத்தி வேண்டும்... இரண்டும் இல்லேன்னா... மேலே பேசிப் பிரயோசனம் இல்லை... விட்டுவிடு. வேறே விஷயம் பேசுவோம்... ஆமாம்... உன் வீட்டில் நிலைமை எப்படி உன் புருஷன் இன்னும் அப்படியே இருக்கானா...'' என்று பாக்கியம் கேட்கவும்.

''இல்லேம்மா... அவர் இப்போ பழைய மாதிரி இல்லை. ரொம்பவும் மாறியிருக்கிறார்... இப்போ.. எடுத்த துக்கெல்லாம் கோபப்படுவதில்லை... அமைதியாக இருக்கிறார். ஆனால் நான் தான் அவர்கிட்டே பேசறதில்லை... அதனால... என்கிட்டே வந்து பேசறதுக் கும் அவருக்குத் தயக்கம்... அது மட்டுமில்லைம்மா நான் குளிக்கறதுக்கு வெந்நீர் எடுத்து வைக்கிறார். சாப்பிட்டதும் குடிக்க தண்ணீர் கொண்டு வந்து தருகிறார்... ராத்திரி... படுக்கை விரித்துப் போடுகிறார்... என் துர்வாச புருஷனான்னு எனக்கே ஆச்சர்யம்...'' என்று சொன்னாள் மகள்.

''அதையெல்லாம் பார்த்துவிட்டு ஏமாந்து விடா தேக்கா... கொஞ்ச நாள் இப்படி இருந்துவிட்டு... திரும் பவும் பழைய குருடி கதையாய் சிலுப்பிக்கப் போகிறார்... அது ஒன்றும் இல்லை... இந்தத் தடவை 'போலீஸ் கேஸ்'



என்றானது இல்லையா... அந்தப் பயம்... அதான் அமைதி யாக இருக்கிறார்... பார்க்கிறவர்களுக்கு நல்லவராத் தெரியணுமே... ஆம்பிளைகளெல்லாம் ஒரே ஜாதி... அவர்களாவது... திருந்துவதாவது... நெவர்... அவர்கள் நினைப்பதை சாதித்துக் கொள்ளும் வர்க்கம்...'' ஆத்திரத் துடன் பேசினாள் தங்கை...

அந்தத் தருணத்தில்... அவளையும் அறியாமல் நிரஞ்சன் நினைவுக்கு வந்தான்...

எப்படியோ சாதித்துக் கொண்டானே... பற்களை நறநறத்தாள் செளம்யா.

''எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும்... நம்ம சந்தியா இப்போ நிம்மதியா இருக்கிறாளே அது போதும்... சந்தியா.. மனுஷன் திருந்திட்டான்னு தெரிஞ்சதும். நீயும் அனுசரித்துப் போகணும்மா...''

''ஆமாம்மா... கல்லானாலும் கணவன்... புழுவா னாலும் புருஷன்... இல்லேம்மா...'' கிண்டலாய் சொன்ன இளைய மகளை முறைத்தாள் தாய்...

''உனக்கு மூக்கணாங் கயிறு போடற வரைக்கும் இப்படித்தான் பேசுவேடீ... அடக் கடவுளே... இந்த அல்லி ராணியோட திமிரை அடக்க... யாரையாவது அனுப்பி வைக்க மாட்டாயா...'' புலம்புவது போல தன் கோபத்தை வெளியிட்டாள் பாக்கியம்....

''அடச்சே! இருக்கிற விஷயத்தை சொன்னால்... அது திமிர் பேச்சாக்கும்... நீங்கெல்லாம் திருந்தவே மாட்டீர் களா... இதோ பாரும்மா... பகலில் பார்த்த பாழும் கிணற் றில்... ராத்திரி போய் விழுவேன்னு மட்டும் நினைக் காதே... உன்னையும்... அக்காவையும் பார்த்தப்புறமும்

எனக்குத் திருமண ஆசையா என்ன கண்றாவிடா இது... இந்த ஜென்மம் மட்டுமில்லைம்மா... நல்லா கேட்டுக்கோ... அடுத்து வரும் ஜென்மங்களிலும் தான்... எனக்குக் கல்யாணம் என்கிற இம்சை வேண்டவே வேண்டாம் ஈசுவரான்னு தான் நான் வேண்டிக் கொள்வது... அதனால்... இந்தக் கல்யாண ஆசையெல்லாம் வச்சுக்காதே..."

"அதையும் பார்க்கிறேன்டீ... இப்படியே ஔவை யாராட்டம் இருந்துடப் போறேயான்னு... தனி மரமா எந்தப் பொண்ணும் இருக்க முடியாது... இப்போ... இளமைத் திமிர்ல இப்படிக் கண்டபடி பேசறே... பின்னால் அம்மா சொன்னது ரொம்பவும் சரின்னு உணருவே..."

சௌம்யா.. தாயின் வார்த்தைகளைக் கேட்டு விட்டு உதட்டைப் பிதுக்கினாள்.

"அம்மா... வந்ததிலிருந்து பேச்சிலே இருந்தாச்சு... உன் கையில் சமைச்சதை ஒரு பிடி பிடிக்கலாம்னு வந்தேன்... ஒரு காபி கூட இல்லையேம்மா..." சிணுங்கலாய் கேட்டாள் பெரிய மகள்.

"அடடா... அதை மறந்துவிட்டு ஏதேதோ பேசிக் கொண்டிருக்கேனே... இரும்மா... காபி கொண்டு வந்து தர்றேன்... குழந்தைகளுக்கும் தோசை வார்த்து தருகிறேன்... வாங்கடா செல்லங்களா... பாட்டி உங்களுக்கு சூடா தோசை செய்து கொடுக்கிறேன். சட்னியைத் தொட்டு சாப்பிடுவீர்களாம்..." பாக்கியம் பேரக் குழந்தைகளுடன் சமையலறையை நோக்கிச் சென்றாள்...

அவள் செல்லும் வரை காத்திருந்துவிட்டு, தங்கை பக்கம் திரும்பினாள்.



"சௌமி... ஒண்ணு சொல்வேன்... கேட்பியா... அம்மாவோட மனசை நோகடிக்காதே சௌமி... பாவம்... வாழ்க்கையில் எந்த சுகமும் காணாதவள் சௌமீ... நம் சந்தோஷம்தான் முக்கியம்னு நினைப்பவள்... அதனால் தான் அப்படிச் சொல்கிறாள்... உனக்குப் பிடிக்கவில்லை என்றால் சும்மா இருந்து விடு... எதிர்த்து மட்டும் பேசாதே சௌமி..."

இதமாய் எடுத்துச் சொன்னாள் தமக்கை.

"என்னவோக்கா... கல்யாணப் பேச்சை எடுத்தாலே எனக்கு உடம்பெல்லாம் எரிகிறது... இதைப் புரிந்து கொள்ளாமல் அம்மா பேசுகிறாளேன்னு தான் வருத்தம்" என்றாள் சௌம்யா.

அந்த நேரத்தில் வாசல் பக்கம் யாரோ வந்து அழைக்கும் சத்தம் கேட்க...

சௌம்யா எட்டிப் பார்த்தாள்...

யாரது... சந்தானத்தின் குரல்!

"சந்தியா..."

"அக்கா... மாமா வந்திருக்கிறார்..." என்றாள் சௌம்யா... அதைக் கேட்டு மலைத்துப் போனாள் சந்தியா...




முதன் முறையாய்... சந்தானம் மாமியார் வீட்டுக்கு அழைக்காமலே வந்திருக்கிறான்!

அது அனைவருக்கும் வியப்பு... சந்தியாவுக்கோ வியப்போ வியப்பு!

அழைத்தாலும் வராதவன்... அழைக்காமல் வந்திருக் கிறானே...

முதலில் சுதாரித்துக் கொண்டவள் பாக்கியம்தான்.

''வாங்க மாப்பிள்ளை... உள்ளே வாங்க... ராஜேந்திரா மாமா வந்திருக்கிறார் பார்... 'சேர்' எடுத்துப் போடு...'' என்று வரவேற்று... உபசரிக்க ஆரம்பித்தாள்.

சௌம்யா... தன் தமக்கையின் கணவனை சந்தேகத் துடன் பார்த்தாள்...

திடீர் என்று வந்திருப்பது ஏன்... சொல்லாமல் ஏன் வந்தாய் என்று கடுப்பாய் ஏசுவதற்கா... அப்படித்தான் இருக்கும்...

ஆனால்...

''சந்தியா துணையில்லாமல் வந்து விட்டாள்... இப்பத்தான் உடம்பு தேறி வந்திருக்கிறது... அதற்குள் அலைச்சல் வேண்டாமேன்னு 'கால் டாக்ஸி'யில் அழைத் துப் போக வந்தேன்...'' என்று சந்தானம் சொன்னதும் அனைவரும் மலைத்துப் போனது நிஜம்.

மனைவியின் உடம்பு தாங்காதே என்று டாக்ஸியில் அழைத்துப் போக வந்தானா... அடடா... இதென்ன விந்தை...

பிரமிப்புடன் பார்த்தாள் பாக்கியம்...

தான் காணுவது கனவா... இல்லை... நனவா... தலை சுற்றி வந்தது அவளுக்கு.



தந்தையைப் பார்த்ததும் ஓடி ஒளியும் இரு குழந்தை களும்... 'அப்பா' என்று விரைந்தோடி அவனுடன் ஒட்டிக் கொண்டதும் அதிசயம்தான். அப்போதும் சௌம்யா விற்கு சந்தேகமே... அவனது மாற்றத்தை அவளால் நம்ப முடியவில்லை. வெறும் நடிப்பாக இருக்கலாம்... அக்காவை சமாதானப்படுத்த... அல்லது... தன்னால் அடிப்பட்டு... கிட்டத்தட்ட மறுஜென்மம் எடுத்து வந்தாள் மனைவி... இந்த நேரத்தில் பரிவாய்... பக்குவமாய் பேசினால்தான் முடியும்... இல்லாவிட்டால்... பிறரின் கோபத்தை சந்திக்க நேரிடும் என்ற ஜாக்கிரதை உணர்வினாலும் இருக்கலாம்...

இதைப் பார்த்துவிட்டு... 'ஆகா... மாறிவிட்டார் இந்த மனிதர்... இவரிடம் துவேஷம் வேண்டாம் என்று நாம் நினைக்க வேண்டும் என்ற எண்ணம்...' அதுதான்... பசுத்தோல் போர்த்துக் கொண்டு வந்திருக்கிறது இந்தப் புலி...

இதை அக்கா நம்பலாம்... அம்மாவும் நம்பலாம்.

ஆனால் நான் ஏமாற மாட்டேன்...

சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்ளுமா என்ன...

வரிப்புலி தன் வரிகளை உதிர்த்து விடுமா என்ன. அது மாதிரிதான்... இந்த ஆண்களும்... தன் சுபாவத்தை மாற்றிக் கொள்வதும்... உள்ளுக்குள் பொருமினாள் தன் தாய்... மாப்பிள்ளையை விழுந்து விழுந்து கவனிப்பதைக் கண்டு பற்களைக் கடித்தாள் அவள்.

''அம்மா... போதும்மா... நீ பண்ற உபசாரத்தில் மனிதர் இங்கேயே 'டிகானா' போட்டு விடப் போகிறார்'' என்றாள் கோபத்துடன்.

''போட்டாலும் தப்பில்லைடீ... இதுநாள் வரைக்கும் இங்கு வந்து கையை நனைக்காதவர்டீ... இன்னிக்கு என்னவோ அதிசயமாய் வந்திருக்கிறார் என்றால் எனக்குப் பரம சந்தோஷமா இருக்கு... இருந்து சாப்பிட்டுட்டு போங்கோ என்றதும்... மறுப்பு சொல்லாமல் ஒத்துக் கொண்டார்னா... பாரேன்.''

''அதை நீ நம்பிட்டாயாக்கும்... போம்மா... இதெல் லாம் பாசாங்கு... நடிப்பு... அவர் பண்ணின தப்புக்கு... பண்ணும் கண் துடைப்பு வேல... அதை நீ நம்புகிறாய் பார்... உன்னைச் சொல்லணும்... அக்கா... நீ இதை யெல்லாம் பார்த்து உருகி விடாதே... கொஞ்சம் பிகுவா கவே இரு... என்ன... நாய் வாலை நிமிர்த்த முடியாது... அதைப் புரிந்து கொள்.''

''வாயை மூடுடீ... யாரும் உன்னைக் கேட்கவில்லை.. சந்தியா... இந்தா... இந்தக் காபியைக் கொண்டுபோய் உன் புருஷனுக்கு கொடு... சீக்கிரம் சமைத்து விடுகிறேன்... மாப்பிள்ளை வந்திருக்கிறார்... விருந்து தயாரித்து விடு கிறேன்... சந்தியா... பீன்ஸை கொஞ்சம் அரிந்து கொடுக் கிறாயா...'' என்று தாயார் சொல்ல...

''அக்கா எதுக்கு... நான் செய்கிறேன்... அக்கா 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளட்டும்...'' என்றாள் இளைய மகள்.

''அது உன் வாயிலிருந்து வரணும்னுதான் சொன் னேன். கோபத்தோட செய்யாதே... ருசிக்காது...'' என்று சொன்னாள் பாக்கியம்.

தாயை முறைத்துவிட்டு பீன்ஸை எடுத்துக் கொண் டாள் சௌம்யா.



சந்தானத்திடம் வந்த இன்னொரு அதிசய மாற்றம் எல்லோரிடமும் மனம் விட்டுப் பேசியதுதான்... ராஜேந்திரனிடம் காலேஜ் தேர்வு பற்றி... சௌம்யாவிடம் அவள் செய்யும் வேலை விஷயமாய்... மாமியாரிடம் அவளது தேக நலத்தை விசாரித்து விட்டு... சௌம்யாவின் திருமணத்தைப் பற்றிக் கேட்டான்...

சந்தியா... தன் கணவனை பிரமிப்புடன் பார்த்தாள்...

இதுநாள் வரையில்... யாரையும் பொருட்படுத்தா தவன்... பார்க்கப் போனால்... அலட்சியம் செய்தவன்... இப்படி அக்கறையாய் விசாரிக்கிறார் என்றால்... இந்த மாற்றம் நிரந்தரமா... எப்படி வந்தது இந்த மாற்றம்!

உயிர் போகும்படி அடித்து நொறுக்கி விட்டோமே... என்ற பரிதாபத்தினாலா... அப்படி அடித்தும்... அவள் வஞ்சம் நினைக்காமல்... போலீஸிடம்... தானே விழுந்ததாய் சொல்லி... தன்னைக் காட்டிக் கொடுக்காமல் இருந்தாளே என்ற நன்றியுணர்ச்சியாலா... இத்தனை நாள் மனைவியை வாட்டி வதைத்ததற்கு பரிகாரமாய் இனி நல்ல கணவனாய் இருக்க வேண்டும் என்ற அக்கறை வந்ததாலா...

எதுவோ... மாறினாரே... அது போதும்... ஆனாலும்... கொஞ்ச நாள் பொறுத்துப் பார்க்கலாமே...

மௌன விரதத்தை உடனே கைவிடாமல் இருப்பதும் நல்லது.

ஒருவேளை... சௌம்யா சொல்வது போல... நடிப்பாக இருந்து விட்டால்... அய்யோ... வேண்டாமே. சந்தியா வின் மனசுக்குள் பெண்டுல ஆட்டம்... பொழுது வேக மாய் ஓடியது...

ஆறு மணியளவில்... மேகம் திரண்டு வந்தது. திடீர் மழை!

சந்தானத்தின் வரவைப் பார்த்து மழையும் அதிசயித்ததோ... என்னவோ...

''மாப்பிள்ளை... இந்த மழையில்... சிரமப்பட்டு புறப்பட்டுப் போகணுமா... இங்கேயே தங்கி விடலாமே'' படபடக்கும் மனசுடன் தான் கேட்டாள் பாக்கியம். முகத்தில் அறைவதுபோல பேசிவிட்டால்...

''நானும் அதைத்தான் நினைத்தேன் அத்தை... இந்த மழையில் அத்தனை தூரம் போவது என்பது கஷ்டம் தான்... தங்கிவிட்டு காலையில் புறப்பட்டு விடுகிறோம்...'' என்று பதில் வந்ததும்... பாக்கியம் முகம் மலர்ந்தாள்.

அப்புறம் என்ன...

தடபுடல் உபசரிப்பும்... இரவு புலவ்... கேசரி... போண்டா... சட்னி... என்று வகை வகையாய் விருந்து சமைத்து அமர்க்களப்படுத்தி விட்டாள்.

அம்மாவின் ஆர்ப்பாட்டம் சௌம்யாவிற்கு எரிச்சலைத் தந்தாலும்... அக்காவிற்காக அதைக் காட்டிக் கொள்ளாமல் இருந்தாள்...

அக்காவின் மனம் நோகக்கூடாது என்று நினைத்து... அமைதியாக இருந்தாள்.

இன்னொன்றையும் அவள் கவனித்தாள்.

இத்தனை ஆரவாரத்திலும்... எதுவும் பேசாமல் எங்கேயோ வெறித்துக் கொண்டிருந்தான் ராஜேந்திரன்... மாமாவின் கேள்விகளுக்கு... 'கடனே' என்று பதில்...



தாய் சமைத்த ருசியான சாப்பாட்டை சுவைத்துச் சாப்பிடாமல்... தட்டில் இருந்த புலவை உழப்பிக் கொண்டிருந்தான்...

மாப்பிள்ளையை உபசரிக்கும் உற்சாகத்தில்... மகனை கவனிக்கவில்லை பாக்கியம்...

தாயின் கைமண ருசியில்... தன்னை மறந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த சந்தியாவும் தான்.

ஆனால்... சௌம்யா மட்டும் தம்பியை கூர்ந்து கவனித்தாள்... இத்தனை புத்திமதி சொல்லியும்... பயனின்றி... இன்னும் ரஞ்சிதாவின் நினைப்பு. சே... உதட்டைப் பிதுக்கினாள் அவள்.

எக்கேடு கெட்டுப் போகட்டும்... இவனையெல்லாம் திருத்த முடியாது.

திரும்ப அவளை சந்தித்துப் பேசி... அந்த ஆளிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளட்டும்... எடுத்துச் சொல்லியும் புரிந்து கொள்ளாத ஜென்மங்களுக்கு... பட்டால்தான் தெரியும். இவன் விஷயத்தில் தலை கொடுத்து... அடிபட்டது போதும்.

இனி.. அவனாயிற்று... அவனது கண்றாவி காதலாயிற்று... அவனுக்கு ஒரு கும்பிடு... அவனுடைய காதல் விஷயத்திற்கு ஒரு கும்பிடு...

உள்ளுக்குள் உறுதியாய் நினைத்தாள்... பாவம்... அது நடக்கப் போவதில்லை என்று அறியாமல்...

மறுபடியும்... அவனது விஷயத்தில் தலையிட்டே ஆக வேண்டிவரும் என்று அவள் அப்போது உணரவில்லை.

இரவு... சந்தியாவுக்கும்... சந்தானத்திற்கும் தன் அறையை கொடுத்து விட்டு... கூடத்தில்... தீபா... ரூபாவை தன்னுடன் படுக்க வைத்துக் கொண்டாள் சௌம்யா...

இதுவும் தாயின் யோசனைதான்.

படுத்தவுடன் பாக்கியமும்... குழந்தைகளும் உறங்கி விட்டனர்...

சௌம்யாவிற்கு தூக்கம் வரவில்லை... அவளுக்கு தன் அறையில்... தன் படுக்கையில் படுத்தால்தான் உறக்கம் வரும்...

புரண்டு புரண்டு படுத்தாள்.

ஒரு மணி நேரம் கழிந்திருக்கும்.

''அம்மா தூங்கியாச்சா'' என்ற சந்தியாவின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் சௌம்யா...

''நீ இன்னும் தூங்கவில்லையாக்கா... ஏன் எழுந்து வந்துட்டே...'' என்று வினவினாள்.

ஒரு வினாடி மௌனத்திற்கு பின்...

''அம்மா சொன்னதற்காக உள்ளே படுத்தேன் சௌமி... அம்மாவோட பக்குவ மனசு... அவரை சட்டுன்னு மன்னித்து விட்டது. ஆனால் என்னால் அது முடிய வில்லைடீ... இன்னும் தயங்குகிறது...'' என்றாள் சந்தியா... வருத்தத்துடன்...

''எனக்கு ஆச்சர்யமா இருக்குக்கா... இந்தத் தடவை நீ மசியாமல்... உறுதியாக இருப்பதைப் பார்த்து... எனக்குப் பெருமையாகவும் இருக்கு. உடனே வளைந்து கொடுக் காமல் பிகுவாய் இருக்கிறாய்... பார்... அதைப் பார்க்கையில்... இதுதான் வேண்டும். நமக்கும் சூடு... சொரணை... சுயமரியாதை இருக்கு என்று ஆம்பிளை களுக்குத் தெரியணும்... எட்டி உதைக்கிறபோது தள்ளிப்போய்... ப்ச்சூ... ச்சூ என்று அழைக்கிறபோது ஓடிவந்து காலை நக்கறதுக்கு நாம் நாய்கள் இல்லை... உப்பும்... உறைப்பும் தின்கிற மனிதப் பிறவிகள் என்பதை அவர்கள் உணரணும்... உணர வைக்கணும்...'' என்று பொரிந்தாள் சௌம்யா.



பெருமூச்சு விட்டாள் சந்தியா...

''நீ சொல்வது சரிதான் என்றாலும்... ரொம்பவும் விறைத்துக் கொள்வதும் தப்போ என்று படுகிறது. அவர் என்னிடம் பேசவும் கூனிக் குறுகுகிறார் என்று நினைக் கிறேன்... தன் தப்பை உணர்ந்து விட்டார் என்று தோன்று கிறது. அது நிச்சயமாகத் தெரியணும்... அப்பத்தான் அவரிடம் இயல்பாக இருக்க முடியும் சௌம்யா... அதே சமயம் தீபா... ரூபாவுக்காகவும் பார்க்க வேண்டும்... முந்தியெல்லாம் அப்பாவைப் பார்த்தாலே பேயறைந்த மாதிரி முகம் மாறும்... அலறி ஒதுங்கிப்போவார்கள்... ஆனால் இப்போ... அப்படியில்லை. சௌமி... அவரும் வீட்டுக்கு வர்றப்போ... குழந்தைகளுக்கு இனிப்பு... சாக்லேட்ன்னு வாங்கி வந்து கொடுக்கிறார். அவர்களை கொஞ்சுகிறார்... குழந்தைகளும் அப்பான்னு ஓடி... கட்டிக் கொள்கிறார்கள். இது நல்ல மாற்றம் இல்லையா... என்னால்... தந்தை பிள்ளைகள் உறவு கெடக்கூடாது என்ற பயம்தான். அதுக்காக உடனே விட்டுக் கொடுக்கப் போவதில்லை... சௌமி... நீ சொல்வாயே... சாது மிரண்டால்... காடு கொள்ளாது என்பதைக் காட்டுன்னு... எனக்கும் கோபம் வரும்... என்பதை அவர் உணரணும் என்று நினைக்கிறேன்.''

''புரிகிறதுக்கா... நீ சொல்வது போல... உன் புருஷன் என்பதை விட.... தீபா... ரூபாவோட அப்பா என்ற உறவுக்கு மதிப்பு தரவேண்டி இருக்கு... குழந்தைகளுக் காக என்கிறாய்... அது மட்டுமில்லை... அம்மாவையும் நினைக்கனும்... இன்னிக்கு அம்மா முகத்தில் தெரிந்த பூரிப்பும்... சந்தோஷமும் பார்க்கும்போது... இந்த உறவு மட்டும் முறிந்து போயிருந்தால்... நிச்சயம் நொந்து நூலாகி... மனதளவில் செத்துப் போயிடுவாள் என்று தான் எனக்குத் தோன்றியது... என்ன செய்வது. நமக்காக இல்லாவிட்டாலும்... மற்றவர்களுக்காக மாறத்தான் வேண்டும் போல... என்ன வாழ்க்கையோ...'' எரிச்சலுடன் சொன்னாள் தங்கை.

''மற்றவர்களின் சந்தோஷதிற்காக வாழ்வதுதான் வாழ்க்கை சௌமி... அதை விடு. ராஜேந்திரன் இன்னும் அந்தப் பொண்ணோட நினைப்பில் கிடக்கிறானே... இவன் இப்படியே இருந்து விடுவானோன்னு பயமா இருக்குடீ... இந்தத் தேர்வில் அவன் நல்லவிதமாய் எழுதி... பாஸ் பண்ணினால் தானே இந்த வீட்டிற்கு விடிவு காலம் வரும்... ஆமாம்... அவன் அறையின் விளக்கு இன்னும் எரிகிறதே... இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறான்... காதலியை நினைத்து உருகி... காதல் கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கிறானோ அந்த மடையன்... செய்தாலும் செய்வான் அவன்'' என்று கேலியாய் சொன்னாள் சந்தியா.

''ஊகூம்... நாம் கொஞ்சம் உறைக்கிற மாதிரி புத்தி சொன்னதில்... விழிப்பு வந்திருக்கும்... புத்தகத்தைப் பிரித்து... படித்துக் கொண்டிருக்கிறான் போல... படிக்



கட்டும்... சரி... நாளைக்கு என்ன 'புரோகிராம்' உன் வீட்டுக்குப் போகிற மாதிரியா... இல்லை இங்கே இருக்கிற மாதிரியா... நாளைக்கு இங்கே இருந்தால்... நாம் எல்லோரும் ஏதாவது சினிமா போகலாம்... என்ன சொல்றேக்கா...'' என்று ஆவலுடன் கேட்டாள் தங்கை.

''எனக்கும் ஆசையாத்தான் இருக்கு சௌமீ... உன் மாமா வருகிறாரா... தெரியவில்லையே...''

''அவர் வராவிட்டால் போகட்டும்... நாம் போகலாம் அக்கா... ராஜேந்திரனையும் அழைத்துப் போகலாம். அவனுக்கும் மாற்றம் வேண்டும். அப்பத்தான் அவனது பித்தம் தெளியும்...''

அந்த நேரத்தில் ரூபா கண்களைக் கசக்கியவாறே எழுந்து அமர்ந்தாள்.

''அம்மா... தண்ணி வேணும்...''

உடனே சென்று நீரைக் கொண்டு வந்து மகளுக்குத் தந்தாள் சந்தியா...

நீரைக்குடித்து விட்டு...

''அம்மா... கொசு கடிக்கிறது... போர்வை தா...'' என்று சிணுங்கினாள் பெண்...

''இருடா... எடுத்து வருகிறேன்... அக்கா... ராஜேந்திரன் போர்த்துக்க மாட்டான்... அவனுக்கு போர்வை தேவைப் படாது... எடுத்து வருகிறேன்'' என்று அவனது அறையை நோக்கிச் சென்றாள்.

அவன் படித்துக் கொண்டிருப்பான்... தொந்திரவு பண்ணாமல் போர்வையை எடுத்து வந்துவிட வேண்டும் என்று மெல்ல காலடியெடுத்து உள்ளே சென்றவள்...

அவன் படுக்கையின் குறுக்கே படுத்திருப்பதைக் கண்டு திகைத்துப் போனாள்.

அதற்குள் தூங்கி விட்டானா... விளக்கையும் அணைக்காமல்... சே... பொறுப்பில்லாத பிள்ளை... போர்வையை இழுத்தவள்... கூடவே மருந்து சீசாவும் வருவதைக் கண்டு அதை எடுத்துப் பார்த்தாள்...

காலியாய் இருந்தது அந்தப் பாட்டில்...

கலவரத்துடன் தம்பியைப் பார்த்தாள்...

ஏதோ சரியில்லை என்று மனசுக்குள் தோன்ற... தம்பியை அசைத்தாள்... உலுக்கினாள்.

அவன் விழிக்காமல் போகவே...

"அய்யோ... அம்மா..." என்று அலறினாள்.

அந்தக் குரலைக் கேட்டு பாக்கியமும்... சந்தியாவும் ஓடி வந்தார்களே தவிர...

ராஜேந்திரன் கண்களைத் திறக்கவில்லை.




**வீ**ட்டில் ஆண் துணை அவசியம் என்பதை அன்று தான்... முதன் முதலாய் உணர்ந்து கொண்டாள் சௌம்யா...

ராஜேந்திரன் அலங்கோலமாய் விழுந்து கிடப்பதைக் கண்டு பெண்கள் பதறித் தவித்துக் கொண்டிருக்கையில்...



அலறலைக் கேட்டு ஓடிவந்த சந்தானம் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்தவனாய் உடனே செயல்பட்டான்...

டாக்ஸிக்கு உடனே போன் செய்து வரவழைத்து... மற்றவர்களின் துணையுடன் ராஜேந்திரனை ஏற்றிக் கொண்டு... கால தாமதம் செய்யாமல் ஆஸ்பத்திரிக்கு புறப்பட்டான்.

சந்தியாவை மட்டும் வீட்டில் இருக்கச் சொல்லி விட்டு... குழந்தைகளை அவள் பொறுப்பில் விட்டு விட்டு பாக்கியமும் சௌம்யாவும் உடன் சென்றனர். மகனின் நிலை கண்டு கதிகலங்கிப் போயிருந்தாள் பாக்கியம்...

அய்யோ... தனக்கேன் சோதனை மேல் சோதனை இப்போதுதான் மகள் பிழைத்து வந்தாள் என்று சந்தோஷப்பட்டால்... இப்போது இவனா... கடவுளே... இப்படியும் ஒரு கோழையாய் ஒருத்தன் இருப்பானா... வெறும் காதல் தான் வாழ்க்கையா... தாய் மனம் அங்கலாய்த்தது.

சௌம்யாவுக்கோ... ஆத்திரம் வந்தது... தம்பியை எரிச்சலுடன் பார்த்தாள்.

வாழ்க்கையில் சாதிக்க வேண்டியவை எத்தனையோ இருக்கின்றன... அதை நினைத்துப் பார்க்காமல் அற்ப காதலுக்காக தன் அருமையான உயிரை விட நினைக்கும் இவனெல்லம்... சே! ஊகூம்... இப்போது எதுவும் பேசக்கூடாது. முதலில் பிழைத்து எழட்டும்... அப்புறமாய் பேசிக் கொள்கிறேன். தாய்க்கு மகனாய் இருந்து இவன் என்ன செய்தான்.. பெற்று... வளர்த்து ஆளாக்கிய தாயைப் பற்றி எதுவும் நினைக்காமல்... காதல் கைக்கூட

வில்லையாம்... செத்துப் போகிறானாம்... நினைக்கவே குமட்டுகிறது...

காதல்... காதல்... காதல்... காதல் இல்லையேல்...

சாதல்... சாதல்... சாதல் என்ற நினைப்பாக்கும்... பற்களைக் கடித்துக் கொண்டாள் சௌம்யா....

மருத்துவமனையில்... டாக்டர் வந்து அவனுக்கு ஆபத்தில்லை என்று சொல்லும் வரை அவர்களுக்கு பதைப்புதான்...

பிரபல நர்ஸிங்ஹோம் என்பதால்... நேரே அங்கே போய் ராஜேந்திரனை சேர்த்து விட்டான் சந்தானம். தவிர... அங்கிருந்த டாக்டர் ஒருவரும் அவனுக்கு பரிச்சயம் ஆனவர் என்பதால் அனுகூலமாய் இருக்கும் என்று நினைத்தான் சந்தானம்...

அதுவும் நிஜம்தான். உடனே தயக்கமோ... மறுப்போ இல்லாமல் நோயாளியை 'அட்மிட்' செய்து கொண்டனர்...

அக்கறையாய் உடனே கவனிக்க ஆரம்பித்தனர். விரைவாக செயல்பட்டு... நோயாளியை ஆபத்திலிருந்து உடனே மீட்டனர்.

எல்லாவற்றையும் விட... இந்த அசிங்கமான விஷயம்... வெளியே தெரியாமல்... ரகசியமாய் வைக்க முடிந்தது.

"பேஷண்ட்டுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை... பிழைத்து விட்டான்" என்று டாக்டர் வந்து சொன்னதும்... சௌம்யா சந்தானத்தை நன்றியுடன் பார்த்தாள்...

அவர் மட்டும் இல்லாதிருந்தால்... நினைத்தும் பார்க்க முடியவில்லை.



முதன் முதலாய் சந்தானத்தின் மேல் நல்லெண்ணம் பூத்தது... மரியாதையும் வந்தது.

"நன்றி மாமா... நீங்கள் மட்டும் இல்லாமல் போயிருந்தால்... நாங்க கதிகலங்கிப் போயிருப்போம்..." என்றாள் உண்மையான நன்றியுடன்...

"சேச்சே... என்ன சௌம்யா... எனக்கு நன்றி சொல்லிக் கொண்டு... நான் என்ன மூன்றாம் மனிதனா... இது என்னோட கடமை மட்டும் இல்லை. உரிமையும் தான்... அத்தை. என்னை மாப்பிள்ளையா நினைத்து தள்ளி வைக்காதீர்கள்... மருமகன் என்று நினைத்து என்ன உதவி வேண்டுமானாலும் கேளுங்கள்... மகனாய் இருந்து செய்கிறேன்... இத்தனை நாள் காட்டு மிராண்டியாய் இருந்து உங்களையெல்லாம் நோக வைத்து விட்டேனே என்ற வேதனை எனக்கு... இனிமேலாவது... ஒரு நல்ல ஆண் பிள்ளையாக இருந்து உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்... என்னை இன்னும் சந்தியா புரிந்து கொள்ளவில்லை... அவள் மனசு மாறும் வரை காத்திருப்பேன் அத்தை... நான் திருந்தி விட்டேன் என்பதை நீங்களாவது புரிந்து கொண்டால் போதும்..." என்றான் சந்தானம்... கரகரத்த குரலில்.

அதைக் கேட்டதும் நெகிழ்ந்து போனாள் சௌம்யா. தான் நினைத்தது போல சந்தானம் அத்தனைக் கெட்டவரில்லை... சூழ்நிலையும்... சந்தர்ப்பமும் தான் ஒரு மனிதனை மூர்க்கனாக்குகிறது. கெட்டவனாய் மாற்றுகிறது... திருந்துவதற்கு அவகாசம் கிடைத்தால் போதும். நிச்சயம் நல்லவர்களாகி விடுவார்கள் என்பதற்கு சந்தானமே உதாரணம்.

சொன்னது போலவே... ராஜேந்திரனை 'டிஸ்சார்ஜ்' செய்து... வீடு திரும்பும் வரை உடனிருந்து... ஒத்தாசை யாக இருந்தான் சந்தானம்.

அதைப் பார்த்து விட்டு மனம் குளிர்ந்து போனாள் பாக்கியம்...

இனிக் கவலை இல்லை... மகளின் வாழ்க்கைக்கு விடியல் வந்து விட்டது என்று மகிழ்ச்சியடைந்தாள் தாய்.

கண் விழித்துப் பார்த்ததும் ராஜேந்திரன் கேட்டது.

"ஏன் என்னைப் பிழைக்க வைத்தீர்கள். எனக்கு உயிர் வாழப் பிடிக்கவில்லை..." என்பது தான்.

"ஏன்... எங்களைப் பார்க்க விருப்பம் இல்லையா... அத்தனை மோசமாகவா இருக்கிறோம்..." 'வெடுக்'கென்று கேட்டாள் சௌம்யா.

"நீ சும்மா இரு சௌம்யா... ராஜேந்திரா... அம்மான்னு நான் இருக்கிறேனே... என்னைப் பத்தி யோசிக்கவும் மாட்டேயா... உன்னைப் பெத்து... வளர்த்ததற்கு நீ செய்யற பிரதியுபகாரம் இதுதானாடா..." கண் கலங்கிப் பேசினாள் பாக்கியம்...

"அம்மா சொல்ற மாதிரி... உனக்குக் காதல் தான் முக்கியமாகி விட்டதா ராஜேந்திரா... இப்படிச் சாகத் துணிவது கோழைத்தனம்னுதான் சொல்வேன்... இருந்து சாதித்துக் காட்டணும்... அதுதான் ஆண்மைத் தனம்... அதை விட்டுட்டுப் பேடித்தனமா தற்கொலை முயற்சி பண்ணியது... சேச்சே... ஈனச் செயல் என்று தான் சொல் வேன்" தன் பங்குக்கு இடித்துச் சொன்னாள் தமக்கை.

"காதல் என்கிறது அத்தனை மோசமான செயலா. ஏன் எல்லோரும் என்னைக் கொத்திப் பிடுங்குகிறீர்கள்...



நீங்கள் பேசறதைப் பார்த்தால் ஏதோ செய்யக் கூடாததை நான் செய்து விட்ட மாதிரி இருக்கு... எல்லோரும் எனக்கு... என் காதலுக்கு எதிரா இருக்கிறீர்களே... அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை... ஒருத்தர்... ஒருத்தர் எனக்காகப் பரிந்து பேசியிருக்கிறீர்களா... அதைத் தான் என்னால் தாள முடியவில்லை" குரல் கரகரக்க ராஜேந்திரன் சொல்ல...

முதன் முதலாய் வாய் திறந்து பேசினான் சந்தானம்.

"அவன் சொல்வதிலும் நியாயம் இருக்கு அத்தை. அவன் என்ன யாரும் செய்யாததையா பண்ணி விட் டான்... இல்லையே... ஏன் அதைத் தப்பா நினைக்கணும்... அவனுக்குப் பிடிச்ச பொண்ணை பேசி முடிச் சிடலாம்தானே..."

"நீங்க நினைக்கிற மாதிரி இல்லே... மாப்பிள்ளை... அந்தப் பொண்ணு இன்னும் 'மைனராம்...' அது மட்டும் இல்லை... அந்தப் பெண்ணோட அண்ணன்காரன் தகராறு செய்கிறான்... அவன்கிட்ட மல்லு கட்டவும் முடியாது... பெரிய பணக்கார இடம் என்பதால் நமக்கு சரிவராது மாப்பிள்ளை. அதை இவன் புரிஞ்சுக்கவும் மாட்டேன்கிறான்..."

"அந்தப் பொண்ணு எப்படி... காதல்ல உறுதியா இருக்கிறாளா.. அப்படீன்னா பேசிப் பார்க்கலாம் தானே" என்று சந்தானம் கேட்டதும்...

ராஜேந்திரன் கண்களில் உயிர் வந்தது...

"அவளுக்கு என் மீது கொள்ளைப் பிரியம் மாமா... எனக்காக எதுவும் செய்வாள்... அவளோட அண்ணன் தான் அவளைக் கட்டாயப்படுத்தி இழுத்துப் போயிருக்

கிறார்... அவளுக்கு என்னை விட்டுப் போக மனசே இல்லை... மாமா..." என்று குரல் தழுதழுக்கச் சொன்னான் ராஜேந்திரன்.

"தப்பா நினைக்காதீர்கள்... இது அவசரப்பட்டு செய்ய முடியாத விஷயம்... நீங்க நினைக்கிற மாதிரி எளிதான சமாச்சாரம் இல்லை... ஏன்னா... ரஞ்சிதாவோட அண்ணன் எதற்கும் துணிந்தவன்... மாமா... அவனோட மோதுவது கெட்டிச் சுவரில் முட்டிக் கொள்வது மாதிரி... என் அனுபவத்தில் நான் சொல்கிறேன்... அவனிடம் பணபலம்... ஆள் பலம் எல்லாம் இருக்கு..."

"நம் பக்கம் நியாயம் இருக்கு சௌம்யா... இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் மனதார விரும்புகிறார்கள்... அவர்களைப் பிரிப்பது பாவம் இல்லையா. முயற்சி பண்ணுவோமே..."

சந்தானம் சொல்ல... சொல்ல ராஜேந்திரனின் முகம் சூரிய காந்தியானது... சந்தானத்தை தெய்வமாய் நினைத் தான்... தனக்காக வாதாடும் அவனிடம் மரியாதை பன்மடங்கு கூடியது.

சௌம்யாவிற்கு தான் தர்ம சங்கடம்...

முந்திய நிலையில் என்றால்... கடுப்புடன் பேசிவிடு வாள்... ஆனால்... ஆபத்தான சூழ்நிலையில் உறுதுணை யாய் இருந்ததுடன் மட்டுமின்றி... குடும்பத்தில் ஒருவனாய் பொறுப்புணர்ந்து பேசுபவனிடத்தில்... எப்படி 'இதெல்லாம் நடக்காத விஷயம்' என்று 'வெடுக்' கென்று சொல்ல முடியும்...

இவர்கள் யாரும் அந்த நிரஞ்சன் குமாரை பார்த்த தில்லை... அவனிடம் பேசியதும் இல்லை... அதனால் தான் துணிச்சலாய் பேச முடிகிறது...



ஆனால் ராஜேந்திரன்... அவனுமா... பெருமூச்சு விட்டாள் அவள்...

காதலியின் மேல் இருக்கும் நேசம் அவனை அப்படி ஆட்டு விக்கிறது!

"எனக்கென்னவோ இது சரி வருமான்னு தோணுகிறது மாப்பிள்ளை... அவர்கள் எங்கே... நாம் எங்கே... நாம யோசிக்கிற மாதிரி தானே அவங்களும் யோசிப்பாங்க" அங்கலாய்ப்பாக கூறினாள் பாக்கியம்.

"அதையெல்லாம் பார்த்தா காதல் வருகிறது. காதலுக்கு கண்ணில்லை அத்தை... அதனால்தான்... அந்தஸ்து... அழகுன்னு எதையும் பார்ப்பதில்லை... இல்லேன்னா... அம்பிகாபதி... அமராவதி கதையெல்லாம் வந்திருக் குமா... சொல்லுங்க..."

"இப்ப என்ன செய்யலாம்ங்கிறீங்க... மாப்பிள்ளை..."

"போய் பேசலாம்தான்... சௌம்யா... உனக்கு அந்த ஆளைத் தெரியுமே... மறுபடியும் போய் பார்த்துப் பேசி பார்க்கிறாயா..."

"அய்யோ... நானா... நோ... நெவர்..." அலறாத குறை யாய் சொன்னாள் சௌம்யா... மறுபடியும் அவனை சந்தித்து... வாதாடி... அம்மாடி!

"சரி... வேண்டாம்... நானே போய் கேட்டுப் பார்க் கிறேன் விடு..."

"வேண்டாம் மாமா... அந்த ஆள் திமிர் பிடித்தவன். உங்களை மதிக்கவும் மாட்டான்... அவமானப்படுத்தி விடுவான்... அப்புறம் உங்களுக்கும் கோபம் வந்து... அது பெரிய கை கலப்பில் முடியும்... வேண்டாமே..." கெஞ் சாத குறையாய் சௌம்யா சொல்ல...

''என்னக்கா... நீ உதவா விட்டாலும் பரவாயில்லை.. மாமாவையும் போக விடாமல் தடுக்கிறாயே. இது என்ன நியாயம்... உனக்கு என்மீது அக்கறை இல்லை என்று நினைக்கையில் எனக்கு வேதனையாக இருக்கிறது'' என்று குறைப்பட்டுக் கொண்டான் தம்பி.

''உளராதேடா... அந்த ஆசாமியோட அகங்காரப் பேச்சைக் கேட்டு எனக்கே ஆத்திரம் வந்தது... மாமா ஆண் பிள்ளை... கோபத்தை அடக்க முடியுமா... ரகளையில் தான் முடியும்... அது தேவையா... சொல்லு...''

''அப்போ... நீயும் செய்ய மாட்டே.... செய்பவரையும் விட மாட்டே அப்படித்தானே... அதைவிட என்னை சாக விட்டிருக்கலாமே... பிழைக்க வைத்து... ஏன் இப்படி வதைக்கிறீர்கள்.... சரி... இப்ப காப்பாற்றி, விட்டீர்கள். எப்பவும் உங்களால் அது முடியுமா...''

''என்னடா பேச்சு இது... எங்கள் மனசு நோகணும்னே இப்படிப் பேசறியா நீ...''

''என்னம்மா நீ... அவன் 'பிளாக் மெயில்' பண்றான். நீயும் அதை நம்பறேயே...'' ''இவனோட பெரிய தலை வலியா போச்சு...'' என்று புலம்பிய தாயை அடக்கப் பார்த்தாள் சந்தியா.

''பிளாக் மெயிலும் இல்லை. மண்ணாங்கட்டியும் இல்லை. எனக்கு யாரும் உதவா விட்டால்... நான் உயிர் வாழப் போவதில்லை... அது மட்டும் நிச்சயம்...''

அவன் குரலில் தெரிந்த உறுதி அனைவரையும் திகைக்க வைத்தது.

''இதையெல்லாம் பார்த்துக் கொண்டு நான் உயிரோட இருக்கணுமா... எனக்கு இன்னும் சாவு வராமல் இருக்



கிறதே... தெய்வமே...'' என்று பாக்கியம் கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

''உஷ்... அம்மா... போதும்... அவன்தான் மூளை யில்லாம பேசுகிறான் என்றால்... நீ அவனுக்கு அம்மா என்று நிரூபிக்கணுமா... சரி... உனக்காக... நீ சொல்கிறாய் என்பதால் அந்த நிரஞ்சனைப் போய்ப் பார்க்கிறேன்... ஒரு நிபந்தனையின் பேரில்... இந்தத் தடவையும் தோல்வி என்றால்... இனிமேல் இந்தப் பேச்சை நீ எடுக்கக் கூடாது... ஒத்துக் கொள்கிறாயா ராஜேந்திரா... அதற்கு ஒத்துக் கொள். நான் போகிறேன்'' என்றாள் சௌம்யா.. கொஞ்சம் தயங்கி விட்டு சரியென்று தலையசைத்தான் அவன்...

''ஓகே... அதுவரையில் இந்த அசட்டுப் பேச்செல்லாம் இல்லாமல் ரெஸ்ட் எடு... நான் போய் டாக்டரிடம் எப்போது 'டிஸ்சார்ஜ்' செய்து வீட்டுக்கு அழைத்துப் போவது என்று கேட்டு வருகிறேன்'' என்று அங்கிருந்து சென்றாள் அவள்.

அவளுக்குக் கொஞ்சம் தனிமை வேண்டியிருந்தது. என்னதான் தம்பியிடம் வீறாப்பாய் சொல்லி விட் டாலும்... மீண்டும் அவனை சந்திப்பதா என்று நெஞ்சில் படபடப்பு...

ஆடிய ஆட்டம் என்ன... அவன் பேசிய வார்த்தைகள் என்ன... அவனைப் பார்ப்பது என்றால் தனிக்காட்டில் உறுமும் சிம்மத்தை சந்திப்பதுபோல் அல்லவா நடுக்க மாக இருக்கிறது.

ஆனால்... அதைத் தவிர வேறு வழியில்லையே... சந்தான மாமாவை அனுப்பி விடலாம் என்றால் இப்போது

தான் அவர் தன் மூர்க்கத் தனத்தை மாற்றிக் கொண்டு... சாந்தமூர்த்தியாக மாறியிருக்கிறார். அந்த நிரஞ்சன் நிச்சயம் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டு சினத்தை ஏற்படுத்துகிற மாதிரிப் பேசுவான்... அப்புறம் வேதாளம் முருங்கை மரம் ஏறின கதையாய்... மாமா சாமியாட்டம் போட்டால்... அக்காவின் நிம்மதி பாழாகி விடும்... அக்காவை பொறுத்தவரை மாமா திருந்தி விட்ட மாதிரியே இருக்கட்டும்.

தவிர... நிரஞ்சனைப் பற்றி எனக்கு தான் தெரியும்.

என்ன... கொஞ்சம் எகிறுவான்... கொஞ்சம் என்ன... நிறையவேதான்.

தம்பியின் மனநிலையைப் பற்றி எடுத்துச் சொன்னால்... கொஞ்சம் இளகமாட்டானா...

லேசாய் நப்பாசை எட்டிப் பார்த்தது.

அதே சமயம் அறிவும் இடித்துரைத்தது...

கல் நெஞ்சமா... இளகுவதா... முட்டாளே... அப்படி நடக்கும் என்று நினைத்தால் அது உன் மடத்தனம்... அவனாவது... இறங்கி வருவதாவது...

மூச்சை இழுத்து விட்டாள்... மன பாரத்தை குறைக்க... வராந்தாவில் இருந்த பெஞ்சில் அமர்ந்து... கண்களை மூடிக் கொண்டாள்...

நாளை என்ன நடக்கப் போகிறது என்று தெரியாது...

காயா... பழமா என்று கடவுளுக்கே வெளிச்சம்... முயற்சி செய்து பார்க்கலாம்... பார்க்கத்தான் வேண்டும்...

ஆக... சிங்கத்தை அதன் குகையில் சந்திக்கத் தயாரானாள் செளம்யா.



# 11



செளம்யாவை மேலும் கீழுமாய் பார்த்தாள் அந்த அந்தரங்கக் காரியதரிசி...

அவளது கண்களில் வியப்பு...

பின்னே திடீர் என்று ஒரு அழகு மங்கை வந்து நின்று... 'பாஸை' பார்க்க வேண்டும் என்று சொன்னால்...

யாராய் இருக்கும்... காதலியோ... என்ற சந்தேகம் மண்டைக்குள் பெருச்சாளியாய் பிராண்டியது.

ஆனால்... 'பாஸ்' காதலில் விழும் ரகம் இல்லையே... ஒருவேளை... இவள் மேலே விழுந்து பழகும் ரகமோ... குறுகுறுவென்று அவளைப் பார்த்தாள் அந்தப் பெண்.

இன்டர்காமில் நிரஞ்சன் குமாருடன் பேசினாள்...

பின்பு அவளைப் பார்த்து ''ஒரு பத்து நிமிடம் காத்திருங்கள்... மிஸ் செளம்யா...'' என்றாள் அவள்.

ம்ம்... உடனே சந்தித்தால் தலைக் கிரீடம் 'டக்'கென்று இறங்கி விடும் போல... வேண்டும் என்றே காக்க வைக்கிறானாக்கும்... இருக்கட்டும்... உள்ளுக்குள் பொருமினாள் செளம்யா.

அந்தப் பத்து நிமிடங்களில்... அவனிடம் என்ன சொல்ல வேண்டும்... எப்படிப் பேச வேண்டும் என்பதை மானசீக ஒத்திகைப் பார்த்துக் கொண்டாள்.

நிதானமாய் விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும்... அவன் மனதை தொடும்படி...

''மேடம்... நீங்க உள்ளே போகலாம்'' அந்தரங்க காரியதரிசியின் குரல் அவளைத் தட்டி எழுப்ப... எழுந்து அறையை நோக்கி நடந்தாள்... மனம் பறவையின் சிறகுகளாய் படபடத்தது... புறப்படும்போது இருந்த தைரியம் கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்து... இப்போது லேசாய் பயம் எட்டிப் பார்த்தது.

கதவை விரல்களால் லேசாய் தட்டி... ''மே ஐ கம் இன்'' என்று வினவினாள்.

''யெஸ்... கம் இன்...'' நிரஞ்சனின் அழுத்தமான குரல் கம்பீரமாய் அழைத்தது.

கதவைத் திறந்து உள்ளே சென்றாள்.

சுழல் நாற்காலியில் அமர்ந்து... அவள் வருவதை கவனித்தவனின் உதட்டில் இளக்காரப் புன்னகை...

அவள் அருகே வந்ததும் ஏளனமாய் கேட்டான்.

''ஏதடா இது... தொல்லை விட்டது என்று நினைத்தேன். இன்னும் விடவில்லை போல் தெரிகிறதே... என்ன விஷயம்... மிஸ்... ம்ம்...'' என்று நெற்றியை தேய்த்தவன் ''யெஸ்... சௌம்யா... உன் திடீர் விஜயத்தின் காரணத்தை நான் அறிந்து கொள்ளலாமா. ஆஸ்பிடலில் அதிகமாய் பணம் வசூலித்து விட்டார்களா என்ன... இருக்காதே. நாலைந்து முறை 'செக்' பண்ணிவிட்டு தானே சொன்னது... ஓ! புரிந்தது... நடந்ததற்கு மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறாய்... கரெக்ட். அது தேவையே இல்லை... இந்த விஷயத்தை எப்பவோ என் நினைவிலிருந்து வழித்து எடுத்து வீசி விட்டேன்... இப்போ...



உன்னைப் பார்த்ததும்தான் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தது என்பதே நினைவுக்கு வருகிறது'' வேண்டும் என்றே ஆத்திரத்தைக் கிளறுகிறான் என்று உணர்ந்தவள்... அவனைக் கோபத்துடன் பார்த்தாள்.

''நான் ஒன்றும் மன்னிப்புக் கேட்க, வரவில்லை... பணப் பிச்சைக் கேட்டும் வரவில்லை...'' என்றாள் வீறாப்பாய்...

''பின்னே... ஓ! தெரிந்து விட்டது... நாங்க எந்தப் பிரச்சனையும் பண்ணாமல் ஒதுங்க வேண்டும் என்றால் இத்தனை பணம் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை பேச வந்திருக்கிறாய்... நான் சொல்வது சரிதானே...''

''உங்கள் பணத்தை எடுத்துப்போய் குப்பையில் போடுங்கள்... யாருக்கு வேண்டும் உங்க பணம்...'' கோபத்தில் முகம் கன்ற... விழிகளால் அவனை உறுத்து நோக்கிக் கூறினாள் சௌம்யா....

''அடடா... அதுவும் இல்லையா.. என்னடா இது.. அதற்காகவும் இல்லையென்றால்... வேறு என்னவாக இருக்கும்...'' என்று யோசிப்பது போல பாவனை செய்தவன்...

''ஆங்... இப்போ புரிந்தது... என்னுடைய மன்மத ரூபம் உன்னை மதிமயங்க செய்திருக்க வேண்டும்... அதனால் தான் என்னைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பில் ஓடி வந்திருக்கிறாய்... சரிதானே...''

விஷமச் சிரிப்புடன் சொன்னதும்,

''மிஸ்டர்... மனுஷனுக்கு அழகு மட்டும் இருந்தால் போதாது... மனுஷத்தன்மையும் வேண்டும்... தெரிந்து கொள்ளுங்கள்... அது உங்களிடம் பூஜ்யம். ஆயிற்றே...'' என்றாள் கோபத்துடன்.

"ஆகா... நான் அழகன் என்பதை ஒத்துக் கொள்கிறாய்... ம்ம்... வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷிதான்..." என்றான் கிண்டலுடன்...

கடவுளே... என் பொறுமையை அளவுக்கு மீறிச் சோதிக்கிறானே...

பற்களைக் கடித்தாள் சௌம்யா...

இவனிடம் வந்த விஷயத்தை சொல்லலாம் என்றால் வேண்டாததையெல்லாம் பேசி... நேரத்தை இழுத்தடிக்கிறானே என்று எரிச்சல் வந்தது.

"வந்தவர்களை உட்காரச் சொல்லும் நாகரீகம் உங்களுக்கு இல்லையோ" என்றாள் பதிலுக்குக் கிண்டலாய்.

"இதோடா... நாகரீகம் பற்றி யார் பேசுவது என்ற விவஸ்தையே இல்லை... அம்மணி... உங்கள் வீட்டில் நுழைந்தபோது... தாங்களும் நாகரீகமறியாதவர்களாய் இருந்தது மறந்து போய் விட்டதாக்கும்... அது சரி... மறுபடியும் சந்திப்புக் கூடாதுன்னு யாரோ சொன்னதாய் ஞாபகம்... ஆனால் இப்போ அவர்களே சந்திப்பை நாடி வந்தது ஏனோ... தெரியவில்லையே..."

அவள் அவனை முறைத்துவிட்டு அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

"இதோ பாருங்கள் மிஸ்டர் நிரஞ்சன். வந்த விஷயத்தை சொல்லிவிட்டு நான் கிளம்ப வேண்டும். என் தம்பி இப்போ ஆஸ்பிடலில் இருக்கிறான். அவன் பிழைத்ததே பெரிய விஷயம்..."

"அடடா... ஆக்ஸிடெண்டா... அய்யோ... பாவமே..." அவன் குரலில் தெரிந்தது போலி வருத்தமோ... சந்தேகத்துடன் அவனைப் பார்த்தாள்...



"இல்லை... தற்கொலை செய்து கொள்ளப் பார்த்தான். மனவேதனை தாளாமல்..."

"மை காட்!"

"அதற்குக் காரணம் நீங்க. அவர்களைப் பிரித்ததால்... துக்கம் தாளாமல் உயிரை விட் முயற்சித்தான்... எப்படியோ காப்பாற்றி விட்டோம்..."

"தாங்க் காட்!"

"பரவாயில்லை... உங்கள் மனதிலும் கொஞ்சம் ஈரம் ஒட்டிக் கொண்டிருக்கிறதே... தெய்வத்திற்கு நன்றி சொல்கிறீர்கள்..." என்றாள் சௌம்யா... கேலியாய்.

"சாரி... 'தாங்க் காட்' என்று சொன்னது அதற்கில்லை... இப்படி ஒரு கோழையை என் தங்கை விரும்பினாளே... அவளைக் காப்பாற்றியதற்காக சொன்ன நன்றி... நல்ல வேளை... ஆபத்திலிருந்து தப்பித்தாள் என் தங்கை..."

கோபத்தில் அவளது முகம் கன்றி சிவந்தது. உயிருக்குப் போராடிப் பிழைத்திருந்த தன் தம்பி மீது கொஞ்சமும் அனுதாபம் காட்டாமல்... தன் தங்கை தப்பித்தாள் என்று சந்தோஷப்படும் அவனை வெறித்துப் பார்த்தாள்...

அதே கோபத்தில் "என் தம்பிக்கு மட்டும் ஏதாவது ஆகியிருக்க வேண்டும்... உங்களை சும்மா விட்டிருக்க மாட்டேன்..." என்றாள் மிரட்டுவது போல...

அவனோ... அலட்சியத்துடன் தோள்களைக் குலுக்கினான்...

"அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை... எனக்கு என் தங்கையின் எதிர்காலம் மட்டும்தான் முக்கியம். அவளைப் பற்றி எங்கள் வீட்டில் எத்தனையோ கனவுகளுடன்

இருக்கிறார்கள்... படிப்பில் படு சுட்டி... அவள்... தெரியுமா... இந்தத் தேர்வில் முதல் மாணவியாக வருவாள் என்று நம்பிக்கையோடு இருந்தோம். அது பொய்த்து விடக் கூடாது என்பதுதான் எங்களது பதைப்பு... அவள் பெரிய படிப்பு படிக்க வேண்டும்... மேனாட்டில் கல்வியைத் தொடர வேண்டும் என்றெல்லாம் ஆசைப்பட்டாள்... மத்தியில் இந்தக் காதல் சனியன் அவள் மனதை அலை பாய செய்து விட்டது. நல்ல வேளை... சரியான சமயத்தில் நான் புகுந்து... தடுத்து நிறுத்தி விட்டேன்... இப்போ... அவள் பழைய உற்சாகத்துடன் மீண்டும் படிக்க ஆரம்பித்து விட்டாள். இனி எனக்குப் பயமில்லை..."

"பொய்... எல்லாம் பொய்... உங்க தங்கையின் மனசு மாறியிருக்காது... நீங்கதான் ஏதேதோ சொல்லிக் குழப்பி இருக்க வேண்டும்... அவளுக்கு 'பிரெயின் வாஷ்' செய்து... என் தம்பியிடமிருந்து அவளைப் பிரிக்கப் பார்க்கிறீர்கள்..."

"ஸ்டாப் இட்... முதலில் உன் பிரெயினை வெளியில் எடுத்து 'வாஷ்' பண்ண வேண்டும்... நினைப்பெல்லாம் கசடு... முதலில் தெளிவாய் யோசி. உன் தம்பி நன்றாய் படிக்க வேண்டாமா... படிப்பை முடித்தால் தானே எதிர்காலம்... சரி... என் தங்கைக்கு இப்போ... கல்யாணம் செய்யும் வயதா... ஒரு சின்னப் பெண்ணை இல்லறத்தில் ஈடுபடுத்துவது... குருவி தலையில் பனங்காய் வைப்பது மாதிரி. அதற்குக் கொஞ்சம் அறிவு முதிர்ச்சி இருக்க வேண்டும்... கல்யாணம் என்பது செப்பு விளையாட்டு என்று நினைத்துக் கொண்டாயா... இல்லை... வெறும் பொம்மைக் கல்யாணம் என்ற எண்ணமா... இதையெல்லாம் நினைக்காமல் ஏதேதோ பிதற்றுகிறாயே... 'சுள்' என்ற கோபத்துடன் சொன்னான் அவன்.



அவனது பேச்சில் நியாயம் இருந்ததை அவளும் உணர்ந்தாள்... ஏன்... அதைத்தானே தன் தம்பிக்கும் அவள் எடுத்துரைத்ததும்... ஆனால் அவன் தான் கேட்கவில்லையே... அசட்டுத்தனமாய் உயிரை விடப் பார்த்தானே... நெஞ்சில் இரும்பின் கனம்... வீட்டுப் பிரச்சனையில் அலுவலக வேலையில் கூட மனம் ஈடுபட மறுத்தது... ஆனால் இந்தப் பிரச்சனை முடிவதாகத் தெரியவில்லையே...

பைத்தியம் தெளிந்தால் கல்யாணம்... கல்யாணம் ஆனால் பைத்தியம் தெளியும் என்பது போல இழுபறியா அல்லவா இருக்கிறது...

இதையெல்லாம் போய் தம்பியிடம் சொன்னால்... அவன் ஏற்றுக் கொள்வானா...

அடச்சே... என்ன காதலோ... கன்றாவிக் காதல்... அவர்களும் குழம்பி... நம்மையும் குழப்பி விடுகிறார்களே.

'காதல்' என்ற வார்த்தையே கசந்து வழிந்தது அவளுக்கு...

முகத்தை சுளித்தாள் அவள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த நிரஞ்சன் அவள் முகத்தில் தெரிந்த உணர்வுகளின் மாற்றத்தை கவனித்தான்...

"என்ன சௌம்யா... இப்போதாவது உண்மையை உணர்ந்தாயா... முதலில் உன் தம்பியின் அசட்டுத் தனமான எண்ணத்தை மாற்றி... படிப்பு முக்கியம் என்பதை உணர்த்து... உத்யோகம் புருஷ லட்சணம் என்பதை

அவனுக்கு எடுத்துச் சொல்... அப்போதாவது பித்தம் தெளியட்டும்..."

ஏளனம் இழையோடிய அவனது பேச்சைக் கேட்டு சௌம்யாவிற்கு அடக்க முடியாத கோபம் வந்தது.

ஆனால் அதை வெளிக்காட்ட மறுத்தாள்...

இனி அவனிடம் பேசிப் பயன் இல்லை என்று உணர்ந்த வளாய் எழுந்தாள்.

"வருகிறேன்" என்றாள் அவள்... கடுப்புடன்...

"சந்தோஷம்... இனியாவது அக்காவும் தம்பியும் உருப்படியாய் வேலையைப் பாருங்கள்... என்னையும் வேலை செய்ய விடுங்கள்..." என்றான் அவன்.

அவனை முறைத்தவள்... "இனி உங்களைத் தொந் திரவு செய்தால்... கேளுங்கள்... இதுதான் நம் கடைசி சந்திப்பு... பை..." என்று சொல்லி விட்டு 'விலுக்'கென்று திரும்பி நடந்தாள்...

"ஹலோ... அது நிச்சயம் தானே... குடிகாரன் பேச்சு விடிஞ்சாலே போச்சு மாதிரி இல்லையே..." அவனது குரலில் தெரிந்த கேலி அவளைக் கொதிக்க வைத்தது.

நின்று திரும்பி அவனைப் பார்த்தவள்... "மிஸ்டர்... இங்கே யாரும் உங்களைப் பார்க்கத் துடித்துக் கொண் டிருக்கவில்லை... சொல்லப் போனால்... உங்களைப் பார்க்கவே பிடிக்காமல் தான் வந்து தொலைத்தேன்... எல்லாம் என் தம்பியால் வந்த தொல்லை... குட்பை..." என்று பொரிந்துவிட்டு வெளியேறினாள்...

மனதின் கொதிப்பு அடங்கவே இல்லை...

திமிர்... ஆண் திமிர்... என்னை அடக்க முடியாது என்ற அகம்பாவம்...



இனி.. இவன் முகத்தில் விழிக்கவும் கூடாது என்ற உறுதியும் அவளுள் வந்தது...

தம்பியிடம் நிதானமாய் எடுத்துரைத்து... அவனது மனதை மாற்ற வேண்டும்... மாற்றத்தான் வேண்டும். அந்தப் பெண்ணே மனம் மாறி விட்டாள் என்றால்... இவனுக்கென்ன வந்தது... எல்லாவற்றையும் துடைத்துப் போட்டுவிட்டு... அவன் நிமிர்ந்து நிற்க வேண்டாமா... ஆனால்... அடடா... நேரமாகி விட்டதே.

இந்த நினைப்பில் என் ஆபீஸை மறந்து போனேனே... வேலைகள் மலையாய் குவிந்து கிடக்கையில்... இந்தக் குப்பை விஷயத்தை உதறித் தள்ள வேண்டியதுதான்...

அவன் சொல்வது போல நம் வேலைகளைக் கவனிக்க வேண்டும்.

சே! மறுபடியும் 'அவன்' நினைப்பு... தலையை உதறி... அவனது நினைவைக் கழட்டியெறிய முயன்றாள் சௌம்யா...

அது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

உள்ளம் முழுக்க கோபமும் எரிச்சலும் வியாபித்திருக் கும்போது... அதற்கு காரணமானவனை எப்படி மறக்க முடியும்... அவனது பேச்சும்... அந்த ஏளனச் சிரிப்பும்... நெஞ்சுக்குள் 'திகுதிகு' என்று எரிந்தது...

'செல்' கெஞ்சலாய் அழைத்தது.

"ஹலோ..."

"அக்கா... நான்... ராஜேந்திரன்..."

எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல இருந் தது தம்பியின் அழைப்பு... அவனால்தானே இதெல்லாம்...

''அக்கா... நான் பேசுவது கேட்கலையா...''

''ம்ம்... கேட்கிறது... சொல்...''

''நீதான்க்கா சொல்லணும்... மாமாவோட 'செல்'லில் இருந்து பேசறேன்... சார்ஜ் கம்மி... போன காரியம் என்ன ஆச்சுன்னு தெரிஞ்சுக்கலாமேன்னு தான்...''

''இதோ பார் ராஜேந்திரா... இப்போ விவரமா எதுவும் சொல்ல முடியாது. எனக்கு ஆபீஸுக்கு நேரமாச்சுடா... வீட்டுக்கு வந்து நிதானமா சொல்றேன்... என்ன...''

''முடியாதுக்கா... எனக்கு விஷயம் தெரிந்தாகணும். சாயந்திரம் வரை என்னால் காத்திருக்க முடியாது. எனக்குப் பொறுமையும் இல்லை... விஷயம் காயா... பழமான்னு சொல்லிடு... போதும்...''

இழுத்துப் பிடித்திருந்த பொறுமையும் காற்றில் பறந்துவிட... அவன் மீது புலியாய் பாய்ந்தாள்.

''நிறுத்துடா... உன்னால் நான் பட்டதெல்லாம் போதும். ஏண்டா உனக்கு வெட்கம்... மானம்... சூடு.. சொரணை எதுவும் இல்லையா... அந்த நிரஞ்சன்குமார் நம்மை புழு மாதிரி நினைத்துப் பேசுகிறான். நம்மை குப்பை மேடு மாதிரி இளப்பமாய் பார்க்கிறான். அதைப் புரிந்து கொள்ளாமல் குதிக்கிறாயே.''

''ரஞ்சிதாவோட அண்ணா எப்படியிருந்தால் நமக்கென்னக்கா... ரஞ்சிதா என்னை விரும்புகிறாள் அது போதுமே...''

''மண்ணாங்கட்டி... உன் ரஞ்சிதாவும் இப்போ 'பல்டி' அடித்து விட்டாளாக்கும்... அண்ணா, உங்கள் விருப்பப்படி மேலே படிக்கிறேன் என்று சொல்லி விட்டாளாம்... நீயும் உன் பிதற்றலையெல்லாம் ஓரம்



கட்டிவிட்டு... படிக்கப் பார்... காதலும் கர்மாந்திரமும் கடைசி வரைக்கும் வராது... கல்விதான் கைக் கொடுக்கும்... அதைத் தெரிந்து கொள்...'' என்று சொல்லிவிட்டு 'செல்லை' அணைத்தாள்.

இந்த 'செல்'லினால் தலை வலிதான் அதிகம்... இது வேண்டவே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தாள் அவள்.

அலுவலகத்திற்கு வந்ததும் தோழியின் முன்னே 'செல்லை' வைத்தாள் சௌம்யா. கேள்வியுடன் அவளைப் பார்த்தாள் ரேவதி...

''எனக்கு இது வேண்டாம்டீ... இதனால் எனக்கு தலைவலிதான்... இதை நீயே வைத்துக் கொள்...'' தோழி சிரித்தாள்...

''கம்யூனிகேஷ'னுக்கு 'செல்' எத்தனை உதவியா இருக்கு... இதை தலைவலின்னு சொல்வது நீதான். சரி... இன்னிக்காவது உன் வேலைகளை முடிப்பியா... இல்லை... இழுத்தடிக்கிறதாய் உத்தேசமா...'' என்று வினவினாள்.

''அய்யோ... முடிச்சாகணும் டீ... அதுக்குத்தானே ஓடாத ஓட்டமாய் வந்தேன்...''

''அப்போ... உடனே ஆரம்பி... எனக்கும் நிறைய இருக்கு முடிக்க...''

வேலையில் மூழ்கிப் போனவளுக்கு நேரம் கழிந்ததும் தெரியாமல் இருந்தது.

சரியாய் மூன்று மணிக்கு 'செல்' ஒலித்தது...

ரேவதி எடுத்து காதில் வைத்தாள்.

அவளது முகம் மாறியது...

சௌம்யாவை பரிதாபத்துடன் பார்த்தாள்.

''என்னடீ... எனக்கா...'' என்று கேட்டாள் சௌம்யா.

''ம்ம்...''

''என்னவாம்...''

''மீண்டும் தலைவலி... சாரிடீ...''

அதிர்ந்து போய் அமர்ந்திருந்தாள் சௌம்யா...

அய்யோ... மறுபடியுமா... என்னவாக இருக்கும்... அந்தத் தலைவலி...




பாக்கியம் தான் பேசியது.

''சௌம்யா... என்னடீ சொன்னே ராஜேந்திரனிடம்.''

''ஏம்மா...''

''உன்கிட்டே பேசின பிறகு பித்துப் பிடித்தவன்போல இருந்தான்... அப்புறம் சொல்லாமல் கொள்ளாமல் வெளியே போயிட்டான்டீ...''

''வீட்டில் இருந்தா... 'டிஸ்சார்ஜ்' பண்ணியாச்சா... பணம் யாரு கட்டினாம்மா...''

''அதுவா இப்போ முக்கியம்... உன் தம்பியைக் காணோம்னு சொல்கிறேன்... பதட்டம் ஏதும் இல்லாமல்...''



''அவன் என்ன சின்னக் குழந்தையாம்மா... நண்பனைப் பார்க்கப் போயிருக்கலாம் இல்லையா... எதுக்கும்மா பதறே...''

''நீ சொல்வேடீ... இப்பத்தான் செத்துப் பிழைச்சு வந்திருக்கிறான்... மறுபடியும் சாகத் துணிய மாட்டான் என்பது என்ன நிச்சயம்... அய்யோ... அதை நினைச்சாலே என் வயிறு கலங்குகிறதுடீ...''

''அய்யோ... அம்மா... ஒண்ணு புரிஞ்சுக்கோ... ஒரு தடவை தற்கொலைக்கு முயன்று... தப்பினவர்கள் மறுபடியும் அதை நினைத்தும் பார்க்க மாட்டார்கள். நீ கவலைப்படாமல் இரு... இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் வந்து நிற்பான்...''

''வராவிட்டால்...'' நிராசையுடன் தாய் வினவ...

''வருவான்ம்மா... ப்ளீஸ்... என்னை வேலை செய்ய விடேன்...'' என்று கெஞ்சினாள் மகள்.

மறுமுனையில் தாய் பெருமூச்சு விடுவது கேட்டது.

பாவம் அம்மா... சின்னச் சின்ன விஷயத்திற்கெல்லாம் பதற்றப்படுகிறாள்... முன்பிருந்த தைரியமும்... நம்பிக்கையும் தளர்ந்து போய்விட்டது. அம்மா கூட தளர்ந்து விட்டாள்... அடிமேல் அடி அவளைத் தள்ளாட வைத்து விட்டது...

இந்த ராஜேந்திரனுக்குப் புத்தி வேண்டாம்... சொல்லி விட்டுப் போக வேண்டும் என்று படவில்லையே... முட்டாள் இப்படியா... சொல்லாமல் கொள்ளாமல் போவான். வீட்டிற்குப் போனதும் அவனுக்குக் கொஞ்சம் புத்தி சொல்ல வேண்டும்...

மனம் ஏதேதோ நினைக்க... கைகள் இயந்திரமாய் கம்ப்யூட்டரை இயக்கியது.

தாயார் பேசி அரைமணி நேரம் ஆகியிருக்கும்... திரும்பவும் 'செல்' கூவியது...

ரேவதியும் அவளை 'அய்யோ... பாவம்' பார்வை பார்க்க...

''இப்ப என்னடீ...'' என்று கேட்டாள் சௌம்யா.

''நீ சொல்றப்போ நான் நம்பலைடீ... ஆனா இப்போ ஒத்துக்கறேன்... உனக்கு 'செல்' நிச்சயம் தலைவலி தான்... இதோ... காத்திருக்கிறது பிடி...''

''யாருடீ...''

''தெரியவில்லை... ஆண் குரல்... 'டீப் வாய்ஸ்..' உன்னிடம் பேசணுமாமே...''

குழப்பத்துடன் வாங்கினாள். 'செல்'போனை.

யாராக இருக்கும்... ராஜேந்திரனோ... ஊகூம்... அவனுக்கு 'டீப் வாய்ஸ்' இல்லையே...

''ஹலோ...'' என்றாள் மெதுவாய்...

''ஹேய்... நான் தான் பேசுகிறேன்...''

நிரஞ்சன்! நிரஞ்சன் குமார்தான்!

இது என்ன அவன், ஒரு தொடர்கதையா... தொல்லை விடாது போலிருக்கிறதே...

''என்ன சௌம்யா... என்னை... என் குரலை மறந்து போய் விட்டாயா... என்ன... ஆமா... நானம்மா. நிரஞ்சன் குமார்...''

''இப்போ எதற்காக அழைத்தது... அதான்... எல்லாம் முடிந்து விட்டதே...''



''இல்லையே... முற்றுப்புள்ளி வைக்க விடாமல்... உன் தம்பி 'கமா' போட்டுக் கொண்டிருக்கிறானே...''

''என்ன சொல்கிறீர்கள்...'' குழம்பியவளாய் கேட்டாள் சௌம்யா.

''இப்போ... உன் தம்பி... இங்கே... என் வீட்டில் தான் இருக்கிறான் என்று சொல்கிறேன்...''

''வாட்!''

''தமிழில்தானே சொன்னேன்... புரியவில்லையா... ரஞ்சிதாவை நேரில் சந்தித்து... அவளது வாயால் கேட்கும் வரை நம்ப மாட்டானாம் உன் மடையன் தம்பி... அவள் இன்னும் காலேஜில் இருந்து வரவில்லை... வரும் வரை காத்திருப்பானாம்... என்ன செய்யலாம் என்று உன்னிடம் கேட்கத் தான் இந்தப் போன்... நாலு தட்டு தட்டி அனுப்பட்டுமா... இல்லே... போலீஸுக்கு சொல்லி அனுப்பட்டுமா... இது உன் 'சாய்ஸ்'...'' சாதாரணமாய் பேசுவது போல இருந்தாலும்... அவனது குரலில் மிளகாயின் காரம் இருந்தது.

''நோ... நோ... எதுவும் வேண்டாம்... ப்ளீஸ்'' கத்தாத குறையாய் அவள் சொல்ல... அருகில் இருந்த ஊழியர்கள் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள்.

''பின்னே... அவனை உட்கார வைத்து மாப்பிள்ளை உபசாரம் பண்ணச் சொல்கிறாயா... இதோ பார் அரை மணிக்குள் நீ இங்கு வந்தாக வேண்டும். வராவிட்டால்... மாப்பிள்ளையை மாமியார் வீட்டுக்கு அனுப்பி விடுவது நிச்சயம்...'' என்றவன்... தன் வீட்டு விலாசத்தையும் சொன்னான்.

உடம்பில் இருந்த சக்தியெல்லாம் கரைந்துவிட்டது போல மேனி துவண்டு போனது.

நிம்மதி காணாமல் போனது போலத் தவிப்பு...

தன் தம்பியால் தனக்கு இடர் தீரவில்லையே என்ற வேதனையில் மனம் அழுதது.

எப்படியோ போகட்டும் என்று இருக்கவும் முடியவில்லையே... பாசம் கண்களை மறைக்கிறதே. அரை மணி நேர அவகாசம்... போயாக வேண்டும். எழுந்து எம்.டி.யிடம் அனுமதி கேட்கச் சென்றாள்.

நிரஞ்சன் குமாரின் மாளிகை வீட்டைப் பார்த்ததும் ஆடிப் போனது சௌம்யாவின் நெஞ்சம்... அவளையும் அறியாமல்... தனது குச்சு வீட்டை நினைத்துப் பார்த்தாள்...

அந்த பிரம்மாண்டமான வீடும்... உள் அலங்காரமும்... அந்த வீட்டினுள் ஆங்காங்கே இருந்த கைவினைப் பொருட்களும்... ஓவியங்களும் அவளை மிரட்டின... அந்தஸ்து... அந்தஸ்து என்று அவன் அலட்டிக் கொண்டதன் அர்த்தம் அவளுக்கு நன்றாகவே புரிந்தது. செல்வச் சீமானான நிரஞ்சன் எங்கே... அடிமட்டத்தில் கிட்டத்தட்ட பரதேசியாய் இருக்கும் ராஜேந்திரன் எங்கே...

இந்த மட்டும் சுமுகமாய் அழைத்துச் சொன்னதே பெரிய விஷயம்... வேறு ஆளாக இருந்தால்... வாசலில் நின்றிருக்கும் 'செக்யூரிடி'யை விட்டு அடித்து விரட்டி இருப்பான்...

சொல்லி வைத்திருந்தான் போலும்... அவளைக் கண்டதும் வினயமாய் 'கேட்'டைத் திறந்து விட்டான் அவன்... தயங்கியவாறு வீட்டினுள் நுழைந்தாள் சௌம்யா.



அங்கே... ஹாலில்... ஏதோ அந்த வீட்டு மாப்பிள்ளை மாதிரி அமர்த்தலாய் அமர்ந்திருந்த தம்பியைப் பார்த்ததும் ஆத்திரம் பொங்கியது.

ஓடிப்போய் அவனை உலுக்கி எடுக்கலாமா என்று தோன்றியது... ஆத்திரத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்...

வந்த இடத்தில் ரசாபாசமாய் எதுவும் நடக்கக் கூடாது என்ற நினைப்பு.

அக்காவை எதிர்பார்க்கவில்லையோ என்னவோ... சௌம்யாவைக் கண்டதும் திகைத்துப் போனான் தம்பி.

"அக்கா... நீ எங்கே இங்கு..." என்று தடுமாற்றத்துடன் கேட்டான்.

"முதலில் நான் உன்னைக் கேட்கணும்... எதுக்கு இங்கு வந்தே..." கோபத்துடன் வினவினாள் அவள்.

அவன் எதுவும் பேசாமல் இருந்தான்.

"அதான்... ரஞ்சிதா இல்லேன்னு தெரிஞ்சாச்சில்லையா... இன்னும் ஏன் இங்கேயே இருக்கேடா... இனியாவது புத்திசாலித்தனமாய் பிழைக்கப் பார்... இதெல்லாம் சரிப்படாதுடா... புரிஞ்சுக்கோ ராஜேந்திரா... புறப்படு... வா... போகலாம்..."

"நான் ரஞ்சிதாவை சந்திச்சே ஆகணும்... அவள் கிட்டே பேசியே தீரணும்... அதுவரைக்கும் இங்கே தான் இருப்பேன்." குரலில் அழுத்தம் தெரிய அவன் சொன்னான்.

"'மைகாட்' எனக்கே உன்னை அறையணும்போல தோன்றுகிறது... உன் அட்டகாசத்தை பொறுத்துக்

கொண்டு... உன்னை எதுவும் பண்ணாமல் வைத்திருக் கிறார் பார்... மிஸ்டர். நிரஞ்சன் குமாரை பாராட்டத்தான் வேண்டும்...''

அவள் பேசி முடிக்கையில்... கைதட்டும் ஓசை கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

நிரஞ்சன் குமார் தான்... புன்னகையுடன் 'கிளாப்' அடித்துக் கொண்டிருந்தவனைக் கண்டு அவளது முகம் சிவந்தது...

இத்தனை நேரம் தம்பியுடன் பேசிக் கொண்டிருந் ததை மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தானோ...

வேவு பார்க்கும் உத்தேசம்! என்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுக் கேட்கும் எண்ணம்...

''தாங்க்யூ... சௌம்யா... இப்போதாவது என்னை பக்கா ஜென்டில்மேன் என்று ஒப்புக் கொண்டாயே ஐ அம் கிளாட்...''

''நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லையே...''

''நேரிடையாக சொல்லா விட்டாலும்... குறிப்பாய் உணர்த்தினாய் பார்... அது போதும்... ஓ.கே... அவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கிறாய்... என்ன வேண்டும்... 'ஹாட்டா' காபியா... 'கோல்டா' ஜூஸா...'

''எதுவும் வேண்டாம்... நாங்கள் புறப்படுகிறோம்... கிளம்பு ராஜேந்திரா...'' என்று தம்பியை விரட்டினாள்.

''மாட்டேன்... ரஞ்சிதா வரும்வரை இங்குதான் இருப் பேன்.''

''லூசாடா நீ... சொன்னதையே சொல்லிக் கொண்டு... இதோ பார்... அங்கே அம்மா நீ எங்கே போனாயோன்னு தவித்துக் கொண்டு இருக்கா நீ...''



''அவன் விருப்பப்படியே காத்திருக்கட்டும் சௌம்யா. என் தங்கை வந்ததும்... அவள் வாயால் அவளோட விருப்பத்தைக் கேட்டுவிட்டுப் போகட்டும்... விடு...'' நிதானமாய்... கோபத்தை வெளிக்காட்டாமல் பேசிய நிரஞ்சனை வியப்புடன் பார்த்தாள் அவள்...

போனில் மிரட்டியவன்... இப்போது அமைதியாக பேசுகிறானே...

''என்ன பார்க்கிறாய்... நீதான் சொல்லிவிட்டாயே... நான் ஜென்டில்மேன் என்று... அதனால்தான் அப்படிச் சொல்கிறேன்... நான் பொய் சொல்லவில்லை என்று உன் தம்பிக்கு தெரிய வேண்டாமா... அதோ... ரஞ்சிதாவும் வந்தாயிற்று...''

சௌம்யாவும் திரும்பிப் பார்த்தாள்...

நீல நிற சுரிதாரில் துவண்டு போன அல்லியைப் போல களைத்துப் போய் வந்திருந்தாள் ரஞ்சிதா.

அவளது கண்கள் ராஜேந்திரனைப் பார்த்ததும் விரிந்தன... கூடவே அந்தக் கண்களில் கலக்கமும் வந்தது...

பயத்துடன் அண்ணன் பக்கம் திரும்பினாள்.

''ரஞ்சிதா... ராஜேந்திரன் உன்னிடம் பேச வேண்டு மாம்...'' என்றான் அண்ணன்.

''என்ன... என்ன... பேசணும்...'' குரலில் நடுக்கம் தெரிய கேட்டாள் தங்கை.

''நம்மைப் பற்றி... நம் எதிர்காலம் பற்றி... நம் கனவு கள்... கற்பனைகள் பற்றி... ரஞ்சி... உன் எண்ணம் மாற வில்லை தானே... உன்மனசில் இன்னும் நான்தானே...

ப்ளீஸ்... சொல்லு ரஞ்சி...'' சௌம்யா நிரஞ்சனைப் பார்த்தாள்... அவனது முகத்தில் கோபமோ... கடுப்போ இல்லை...

மாறாய் கீற்றுப் புன்னகை தவழ... இரு கரங்களையும் மார்பில் குறுக்காய் கட்டிக் கொண்டு நின்றிருந்தவனைக் காணுகையில் திகைப்பு...

தீயிடம் பனிக்கட்டியின் குளிர்ச்சியா...

புயலிடம் தென்றலின் அமைதியா.

இரும்பிடம் இலவம் பஞ்சின் இளக்கமா... எப்படி...

அவளுக்கு அது வியப்பு...

''என்ன தயக்கம்... ரஞ்சி... பயப்படாமல் சொல்...

உன் மனசில் இருப்பதை 'பளிச்'சென்று சொல்லி விடு...'' கெஞ்சாத குறையாய் ராஜேந்திரன் கேட்க...

''சாரி... ராஜ்... நாம் எடுத்தது முட்டாள்தனமான முடிவு... நம் எதிர்காலத்தை இருட்டாக்கும் முடிவு... நான் தீர யோசித்த பிறகுதான்... நாம் செய்ய இருந்தது தவறு என்று அப்பட்டமாய் புரிந்தது... நமக்கு இன்னும் 'மெச்சூரிட்டி' வரவில்லை என்று தெரிந்தது. அதனால்தான் விளைவுகளை அறியாமல் கண் மூடித்தனமாய் அசட்டுக் காரியத்தை செய்ய இருந்தோம்... நாம் படிக்கணும் ராஜ்... நமக்கு திருமணம் ஆகும் வயசில்லை... படிக்கும் வயசு இப்போ... இப்போ அதில்தான் நம் கவனம் இருக்க வேண்டும் என்று புரிந்து விட்டது...''

''அப்போ... நம் காதல்... அது பொய் என்கிறாயா...''

''ஊகூம்... அது நிஜமா... பொய்யா என்றெல்லாம் என்னால சொல்ல முடியவில்லை ராஜ்... ஏதோ ஒரு



விஷயத்தில் நாம் ஒருத்தரை ஒருத்தர் கவர்ந்து இருக்கிறோம்... அது காதலா... பருவக் கோளாறா... என்று தெரியாது... ஆனால் அதைவிட முக்கியம் நம் படிப்பு... படிப்பை முடிக்க வேண்டும்... மேற்கல்வியைத் தொடர வேண்டும்... அதுக்கு அப்புறம்தான்... மற்றதெல்லாம்... வெறும் காதல் மட்டும் வாழ்க்கை ஆகிவிட முடியாது ராஜ்... அதை நன்றாய் புரிந்து கொண்டேன்... நீங்களும் புரிந்து கொண்டால் சரி...''

''அடிப் பாவி... உன்னை நம்பினேன் பார்...'' என்று கத்திவிட்டு 'விர்'ரென்று வெளியேறினான் ராஜேந்திரன்.

வெளியே நின்றிருந்த 'பைக்'கை ஆத்திரத்துடன் உதைத்துக் கிளப்பினான்... கோப வெறியை வேகத்தில் காட்ட... 'பைக்' பறந்தது.

சௌம்யா திகைத்து நின்றாள்...

யாருடைய வண்டி... நண்பனின் வண்டியா... கோபத்துடன் போகிறானே... உருப்படியாய் வண்டியைத் திருப்பி சேர்ப்பானா... தெரியவில்லையே...

''சாரி... உங்கள் மனசுக்கு வேதனையைத் தந்திருந்தால் என்னை மன்னித்து விடுங்கள் அக்கா... இது காதல் செய்யும் வயசில்லை... கல்வி பயிலும் வயசு என்பதை நான் புரிந்து கொண்ட மாதிரி... ராஜேந்திரனும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்து அப்படிப் பேசினேன்... ஆனால்.. ராஜ் அதை புரிந்து கொண்ட மாதிரி தெரியலையேக்கா...!'' வருத்தத்துடன் சொன்னாள் ரஞ்சிதா.

''விடும்மா... நீ உணர்ந்து கொண்ட மாதிரி... அவனும் ஒரு நாள் உணருவான்... நீ ஆசைப்படுகிற மாதிரியே

நன்றாகப் படித்து முன்னுக்கு வர வேண்டும். அதற்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள் ரஞ்சிதா... வருகிறேன்.''

''ஸி.யூ... மிஸ்டர் நிரஞ்சன்'' என்றவள்... நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''சாரி... ஏதோ நினைவில் சொல்லி விட்டேன். இனி சந்திக்கப் போவதில்லை என்று தெரிந்தும்...'' என்றாள் அவள்.

''எனக்கும் அதே தான் வேண்டும்... குட்பை...'' என்று அசட்டையாக பதில் வந்தது.

''குட்பை...'' என்று சொல்லி விட்டு வெளியேறி யவளின் நெஞ்சம் கனத்தது.

சிக்கல் தீர்ந்தது. பிரச்சனை ஓய்ந்தது என்று மனம் பஞ்சாய் இருக்க வேண்டுமே... ஏன் இல்லை... ராஜேந் திரனின் மூர்க்கத்தனமான கோபத்தினாலா... இன்னும் அவன் மனம் தெளியாமல் குட்டையாய் கிடக்கிறது என்ற ஆதங்கமா...

பெருமூச்சு விட்டாள் அவள்... இரண்டு நாள் தேவ தாஸ் மாதிரி இருப்பான்... போகப் போக சரியாகிவிடும்... மனசுக்குள் சமாதானம் செய்து கொண்டாள்..

வீட்டினுள் நுழைந்ததுமே பாக்கியம் எதிர்ப்பட்டாள். அம்மாவின் கலங்கிய கண்களும்... கன்றிய முகத்தையும் பார்த்துவிட்டு வினவினாள்.

''என்னம்மா... ராஜேந்திரன் ஏதாவது பிரச்சனை செய்தானா... அவனுக்கு 'மூட் அவுட்'டா... என்ன... ஏன் ஒரு மாதிரியா இருக்கே...''



''காலையில் போனவன்டீ... எங்கே போனானோ தெரியவில்லை...'' என்று பதற்றம் தெரிய சொன்னாள் தாய்.

''என்ன... இன்னும் வரலையா... எங்கே போயிருப் பான்...''

''அதைத்தான் நானும் கேட்கிறேன்... எங்கே காணோம்... எனக்கு பயமா இருக்கு... என்ன சொன்னேடீ அவன் கிட்டே... இப்படி வீட்டுக்கு வராமல் வெளியே சுத்தும்படி... குழந்தை... என்ன சாப்பிட்டானோ... எங்கே இருக்கிறானோ...''

''புலம்பாதேம்மா... உன் குழந்தைக்கு ஒன்றும் ஆகியிருக்காது... கோபத்தில் வீட்டுக்கு வரவில்லை. யாராவது நண்பன் வீட்டில் இருந்து விட்டு நாளைக்கு வருவான்...''

''யார் மீது கோபம் அவனுக்கு... என் மீதா... நான் ஏதும்...''

''இல்லேம்மா... ரஞ்சிதா மீது... பொறு விவரமாய் சொல்கிறேன்...'' என்று நடந்தவற்றை விளக்கினாள் சௌம்யா...

''அப்போ... கோபத்தோட வண்டியை ஓட்டியிருக் கிறானா... அவனுக்கு ஏதாவது ஆகியிருக்குமா சௌமி... அதான் வரலையோ...''

''என்னம்மா நீ எல்லாத்துக்கும் பயந்து கொண்டு. அவனுக்கு எதுவும் ஆகியிருக்காது.. நீ ஏதேதோ கற்பனை பண்ணாதே... அவன் வந்து விடுவான் பார்...'' வாசலில் கலிங் பெல் ஒலிக்க...

''இதோ வந்தாச்சு... உன் அருமந்தப் பிள்ளை...'' என்றவாறே விரைந்து சென்று கதவைத் திறந்தாள்.

ஆனால்... வந்தது ராஜேந்திரன் இல்லை... ராஜேந் திரனின் நண்பன்... குணசேகரனாம்... அவன் சொன்ன செய்தியைக் கேட்டு இடிந்து போனார்கள் தாயும் மகளும்...




மறுபடியும் ஆஸ்பிடல்... மறுபடியும் அதே மருந்து நெடி... பாக்கியத்தின் அழுகை ஒயவில்லை.

''நமக்கு மட்டும் ஏன்டி சங்கிலியாட்டம் துன்பம் வருகிறது... நாம் என்ன பாவம் செய்தோம்... ஒரு நாளாவது நிம்மதியா இருக்க விடமாட்டேன்கிறதே அந்த தெய்வம்... இப்படி அடுத்தடுத்து ஆஸ்பத்திரி வாசமாகி விட்டதேடீ...'' என்று புலம்பினாள்.

தாய்க்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்து நின்றாள் சௌம்யா.

அவளும் ஆடிப் போயிருந்தாள்... அவளுக்கும் அதே கேள்விதான் உறுத்திக் கொண்டிருந்தது.

அடுத்தடுத்து... அக்கா... தான்... ராஜேந்திரன் என்று தொடர்ந்து ஆஸ்பத்திரியே கதியாய்...

ஆனாலும்... ராஜேந்திரன் இந்த அளவு மோசமாக இருப்பான் என்று நினைக்கவும் முடியவில்லை. சுத்த அசட்டுத்தனம்... சரியான கோழைத்தனம்...



காதலில் தோல்வி என்றால் சாவு... இல்லை குடியாக் கும்.

பெரிய தேவதாஸ் என்ற நினைப்புத்தான்.

மனம் வெறுத்துப் போய் 'பப்'புக்கு போனானாம். குடித்தானாம். காதலை மறக்க... காதலியை மறந்து விட... பேத்தல்!

குடி போதையில்... அதுவும் முதல் தடவை என்ப தால்... தலைச் சுற்றுவது போல ஆகி... வண்டியை விளக்குக் கம்பத்தில் மோதி... வண்டியுடன் சாய்த்திருக் கிறான்.

காலில் பலமாய் அடி... கீழே விழுந்ததில் கைகளில் சதை பிய்ந்து... விழுந்த அதிர்ச்சியில் மயக்கமும் வந்து விட்டது.

அங்கே வந்த டிராபிக் போலீஸ்... வண்டியின் உரிமப் பத்திரத்தைத் தேடி எடுத்து... வண்டியின் சொந்தக் கார னுக்கு தெரிவிக்க... பாவம்... அவன்... அந்த நண்பனும் பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்திருக்கிறான்...

தன் வண்டிக்கு ஏற்பட்ட சேதத்தைக் கண்டு அலறி னான்...

நண்பனின் மீது வந்த ஆத்திரம்... அதைக் காட்ட முடியாமல் கீழே கிடந்த ராஜேந்திரனை கவனித்தான்...

அங்கிருந்தவர்களின் துணையுடன் அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு... வீட்டினருக்கு தக வலைச் சொல்லியிருக்கிறான்... தன் சிநேகிதனை அனுப்பி... அலறியடித்துக் கொண்டு வந்தார்கள் தாயும் தமக்கையும்...

குடித்துவிட்டு வண்டியை ஓட்டியிருக்கிறான் என்ற செய்தி அவர்களை அதிர்ச்சியடைய வைத்தது...

பாவம் அந்த நண்பன்... தன் தோழனுக்கு உதவி செய்யப் போய்... வண்டியும் பழுதாகி வண்டி லைசன்ஸும் பறிபோகும் நிலைக்கு வந்து விட்டதை அவர்களிடம் புலம்பினான்.

''எப்படியோ பேசி... சமாளித்து... அந்த டிராபிக் போலீஸை சரிக்கட்டிவிட்டு வரவேண்டியதாயிற்றும்மா... இதெல்லாம் எனக்குத் தேவையா... சொல்லுங்க... இப்ப வண்டிக்கு நாலாயிரத்துக்கு மேல் செலவு... தண்டமாய்... வயிறு எரியுதுங்க... வாங்கி ஆறு மாதமும் ஆகவில்லை...''

''அதை நாங்க கொடுத்துட்றோம்... முத்துக்குமார்...''

''வேண்டியதில்லை... இன்ஷுயூரன்ஸில் வாங்கி விடலாம்... ஆனால் இது அநியாயமான செலவுதானே... இப்போ நான் நல்லாப் புரிஞ்சுகிட்டேன்... உயிர் நண்பனாக இருந்தாலும் 'லிமிட்'டில் இருக்கணும்னு... உதவப் போனால் நமக்குத்தான் தலைவலி... வர்றேன்ங்க...''

சௌம்யாவிற்கும் ராஜேந்திரன் மீது கோபம் தான் வந்தது... வேண்டாத வம்பையெல்லாம் ஏன் விலைக்கு வாங்குகிறானோ...

இழுத்து வைத்து நாலு அறைய வேண்டும் போல ஆத்திரம்...

அவன் கண் விழிக்கக் காத்திருந்தாள்...

அவனுக்கு முழிப்பு வந்ததும்... அவனை ஏசினாள்.



''உனக்கு என்ன வந்தது... இல்லே... மனசில் பெரிய ஹீரோன்னு நினைப்பா... வாழ்க்கையில் வேற எதுவும் இல்லையா... உன்னைப் பார்க்கவே வெறுப்பா இருக்குடா... உன்னால் எங்களுக்கு பைசா பிரயோசனம் இல்லாவிட்டாலும்... வெறும் உபத்திரவம்தான்... குடிச்சுட்டா... வாழ்க்கையில் ஜெயிச்சுட்ட மாதிரி இல்லே... பாவம் முத்துக்குமார்... வந்து புலம்பிவிட்டுப் போகிறான்... தெரியுமா... தன்னோட வண்டியைக் கொடுத்த பாவத்திற்கு... போலீஸ் கெடுபிடி வேறு... இது தேவையாடா... எப்போடா உனக்கு புத்தி வரப்போகிறது...''

''வேணாம்டீ... அவனே அடிப்பட்டுக் கிடக்கிறான். இந்த நிலையில் ஏன்டீ அவனை நோக வைக்கிறே... இப்போ எதுவும் பேசாதே சௌமி...'' என்று தாய் கெஞ்சினதால்... அமைதியாகிப் போனாள் சௌம்யா...

எப்படியோ விஷயம் தெரிந்து... ராஜேந்திரனைப் பார்க்க விரைந்து வந்தாள் ரஞ்சிதா.

அவளை எதிர்பார்க்காத ராஜேந்திரனுக்கு மலைப்பு. சௌம்யாவிற்கும் தான்...

வேண்டாம் என்று உதறிவிட்டவள்... ஏன் ஓடி வருகிறாள்... சிந்தையில் அந்தக் கேள்வி கொக்கிப் போட்டு இழுத்தது.

தான் கொண்டு வந்த பூங்கொத்தை அருகில் வைத்துவிட்டு...

''சாரி... ராஜேந்திரன்... உங்களோட இந்த நிலைக்கு நான் தான் காரணம் என்று உறுத்துகிறது... நான் பேசினது உங்களுக்கு ஆத்திரமாயிருந்திருக்கும்... நீங்க நிதானமாய் யோசித்திருந்தால்... நான் சொன்னது நியாயமான

வார்த்தைகள் தான் என்று உங்களுக்கு புரிந்திருக்கும். ஆனால்... நீங்க தடுமாறிட்டீங்க போல... நம் சிநேகம் ஒரேடியாய் முறிந்து விடணும்னு நான் சொல்ல வில்லையே... இப்போதைக்கு நாம் நம் படிப்பை... நம் எதிர்காலத்தைப் பத்தி மட்டும் தான் நினைக்கணும் என்றுதான் சொல்கிறேன்... அதை நீங்கள் புரிந்து கொள்ளாமல்... ஆத்திரத்தோடு நடந்துக்கிறீங்களே ராஜ்...''

ராஜேந்திரன் எதுவும் பேசாமல் இருந்தான். இன்னும் அவனது கோபம் தீரவில்லை என்று புரிந்தது.

அவனிடம் பேசிவிட்டுப் பத்து நிமிடங்களில் புறப்பட்டு விட்டாள் ரஞ்சிதா...

சௌம்யாவும் பிளாஸ்கை எடுத்துக் கொண்டு அவளுடன் நடந்தாள்... காபி வாங்கி வர...

''சாரி... சௌம்யாக்கா... இப்படியாகும் என்று நான் நினைக்கவில்லை... ராஜேந்திரனின் இந்த நிலைக்கு நான் தான் காரணம் என்ற குற்ற உணர்வு எனக்குள் நெருடலாய் இருக்கு... அதான் விஷயம் அறிந்ததும் ஓடி வந்தேன்...'' என்றாள் வருத்தத்துடன்...

''கிறுக்குப் பிடித்துப் போய்... கண் மூடித்தனமாய் வண்டியோட்டியதால் இந்த நிலைமை... அதுக்கு நீ எப்படிப் பொறுப்பாவாய் ரஞ்சிதா... விடு... ஆமாம் நீ இங்கு வந்த விஷயம் உன் அண்ணனுக்குத் தெரியுமா... அப்புறம் அதற்கும் சண்டைப் பிடிக்கப் போகிறார்...'' என்று வினவினாள் சௌம்யா.

''ஊகூம்... மாட்டார்... இப்போ என் அண்ணாவுக்கு என் மேல் நம்பிக்கை வந்துவிட்டது... வீட்டுக்குப் போனதும் அவர்கிட்டே சொல்லி விடுவேன்... அவரும் புரிந்து கொள்வார் சௌம்யாக்கா'' உறுதியுடன் சொன்னாள் ரஞ்சிதா...



''ஆனால் என் தம்பிக்கு தான் இன்னும் பித்தம் தெளியவில்லையே... நீ என்னவோ மோசம் செய்து விட்ட மாதிரியல்லவா நினைக்கிறான்... மடையன்.''

''என் மனசுக்கு பட்டதைதான் ராஜிடம் சொன்னேன்... பெரியவர்கள் நமக்கு நல்லதை தான் செய்வார்கள் எது நல்லதோ அதைத்தான் சொல்வார்கள் என்று நான் உணர்ந்த மாதிரி... ராஜுவும் உணர வேண்டும் என்று நினைத்து... அவரிடம் அப்படிப் பேசினேன். ஆனால் அவர்தான் புரிந்து கொள்ளவில்லை...''

''உன்னிடம் திடீர் என்று வந்த இந்த மாற்றம் எனக்கு ஆச்சர்யத்தைத் தருகிறது ரஞ்சிதா... எனக்கு சந்தோஷ மாகவும் இருக்கு... படிக்கிற வயசில் படிக்க வேண்டும்... முக்கியமாய்... பெண்களுக்கு படிப்பு ரொம்ப அவசியம்... அதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறாயே என்று வருத்தமாகவும் இருந்தது. நல்லவேளை... முழித்துக் கொண்டு விட்டாய் ரஞ்சிதா...''

''தாங்க்ஸ் டூ மை டியர் பிரதர் சௌம்யாக்கா. என்னிடம் அவர் ஆத்திரப்படவில்லை. எரிந்து விழவில்லை. நிதானமாய் எடுத்துச் சொன்னார். இதே காதல் உன் படிப்புக்கு பின் வந்திருந்தால்... நானே நின்று உனக்குத் திருமணம் செய்து வைத்திருப்பேன்... ரஞ்சி... அது மட்டுமல்ல. இது தடுமாறும் வயசு... காதலா... இல்லை வயசுக் கோளாறில் வந்த மோகமான்னு புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கிற வயசு... அவசரப்பட்டு வாழ்க்

கையைக் கெடுத்துக் கொண்டோமே என்று பின்னால் நீ வருந்தக் கூடாதும்மா... இதோ பார்... ரஞ்சி குட்டி... நான் உனக்கு வெறும் அண்ணன் மட்டுமில்லடா... வெல் விஷர் கூட... நான் உன் நல்லதுக்கு தான் சொல்வேன் என்று மனதில் பட்டால்... நான் சொல்வது போலச் செய்... நீ படிக்க வேண்டும்... உன் படிப்பை முடித்துவிட்டு அப்புறமாய் யோசி... அப்போதும் இந்த ராஜேந்திரன் மீது உனக்கு லயிப்பு இருந்தால்... நானே நின்று வெகு விமரிசையாய் இந்தத் திருமணத்தை நடத்தி வைக்கிறேன். சுயமாய் முடிவெடுக்கும் வயசு இதில்லைடா'' என்று அக்கறையாய் அவர் சொல்வதும் சரிதான்... படிக்கிற வயதில் தானே படிக்க முடியும்... அதான்... சரின்னுட்டேன்...''

''அது சரி... ரஞ்சிதா. உன்னிடம் ஒன்று கேட்பேன். உண்மையைச் சொல்வாயா... ராஜேந்திரன் மீது உனக்குக் காதல் இல்லையா... இல்லை உன் அண்ணனுக்காக அதை மறைக்கிறாயா...'' அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல கொஞ்சம் யோசித்தாள் ரஞ்சிதா...

''இந்த விஷயத்தில் எனக்கே குழப்பமாக இருக்கு. அண்ணா சொல்வது போல காதலாக இருந்தால் அது காத்திருக்கும். எத்தனை வருடங்கள் ஆனாலும் காதல் மாறாது இல்லையா... என் மனதை நன்றாக அறிந்து கொள்ள... நான் காத்திருக்க வேண்டும். அதற்கு அவகாசம் தேவை... அது படிப்பாக இருக்கட்டுமே... அதான்... தயாராகி விட்டேன்...''

''வெரிகுட்... உன் திடசித்தத்திற்கு என் பாராட்டுக்கள் ரஞ்சிதா... என்ன... உனக்கு இதமாய் எடுத்துச் சொல்லி... நம்பிக்கையூட்டியது போல... உன் அண்ணன் என்



தம்பியிடம் நேரிடையாய் ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் நன்றாக இருந்திருக்கும்... அவனும் நம்பிக்கை குலையாமல் இருந்திருப்பான். படிப்பை முடி... காதல் நிலைத்திருந்தால்... நானே திருமணத்தை நடத்தி வைப்பேன்'' என்று உன்னிடம் சொன்ன மாதிரி... என் தம்பியிடம் சொன்னால் அவனும் உற்சாகமாய் படிக்க ஆரம்பிப்பான்... ப்ச்சு. அதெல்லாம் நடக்கிற விஷயமு மில்லை... விட்டுத் தள்ளு ரஞ்சிதா... அத்தனை சிரமத்திலும் என் தம்பியை பார்க்க வந்தாய் பார்... தாங்க்ஸ்...''

''என்னக்கா... உதறி விட்டுப் போகும் மாதிரியாகவா நாங்க பழகினோம்... 'காதல்' என்ற நினைப்பை ஒதுக்கி வைத்துவிட்டு ஃப்ரெண்ட்ஸாக இருக்கலாமே. அதைத்தான் செய்தேன்... ஆமாம்... நீங்க ஆபீஸுக்குப் போகவில்லையா... லீவா...''

''அய்யோ... லீவு போட்டால் அவ்வளவுதான் ஆபீஸுக்குப் போயே ஆகவேண்டும்... அம்மாவுக்கு காபியும் டிபனும் வாங்கிக் கொடுத்துவிட்டு... வீட்டுக்குப் போய் குளித்துவிட்டுப் புறப்பட வேண்டும்... சாப்பாடு அக்கா கொண்டு வருவாள்... அந்த யோசனை இல்லை.''

''ஏதாவது உதவி தேவைப்பட்டால் சொல்லுங்க... சௌமிக்கா...''

''தாங்க்ஸ்ம்மா... இத்தனை பேர் இருக்கோம்... போதும்... நீ எப்படி... வீட்டிற்கா... காலேஜா...''

''காலேஜுக்கு போகிறேன்... முடிந்தால் சாயந்திரம் வந்து பார்க்கிறேன்க்கா...''

''எதுக்கும்மா... காலேஜ் விட்டதும் வீட்டிற்கு போ ரஞ்சிதா... இங்கே வந்துவிட்டு போவதென்றால் இருட்டி விடும்... வேண்டாம்...''

ரஞ்சிதா விடை பெற்று செல்லும் வரை காத்திருந்து விட்டு... கான்டீனை நோக்கி நடந்தாள் சௌம்யா.

அலுவலகத்தில்... வேலையின் பளு அவளை அழுத்தினாலும் மனம் ஏனோ அலுவலில் ஒட்ட வில்லை.

ராஜேந்திரனின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை அவளை வாட்டியது... இப்படி பொறுப்பின்றி தன் போக்கில் நடக்கிறானே... இப்படியே போனால் அவனது எதிர்காலம் பாழாகி விடுமே...

ரஞ்சிதா வாழ்க்கையைப் புரிந்து கொண்ட மாதிரி... இவன் புரிந்து கொள்ளவில்லையே...

இது எதில் போய் முடியும் தெரியவில்லையே... ஏதோ சொல்லத் தெரியாத பயம்... நெஞ்சுக்குள் கவ்வியது...

எப்போதடா மணி ஐந்தரை ஆகும் என்று கடிகாரத் தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவள் 'டாண்' என்று ஐந்தரையானதும்... புறப்பட்டுவிட்டாள்...

நேரே மருத்துவமனைக்கு போய்விட்டு... வீடு செல்ல வேண்டும்... சீக்கிரம் கிளம்பினால் தானே முடியும்.

பஸ் வந்து... பயணிகளின் நெரிசலின் மத்தியில் கால் வலிக்க நின்று... ஒரு வழியாய் மருத்துவமனைக்குச் சென்றபோது மணி ஏழு...

வார்டுக்கு வெளியே... சந்தியாவும் தாயும் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அருகில் சென்றாள்.

''என்னக்கா... நீ மட்டும் தான் வந்தாயா...'' என்று தமக்கையை விசாரித்தாள்.

''என்னுடன் மாமாவும் வந்தார்... இங்கே என்னை விட்டு விட்டு வேலையைப் பார்க்க போயிருக்கிறார். வந்து கூட்டிக் கொண்டு போகிறேன் என்றிருக் கிறார்...''



''மாமா எப்படி இருக்கிறார்... இப்போதெல்லாம் உன்கிட்டே கோபப்படுவதில்லையாமே... அம்மா சொன்னதும் எனக்கு ஆச்சர்யமாய் விட்டது... ஒருவேளை கொஞ்ச நாள் அடங்கியிருந்து விட்டு... மறுபடியும் தன் சுயரூபத்தைக் காட்டுவாரோ என்னவோ... யாருக்குத் தெரியும்...'' சந்தேகமாகவே சொன்னாள் தங்கை.

''இல்லைடீ... உண்மையாகவே அவர் மாறி விட்டார்... எங்கிட்டே சத்தியமும் செய்திருக்கிறார் தெரியுமா... இனி உனக்கு ஒரு நல்ல கணவனாய்... நம் குழந்தைகளுக்கு ஒரு நல்ல அப்பாவாய் இருப்பேன் என்று...'' சந்தோஷக் குரலில் கூறினாள் தமக்கை.

''அடடா... அதென்ன திடீர் ஞானோதயம்... தலையில் அடிப்பட்டது உனக்குத்தானே... அவருக்கில்லையே...'' என்றாள் கொஞ்சம் கிண்டலாக...

''தப்பு... சௌமி... இன்னும் உன் மாமாவிடம் நீ தப்பு கண்டு பிடிக்கிறது எனக்கு வருத்தமாக இருக்கு... எந்த மனுஷன்தான் தப்பு செய்யவில்லை. சொல்லு... செய்த தப்பை உணர்ந்து... மனம் திருந்தினால் அது போதாதா... அவரும் திருந்தி விட்டார். ஒரு ஆம்பிளை கீழிறங்கி வந்து மன்னிப்புக் கேட்கிறது பெரிய விஷயம்... அவர் என்னிடம் மன்னிப்புக் கேட்டது என்னை நெகிழ வைத்து விட்டது. அவர் எனக்கு கணவர் மட்டுமில்லை... என் குழந்தைகளோட அப்பா... அதற்காவது மரியாதைக் காட்ட வேண்டுமில்லையா சௌமி...''

''சாரிக்கா... உன்னளவு எனக்குப் பொறுமையோ... விசால மனசோ எனக்கில்லை... இருந்தாலும்... உன்

வார்த்தைகளை மறுக்கவில்லை... எப்படியோ... நீயும் மாமாவும் ஒற்றுமையாய்... சந்தோஷமாய் இருந்தால் அது போதும்... ஏன்னா... அதுதான் அம்மாவுக்கும் சந் தோஷம்... இல்லையாம்மா...''

''அது மட்டுமில்லைடி... உன்னை ஒருத்தனிடம் பிடித்துக் கொடுத்து விட்டால் அந்த சந்தோஷம் இரட்டிப்புத்தான்... அந்த நேரம் எப்போது வருமோ... தெரியவில்லையே...''

''இதுதானே வேண்டாம் என்கிறது... நான் என்ன ஆடா... மாடா.. பிடித்துக் கொடுக்க... மனுஷிம்மா... ரத்தம்... சதை... மனம்... சுயமரியாதை எல்லாம் இருக்கும் மனுஷி புரிஞ்சுக்கோ...''

''இந்த வாய் வார்த்தைக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை... இந்த வாயாடித் தனத்திற்கு யார் வந்து அமை யப் போகிறானோ... தெரியலையே...'' அங்கலாய்ப்பாய் சொன்னாள் தாய்.

''ஏம்மா புலம்புகிறே.. இவளுக்கென்று ஒருத்தன் பிறந்திருப்பான் இல்லே... அவன் வர்ற வரைக்கும் தான் இந்த மாதிரி பேசுவாள்... அவன் வரட்டும்... அப்புறம் பார்ப்போம்... இதே மாதிரி பேசுகிறாளான்னு...'' சந்தியா கிண்டலாய்ப் பேச...

''பார்த்துக் கொண்டேயிருக்கா... நான் எப்போதும் இப்படித்தான் இருப்பேன்... எந்தக் கொம்பன் வந்தாலும்... என்னை மாற்றிக் கொள்ள மாட்டேன்.''

''நான்... நா...னா...கத்தான்...'' வார்த்தைகள் தேய்ந்து நின்றும் போயின.



அவளின் விழிகள் அகல விரிந்து... சற்று தூரத்தில் வந்து கொண்டிருந்தவனின் மீது குத்தீட்டியாய் நிலை குத்தி நின்றன.

நிரஞ்சன் குமார்!

இவன்... எங்கே... இங்கு... ஓ! ரஞ்சிதா இங்கு வந்ததை அறிந்து... அந்தக் கோபத்தில் வந்திருக்கிறான் போலும்... அடக் கடவுளே! மறுபடியுமா... என்ன சொல்லப் போகி றானோ... அதுவும் எல்லோர் முன்னிலையில்... விதிர்ப் புடன் நின்றிருந்தாள் அவள்.



## 14

சத்தியமாய் நிரஞ்சன் குமாரை அவள் அங்கு எதிர் பார்க்கவில்லை.

அழுத்தமாய்... நிதானமாய் அடியெடுத்து ராஜ நடை போட்டு வந்தவனை... நம்ப முடியாத ஒரு பார்வையுடன் வெறித்து நின்றாள்...

கண்கள் இமைக்கவும் இல்லை...

அங்கும் இங்குமாய் உலவிய இளம் நர்ஸுகளும்... நோயாளிகளைப் பார்க்க வந்த கூட்டத்தில் சில பெண் களும் அவனை ஆர்வத்துடன் பார்த்து ரசித்ததையும் கவனிக்கத் தவறவில்லை.

அங்கிருந்த ஆண்களில்... ஏன்... டாக்டர்களையும் சேர்த்துதான்... அவன் மட்டும் கம்பீரமாய்... உயரமாய்...

தனிப்பட்டுத் தெரிந்ததை அவள் மனம் சிணுங்கலுடன் ஒப்புக் கொண்டது.

ஆயிற்று... அருகில் வந்து விட்டான்... 'புல்லட்'டாக வரப்போகின்றன வார்த்தைகள்...

ரஞ்சிதா வந்தது ஏன்... போன் பண்ணி அழைத் தீர்களா... திரும்பத் திரும்ப எங்கள் வழியில் குறுக்கிட்டு ஏன் 'டார்ச்சர்' செய்கிறீர்கள்... என்னை நிம்மதியாக இருக்க விடமாட்டீர்களா... என்றெல்லாம் கத்தப் போகிறான்... அய்யோ... மருத்துவமனையே நாறிவிடும்...

மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொள்ள... எச்சிலை கூட்டி முழுங்கினாள்...

''ஐ'ம் சாரி... சௌம்யா... ராஜேந்திரனுக்கு அடிப்பட்ட விஷயத்தை தங்கை சொன்னாள். இங்கே... அருகிலேயே எனக்கு வேலை இருந்ததால்... அப்படியே பார்த்துவிட்டுப் போகலாமே என்று வந்தேன்... அடியொன்றும் பலமாய் இல்லையே... அவனைப் பார்க்கலாம் தானே...!'' அணு குண்டு ஒன்று சீற்றத்துடன் வெடிக்கப் போகிறது என்று அச்சத்துடன் எதிர்பார்த்தவளுக்கு... அது புஸ்வானம் தெறித்து பூச்சொறிந்தாற்போல் வியப்பைத் தந்தது.

சௌம்யா மலைத்துப் போனாள்... ஆகா... பேசுவது அவன்தானா... இல்லை. இது என் கற்பனையா... தன்னையே நகத்தில் பிறாண்டிக் கொண்டாள்...

அட... வலிக்கிறது...

விரலால் சொடுக்கி அவளது கவனத்தை ஈர்த்தான் நிரஞ்சன்.

''ஹலோ... சௌம்யா... உன்னைத் தான் விசாரித்தேன்... என்ன பதில் இல்லை...'' என்றான் சின்னச் சிரிப்புடன்...



அவளது தடுமாற்றமும்... பிரமிப்பும் அவனுக்கு வேடிக்கையாய் தெரிந்ததோ என்னவோ.

உடனே சுதாரித்துக் கொண்டாள் சௌம்யா.

''என்ன... என்ன கேட்டீர்கள்... ஆங்... ராஜேந்திரனைப் பற்றிதானே... ஊகூம் பயப்படும்படியாய் ஏதும் இல்லை... பார்க்கணுமா... ஓ.யெஸ்....'' தன்னையும் அறி யாமல் வார்த்தைகள் குளறுகிறதே மனதுக்குள் வெட்கி னாள்.

பாக்கியம் மகளிடம் கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

''யாரடி இது... உன்னோடு வேலை பார்க்கிறவரா...''

''அப்புறம் சொல்கிறேன்... இரும்மா...'' என்று அடிக்குரலில் சொல்லிவிட்டு... முன் நடந்தாள் மகள்.

பாக்கியமும்... சந்தியாவும் மிடுக்காய் நடந்து செல்லும் அவனை பிரமிப்புடன் பார்த்தனர்...

அவர்களது கண்களில் கேள்விக் குறி... யார் இவன்... இதற்கு முன் பார்த்த மாதிரி இல்லையே... இவனைப் பார்த்ததும் சௌம்யா விறைத்தாற்போல் ஆனாளே... ஏன்... பார்த்தால் நல்லவனாகத் தெரிகிறான்.. ராஜேந் திரனைப் பார்க்க வந்திருக்கிறானே. ராஜேந்திரனின் நண்பனாக இருக்க முடியாது... 'படபட'வென்று கடுகைப் பொரித்தது போல பேசும் சௌம்யா... தட்டுத் தடுமாறிப் போனாள்... என்றால்... ஏதோ விஷயம் இருக்கிறது... அது என்ன... கண்கள் விரிய பார்த்துக் கொண்டிருந்த இரு வருக்கும் மண்டைக்குள் வண்டின் குடைச்சல்...

உள்ளே... படுக்கையில் படுத்திருந்த ராஜேந்திரன் உள்ளே வந்த தமக்கையைப் பார்த்து முகம் மலர்ந்தவன்... பின்னால் வந்தவனைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான்...

ஒருவிதக் கலக்கத்துடன் தமக்கையைப் பார்த்தான் அவன்.

''ராஜா... உன்னைப் பார்த்து நலம் விசாரிக்க வந்திருக்கிறார்... ரஞ்சிதா சொன்னாளாம்...'' என்று குறிப்பாய் உணர்த்தினாள்...

பயப்படாதே... சண்டை போடவோ... எச்சரிக்கவோ வரவில்லை... இயல்பாக இரு...

அருகில் இருந்த ஸ்டூலில் அமர்ந்தான் நிரஞ்சன்.

"ரஞ்சிதா வந்து பார்த்தாளாமே... சொன்னாள். அண்ணா... நான் பேசிய வார்த்தைகள் அவரைப் புண்படுத்தி விட்டது போல... அதான் கோபத்தில் கண் மண் தெரியாமல் வண்டியை ஓட்டி... விபத்தை சந்தித்தார் போல... அதனால் தான் அவரைப் போய்ப் பார்த்தேன் என்றாள்... நானும் அவளைப் பாராட்டினேன்... காதல் வேறு... சிநேகம் வேறு... இப்போது அவள் உன்னை ஒரு நல்ல நட்பாக நினைத்துத் தான் வந்து பார்த்திருக்கிறாள். அதை நான் தடுக்கவில்லை...'' நிரஞ்சன் அழுத்தமான குரலில் சொன்னதும்...

ராஜேந்திரனின் முகம் வாடியது.

அதாவது... வெறும் நட்புதான்... என்னவோ ஏதோ என்று கற்பனையில் மூழ்க வேண்டாம் என்ற எச்சரிக்கையோ...

அதைக் கவனித்த சௌம்யா அவசரத்துடன் இடை புகுந்தாள்.

''எதுவானால் என்ன... ரஞ்சிதா வந்து பார்த்தது சந்தோஷமே... பழக்கம் அவ்வளவு சீக்கிரம் விட்டுப் போகாது இல்லையா... அதான்...'' என்றாள் உட்குறிப்புடன்... ரஞ்சிதாவின் மனம் அத்தனை சீக்கிரம் மாறாது என்பது போல... அதைக் கவனியாதவன் போலத் தொடர்ந்தான் நிரஞ்சன்.



''இதோ பார் ராஜேந்திரா... என் தங்கைக்கு சொன்னதையே உனக்கும் சொல்கிறேன்... முதலில் படிப்பில் கவனம் செலுத்து... வாழ்க்கைக்கு அஸ்திவாரமே படிப்புதான்... அதை முடித்துவிட்டு... வாழ்க்கைக்கு வழி தேடிக் கொண்டு... அப்புறம் கல்யாணத்தைப் பத்தி யோசி... என்ன... ரஞ்சிதாவிடம் சொன்ன மாதிரியே உன்னிடமும் சொல்கிறேன்... ராஜேந்திரா... உங்கள் காதலை நான் எதிர்க்கவில்லை. ஆனால்... உங்கள் படிப்பு முடியாமல்... வாழ்க்கையில் 'செட்டில்' ஆகாமல்... இன்னும் சொல்லப் போனால் கல்யாணத்திற்குரிய வயசும் வராமல் 'காதல்... காதல்' என்று புத்தி மயங்கி போவதைத்தான் வெறுக்கிறேன். மேற்படிப்பு இருந்தால் படித்து முடி... இன்னும் இரண்டு வருடங்கள் போகட்டும்... உனக்கும் மனமுதிர்ச்சி, புத்தி தெளிவு இரண்டும் வரும்... அப்புறமும் உனக்கு விருப்பம் என்றால்... உங்கள் கல்யாணத்தை நானே நடத்தி வைக்கிறேன்... ஓகே...'' அவன் சொல்ல... சொல்ல ராஜேந்திரன் முகத்தில் மலர்ச்சியும்... கண்களில் ஒளியும் வந்தது.

சௌம்யாவிற்கோ சொல்லவே வேண்டாம்...

நிரஞ்சன் குமாரின் வார்த்தைகளைக் கேட்டு மலைத்துப் போனாள்... தலைக்குள் கிறுகிறுப்பது போல் இருந்தது. இந்தக் காதலை எதிர்த்துப் பேசியவன்... தாம் தூம் என்று குதித்தவன் பச்சைக் கொடி காட்டியிருக்கிறான் என்றால்... எப்படி...

இந்தப் பேச்சில் உண்மையிருக்கிறதா... இல்லை வெறும் ஜாலப் பேச்சா... கடவுளே... இதை நம்பி தம்பி ஆகாசக் கோட்டை கட்டி விடக் கூடாதே... அப்புறம் தோல்வி என்று ஆனால் அது மரண அடியாக அல்லவா இருக்கும்... சௌம்யாவின் உள்ளம் தவித்தது. அதை எப்படி அவனுக்கு உணர்த்துவது... அவன் பேசுவதை ராஜேந்திரனும் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருக் கிறானே...

அவனது கண்களில் இப்பவே ஆயிரம் கனவுகள்... கற்பனைகள்! அட ஈசுவரா!

''சரி... மேலே என்ன செய்வதாய் உத்தேசம்... ராஜேந் திரா... எம்.பி.ஏ. படிக்கலாமே... இல்லை... 'எம்.எஸ். இன் கம்ப்யூட்டர்' பண்ணலாமே... யு.எஸ்ஸுக்குகூட முயற்சி செய்யலாம்... அதற்குரிய தேர்வுகள் இருக்கிறது... கொஞ் சம் கஷ்டப்பட்டு முயன்றால் நிச்சயம் வெற்றிதான்... 'அப்ராட்'டில் படிக்க ஆசையென்றால் சொல்லு... அதற்கான உதவியையும் செய்கிறேன்... ராஜேந்திரா...''

'திஸ் இஸ் டூ மச்...' என்று அலறவேண்டும் போல இருந்தது சௌம்யாவிற்கு.

திடும் என்று வந்தது மட்டும் அல்லாது... ஏதேதோ சொல்லி... தம்பியை கிளப்பி விடுகிறானே... இதெல் லாம் நடக்கிற விஷயமா... ஆசைப்படுவதற்கும் ஒரு எல்லையுண்டு... மேனாட்டுக் கல்வி என்றால் சும்மாவா... 'பாங்க்' பாலன்ஸ் காட்ட வேண்டும்... 'சொந்த வீடு' இருக்கிறது என்பதை 'ப்ரூவ்' பண்ண வேண்டும்... சொந்த வீடு என்று இந்த சின்ன வீட்டைக் காட்ட முடியுமா...



ஒருவேளை... இப்படி 'ரீல்' விட்டு... கடைசியில் கைவிரித்துவிட்டு... அந்த விதத்தில் பழிவாங்கப் பார்க் கிறானோ...

இல்லை... ஏதாவது செய்து இவனை அப்புறப்படுத்தி விட வேண்டும் என்ற எண்ணமா...

ஏதோ ஒன்று இருக்க வேண்டும்... சோழியன் குடுமி சும்மா ஆடாதாமே...

பாவம்... ராஜேந்திரன்... இதை உண்மை என்று நினைத்து ஏமாந்து போகக் கூடாது...

பாசம் அவளைத் தவிக்கச் செய்தது.

ஆனால் ராஜேந்திரனின் பதில்...

''தாங்க்ஸ் சார்... உங்க பேச்சு எனக்கு 'டானிக்' குடித்தது மாதிரி, உற்சாகமாக இருக்கு... உங்களோட 'சஜஷனை' ஏத் துக்கிறேன்... என் படிப்பை முடித்துவிட்டுக் கல்யாணத்தை நினைக்கிறேன் போதுமா... எனக்கு உதவி செய்ய முன் வந்தது குறித்து சந்தோஷம் சார்... ஆனால் என் முயற்சி யில் முன்னுக்கு வரணும்னு தான் என் ஆசை... நல்ல மார்க் வாங்கி... நீங்க சொன்ன மாதிரியே மேற்கல்வியை கற்பேன்... அதுக்கு பாங்க் உதவி இருக்கு... ஆனால்... உங்க முடிவு மட்டும் மாறாமல் இருந்தால் போதும்...'' தம்பியின் பேச்சு தமக்கையை பூரிக்க வைத்தது... மனசுக்குள் 'சபாஷ்டா தம்பி' என்று மெச்சிக் கொண்டாள்.

சுயமரியாதையை விட்டுக் கொடுக்காமல் பேசு கிறானே என்ற பெருமிதம் அவளிடம் வந்தது...

''ஓகே... உன் முயற்சி வெற்றியடைய என் வாழ்த் துக்கள் ராஜேந்திரா... ஆல் தி பெஸ்ட்... நான் வரு கிறேன்...'' என்று எழுந்தான் நிரஞ்சன்...

மலர்ந்த முகத்துடன் விடை கொடுத்து அனுப்பினான் ராஜேந்திரன்.

வெளியே நின்றிருந்த பாக்கியத்தையும்... சந்தியா வையும் பார்த்தும் பார்க்காததுபோல நடந்தவனை தொடர்ந்தாள் சௌம்யா...

"கொஞ்சம் இருங்கள் மிஸ்டர் நிரஞ்சன்... உங்களிடம் பேச வேண்டி இருக்கிறது..." என்றாள் அவசரமாக.

அவன் நின்று... திரும்பி அவளைப் பார்த்தான்.

'என்ன விஷயமாய்' என்பது போலப் பார்வையுடன்...

"எனக்குக் குழப்பமாக இருக்கிறது... அதை தீர்க்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது. இதுநாள் வரை... இந்தக் காதலுக்கு எதிராய் போர்க்கொடி காட்டியவர் நீங்கள்... இப்போது தடாலடியாய்... 'பல்டி' அடித்து பச்சைக்கொடி காட்டுகிறீர்கள் என்றால்... அதை என்னால் நம்பவும் முடியவில்லை... ஏன் இந்த திடீர் மாற்றம்... அதை நான் தெரிந்து கொள்ளலாமா" என்று வினவினாள் சௌம்யா.

"ஓ... தாராளமாய்... நான் படிப்பு என்று சொன்னது இரண்டு வருஷ அவகாசம்... இவர்கள்... அதாவது உன் தம்பியும்... என் தங்கையும் தங்களது மனதைப் பற்றி அறிய கொஞ்ச கால அவகாசம் தேவை... அதைத்தான் ஏற்படுத்திக் கொடுத்தேன்... அது மட்டுமல்ல... அநியாய மாய் ஒரு இளைஞனின் எதிர்காலம் சிதையக் கூடாதே என்ற ஆதங்கமும்தான்... ஒருவேளை.. சலனம் என் றாலும் அதைப் புரிந்து கொள்வார்களே... அதற்குத்தான் இந்த ஏற்பாடு..."

"ஓ! ஒருவேளை... காதல் என்று முடிவானால்... ஏற்றுக் கொள்வீர்களோ... ஏனென்றால் உங்களுக்கு தான் காதல் என்றால் கசப்பாயிற்றே..." குத்தலாய் கேட்டாள் அவள்.



"அவ்விடத்திலும் அதேதானே... அம்மணியும்... காதல் கசக்குதய்யான்னு ராகம் இழுத்ததாய் ஞாபகம்..." அவனது பரிகாசம் அவளுக்கு எரிச்சலூட்டியது.

"முறைக்காதேம்மா... உண்மையைத்தான் சொன் னேன். எனக்கும் காதலில் வெறுப்பு... ஆனால் மற்ற வர்கள் நம்மை மாதிரி இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்க முடியாதே... தவிர... ரஞ்சிதாவும் என்னைக் கேட்டுக் கொண்டதால் வந்தேன்... அண்ணா... என் னிடம் சொன்ன மாதிரியே ராஜேந்திரனுக்கும் சொன்னால் பரவாயில்லை... அவனும் படிப்பில் ஆர்வம் காட்டுவான் என்று சொன்னாள்... சரி... காசா... பணமா... அறிவுரையை அள்ளித் தந்தால் போயிற்று என்று வந்தேன்... நம்மால் ஒரு நல்லது நடக்கும் என்றால் அதைச் செய்வதில் என்ன தவறு... அதான்... வந்தேன்... விளக்கம் போதுமா..." என்றான் அவன்.

"தாங்க்ஸ்..."

புருவங்களை உயர்த்தினான் அவன்.

"எதற்கு... விளக்கம் சொன்னதற்கா..."

"ஊகூம்... அக்கறையா வந்து பார்த்து... அட்வைஸ் பண்ணினதுக்கு... என் தம்பிக்கு ஆலோசனைகளை வழங்கியதற்கு... அவனுக்கு ஊக்கமூட்டியதற்கு... ரொம்பவும் தாங்க்ஸ் மிஸ்டர் நிரஞ்சன் குமார்..."

அவன் தலை சாய்த்து அதை ஏற்றுக் கொண்டான்.

"வெல்கம்... இனி நமக்கு கவலை இல்லை... இருவரும் வேகத்துடன் படிக்க ஆரம்பிப்பார்கள். அதுதான்

நமக்கு வேண்டும் இல்லையா... இனி... நாம் அவரவர் வேலைகளை கவனிக்கலாம்... எதிர்படும் சந்தர்ப்பமும் இனி இருக்காது என்பதால்... குட்பை..."

என்றவன்... திரும்பி விரைந்து நடந்தான்.

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள் சௌம்யா.

அவன் பார்வையிலிருந்து மறைந்ததும் நீண்டதொரு பெருமூச்சு வந்தது...

பிரச்சனை தீர்ந்தது என்ற நினைப்பாலா...

ஆனாலும்... மனசின் ஒரு மூலையில் மட்டும்... சொல்ல முடியாத அரிப்பு... எதனால் வந்த தவிப்பு... ஏன் என்று தெரியவில்லை...

நிரஞ்சனை எந்த அளவு நம்பலாம் என்ற குழப்பமா... தம்பியை ஆசைக்காட்டி மோசம் செய்கிறானோ என்ற சந்தேகத்தினாலா... இல்லை... நிரஞ்சனின் பேச்சை நம்பிவிட்ட தம்பி... தோல்வியை எப்படித் தாங்குவான் என்ற பயத்தினாலா... அது அவளுக்கே தெரியாது.

அந்தத் தவிப்புடனே தாய்க்கும் தமக்கைக்கும் பதில் சொன்னாள் சௌம்யா.

வந்தவன்... ராஜேந்திரன் காதலித்த பெண்ணின் அண்ணன் என்று அறிந்ததுமே அதிர்ந்து போனார்கள் இருவரும்... கூடவே கலக்கமும் தான்.

எதற்கு வந்தான் என்று பயத்துடன் விசாரித்தவர்கள்... அவன் வந்த காரணம் தெரிந்ததும் தான் தெளிந்தார்கள்...

நிரஞ்சன் வந்து சென்ற பின்பு... ராஜேந்திரன் உற்சாகத்துடன் தெரிந்தான் என்றுதான் சொல்ல வேண்டும்...



பழைய கலகலப்பு அவனிடம் திரும்பியது.

"அக்கா... நாளை வரும்போது என் புத்தகங்களை கொண்டு வா... நாளையிலிருந்து நான் படிக்க ஆரம்பிக்க வேண்டும்... பாரேன்... இந்தத் தேர்வில் 'டிஸ்டிங்ஷன்' எடுத்துக் காட்டுகிறேன்... என்னாலும் முடியும் என்று செய்து காட்டுவேன் பார்... நான் எடுக்கப் போகும் மார்க்கைப் பார்த்துவிட்டு நிரஞ்சன் சார் அசந்து போகணும்... அவரது குடும்பத்துக்கு சரியான மாப்பிள்ளை என்பதை அவர் புரிந்து கொள்ளணும்... செய்கிறேன்... பார்... அக்கா..."

அவனது பேச்சில் இருந்த வெறியையும்... உற்சாகத்தையும் பார்த்து ஒரு பக்கம் மகிழ்ச்சி அடைந்தாலும்... இது கடைசி வரைக்கும் நிலைக்க வேண்டுமே என்ற கவலை வந்தது சௌம்யாவிற்கு... எது எப்படியோ... தம்பி நிமிர்ந்து விட்டான்... இனிப் படிப்பில் சோடை போக மாட்டான் என்ற நிம்மதி வந்தது...

அதற்கு - காரணமான நிரஞ்சனுக்கு மானசீகமாய் நன்றி சொல்லிக் கொண்டாள்.



## 15

கருமமே கண்ணாயினார் போல... விடாமல் தன் படிப்பில் ஆழ்ந்தான் ராஜேந்திரன்.

ஊன்... உறக்கம் இல்லாமல் அவன் சதா படிப்பு... படிப்பு என்று இருந்தது கண்டு தாய்க்கும் வியப்பு... அதே சமயம்... யாரோ ஒருத்திக்காக சவாலாய் எடுத்துப் படிக்கும் பிள்ளை... தன்னை நினைத்துப் பார்க்கவில் லையே என்ற ஆதங்கம் வரத்தான் செய்தது பாக்கியத் திற்கு... தாயை சமாதானப் படுத்தினாள் சௌம்யா... ''விடும்மா... எப்படியோ அவன் படித்து முன்னுக்கு வந்தால் போதும்மா... இப்போ... வயசுக் கோளாறும்மா... போகப் போக உன் அருமையை புரிந்து கொள்வான்... பார்... நாளைக்கு அவன் சீரும் சிறப்புமாய் இருந்தால் அது உனக்குப் பெருமை தானேம்மா... இந்த மட்டும் அவன் மாறினானேன்னு சந்தோஷப்படுவாயா... அதை விட்டுவிட்டு இப்படி வருத்தப்படுகிறாயேம்மா...'' என்று எடுத்துச் சொன்னாள் அவள்.

''வாஸ்தவம் தான்டீ... நீ சொல்ற மாதிரி... பழைய துணி மாதிரி சுருண்டு போய் கிடந்தவன்... சுதாரித்துக் கொண்டான் பார்... அது போதும்... என்னவோ பெத்த மனம் பித்தாட்டம் எதையோ நினைச்சு வருத்தப்பட் றேனே... அது தப்புதான்... பிள்ளையோட எதிர்காலம் தான் நமக்கு முக்கியம்...'' என்று ஒத்துக் கொண்டாள் தாய்...

தேர்வுகளும் நெருங்கி வந்தன...

ராஜேந்திரனும் ரஞ்சிதாவும் சந்தித்துக் கொண்டார் களா... இல்லையா என்ற விஷயம் தெரியாமல் போனா லும்... நிரஞ்சனின் தொந்திரவு இல்லாமல் போனதி லிருந்து... அதைப் பெரிதாய் பொருட்படுத்தவும் இல்லை...



அவனும் அப்படித்தானோ என்றும் தோன்றியது. அவனுக்குப் பிடிக்கவில்லை என்றால்... சண்டைக் கோழியாய்... ஊகூம்... சண்டைச் சேவலாய் வந்து நின் றிருப்பானே...

அவனது விருப்பப்படியே ரஞ்சிதாவும் வெகு மும்முரமாய் படிக்க ஆரம்பித்திருக்க வேண்டும்...

எப்படியோ பிரச்சனை சிக்கலாகிப் போகாமல் தீர்வுக்கு வந்ததே... அது போதும்...

இருவரும் படித்துத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்றால் அனைவருக்கும் சந்தோஷமே...

தேர்வும் வந்தது... விழுந்து விழுந்து படித்தான் ராஜேந்திரன்...

தேர்வில் நல்ல மதிப்பெண்களும் கிடைக்கப் பெற் றான். ரஞ்சிதாவும் அதிக மதிப்பெண்களை வாங்கியிருந் தாள். இனிப்புடன் வீட்டுக்கு வந்த ரஞ்சிதாவிற்கு வாழ்த்துக் கூறினாள் சௌம்யா...

''உன் அண்ணாவுக்கு இப்போ குஷிதானே... குட்... இதே போல் இறுதியாண்டு தேர்விலும் நல்ல மார்க் எடுத்து... 'ராங்க்' 'லிஸ்டில்' வரணும் ரஞ்சிதா... இந்த படிப்பு முடிந்ததும் என்ன செய்ய விருப்பம்... போஸ்ட் கிராஜுவேஷனா...'' என்று அக்கறையுடன் கேட்டாள்.

''தெரியலைக்கா... கொஞ்சம் டிஃபரண்ட்டா படிக்க வேணும்னு ஆசை... பேஷன் டெக்னாலஜி... 'மல்டி மீடியா' இதெல்லாம் பழைய படிப்பாகி விட்டது. நிறைய பேர் இதில் தான் விரும்பி சேர்கிறார்கள்... புதுசாய் ஏதாவது கோர்ஸில் சேர்ந்து படிக்கணும்னு நினைக்கிறேன்...

கிராஜுவேஷன் ஆனபின்புதானே அந்த யோசனை... அதுக்கு நிறையவே நேரம் இருக்குக்கா... உங்களுக்கு ஏதாவது தெரிய வந்தால் சொல்லுங்கள் சௌமிக்கா... ராஜ் கூட மேலே படிக்கப் போவதாய் சொன்னார்... எம்.பி.ஏ. செய்ய ஆசையாம்... ஸ்டேட்ஸ் போய் படிக்க முயற்சிக்கிறாராம்... உங்க கிட்ட சொன்னாரா...''

''ம்..ம்.. சொன்னான்... அந்த லட்சியத்தில் தான் விழுந்து படித்திருக்கிறான்... மார்க்கும் 'ஸ்கோர்' பண்ணியிருக்கிறான்... பார்க்கலாம்... அதுக்கு எக்ஸாம் எழுதி தகுதி பெற வேண்டும்... 'பாங்க்' லோனுக்கு அலையணும்... முயற்சி திருவினையாக்கும் என்று நம்புவோம்... இதெல்லாம் உன் அண்ணனின் கைங் கர்யம் ரஞ்சிதா... அவன் பாட்டுக்கு சும்மா இருந்தான்... அது இது சொல்லி அவனை உசுப்பி விட்டு... அவனது கற்பனைகளை உயிர்த்து... கனவு காண வைத்து விட்டார் உன் அண்ணா...''

''இன்னும் அவர் மீது உங்கள் கோபம் போகவில் லையாக்கா... எனக்கு என்னவோ... அவர் ராஜேந்திரனுக்கு நல்லதைத் தான் செய்திருக்கிறார் என்று தெரிகிறது... என்னிடம் கூட ராஜேந்திரனைப் பாராட்டினார்... என்னால் ஆன உதவியைச் செய்கிறேன் என்றதுக்கு... என் சொந்த முயற்சியால் முன்னுக்கு வருவேன் என்று சொன்னாராம் ராஜ்... இந்த இள வயதில் சுய மரியாதையை பெரிதாய் மதிக்கிறான்... அதை மெச்சுகிறேன்... நிச்சயம் இவன் வாழ்க்கையில் முன்னுக்கு வந்து விடுவான் என்றார்... அது மட்டும் அல்ல... உங்களைப் பற்றியும் சொன்னார் அண்ணா...'' அதைக் கேட்டு விட்டு திகைத்தாள் சௌம்யா...



''என்னைப் பற்றியா...''

''அக்காவைப் போலவே தம்பிக்கும் கௌரவமும் வீம்பும் அதிகம்... அதுவும் அக்காவுக்கு ஜாஸ்தின்னு...''

''இதைக் கிண்டலா எடுத்துக் கொள்ளட்டுமா... இல்லை பாராட்டாய் நினைக்கட்டுமா...''

''அய்யோ... அக்கா... உண்மையிலேயே அண்ணா பாராட்டுதலாய் தான் சொன்னார்... அவர் நல்லவர் தான் சௌம்யாக்கா... முதல்ல சிரித்த முகமாய்... இனிய சுபாவத்துடன் இருந்தவர்தான்... அவரது மனதில் பட்ட காயம் அண்ணாவை இப்படி மாற்றி விட்டதுக்கா... அதனால்தான் எல்லோரிடமும் சிடுசிடுன்னு விழுகிறார்... கடுகடுன்னு முகத்தை வைத்துக் கொள்கிறார்... யாரை யும்... முக்கியமா பெண்களை நம்புவதில்லை... பெண் கள் எல்லோரும் மோசமாம்... பண ஆசை பிடித்தவர்கள் என்று அவரது எண்ணம்...''

''அவரைப் பெற்றவரும் பெண் தானே... அது புரிய வில்லையா உன் அண்ணாவுக்கு...'' ரஞ்சிதாவின் முகம் வாடியது...

''அம்மாவையும் சேர்த்துதான். அண்ணா சொல்வது... அப்பா உயிரோடிருக்கும் வரை 'பணம் பணம்' என்று அடித்துக் கொண்டு... பணப் பிசாசாய் அவரை ஆட்டு வித்து வேதனைப்படுத்தினாங்க அம்மா... ஏதோ ஒரு வியாபாரத்தில் முதலுக்கே மோசம் ஆகிவிட... அதைக் குத்திக் காட்டிப் பேசியிருக்காங்க அம்மா... அதைத் தாங்க முடியாமல், அப்பா செத்துட்டாங்க... அந்த ஆத்திரம் வேறே...'' என்றாள்... குரல் கரகரக்க...

''சாரிம்மா... அவரது மனக்காயத்திற்கு யார் காரணம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா ரஞ்சிதா...'' கொஞ்சம் ஆர்வத்துடனே விசாரித்தாள் சௌம்யா.

''இப்போ... காதல் என்றாலே முகம் சுளிக்கும் அண்ணா நான்கு வருடங்களுக்கு முன் ஒருத்தியை காதலித்தாராம்... அவள் பெயர் காவ்யா. இருவரும் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்தபோது... அவளோட அண்ணனோட நண்பன்... அமெரிக்க கோடீசுவரன்... காவ்யாவின் போட்டோவைப் பார்த்துவிட்டு மணக்க விரும்புவதாய் சொல்லியிருக்கிறான்... கோடி கோடியாய் பணத்துடன் அமெரிக்காவில் சொகுசான வாழ்க்கை அவளது மனதைத் தடம் புரள வைத்து விட்டது. அந்த நேரத்தில் தான் வியாபாரத்தில் நஷ்டம் எங்களுக்கு... அதை மறைக்காமல் சொல்லியிருக்கிறார் அண்ணா... கூட்டிக் கழித்துப் பார்த்துவிட்டு அந்த கோடீசுவரனோடு வாழ்வதே சொர்க்கம் என்று நினைத்துப் போய் விட்டாளாம். அந்த ரணம்தான் ஆறாத காயமாகி விட்டது அண்ணாவிற்கு. அன்றிலிருந்து எல்லாப் பெண்களும் பணத்திற்காக வாய் பிளக்கும் பிணங்கள் என்று நினைக்கிறார்...''

''உன்னையுமா... அவரது தங்கையான உன்னையுமா அப்படி நினைக்கிறார்...''

''ப்ச்சு... தெரியல்லே... ஆனா என்மீது அவருக்கு உயிர்... நீ பெண்ணாக இருக்க நினை... பணப் பேயாக மாறாதே என்பார்... நான் அப்படிப்பட்டவள் இல்லை என்று நிரூபிக்க ஆசைப்பட்டேன்... ஒருவேளை அதனால்தானோ என்னவோ... ராஜேந்திரனை விரும்பியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். எனக்குப் பணம்



பெரிதில்லை... சாதாரண வாழ்க்கை போதும் என்று அவருக்கு உணர்த்த நினைத்தது உண்மைதான் சௌமிக்கா...''

''அது தெரியாமல் உன் அண்ணா 'உல்டா'வாக அல்லவா பேசுகிறார்... உன் பணத்திற்காகத்தான் ராஜேந்திரன் உன்னைச் சுற்றி வருகிறான் என்று நினைக்கிறாரே ரஞ்சிதா... இது அநியாயம் இல்லையா...'' கொஞ்சம் கோபத்துடனே கேட்டாள் சௌம்யா.

''ஆரம்பத்தில் அப்படித்தான் நினைத்தார்... ஆனால் ராஜேந்திரன் மீதிருந்த தப்பெண்ணம் மாறி விட்டது என்று நினைக்கிறேன்... முந்தியெல்லாம் ராஜ் பத்தி கண்டபடி திட்டுவார்... இப்போது அப்படி இல்லைக்கா... இல்லாவிட்டால்... என்னை இங்கு வர விட்டிருப்பாரா... சொல்லுங்கள்... சரிக்கா... நேரமாகி விட்டது. நான் கிளம்புகிறேன்...'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

ரஞ்சிதா சென்ற பின்பும் சௌம்யாவின் மனம் அவள் சொன்ன விஷயங்களில் ஆழ்ந்திருந்தது... தாயின் பண ஆசையும்...

கூடவே... அந்தப் பெண்ணின் துரோகம் தான் நிரஞ்சனை மாற்றியிருக்கிறது... யார் தான் இதைத் தாங்கிக் கொள்ள முடியும்...

சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று நினைத்தவள்.. அடுத்த கணமே திகைத்தாள். தானா... நிரஞ்சனைப் பற்றி நல்லவிதமாய் எண்ணுவது... வினோதம்தான்...

அவன் எப்படிப்பட்டவனாக இருந்தால் எனக்கென்ன என்பதுபோல தோள்களைக் குலுக்கினாள் அவள்.

அவன் நினைவை உதற... தலையை சிலுப்பினாள்... அப்போது என்னவோ முடிந்தது...

ஆனால் இரவு படுக்கும்போது... சொல்லாமல் கொள்ளாமல் நிரஞ்சனின் நினைவு வந்து மறுபடியும் உறவாடியது...

நிரஞ்சனுக்கு என்ன குறை... அவனை ஒதுக்கி விட்டுச் சென்றாளே அந்தப் பெண் காவ்யா... அவனது அழகுக்கும்... கவர்ச்சித் தோற்றத்திற்கும் எந்தப் பெண் மயங்கமாட்டாள்... அவனுடன் வாழப்போகும் வாழ்க்கையை வேண்டாம் என்பாள்... ஆனால் அந்தக் காவ்யா எப்படித் தடுமாறிப் போனாள். தெரியவில்லையே... அப்படி... பணம் மட்டும்தான் பிரதானம் என்று நினைத்து ஓடுவாளா ஒருத்தி... சே...

பணம் மட்டும் தான் வாழ்க்கை என்று நினைத்து விட்டாள் போலும்... காதலை உதறிவிட்டுப் போக... அவள் நிலையில் நானாக இருந்திருந்தால்... பணத்தை விட... காதல் தான் முக்கியம் என்று நினைத்து நிரஞ்சனோடு இணைந்து வாழ...

அப்போதுதான் அவளுக்கு உறைத்தது.

இதென்ன கண்றாவி... இப்படியெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது...

ஆண்களைப் பார்த்தாலே முகம் சுளிக்கும் எனக்கு இந்த மாதிரி எண்ணமா... அடக் கர்மமே...

வலுக்கட்டாயமாய் கண்களை இறுக்க மூடிக் கொண்டு... இழுத்துப் போர்த்துக் கொண்டு தூங்க முயற்சித்தாள் அவள்... உறக்கமும் தயக்கமாக வந்து சேர்ந்தது...



காலண்டரில் தாள்கள் வேகமாய் கிழிக்கப்பட்டன... காலத்தின் விரைவு மின்னோட்டமாய் இருந்தது. சொன்ன மாதிரியே ராஜேந்திரன் மேற்படிப்புக்காக அமெரிக்காவிற்கு புறப்பட்டு விட்டான்... பிள்ளையைப் பிரிய மனம் இல்லையென்றாலும்... தன் பிள்ளையின் சாதனையில் உள்ளம் பூரித்து நின்றாள் பாக்கியம்... அந்தப் பூரிப்பில் ஒரு சுற்றுப் பெருத்து விட்டாள் என்றே சொல்ல வேண்டும்.

புறப்படும் முன் நிரஞ்சனைப் பார்த்துச் சொல்லிக் கொள்ளவும் மறக்கவில்லை.

சந்தோஷமாய் கைக்குலுக்கி வழியனுப்பி வைத்தான் நிரஞ்சன்...

விமான நிலையத்தில்... அவனை அனுப்பி வைக்க தாயும்... தமக்கைகளும்... சந்தானமும் ஆக... முழுக் குடும்பமே வந்திருந்தனர்...

ரஞ்சிதாவும் தான்...

அனைவரிடத்திலும் பிரியாவிடைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டான் ராஜேந்திரன்...

கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள் தாய்... பிள்ளை... தனியாக... தூர தேசம் போகிறானே என்ற வேதனையில் அழுகை வந்தது அவளுக்கு...

தம்பியைப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற வருத்தம் தமக்கைகளுக்கு இருப்பினும்... இனி அவனது எதிர்காலம் ஒளிமயமாய் இருக்கும் என்ற நம்பிக்கை தந்த சந்தோஷத்தில் மன நிறைவுடன் வீடு திரும்பினர் சந்தியாவும்... சௌம்யாவும்.

ரஞ்சிதா தன் காரில் வந்திருந்தாள்...

அவளது முகத்தில் லேசாய் வாட்டம் தெரிந்தாலும்... மனம் கலங்கவில்லை.

காலம் தன் கடமையைச் செய்தது... எதைப் பற்றியும் கவலைப்படாமல்... தன் பணியைத் தொடர்ந்தது... நாட்கள்... மாதங்களாகி... வருடமும் முடிந்தது...

தன் படிப்பை வெற்றிகரமாய் முடித்தாள் ரஞ்சிதா.

அடுத்து என்ன என்ற யோசனை வந்தபோது செளம்யாவே வழிகாட்டினாள்.

செளம்யாவின் அலுவலகத் தோழி ரேவதியின் ஒன்று விட்ட சகோதரி இங்கிலாந்தில் 'ஜுவல்லரி டிஸைன் கோர்ஸை' முடித்துவிட்டு இந்தியா திரும்பி இருக்கிறாள்... அவள் செய்திருந்த ஆபரண டிஸைன்களுக்கு வெகு வரவேற்புள்ளது என்று சொன்னாள் ரேவதி.

ஏதோ ஒரு 'மாலில்' தான் செய்திருந்த நகைகளை 'டிஸ்பிளே' செய்து வைத்திருக்கிறாள்... போய் பார்க்கலாமே என்று சொல்லி செளம்யாவையும் அழைத்துச் சென்றாள்.

கண்கவரும் அந்த ஆபரண வகைகளை... புதுப்புது டிஸைன்களில் ஒளிவிடும் நகைகளைப் பார்த்து பிரமித்தாள் செளம்யா...

என்ன அழகு! என்ன ஜொலிப்பு!

அவற்றைப் பார்வையிட்ட கூட்டம் முத்து... பவளம்... ரூபி... ஜேட் என்று அள்ளிக் கொண்டு போனது.

அதை ரஞ்சிதாவிடம் சொன்னாள் செளம்யா... அவளும் வெகு ஆர்வத்துடன் போய்ப் பார்த்தாள். நானும் இதை ஏன் செய்யக் கூடாது. எனக்குள்ளும் கற்பனைத்



திறன் இருக்கிறதே... யெஸ்,... என்னாலும் இது முடியும்... இந்தக் 'கோர்ஸில்' சேர்ந்து... இதே மாதிரி என் கைத்திறனை வெளிப்படுத்தணும்... என்னாலும் சாத்தியம்தான் என் பதை உணர்த்த வேண்டும்.. இதேபோல...

அந்த வினாடியிலேயே மனம் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கியது...

தன் விருப்பத்தை தன் அண்ணனுக்குத் தெரிவித்தாள்.

அந்த அன்பு அண்ணனும் மறக்கவில்லை.

அப்புறம் என்ன...

அந்தக் கலையை கற்க ரஞ்சிதா இங்கிலாந்துக்குப் பறந்தாள்.




இப்போதுதான் ரஞ்சிதா புறப்பட்டுப் போனதுபோல இருந்தது. அதற்குள் ஒரு வருடம் ஓடி விட்டது.

ராஜேந்திரனிடமிருந்து அவ்வப்போது செய்தி வரும். படிப்பு முடியும் நிலையில் இருப்பதாகவும்... கல்வியைத் தொடர்ந்து மேலும் ஒரு வருடம் பயிற்சியைத் தொடரும் எண்ணத்தில் இருப்பதாகவும் சொன்னான்.

தவிர... அவ்வப்போது அங்கிருந்து ஏதாவது வாங்கி அனுப்புவான்... அவனுக்குத் தெரிந்தவர்களின் மூல

மாய்... கைக்கடிகாரம்... வாசனைத் திரவியம்... குழந்தைகளுக்கு சாக்லேட்... சந்தானத்திற்கு ஷேவிங் க்ரீம்... ஆஃப்டர் ஷேவ் லோஷன்... சௌம்யாவிற்கு 'மேக் அப்' செட் என்று வகை வகையாய்... ரகம் ரகமாய்...

அப்படியே... ஒரு தடவை நிரஞ்சனுக்கு கொடுக்கும்படி உயர்தர சென்ட் பாட்டிலை அனுப்பியிருந்தான் ராஜேந்திரன்... அதை அவருக்கு கொடுத்து விடும்படி சொன்னான்...

நிரஞ்சனைப் பார்த்து எத்தனையோ மாதங்கள்... ஏன் கிட்டத்தட்ட வருடமே ஆகிவிட்டது...

ரஞ்சிதா புறப்பட்டுப் போனபோது... விமான நிலையத்தில் சந்தித்ததுதான் கடைசி...

அதற்குப் பிறகு சந்திக்கும் சந்தர்ப்பம் வரவேயில்லை.

நடுவில் ஒரு முறை அவனிடமிருந்து போன் மட்டும் வந்தது.

ரஞ்சிதா அவளைப் பற்றி விசாரித்ததாய் சொன்னான். அவ்வளவுடன் சரி.

இப்போது... இந்த அன்பளிப்பை அவனிடம் சேர்க்க வேண்டும்... அதற்காக அவனைச் சந்திக்க வேண்டும்... யோசித்தாள்.

ஏனோ... முன்னைப் போல... அவனைச் சந்திக்க வேண்டுமே என்ற எரிச்சலோ... முகச் சுளிப்போ இப்போது இல்லை...

ஆனால் மனசுக்குள் லேசாய் படபடப்பு... புறாவின் உடம்பில் தெரியும் அதிர்வுகளாய்...



ஒருவேளை... வெகு நாட்கள் கழித்து சந்திப்பதாலோ என்னவோ...

ஞாயிற்றுக்கிழமையன்று... ஷாம்ப்பு போட்டு தலை குளித்துவிட்டு... கூந்தலை உலர்த்தி... நேர்த்தியாய் சீவி... எடுத்து 'கிளிப்'பில் அடக்கினாள்.

நேவி 'ப்ளூ' நிற சுரிதாரை உடுத்தினாள்.

லேசாய் முகத்திற்கு ஒப்பனை செய்து கொண்டு... புறப்பட்டாள் சௌம்யா.

''சாப்பிடலையாடி சௌமி... ஒரு வாய் சாப்பிட்டு விட்டுக் கிளம்பேன்'' என்றாள் பாக்கியம்...

''வந்து சாப்பிடுகிறேன்ம்மா... பசியில்லை...'' என்றாள் மகள்.

''இப்பப் பசிக்காது... திடீர்னு பசியெடுக்கும்... வேணாம் என்று சொல்லாதே சௌம்யா...''

''பசித்தால் தானே சாப்பிட முடியும்மா... கவலைப் படாதேம்மா... வேணும்னா இளநீர்... ஜூஸ்னு ஏதாவது சாப்பிடுகிறேன்... போதுமா...''

''என்னவோ செய்... வெயில் கொளுத்துகிறது. குடையை எடுத்துக் கொள்... என்ன...''

தாயின் யோசனைப்படி தன் குடையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

ஞாயிற்றுக்கிழமை என்பதால்... அவன் வீட்டில் தான் இருப்பான்...

நேரே அவனது வீட்டிற்கே செல்ல நினைத்தாள். அம்மா சொன்னது போல... வெயில் சுட்டெரித்தது. வியர்

வெயில் பவுடர் பூச்செல்லாம் கரைந்து விடும்போல தோன்ற... குடையை விரித்து பிடித்துக் கொண்டாள்.

நல்லவேளை... அம்மாவின் வார்த்தைகளை மதித்து இந்தக் குடையைக் கொண்டு வந்தோமே என்று சந்தோஷப்பட்டாள் ஒரு வழியாய் பஸ்ஸைப் பிடித்து அவன் வீட்டை அடைந்தபோது நடுப்பகல் ஆகி விட்டது...

வயிற்றில் அத்தனை நேரம் அடங்கிக் கிடந்த பசி... தலை தூக்கிப் பார்த்தது...

வெயிலின் தாக்கமும் சேர்ந்து கொண்டதோ என்னவோ களைத்துப் போனாள் அவள்...

அவள் எதிர்பார்த்ததுக்கு மாறாய் வீட்டில் நிரஞ்சன் இல்லை...

''அய்யா... பத்துமணிக்கு எங்கேயோ போனாரும்மா.. வர்ற நேரம்தான்'' என்றான் பணியாள்...

இருக்கலாமா.. போய்விடலாமா என்று தயங்கிக் கொண்டிருந்தவள்... இருந்து பார்த்துவிட்டுப் போய் விடலாமே... அனுப்பி வைத்திருக்கும் அன்பளிப்பை உடனுக்குடன் சேர்த்து விடுவதுதான் நல்லது என்று அமர்ந்து கொண்டாள்.

''வீட்டில் பெரியம்மா... அய்யாவோட அம்மா இல்லையா... அவர் கண்ணில் படவேயில்லையே...'' என்று விசாரித்தாள்.

''அவங்க இங்கே இல்லை... கொஞ்ச நாளா அவங்க உடம்புக்கு முடியல்லே. மூட்டு வலி... இடுப்பு வலின்னு அவஸ்தைப் பட்றாங்க... கோட்டக்கல்லில் ஆயுர்வேத



சிகிச்சை எடுத்துக் கொண்டு இருக்காங்க... பெரியம்மாவும் இல்லை... சின்னம்மாவும் இல்லாமல் வீடு 'வெறிச்'சோடிக் கிடக்கு... அய்யாவாவது கல்யாணம் கட்டிக்கிட்டா பரவாயில்லை. அவருக்கு அந்த எண்ணமே வரவில்லையே...'' பணியாட்களின் சுபாவம்... பேச்சுக் கொடுத்தால் வீட்டு விஷயங்களை அம்பலப் படுத்துவார்கள்.

ஊகூம்... அதற்கு இடம் கொடுக்கக் கூடாது... அந்த நினைப்பில் பேச்சை மாற்றினாள் சௌம்யா.

''குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டுமே... வெயிலில் வந்தது... தொண்டை வரள்கிறது...'' என்றாள்.

''இதோ... கொண்டு வர்ரேன்ம்மா... அப்பா! என்னமா வெயில் கொளுத்துகிறது... நெருப்பா இல்லே தகிக்கிறது'' என்று சொல்லிக் கொண்டே சென்றான் அந்த வேலையாள்.

அவன் கொண்டு வந்த ஐஸ் வாட்டரை மடமடவென்று குடித்தாள் சௌம்யா.

அம்மாடி... உடம்பு குளிர்ந்தது போல் உணர்ந்தாள்.

அவள் வந்து இருபது நிமிடங்கள் கழித்து நிரஞ்சன் வந்தான்.

அவளைப் பார்த்ததும் புருவங்களை உயர்த்தினான்... அவளது வருகை அவனுக்கு வியப்பைத் தந்தது போலும்...

''வந்து ரொம்ப நேரமாகி விட்டதோ... போன் செய்திருக்கலாமே... சௌம்யா... நான் வீட்டில் இருந்திருப்பேனே...'' என்று அவன் சொன்னதும்...

''இல்லை... கொஞ்ச நேரம்தான் காத்திருந்தது. இன்று 'சன்டே' என்பதால் வீட்டில் இருப்பீர்கள் என்று நினைத்து வந்தேன்... ரஞ்சிதா எப்படி இருக்கிறாள்... தெரிந்ததா...'' என்று கேட்டாள்.

''அங்கே குதூகலமாய் இருக்கிறாள்... விரும்பிச் சேர்ந்த கல்வி என்பதால் ரொம்பவும் இன்ட்ரஸ்டாக இருக்கிற தாம்... 'ஜுவல்லரி' விஷயமாயிற்றே... கேட்க வேண் டுமா... தங்கம்... பிளாட்டினம்... வைரம்... ஜேட்... என்று ஒவ்வொன்றைப் பற்றியும் மணிக் கணக்கில் பேசுகிறாள். கேட்டு... கேட்டு என் காது புளித்து விட்டது... இப்போ தெல்லாம் நகைகளைப் பார்த்தாலே 'போர்' அடிக்கிறது என்றால் பாரேன்'' என்று பாதி வேடிக்கையாய் பேசினான் நிரஞ்சன்.

''தங்கை வந்ததும் தங்க மாளிகை... வைர மாளிகை என்று வைத்துத் தருவீர்கள் என்று எதிர்பார்த்தால்... போரடிக்கிறது என்கிறீர்களே... பாவம் ரஞ்சிதா... இதைக் கேட்டால் வாடி விடுவாள்...'' என்று பதிலுக்கு கேலியா கவே சொன்னாள் அவள்.

''அவள் என்னிடம் இருந்தால்தானே அந்தப் பேச்சு... அந்த விஷயமெல்லாம் அவளது கணவன் பார்த்துப் பான்... அதற்கான பணத்தை வேண்டுமானாலும் நான் தந்து விடுகிறேன்... அலைய வேண்டியது அவர்களின் பொறுப்பு...'' என்றான் சிரித்துக் கொண்டே.

கணவனா... யாரைக் குறிப்பிடுகிறான்... ராஜேந் திரனையா... அதை வெளிப்படையாய் சொல்லாமல்... மறைக்கிறானே... அவன் மனதில் என்ன இருக்கிறது என்பதைக் காட்டாமல் பேசுகிறானே... குழப்பத்துடன் பார்த்தாள் சௌம்யா.



''சரி... என்ன சாப்பிடுகிறாய்... இந்த வெயிலுக்கு கூலாய் ஜூஸ் தரச் சொல்லட்டுமா... இல்லை மோர் குடிக்கிறாயா...'' என்று உபசரிப்பாய் கேட்டான் அவன்.

''மோர் போதும்... ஆங்... வந்த விஷயத்தை மறந்து போனேனே.. ராஜேந்திரன் உங்களுக்காக ஒரு சின்ன 'கிஃப்ட்' அனுப்பியிருக்கிறான்... அதைக் கொண்டு வந்து கொடுக்கத்தான் நான் வந்தது...'' என்று சொல்லி... கைப்பைக்குள் இருந்த செண்ட் பாட்டிலை எடுத்து நீட்டினாள்.

அதை வாங்கிப் பார்த்துவிட்டு... ''இது சின்ன கிஃப்ட்டா... ஊகூம்... காஸ்ட்லி கிஃப்ட்... உயர் ரக செண்ட்... ராஜேந்திரனுக்கு தாங்க்ஸ் சொல்லணும்... எப்போது அவன் வருகிறானாம்... தெரிந்ததா'' என்று வினவினான் அவன்.

''ஊகூம்... சரியாகத் தெரியாது... ஒரு வேளை ரஞ்சி தாவுக்குத் தெரிந்திருக்கலாம். அவள் ஏதாவது சொன் னாளா நிரஞ்சன்... இருவரும் பேசிக் கொண்டிருக்கலாம் இல்லையா...''

இருவருக்கும் இடையே 'கான்டாக்ட்' இருக்கிறதா என்று அறிந்துகொள்ளும் விதத்தில் பேசினாள் சௌம்யா...

''இல்லையே... அவ்வப்போது ராஜேந்திரனிடம் பேசுகிறேன். ஏதாவது சந்தேகம் வந்தால் அவனிடத்தில் 'சஜஷன்' கேட்டுக் கொள்கிறேன் அண்ணா... எங்கே போனாலும் எப்படிச் செல்லலாம்... போனால் நல்லதா... வேண்டாமா என்று கேட்பது வழக்கம் என்றாள்... ஆனால். வரும் விஷயம் பற்றி எதுவும் குறிப்பிட

வில்லை... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்... ராஜேந்திரன் வருவதற்கு முன்... என் தங்கை வந்து விடுவாள் போல... பார்க்கலாம் சரி...

வீட்டில் அனைவரும் எப்படி இருக்கிறார்கள். முக்கியமாய் உன் அக்காவும்... அவரது கணவனும்... இப்போது சந்தோஷமாக இருக்கிறார்கள்தானே... என்ன அப்படிப் பார்க்கிறாய் சௌம்யா... இந்த விஷயம் எனக்கு எப்படித் தெரியும் என்றா... ராஜேந்திரன் சொல்லி ரஞ்சிதாவுக்குத் தெரியும். ரஞ்சிதா உங்களைப் பற்றியெல்லாம் சொல்லி இருக்கிறாள்... உன் அம்மா வெகு பொறுமைசாலியாம்... உன் மாமாவின் கோபத்தையெல்லாம் தாங்கிக் கொண்டு... சகிப்புடன் வாழ்ந்தாளாமே... பாரண்ணா... பெண்களை மோசம் என்றாயே... உலகில் நல்ல பெண் மணிகளும் இருக்கிறார்கள் என்பதற்கு ராஜேந்திரனின் அக்காவே சாட்சி என்றாள் தெரியுமா... உன்னைப் பற்றி கூட என்னிடம் சொன்னாளே...'' குறும்பாய் சிரித்து அவன் சொல்ல... அவளது உள்ளத்தில் படபடப்பு...

என்ன சொல்லியிருப்பாள்... நல்ல விதமாகவா... இல்லை...

''அடடா... அதற்குள் கலக்கமா... என்ன சொன்னாள் என்று சொல்லட்டுமா... சௌம்யா அக்காவோட மனம் தங்கமானது அண்ணா... ரொம்ப 'ஸ்ட்ரெயிட் பார்வர்ட்' மனதுக்குள் ஒன்று... வெளியில் ஒன்று பேச்செல்லாம் இல்லை... நீங்கதான் அவங்களை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை... என்ன... கொஞ்சம் கோபம் வரும்... அவ்வளவுதான் என்றாள். அதை நான் ஒப்புக் கொள்ள வில்லை தெரியுமா...''



''எதை... நான் நல்லவள்... உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதவள் என்பதையா...''

''பார்த்தாயா... மறுபடியும் தவறான ஊகம்... நான் குறிப்பிட்டது அது இல்லை... கொஞ்சம் கோபம் இல்லை. நிறையவே வரும் என்றேன்... அந்தக் கோபத்தில் என்னை நரகத்திற்கே அனுப்பி வைக்க விரும்பினாள் என்றதும்... அவள் விழுந்து சிரித்தாள். உன்னையும் ஒருத்தி அப்படி சொன்னாள் என்றால்... சரியான ஜோடி தான் அண்ணா... அடடா... ஜாடிக்கேத்த மூடி மாதிரி இருக்கேன்னு கிண்டல் செய்தாள்...''

அவனது வார்த்தைகளைக் கேட்டு தலை கிறுகிறுத்தது போல இருந்தது.

இன்னும் இங்கு இருந்தால் எதில் முடியுமோ... கேட்டுக் கொண்டிருந்தால் தலை தான் சுற்றும்...

எழுந்தவளுக்கு உண்மையில் தலை சுற்றி வந்தது.

பசி மயக்கத்தினாலா... வெயிலில் அலைந்து வந்த காரணமா என்று தெரியவில்லை...

அப்படியும் அதை, வெளிக் காட்டிக் கொள்ளாமல் ''வருகிறேன்...''

ஒரு எட்டு எடுத்து வைத்தவள்... கண்களை இருட்டிக் கொண்டு வர... அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன்... 'சட்' டென்று தாவி... அவளை கீழே விழுந்து விடாமல் தாங்கிக் கொண்டான்...

அதற்குப் பிறகு கண்களில் இருட்டடிப்பு ஏற்பட... அவள் நினைவிழந்து போனாள்.

கண் விழித்துப் பார்க்கையில் புதியதொரு சூழ்நிலையில் தான் இருப்பதை உணர்ந்தாள்.

பெரிய படுக்கை அறையில்... குளுகுளுவென்று ஏ.ஸி.யின் குளிர்ச்சியில்... மெத்தென்று படுக்கையில் தான் படுத்திருப்பதைக் கண்டு திகைப்பு...

என்னவாயிற்று எனக்கு... எப்படி இங்கு வந்தேன்... யார் இங்கே படுக்க வைத்தது... நிரஞ்சனா...

இப்போது மணி என்ன... எத்தனை மணி நேரம் இங்கு படுத்திருக்கிறேன்...

பதட்டத்துடன் எழுந்து அமர்ந்தாள்...

உடனே வீட்டுக்கு போக வேண்டும்... நாழியாகி விட்டது என்ற கலவரம் வேறு.

அவள் படுக்கையிலிருந்து இறங்க முயலும் போது...

''நோ... நோ... எழுந்திருக்க வேண்டாம் செளம்யா... இன்னும் கொஞ்ச நேரம் 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்'' என்றான் நிரஞ்சன்.... அப்போதுதான் உள்ளே வந்தவனாய்...

''நான் வீட்டுக்குப் போயாகணும்... இப்போது மணி என்ன நிரஞ்சன்...'' என்று கேட்டாள் அவள்.

''மணி... இரண்டு நாற்பது... காலையில் ஏதாவது சாப்பிட்டாயா செளம்யா...'' என்று அக்கறையாய் விசாரித்தான். இல்லை என்பது போல் தலையசைத்தாள் அவள்.

''நினைத்தேன்... வெறும் வயிறு... வெயிலின் கொடுமை... கூட அலைச்சல்... எல்லாம் சேர்ந்து மயங்கி விழ வைத்து விட்டது என்று நினைக்கிறேன்.''



''சாரி... உங்களுக்குத் தொந்திரவு கொடுத்து விட்டேன். இந்த மாதிரி நடந்ததே இல்லை... என்னவோ இன்றைக்கு இப்படி ஆகி விட்டது... நினைக்கையில் எனக்குக் கூச்சமாக இருக்கிறது...''

''முதலில் வயிற்றுக்குள் ஏதாவது போட்டால் சரியாகி விடும்... 'பிரெட் சான்ட்விச்' பண்ணச் சொல்லியிருக்கேன், முதலில் அதைச் சாப்பிட்டு விட்டு... சூடா காபியும் குடி... கொஞ்சம் தெம்பு வரும்...''

அவன் சொல்லும்போதே பணியாள் தட்டில் 'சாண்ட்விச்'சுடன் 'சாஸை'யும் வைத்துக் கொண்டு வந்து தந்தான்.

சங்கோஜத்துடன் அதை வாங்கிச் சாப்பிட்டாள் செளம்யா...

காலி வயிற்றுக்குள் அது இறங்குவது நன்றாக உணர முடிந்தது. பாவம் வயிறு... அதுவும் எத்தனை நேரம் தான் பொறுக்கும்... அதான் அய்யோ ஏதாவது கொடேன் என்கிற... கடபுட சத்தத்துடன்...

வயிற்றுக்குள் கொஞ்சம் போனதுமே உடம்புக்குள் சக்தி புகுந்து விட்ட மாதிரி பிரமை...

''நேரமாச்சு... வீட்டுக்குப் போக வேண்டும்... நிரஞ்சன்..'' என்று அவள் சொன்னதும்...

''பஸ்ஸில் போய் கஷ்டப்பட வேண்டாம் செளம்யா... நானே உன்னை டிராப் பண்ணுகிறேன்... ஓகே..'' என்று கரிசனத்துடன் சொன்னான் நிரஞ்சன்.

''ப்ளீஸ்... வேண்டாமே... எனக்கு எதுவும் இல்லை. ஐ அம் ஆல் ரைட் நிரஞ்சன்...''

''ஆர் யூ ஷ்யூர்... எனக்கொன்றும் சிரமம் இல்லை சௌம்யா... வருகிறேன்...''

''நோ... தாங்க்ஸ்... நிரஞ்சன்... வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள் அவள்.

அதற்குப் பின் அவன் வற்புறுத்தவும் இல்லை.

பஸ்ஸில்... சன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்த சௌம்யாவின் மனதில் நினைவலைகள்...

கடந்ததையும்... நடந்ததையும் ஒப்பிட்டுப் பார்த்தது மனம். காலத்தின் ஓட்டத்தில் எல்லாமே மாறி விட்டது... முதல் சந்திப்பில் பார்த்த நிரஞ்சனே வேறு... இப்போது பார்க்கும் நிரஞ்சனே வேறு.

அந்தச் சிடுசிடுப்பும்... கடுவன் பூனைத் தனமும் மாயமாகி இனிய சுபாவத்துடன் பழகுகிறாரே... எப்படி இருந்தவர்... என்னமாய் மாறிவிட்டார்...

பழைய நிரஞ்சனாக இருந்தால்... வாய்க்கு வந்த மாதிரி சொல்லியிருப்பார்...

உன் தம்பி என் தங்கையை மயக்கியது போல... நீயும் மயங்கி விழுகிற மாதிரி நாடகம் போட்டு வசப்படுத்தும் எண்ணமாக்கும்... என் காதில் பூ சுத்த முடியாது... தெரிந்து கொள்... என்றெல்லாம் டயலாக் அடித்திருப்பார்.

இப்போது அப்படியில்லையே...

என்னைத் தாங்கிச் சென்று... படுக்கையில் படுக்க வைத்து... அக்கறையாய் கவனித்துக் கொண்டு... வெகு கரிசனத்துடன் எனக்கு உணவை ஊட்டாத குறையாய் கொடுத்து... தன் இனிய சுபாவத்தைக் காட்டியிருக்கிறாரே... அது மட்டுமா... கண்ணியமும் தான்... கிரேட்!



அவர் மீதிருந்த தப்பெண்ணம் எல்லாம் போய்... அவர் மீது மரியாதைக் கூடிவிட்டதை நன்றாக உணர்ந்தாள் சௌம்யா...

அவ்வளவு ஏன்... ஆண்கள் எல்லோருமே மோசம் என்ற நினைப்பும் கூட மாயமாகி விட்டதே...

ஆண்கள் நல்லவர்கள்தான்... சூழ்நிலையின் காரணத்தால் சுபாவம் மாறி நடக்கிறதும்... மதிகெட்டுப் போவதும்...

அதற்கு இன்னொரு உதாரணம் சந்தானம் மாமா... அவரும் 'ஜென்டில்மேனா'கி விட்டார் என்பதை மறுக்க முடியாதுதான். அக்காவின் மீது உயிரையே வைத்திருக்கிறார்... அது போதும்...

அம்மாவின் கஷ்டமெல்லாம் தீர்ந்து விட்டது... அந்த மட்டில் நிம்மதி... பிள்ளைக்கு நல்ல எதிர்காலம்... உயர்ந்த நிலைக்கு வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் அம்மாவின் முகத்தில் தெரிந்த வேதனை ரேகைகள் மறைந்து... தெளிவு வந்திருப்பதையும் பார்க்க முடிந்தது... துன்பங்களும் வேதனைகளும் எப்போதும் நிரந்தரமில்லை. இருளுக்குப் பின் ஒளி வரும் என்பது சத்தியமான வாக்கு என்பதை நன்றாக உணர்ந்தாள் அவள்.




ரஞ்சிதா வருகிறாள் என்ற தகவல் சௌம்யாவிற்கு சந்தோஷத்தைத் தந்தது...

ஒரு பெண் வெற்றிகரமாய் தன் இலட்சியத்தை... தன் இலட்சியக் கனவை முடித்துக் கொண்டு வருவது சாதாரண விஷயமில்லையே...

அதுவும் தன்னந்தனியாய் வெளிநாட்டில் இருந்து... தன் படிப்பை முடித்துக் கொண்டு வந்திருப்பது பாராட்டக் கூடிய விஷயம்தான்...

ரஞ்சிதா வந்ததும் சௌம்யாவிற்கு போன் செய்து பேசினாள்...

அவளது குரலில் சந்தோஷத்தின் துள்ளல் இருந்தது... நினைத்தது நிறைவேறிய மகிழ்ச்சி போலும்.

தன் அண்ணன் தனக்காக ஒரு பார்ட்டி ஏற்பாடு பண்ணியிருப்தாகவும்... கண்டிப்பாய் வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தாள்.

"நானா... நான் எதற்கு ரஞ்சிதா... வேண்டாமே... நீ அழைத்ததே எனக்கு சந்தோஷம்தான்ம்மா..." என்று நாசூக்காய் மறுத்தாள் சௌம்யா.

"இதென்ன சௌம்யாக்கா... உங்களால் தானே நான் இந்த 'கோர்ஸை' முடிக்க முடிந்தது... எனக்கு வழிகாட்டிய உங்களை விட்டுட்டு பார்ட்டியா... நெவர்... நீங்க வந்தே ஆக வேண்டும். ஓ... நிரஞ்சன் அண்ணா அழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களாக்கும்... அவரிடம் சொல்லி அழைக்க வைக்கட்டுமா..."

"சேச்சே... அதெல்லாம் இல்லை... யார் யாரோ வந்திருப்பார்கள்... அங்கே நான் எதற்கு... அதான்..."

"அய்யோ... அக்கா... உங்க கிட்ட சொல்ல நிறைய விஷயம் இருக்கிறது... அது மட்டும் இல்லக்கா. உங்களுக்காக ஒரு சர்ப்ரைஸ் கூட கைகட்டி காத்திருக்கிறது... வாங்க சௌம்யாக்கா... ப்ளீஸ்... எனக்காக" என்று அவள் வற்புறுத்த... கடைசியில் சம்மதித்தாள்.



என்று... எப்போது... எங்கே என்ற விஷயத்தையும் கேட்டுக் கொண்டாள்...

மனம் ஆர்வத்துடன் பரபரத்தது... அவள் சொன்ன சர்ப்ரைஸ் எதுவாக இருக்கும்... ஏதாவது பொருளாக இருக்குமோ... ஒருவேளை... விருந்துடன்... அவளது கைத்திறமையை காட்டும் 'டிஸ்ப்ளே'யோ... அட... என்னவென்று தெரிந்து கொள்ள இன்னும் இரண்டு நாட்கள் காத்திருக்க வேண்டுமே.... உள்ளுக்குள் தவித்தாள் சௌம்யா.

ஒருவேளை... இந்த 'சர்ப்பரைஸ்' ராஜேந்திரன் சம்பந்தப்பட்டதாகக் கூட இருக்கலாம். இந்த விருந்துக்கு போனால் தெரிந்துவிடுமே... போய்த்தான் ஆக வேண்டும் என்று தீர்மானித்தாள்...

விருந்து நாளும் வந்தது...

வெகு கருத்துடன் தன்னை அலங்கரித்துக் கொண்டாள் சௌம்யா...

ஷாம்பு குளியல் கண்ட நீண்ட கேசம்... கரும்பட்டாய் பளபளக்க... அதை அழகாக சீவி... 'கிளிப்' போட்டிருந்தாள்.

முகத்தில் அளவான ஒப்பனை... கூடுதலாயும் இல்லாமல்... குறைவும் இல்லாமல்... கச்சிதமான மேக்கப்...

அழகான சில்க் காட்டன் புடவை அவளுக்கு அம்சமாக இருந்தது... கரும்பச்சை நிறத்தில்... அவள் பசுங்கொடியாய் தெரிந்தாள்.

நடைப் பயிற்சியும் உணவுக் கட்டுப்பாடும் அவள் மேனியை 'சிக்'கென வைத்திருந்தது... வயதை குறைத்தும் காட்டியது... இருபத்தேழு வயது என்றால் யாரும் நம்ப மாட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

ஒருவேளை... திருமணமாகி... குழந்தை பெற்றிருந்தால்... உடம்பு பெருத்து வயதைக் கூட்டிக் காட்டிருக்குமோ என்னவோ... யாருக்குத் தெரியும்...

தன் தோற்றத்தை கண்ணாடியில் பார்த்து ரசித்தவள்... மேனியை திருப்பி அழகு பார்த்துக் கொண்டாள்.

ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு பார்ட்டி ஹால் நோக்கி சென்றாள் அவள்.

விருந்துக்கு வந்திருந்த கும்பலைப் பார்த்துவிட்டு மலைத்துப் போனாள் சௌம்யா... இத்தனை பேரை அழைத்திருக்கிறாரா நிரஞ்சன்... அனைவரையும் பார்த்தால் அம்பானி... பிர்லா லெவல் மாதிரி தெரிகிறதே...

இந்த இடத்திற்கு நான் பொருத்தமானவளாய் தெரியவில்லையே... பேசாமல் திரும்பி விடலாமா என்று தோன்ற... நீரிலிருந்து தவறி துள்ளி வெளியே விழுந்த மீனைப் போல இருந்தது அவளது நிலைமை...

தூரத்திலிருந்து அவளைப் பார்த்துவிட்டு ஓடி வந்தாள் ரஞ்சிதா... 'சௌம்யா அக்கா... வாங்க உள்ளே...'' என்று குதூகலத்துடன் கூவியவாறு...

அவளைப் பார்த்து... அவளது தோற்றத்தைப் பார்த்து அயர்ந்து போனாள் சௌம்யா...

ரஞ்சிதாவா! இந்த அலட்ரா மாடர்ன் கேர்ள் ரஞ்சிதா தானா...



எளிமையும்... வெகுளியுமான ரஞ்சிதாவா இவள்...

கண்களில் வியப்பும் திகைப்பும் தெரிய அவளையே பார்த்தாள்.

டைட் ஜீன்ஸ்... இடைப் பகுதியை மறைக்காத டாப்... விரிந்து புரளும் சாயம் பூசிய கூந்தல்... உதடுகளில் அழுத்தமான கலரில் 'லிப்ஸ்டிக்' காதில் புதுவிதமான நீண்ட தொங்கட்டான்... கழுத்தில் சாவி கொத்தை அடுக்கினாற் போல ஒரு சங்கிலி... கன்னங்களில் ஆப்பிள் சிவப்பு! மொத்தத்தில் இவள் ரஞ்சிதா என்று சத்தியம் செய்து சொல்ல வேண்டும்... அப்படி ஒரு மாற்றம்!

''என்னக்கா... அப்படிப் பார்க்கிறீர்கள்... என்னடா இப்படி ஒரேடியா மாறிட்டேன்னா... லண்டனில் இந்த மாதிரி இருந்து பழக்கமாயிடுச்சா... 'சட்'டென்று மாற்றிக் கொள்ள முடியவில்லை... வெளித்தோற்றம் தான் இப்படி... நான் மனதளவில் இன்னும் அதே ரஞ்சிதா தான்... என்ன கூச்ச சுபாவத்தை கொஞ்சம் உதறி விட்டு... இப்போ எல்லோரிடத்திலும் 'ஜோவியலா' பேசுகிறேன். இதுவும் லண்டன் வாழ்க்கை தந்த உபயம்... சரி... வாங்க உள்ளே... எல்லோரையும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்...'' என்று அவள் இழுத்துக் கொண்டு செல்ல...

''சாரி... ரஞ்சிதா... நான் ஒண்ணும் பெரிய மனுஷி இல்லை. எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி வைக்க... இங்கே இருப்பவர்கள் யாரையும் எனக்குத் தெரியவும் தெரியாது... வேண்டாமே...'' என்று சௌம்யா சொல்ல...

பதிலுக்கு 'களுக்' என்று சிரித்தாள் ரஞ்சிதா.

''நீங்கள் மாறவே இல்லை... சௌம்யாக்கா... தோற்றத்தில் மட்டுமில்லை... சுபாவத்திலும்தான்... தயக்கம் இல்லாமல் எல்லோர்கிட்டேயும் வந்து பேசினால் என்னக்கா... நத்தையா சுருண்டு கிடந்த காலம் எல்லாம் போச்சுக்கா... நீங்க லண்டன் வந்து பார்த்தால் தெரியும்... ஆணும் பெண்ணும் சரிசமமாய் பேசிப் பழகுவதை... நாம் தாம் இப்படி ஒதுங்கிப் போகிறோம். போகட்டும்... நிரஞ்சன் அண்ணாவிடமாவது பேசுவீர்களா.... அதுவும் இல்லையா... ஓ! மறந்து விட்டேன்... அவரிடம் சரிக்கு சரியாய் வாயாடியவராயிற்றே... அதோ... அண்ணாவும் வருகிறார்... அண்ணா... யார் வந்திருக்கிறார்கள் பாருங்களேன்'' என்றாள் ரஞ்சிதா.

''ஹாய்... மறக்காமல் இந்த விருந்துக்கு வந்தது சந்தோஷம்... வெல்கம் டூ திஸ் பார்ட்டி... சௌம்யா...'' ரஞ்சி... சௌம்யாவிற்கு அருந்துவதற்கு ஏதாவது தந்தாயா என்ன...'' என்று சொல்லிக் கொண்டே வந்து நின்றவனை ஏறிட்டாள் சௌம்யா...

கருநீல 'சூட்' உடையில் கனகம்பீரமாய் தெரிந்தான் அவன்... அவளையும் அறியாமல் இதயம் வெகு வேகமாய்த் துடித்தது... ஏதோ ஒரு 'வைப்ரேஷன்...' இனம் புரியாத மின் அதிர்வு தன்னுள் படர்வதை அவளால் உணர முடிந்தது... அது ஏன் என்றும் தெரியவில்லை... அது போகட்டும்... வாய் வார்த்தைகளும் வராமல்... பேசாமடந்தையாய் தான் நிற்பதும் அதிசயம் தான்...

என்னுள் ஏன் இந்த மாற்றம்... புரியாமல் விழித்தாள் தனக்குள் மட்டும் தானா அப்படி... அவனிடத்திலும் மாற்றம் வரவில்லையா...



வந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

பேச்சில் குழைவு... கண்களில் 'பளிச்' என்ற வெளிச்சம். உதடுகளில் புன்னகை... வார்த்தைகளில் இதம்... எல்லாவற்றையும் விட வரவேற்கும் மனம்... இதெல்லாம் நல்ல மாற்றம் தானே... அவளுக்கு அது விந்தையாக இருந்தது. அதெப்படி... காலம் மனங்களைக் கனிய வைத்து விடுகிறதா... வயதின் ஏற்றம் முதிர்ச்சியை தருகிறதா... ஒருவரையொருவர் புரிந்து கொள்வதால் மனக்கசப்பு மாறி விடுகிறதா... இருக்கும்...

''என்ன ரஞ்சிதா... 'படபட'வென்று கடுகாய் பொரிந்து தள்ளும் உன் சிநேகிதி... இன்றைக்கு 'கப்சிப்' என்று இருக்கிறாளே... மௌன விரதமா என்ன... அடடா... அருமையான உணவு பதார்த்தங்கள் தயாரா இருக்கிறதே... அதை சாப்பிடவாவது வாய் திறப்பாளா உன் தோழி... கேள்...'' என்று அவன் பரிகாசத்துடன் சொல்ல...

பதிலுக்கு புன்னகைத்தாள் சௌம்யா...

''அம்மாடி! இப்போது தான் நிம்மதி... வந்ததிலிருந்து சலனமில்லாமல் நின்றதைப் பார்த்து... சிலையாகி விட்டாயோ என்று பயந்தேன்... நல்லவேளை... கொஞ்சம் சிரித்தாயே... ஆங்.. ரஞ்சி... கிஷோர் பேமிலி அங்கே உனக்காக காத்திருக்கிறார்கள்... போய் பார்... நான் சௌம்யாவை கவனித்துக் கொள்கிறேன்...''

அவனது வார்த்தைகளில் குளிர்ந்து போய் நின்றிருந்தாள் சௌம்யா... ஆரம்பத்தில் தன்னை ஒரு பொருட்டாய் மதிக்காதவன்... அவமானப்படுத்திப் பேசியவன்... ஏதோ அற்பப் புழு எனப் பார்த்தவன்... இன்று தன்னிடம் இனிமையாய் பேசுவது கண்டு... இமயச் சாரலில் உலவுவது போல உணர்ந்தாள்...

''அண்ணா... இன்றைய 'சர்ப்ரைஸ்' எனனன்னு இன்னும் சௌம்யா அக்காவிடம் சொல்லவில்லை... சொல்லி விடட்டுமா...'' என்று வினவிய தங்கையிடம்...

''பொறுமை ரஞ்சி... சௌம்யா எங்கே போய்விடப் போகிறாள்... நாம் அழைத்ததே அதை 'அநௌன்ஸ்' பண்ணத்தான்... அதற்குள் விஷயத்தைப் போட்டு உடைத்துவிட வேண்டுமா என்ன... போய் அவர்களை கவனி... சியாம் அங்கிளும்.. நர்மதா ஆன்ட்டியும் உனக்காக காத்திருக்கிறார்கள்... ஏதோ பேசணுமாம்... முதல்ல அவர்களைப் பார்...'' என்று சொல்லி தங்கையை அனுப்பி வைத்தான்.

அதென்ன சர்ப்ரைஸ்... எதற்கு இந்த 'சஸ்பென்ஸ்'...

அண்ணனும் தங்கையுமாய் விஷயத்தை சொல் லாமல் இழுத்தடிக்கிறார்களே... ஆவல் மிகுதியில் கொஞ்சம் எரிச்சலும் எட்டிப் பார்த்தது.

ஒருவேளை... ராஜேந்திரன்... ரஞ்சிதாவின் திருமண விஷ்யமாக இருக்குமோ... வந்தவுடன் திருமணம் என்று சொல்லியிருந்ததால்... அதை இந்த விருந்தில் வெளி யிடும் உத்தேசமோ...

ஊகூம்... இருக்காது... ராஜேந்திரன் இல்லாமல் எப்படி வெளியிடுவார்கள்... தம்பியும் இருக்க வேண்டாமா... அதுவாக இருக்காது.

பின்னே... வேறு என்னவாக இருக்கும்...

ஓ! புரிகிறது... தங்கைக்காக ஆபரணக் கடை அமைத் துத் தரப்போகும் விஷயம்... அது தங்க மாளிகையோ... ஆபரணக் கடலோ... எதுவோ ஒன்று... நிரஞ்சன் தங்கைக்கு அன்பளிப்பாய் தரும் எண்ணம் போலும்...



பணம் இருந்தால் எதுவும் செய்யலாம்... நிரஞ்சனிடம் பணத்திற்கு குறையில்லையே...

அதற்குள் அவளுக்காக 'மெலன் ஜூஸ்'ஸை எடுத்து வந்து கொடுத்தான் நிரஞ்சன்.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் விருந்து ஆரம்பம்... அது வரையில் தாங்க வேண்டும் இல்லையா... அப்புறம் மறுபடியும் தலை சுத்தி மயங்கி விழுந்து விட்டால்... தாங்கிக் கொள்ள நான் தயார்தான்... ஆனால் பொது இடம் பார்...'' என்று கண்களைச் சிமிட்டி கேலி செய்தான்.

அன்றைய நாளின் சம்பவம் நிழலாட... முகம் 'ஜிவ்'வென்று சிவந்து போனது சௌம்யாவிற்கு.

சே... மடத்தனம்.. அம்மா பேச்சைக் கேட்டு சாப்பிடா மல் போனது சரியான மடத்தனம்... அதை நினைவூட்டி நிரஞ்சன் பேசியது வெட்கமூட்டியது...

பரிகாசம் தான் என்றாலும் அதைத் தாங்கும் மனநிலை இல்லை... ஒரு பெண் ஜாக்கிரதையாக இருக்க வேண் டும்... ஏதோ... நிரஞ்சன் 'ஜென்டில்மேன்' என்பதால் எந்தத் தவறும் நடக்கவில்லை...

எத்தனை பேர் அப்படி இருக்கிறார்கள்... மனிதனை மிருகமாக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்காமல் எச்சரிக்கை யாக இருக்க வேண்டாமா...

''ஹேய்... சும்மா... தமாஷ் பண்ணினேன்... அவ்வளவு தான்... அதற்கு எதுக்கு முகம் வாடிப்போனது.

ஓகே... இப்போ ஒரு சந்தோஷமான விஷயத்தைச் சொல்லட்டுமா... கூடிய சீக்கிரத்தில் உன் தம்பி இந்தியா வரப் போகிறானாம்... ரஞ்சிதா சொன்னாள்... எங்கே... முகத்தில் சந்தோஷத்தைக் காணோம்... ஓ... உனக்கு...

உன் வீட்டுக்குத் தெரிவிக்கவில்லையே என்றா... ஒருவேளை 'சர்ப்ரைஸ்' கொடுக்கும் எண்ணமோ என்னவோ... இல்லை... ப்ளைட் டிக்கெட் புக் பண்ணி விட்டுச் சொல்லும் ஐடியாவாக இருக்கும். இருந்தாலும் மூன்று வருடம் கழித்து வருகிறான்... அதுவும் 'சக்ஸஸ் ஃபுல்'லாக படிப்பையும் வேலைப் பயிற்சியையும் முடித்து விட்டு... தாயகம் திரும்பும் தம்பியை ஜோராக வரவேற்க வேண்டாமா சௌம்யா... ரஞ்சிதாவும் அதைத்தான் சொல் கிறாள்..." என்று சொல்லிக் கொண்டிருந்தவனிடம்... பணியாள் விரைந்து வந்து ஏதோ சொல்ல...

"சாரி... சௌம்யா... யாரோ ஒரு வி.ஐ.பி. வந்திருக் கிறார்... போய் வரவேற்கணும்... வரட்டுமா..." என்று கூறிவிட்டு விரைந்தான்.

என்ன செய்வது என்று புரியாமல்... அந்தக் கூட்டத்தில் தனக்குப் பரிச்சயமான ஒரே ஒருத்தி... ரஞ்சிதாவைத் தேடிச் சென்றாள்.

கண்கள் கூட்டத்தில் அலை பாய்ந்து தேடின...

அதோ... யாருடனோ... சிரித்து பேசிக் கொண்டிருக் கிறாள்.

அங்கே போகலாமா... வேண்டாமா...

அவர்கள் யாரோ... நட்பு வட்டமா... சுற்றமா...

இடைப் புகுந்தால் விரும்புவார்களா...

அத்தனை முகமறியா மனிதர்கள் மத்தியில் எத்தனை நேரம் சுற்றி வர இயலும்... 'சட்'டென்று விருந்து சலித்தது... பேசாமல் போய்விடலாமா வீட்டுக்கு என்றும் தோன்றியது.



அவள் தயங்கி நிற்பதை பார்த்துவிட்டு கைசையத்து வரச் சொன்னாள் ரஞ்சிதா.

யாரோ வேற்று மொழிக்காரர் போலத் தெரிந்த குடும் பம். முலாம் பழம் போல சிவந்த மேனியும்... வாளிப்பு மாய் வட இந்தியர் என்ற முத்திரை குத்தப்பட்டவர்களைப் போல் காணப்பட்டனர்.

அருகில் சென்றதும் "ஹலோ... சௌம்யாக்கா... இவர் கிஷோர்... இவங்க கிஷோரோட தாயார் நர்மதா ஆன்ட்டி... இவங்க கிஷோரின் டாடி... சியாம் அங்கிள்... கிஷோர்... இவங்க சௌம்யா... நான் சொன்னேனே ராஜேந்திரன்... அவர்களோட சிஸ்டர்... எனக்கும் சௌம்யாக்காதான்" என்று அழகான ஆங்கில உச்சரிப்பில் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அந்த நேரத்தில் அங்கே வந்த நிரஞ்சன் "விருந்து தயாராக இருக்கிறது... வாருங்கள் போகலாம்... சௌம்யா... நீயும்தான்..." என்று அழைத்தான்.

பபே விருந்து என்பதால்... அவரவர் விருப்பப்படி நார்த் இன்டியன்... சௌத் இன்டியன்... சைனீஸ் என்று வகை வகையாய் இருந்தன...

கூடவே சாட் ஐட்டம் வேறு... யாருக்கு எது வேண் டுமோ அதை விரும்பி உண்ணலாம்... அதைத் தவிர பழரசம்... ஐஸ்க்ரீம்... லஸ்ஸி... நிம்பு பானி... இறுதியாய் 'பான்' பீடா...

எதைத் தின்பது... எதை விடுவது என்று தெரியாமல் திக்கு முக்காடிப் போனார்கள் விருந்தினர்.

சௌம்யாவும் தான்... கொஞ்சம் பிரைட் ரைஸையும்... நூடில்ஸையும் ருசி பார்த்துவிட்டு தயிர் சாதத்திற்குத் தாவினாள்.

அதிகம் தின்று வயிற்றைக் கெடுத்துக் கொள்ளும் எண்ணமில்லை... முடிவில் ஐஸ்க்ரீமை ருசி பார்க் கையில்...

"என்ன நிரஞ்சன்... என்ன விஷயமாய் இந்த பார்ட்டி... ஏதோ இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்... அது என்ன என்று தெரிந்து கொள்ளலாமா" என்று யாரோ ஒருவர் கேட்க...

"ஷ்யூர்... எங்கள் வீட்டில் ஒரு சுபகாரியம் நடக்கப் போகிறது... அந்த சந்தோஷத்திற்காகத்தான் இந்த விருந்து... ஆமாம்... என் தங்கையின் திருமணம் தான் அது... நரேந்தர்... சீக்கிரமே முடித்து விடலாம் என்கிற எண்ணம்..." என்று பதில் சொன்னான் நிரஞ்சன்...

அருகே நின்று அதைக் கேட்டுக் கொண்டிருந்த சௌம்யாவிற்கு இனிய அதிர்ச்சி...

ஒரு வழியாய்... நிரஞ்சன் இந்த திருமணத்திற்கு ஒப்புக் கொண்டு விட்டாரே... ஆமா.. இந்த இனிய செய்தியை உடனே வீட்டில் போய் சொல்லணுமே.

இன்றைக்கு நல்ல செய்திகளாய் வருகின்றன...

ராஜேந்திரன் வரப்போகும் விஷயம் பால் வார்த்தாற் போல இருந்தது என்றால்... இந்தத் திருமண விஷயம் தேன் மாரி பொழிந்தது போல இருந்தது.

ஓ... இதைத்தான் 'சர்ப்ரைஸ்' என்று சொன்னாளோ ரஞ்சிதா.... உண்மையிலே 'சர்ப்ரைஸ்' தான்... நடக்குமா... நடக்காதா என்று அல்லாடிக் கொண்டிருந்த விஷயம்... நடக்கப் போகிறது என்று தெரிய வந்ததும் நெஞ்சில் ஐஸ்க்ரீமின் குளிர்ச்சி...



சொன்ன வாக்கை காப்பாற்றி விட்ட நிரஞ்சனை நன்றியுடன் பார்த்தாள் அவள்.

"யார் மாப்பிள்ளை... சொந்தமா அந்நியமா..." என்று அந்த ஆசாமியின் கேள்விக்கு.

"அந்நியம்தான்" என்று பதில் சொன்னான் நிரஞ்சன்.

"ஓ! லவ் மேரேஜா... இல்லை நீங்கள் பார்த்து வைத்த மாப்பிள்ளையா... எந்த மாதிரி... நிரஞ்சன்."

"லவ் மேரேஜ் தான்... என் தங்கை விரும்பிய பையனையே கட்டி வைக்க ஒப்புக் கொண்டு விட்டேன். அவளோட சந்தோஷம் தானே எனக்கும் வேண்டும்..."

"கண்டிப்பாய்... ஆமாம் பையன் வந்திருக்கிறானா... எங்களுக்கு அறிமுகப்படுத்தும் எண்ணம் இல்லையா நிரஞ்சன்."

பாவம்... அந்த மனிதர்.. ஆர்வம் அதிகம் போலத் தெரிகிறது... ராஜேந்திரன் இங்கு இல்லையே... அவன் வந்த பிறகுதான் சந்திப்பு என்பது அவருக்கு ஏமாற்றமாக இருக்கும்... ஒருவேளை நிரஞ்சன் மாப்பிள்ளையை அறிமுகப்படுத்த இன்னொரு விருந்து கொடுப்பானோ என்னவோ... ராஜேந்திரன் கொடுத்து வைத்தவன் தான்...

"எல்லோரையும் விருந்துக்கு அழைத்ததே... எங்கள் வீட்டு மாப்பிள்ளையை அறிமுகப்படுத்தத்தான் அதற் குள் அவசரப்பட்டால் எப்படி நரேந்தர். சரி... உங்களுக்கு மட்டும் சொல்கிறேன்... என் தங்கை தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை... அதோ அவளுடன் பேசிக் கொண்டிருக் கிறார் பாருங்கள்... அவர்தான். கிஷோர்னு பெயர்... வைர வியாபாரம் செய்கிறார்கள் கொல்கத்தாவில் பெரிய கடையே இருக்கிறது..."

நிரஞ்சனின் வார்த்தைகள் அமிலத் துளிகளாய் மாறியது போல இருந்தது செளம்யாவிற்கு. அனலை வாரி எடுத்து தன் மீது கொட்டினாற் போல தகித்தது.

'நோ...' என்று அலற வாய் திறந்தாள்... குரல் எழும்ப மறுத்தது....

ரஞ்சிதா... கிஷோருக்கா... ஊகூம்... இதில் ஏதோ சூது இருக்கிறது...

ராஜேந்திரனை விட்டு... ரஞ்சிதா கிஷோரை மணக்கப் போகிறாளா... இதற்கு ரஞ்சிதா சம்மதித்தாளா... இல்லை... நிரஞ்சனின் வற்புறுத்தலால் இப்படியா... ராஜேந்திரன் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறான். வாயில் இருந்த ஐஸ்க்ரீம் இப்போது வேம்பாய் கசந்தது... அதை அப்படியே வைத்துவிட்டு நகர்ந்தாள் செளம்யா.

அங்கே இருக்கவும் பிடிக்காமல் விரைந்தாள்.




ஒரு நிமிஷமும் அங்கே இருக்கப் பிடிக்காமல் விலகி ஓடி வெளியே வந்தாள் செளம்யா...

நிரஞ்சனையோ ரஞ்சிதாவையோ மீண்டும் பார்க்கப் பிடிக்காமல்... உடனே வீட்டுக்குப் போக வேண்டும் என்ற துடிப்புடன் ஓடாத குறையாய் பஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்தாள்...



ஆசை காட்டி மோசம் செய்வது இதுதானா... பாவம் ராஜேந்திரன். ஏதேதோ சொல்லி அவனை உசுப்பி விட்டு... இப்படி 'அம்போ' என்று கை விடுவதில் என்ன நியாயம்... உள்ளுக்குள் பொருமினாள் செளம்யா...

இது 'சர்ப்ரைஸா'மே... வேண்டியதுதான்... இப்படி தடம் புரள்வதையெல்லாம் 'சர்ப்ரைஸ்' என்று தான் சொல்ல வேண்டும். பெண்ணினத்திற்கே கேடு! ரஞ்சிதா மீது இருந்த நல்லெண்ணமும் மாறி விட்டதே... ரஞ்சிதா எப்படி மாறிப் போனாள்.

ஒருவேளை... அவளுக்கேத் தெரியாமல் நிரஞ்சன் எடுத்த முடிவாக இருக்குமோ.. வசதியில்லாத ராஜேந்திரனை கழற்றி விட்டு... வைரத்தில் கொழிக்கும் கிஷோரை அவனே தேர்வு செய்திருப்பானோ... கிஷோரை 'மாப்பிள்ளை' என்று முடிவெடுத்த விஷயம் ரஞ்சிதாவுக்கு தெரிந்திருக்காதோ...

ஊகூம்... விருந்துக்கு அழைத்தது ரஞ்சிதாவே தவிர நிரஞ்சன் இல்லை... 'சர்ப்ரைஸ்' விஷயம் என்று சொன்னது அவளேதான்... அது மட்டும் அல்லாமல்... கிஷோரிடம் குஷாலாய் பேசிக் கொண்டிருந்தாளே... விருப்பமில்லாத திருமணம் என்றால்... முகச் சுளிப்புடன் ஒதுங்கி இருப்பாளே...

போனில் பேசும்போது கூட குரலில் குதூகலம் தெரிந்ததே. பார்ட்டி ஹாலுக்கு வந்ததும் துள்ளி வந்து சந்தோஷத்துடன் அழைத்துப் போனாளே... கட்டாயக் கல்யாணமாய் இருந்தால் செய்திருப்பாளா.

அடச்சே... என்ன பெண் இவள்... மனதில் ஒருத்தனை வைத்துக் கொண்டு... இன்னொருவனை மணக்க

சம்மதம் சொல்கிறாள் என்றால்... நினைக்கவே வெறுப்பைத் தந்தது.

கொழுத்த பணக்காரன் வந்ததும் ஏழை ராஜேந்திரன் துச்சமாகி விட்டான் போலும்... கிளை விட்டு கிளை தாவும் குரங்கு போலத்தான்...

அண்ணனின் காதலி செய்த துரோகத்தை இழிவாகப் பேசியவள்... இப்போது அதே துரோகத்தை செய்திருக் கிறாள்... வெட்கக் கேடு!

ஈயத்தைப் பார்த்து பித்தளை இளித்தது மாதிரிதான்... சே... ராஜேந்திரன் பாவம்... ஆரம்பத்திலேயே இல்லை என்றிருந்தால் சின்ன வலியோடு போயிருக்கும்... இப்போது மரணவலியாக இருக்கும் அவனுக்கு...

முதல் படியிலிருந்து விழுந்தவனுக்கு அடி விழாது... மேல்படியில் இருந்து விழுந்தால் தான் பலத்த அடியாய் வலிக்கும்... ஆசையாய் இந்தியாவுக்கு வரும் ராஜேந் திரனை என்ன சொல்லித் தேற்றுவது. பணக்காரர்களை நம்பினது தப்பு... அவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்பதை புரிந்து கொள்வானா.

எண்ணவோட்டத்தில் எப்போது பஸ் ஏறினோம்... எப்போது வீட்டிற்கு வந்து சேர்ந்தோம் என்று தெரியாத இயந்திர கதியில் இயங்கினாள்...

மனதில் இருக்கும் வேதனையை யாரிடமாவது இறக்கி வைத்தால் பரவாயில்லை என்று தோன்றியது.

அம்மாவிடம் சொல்ல முடியாதே... பூஞ்சை மனம் இதைத் தாங்காது... ராஜேந்திரன் தாயின் செல்லப் பிள்ளை வேறு... துடித்துப் போவாள்... வேண்டாம்... அக்காவைப் பார்த்துப் பேச வேண்டும்.. உடனே...



''ஏன் ஒரு மாதிரியா இருக்கே சௌமி... உடம்பு சரி யில்லையா என்ன'' என்று, அக்கறையுடன் கேட்ட தாய்க்கு ''லேசாய் தலைவலிம்மா'' என்று முணுமுணுத் தாள்.

''அது சரி... ஞாயிற்றுக்கிழமை... லீவுன்னு வீட்டில் இருக்காமல் வெளியே சுத்தி... காயற வெயிலையெல் லாம் வாங்கி வந்தால் தலைவலிக்காமல் என்ன செய்யும்... இரு... சூடா காபி போட்டுக் கொண்டு வருகிறேன். சாப்பிடு.... தலைவலி குறையும்... அப்படியே ரெஸ்ட் எடு... இஸ்திரி போடணும்... அது இதுன்னு ஆரம்பிச் சுடாதே...''

பாவம்... அம்மா தலைவலிக்கான காரணத்தை சொன் னால்... நொந்து போவாள்...

காபியை வாங்கிக் குடித்துவிட்டு... தாயிடம் சொன் னாள்.

''அம்மா... அக்காவைப் பார்த்துவிட்டு வருகிறேனே... குழந்தைகளையும் பார்க்க வேண்டும் போல இருக் கும்மா...''

''தலைவலின்னு சொல்லிட்டு... மறுபடியும் வெளியே போகிறாயேம்மா... ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாதா...'' என்று பாக்கியம் அங்கலாய்க்க...

''ஒன்றும் ஆகாதும்மா... அப்படியே இருந்தாலும் மாத்திரையைப் போட்டுக் கொண்டு சமாளித்துக் கொள் கிறேன்... போதுமா...'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பிய மகளைப் பார்த்து பெருமூச்சு விட்டாள் தாய்...

சௌம்யாவைக் கண்டதும் முகம் மலர்ந்து போனாள் சந்தியா... ஓடி வந்து வரவேற்றாள் தங்கையை.

"வாடீ... இதென்ன... சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிற்கிறாயே... என்ன விஷயம்..." என்று கேட்டாள்... அவளைப் பார்த்த சந்தோஷத்தில்...

"வாம்மா... சௌம்யா... வீட்டில் அம்மா சௌக்கியமா... ராஜேந்திரன் எப்போ வருகிறான்னு தெரிஞ்சுதா..." என்று விசாரித்தார்... சந்தியாவின் மாமியார்...

"அம்மா சௌக்கியம் அத்தை... ராஜேந்திரன் கூடிய சீக்கிரம் வரப்போவதாய் தெரிகிறது... உங்க மூட்டு வலி இப்போ பரவாயில்லையா..." என்று பதிலுக்கு நலம் விசாரித்தாள்.

"அப்பப்போ வந்து விட்டுப் போகிறது. நானும் இருக் கேன்னு... சரி... நீங்க பேசிக் கொண்டு இருங்க... நான் போய் காபி போட்டுக் கொண்டு வருகிறேன்..." என்று சொன்னார் மாமியார்.

"வேண்டாம்... இப்பத்தான் சாப்பிட்டு விட்டு வந்தேன். குழந்தைகளைப் பார்த்து ரொம்ப நாளாச்சேன்னு பார்க்க வந்தேன்... ஆமாம்... எங்கே பசங்க... கண்ணில் படவில்லையே..." என்று கேட்டாள்.

சௌம்யா... கண்கள் அவர்களைத் தேடி அலைந்தன.

"அவங்க அப்பாவை நச்சரித்து 'ஷாப்பிங்'க்கு கூட் டிட்டுப் போயிருக்காங்க... ஸ்கூல்ல பிக்னிக்கு அழைச் சிட்டுப் போறாங்களாம்... அதற்காக ஒரு 'லிஸ்ட்' போட்டுக் காண்டு போயிருக்காங்க... அவங்க அப்பா பர்ஸுக்கு இன்னிக்கு வேட்டுதான்..." என்று சொன்ன சந்தியாவின் முகத்தில் பெருமிதம்... கணவன்... தன் செல்வங்களைப் பாசத்துடன் அழைத்துப் போயிருக்கிறான் என்ற சந் தோஷத்தில் அவளது கன்னங்களில் மினுமினுப்பும்... கண்களில் மின்னலும் தெரிந்தன.



"சரி... என் மாமியாரிடம் ராஜேந்திரன் வரப்போவதாய் சொன்னாயே... எப்போன்னு தெரிந்ததா... பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கு என் மனசு... எத்தனை நாளாச்சு... இல்லே..." சந்தியா கேட்க...

"அது விஷயமாய் பேசத்தான் வந்தேன் அக்கா... உன் அறைக்கு போய் பேசலாமா..." என்று சொன்ன தங் கையை வியப்புடன் பார்த்தாள்.

"என்னடீ... ஏதாவது முக்கியமான சமாச்சாரமா... வா... அறைக்குப் போய் பேசலாம்" என்று அழைத்துப் போனாள்.

"ம்... என்ன விஷயம்னு சொல்லு சௌமி... எனக்கு படபடன்னு வருகிறது... ராஜேந்திரனுக்கு ஒன்றும் இல்லையே.... நலமாகத் தானே இருக்கான்...." தவித்துப் போய் கேட்டாள். சந்தியா...

"அவன் நன்றாகத் தான் இருக்கிறான் அவனோட தலையெழுத்து தான் நன்றாக இல்லைக்கா..."

"என்ன புதிர் போட்றே, சௌமி... கொஞ்சம் விவரமாய் சொல்லேன்..."

"ப்ச்சு... அந்த ரஞ்சிதாவும் நிரஞ்சனும் அவனை ஏமாற்றி விட்டார்கள் அக்கா... அவனுக்கு மோசம் செய்து விட்டார்கள்... இது அவனுக்குத் தெரிந்தால்..."

"அய்யோ... சௌம்யா... விஷயத்தை விளக்கமாய் சொல்லேன்... இப்படி பூடகமாய் சொன்னால்... எனக்கு என்ன தெரியும்..."

"சொல்கிறேன்" என்று அன்று நடந்ததை ஒன்று விடாமல் சொன்னாள்...

''இதெல்லாம் அம்மாவுக்கு சொன்னால் மனம் ஒடிந்து போவாள்.. இப்பத்தான் முகத்தில் கொஞ்சம் சந்தோஷத்தைப் பார்க்க முடிகிறது... அதை சாகடிக்க எனக்கு பிடிக்கவில்லைக்கா... அதான்... அம்மாவிடம் சொல்லாமல்... உன்கிட்டே ஓடி வந்தேன்... பாவம் ராஜேந்திரன்... இந்தியாவுக்கு சந்தோஷமா வரும் நேரத்தில்... இந்த விஷயம் தெரிந்து போனால் போச்சு... 'டிப்ரஷனில்' விழுந்து விடுவான். அதை நினைக்கறப்போ... நெஞ்சு வெடித்துவிடும் போல இருக்குக்கா...'' என்றாள் வேதனையுடன்.

''என்ன சௌமி... இந்தப் புதுத் தலைவலி... நம் வீட்டுக்கு விடிவு காலம் வந்தாச்சு... இனி எந்தக் கஷ்டமும் வராது... தம்பி தலையெடுத்து விட்டான் என்றெல்லாம் சந்தோஷப்பட்டேனேடீ... இப்போ... இந்த மாதிரி ஆகணுமா... நீ சொல்ற மாதிரி... தம்பிக்கு இது தெரிந்தால் கண்ணாடியாய் நொறுங்கிப் போவானே... நினைத்தால் அடி வயிறு கலங்குது சௌமி... இப்போ என்ன செய்வது...'' கையைப் பிசைந்தாள் தமக்கை.

''என்னக்கா... உன்னிடம் சொன்னால்... எனக்கு தைரியம் சொல்வாய்னு பார்த்தால் என்னைவிட மோசமாய் இருக்காயே...'' என்று வருத்தமாய் கூறினாள் சௌம்யா...

''ஒண்ணு பண்ணலாமா சௌமி... ராஜேந்திரன் கிட்டே நாம் பேசிப் பார்க்கலாமா... விஷயத்தை மெதுவா சொல்லி...''

''காரியத்தை கெடுக்கப் பார்க்கிறாயேக்கா... இங்கே வந்து அவனுக்கு ஏதாவது ஆனால்... நாம் துணையா இருப்போம்... அங்கே... அவன் ஒண்டியா இருக்கும்



போது... நிலைமை விபரீதமாகி விட்டால் கஷ்டமாகி விடும்... அவன் வரும் வரை பொறுப்போம்.''

''என்னடீ சொல்றே... ரஞ்சிதா விஷயத்தை சொல்லாமல் இருப்பாளா என்ன. அப்பவும் கஷ்டம்தானே...''

''இல்லேக்கா... ரஞ்சிதா சொல்லியிருக்க மாட்டாள். இப்போ அவள் கிஷோரின் நினைப்பில் இருக்கிறாள். ராஜேந்திரனின் நினைப்பை துடைத்துப் போட்டிருப்பாள்னு தோன்றுகிறது... அவள் எங்கே அவன்கிட்டே பேசியிருப்பாள்... நிச்சயம் இருக்காது... அப்படி அவள் சொல்லியிருந்தால் தம்பி இந்நேரம் வந்து குதித்திருப்பானே...''

''நீ சொல்வது சரிதான்... ராஜேந்திரனை ஒதுக்கியவள்... உன்னிடம் எப்படி விழுந்து பழக முடியும். நம் சங்காத்தமே வேண்டாம் என்றிருப்பாள் இல்லையா... பார்ட்டிக்கு உன்னை ஏன் கூப்பிடணும்... சொல்லு...''

''யாருக்குத் தெரியும்... உள்ளூரில் இருக்கும் நாம் எங்கே இதைக் கேட்டு விடுவோமோ என்று நைச்சியமாய் அழைத்திருக்கலாம்... ராஜேந்திரனிடம்... உன் அக்கா கூட வந்திருந்தார்களே என்று சொல்லிக் கோபத்தைத் திருப்ப இருக்கலாம்... எல்லாமே சிக்கலாகத் தெரிகிறது மண்டை வெடித்து விடும் போல இருக்குக்கா...''

''விடும்மா... நடக்கிறது நடக்கட்டும்... பார்த்துப் போம்'' என்று சந்தியா சொல்லும்போதே... குழந்தைகள் 'அம்மா... ஐய் சித்தி' என்று ஓடி வந்தார்கள்.

கைகளில்... ஏதேதோ... ப்ரூட்டி... சிப்ஸ்... குர்குரே... காட்பரிஸ்... குட்டே பிஸ்கட் என்று வகை வகையாய் நொறுக்ஸ்.

"சித்தி... நாளைக்கு நாங்க 'பிக்னிக்' போகிறோமே... அதுக்குத்தான் இத்தனையும்... நாளைக்கு சீக்கிரமே புறப்படணும்... ஜாலி..." இருவரும் போட்டி போட்டுக் கொண்டு சொன்னதும்...

இருவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டாள் சௌம்யா...

"நாளைக்கு என்ன டிரெஸ் போட்டுக் கொள்ளப் போகிறீர்கள் குட்டீஸ்..."

"புது டிரெஸ் கேட்டோம் சித்தி... அம்மா அதெல்லாம் வேண்டாம்... வீண் செலவுன்னுட்டாங்க... அப்பா வாங்கிக் கொடுக்கிறேன்னாலும்.. அம்மா விடமாட்டேங் கிறாங்க..." மனக் குறையுடன் இளையவள் சொல்ல...

"ஆமாம் சித்தி... புது டிரெஸ் என்றால் இன்னும் குஷியாக இருக்கும் இல்லையா... அம்மாகிட்டே சொல் லுங்க சித்தி... ப்ளீஸ்" என்று ஒத்து ஊதினாள் மூத்தவள்..

"புது டிரெஸ் வேண்டும்... அவ்வளவுதானே... வாங்க என்னோடு... நான் வாங்கித் தருகிறேன்" என்று எழுந்த தங்கையை தடுத்து நிறுத்தினாள் சந்தியா.

"என்ன இது சௌமி... அவர்கள் கேட்டதெல்லாம் வாங்கித் தந்தால்... அப்புறம் எதற்கெடுத்தாலும் அடம் பிடிக்கும் பழக்கம் வந்து விடும்... வேண்டாம்... விடு..." என்றாள் அவள்.

"என்னக்கா... குழந்தைகள் 'பிக்னிக்' என்று ஜாலியா புறப்படுகிறார்கள்... அவர்கள் ஆசைப்படுவதை வாங்கித் தராமல் இருப்பதா... எனக்கும் வாங்கித் தருவதற்கு உரிமை இருக்கிறது... வாங்கடா செல்லங்களா... உங் களுக்கு என்ன டிரெஸ் வேண்டும்... சொல்லுங்க" என்று சொன்னதும்...



"ஹை..." என்று குதித்துக் கிளம்பினார்கள் இருவரும்...

இரண்டு நாட்கள் கழிந்தன.

வேலை முடித்து... வீட்டிற்கு போகும் முன்... கொஞ்சம் 'காஸ்மெடிக்ஸ்' வாங்க வேண்டி 'மால்'க்குள் சென்றாள்.

'ஸன் ஸ்க்ரீன் லோஷன்...' அலோவேரா லோஷன்... ஆயுர் ஷாம்பூ என்று நிதானமாய் பார்த்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தவள்... யார் மீதோ மோதி... கொஞ்சம் தடுமாறி... பின் சுதாரித்துக் கொண்டாள்...

"சௌம்யாக்கா!" என்று வியப்போடு குரல் வரவும் திகைப்புடன் பார்த்தாள் சௌம்யா.

ரஞ்சிதா... தன் குடும்பத்து சந்தோஷத்தைக் குழி தோண்டிப் புதைத்த ரஞ்சிதா... கறுப்பு ஜீன்ஸும்... லெமன் நிற டாப்ஸும் அணிந்திருந்தாள்.

அவளது முக மாற்றத்தை பார்த்த ரஞ்சிதா...

"என்னக்கா... என் மீது கோபமா என்ன... அன்றைக்குக் கூடச் சொல்லாமல் வந்து விட்டீர்களே... பாவம்... அண்ணா... உங்களைத் தேடி... காணாமல்... என்ன ஆச்சோன்னு பதறிப் போய் விட்டார்... தெரியுமா... நீங்க வந்து 'கங்கிராட்ஸ்' சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன்... ஆனால் நீங்கள் வரவே இல்லை... ஏன் சௌம்யாக்கா..."

அவளிடம் பேசாமல் ஒதுங்கி விட வேண்டும் என்று நினைத்தாலும்... அவள் விடாமல் வந்து பேசுகிறாளே என்ற எரிச்சலுடன்... ஏன் மறைக்க வேண்டும்... உள்ளத்தில் உறுத்துவதை கேட்டு விடத்தான் வேண்டும் என்று உத்வேகமும் சேர்ந்து கொள்ள... 'படக்'கென்று கேட்டே விட்டாள்.

''அதெப்படி... நான் வந்து உனக்கு வாழ்த்துக் கூறுவேன் என்று எதிர்பார்த்தாய் ரஞ்சிதா... நீ விரும்பியது என் தம்பியை என்று நினைத்தேன்... ஆனால் திடீர் என்று 'பல்டி' அடித்து... வேறு ஒருத்தரை மணப்பாய் என்று சத்தியமாய் எதிர் பார்க்கவில்லை ரஞ்சிதா...''

''ஓ! அதுதான் விஷயமா... ராஜேந்திரனும் நானும் பழகினோம். உண்மைதான் சௌம்யாக்கா... ஆனால் அது காதல் இல்லைன்னு லேட்டாகத்தான் புரிந்து கொண்டேன்... நீங்கள் சொன்ன மாதிரி வயசுக் கோளாறு... அதன் காரணமாய் வந்த 'இன்பாச்சுவேஷன்...' அதைக் காதல் என்று நினைத்தது என் முட்டாள்தனம்... கிணற்றுத் தவளை மாதிரி இருந்தேன் இல்லையா... அதான் ராஜேந்திரனைப் பார்த்ததும் உண்டான சலனத்தை காதலாய் பாவித்து... இப்போ நினைத்தாலும் சிரிப்பு வருகிறது... ஆனால் லண்டனில் இருந்தபோதுதான் என் உணர்வுகளை சரியாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அங்கே நிறைய ஆண்களோடு... சகஜமாய் பழக வேண்டிய சூழ்நிலையில்... காதல் வேறு... இனக் கவர்ச்சி வேறு என்று புரிந்து கொண்டேன்... நான் படித்த அதே கோர்ஸில் தான் கிஷோரும் படித்தது. எங்கள் இருவரின் விருப்பும் வெறுப்பும் ஒத்துப் போயிருந்தது அதிசயம்... கிஷோருக்கு ஹிந்துஸ்தானி மியூசிக் பிடிக்கும்... எனக்கும்தான்... கிஷோருக்கும் மீராபஜன் பிடிக்கும்... இசையில் மட்டும் இல்லை... உணவு வகைகளில்... இலக்கியத்தில்... ரசனையில் என்று எல்லா விதத்திலும் எங்களது எண்ணங்கள் ஒத்திருந்தன... என்னையே நான் கேட்டுக் கொண்டேன்... கிஷோர் இல்லாமல் வாழ முடியுமா என்று... அது சாத்தியமில்லை என்று



தோன்றியது... அப்போதுதான் புரிந்து கொண்டேன். சத்தியமாய் இது காதல் என்று... புரியாத வயதில்... முதிர்ச்சி பெறாத மனதில் வந்த சலனத்தைக் காதல் என்று நினைத்தது மகா தப்பு என்று உணர்ந்ததை தவறு என்று நினைக்கிறீர்களாக்கா... சொல்லுங்கள்...''

என்ன சொல்லுவது என்று தெரியாமல் விழித்தாள் சௌம்யா...

அவள் சொன்ன விளக்கம் ஏற்கக் கூடியதாகத் தான் இருக்கிறது... இருந்தாலும்...

''அன்றைக்கு என் காதலை ஏற்றுக் கொள்ளாத நீங்கள்... ஊகூம்... அது காதலே இல்லை என்று அழுத்தமாய் சொன்ன நீங்கள்... அதையே நான் உணர்ந்து மனம் தெளிவானதை எப்படித் தப்பாக நினைக்கிறீர்கள் சௌம்யாக்கா... அப்படியென்றால் அன்றைக்கு நீங்கள் செய்த வாதம் தவறா... நான் எப்படி எடுத்துக் கொள்வது... ம்ம்.''

''இப்பவும் சொல்கிறேன்... சௌம்யாக்கா... ராஜேந்திரன் நல்லவர்... திறமைசாலி... புத்திசாலிகூட... அவரை மணப்பவள் அதிர்ஷ்டக்காரிதான்... ஆனால் அது நானில்லை. அவர் வெளிநாட்டில் படித்திருந்தாலும்... மனதளவில் 'ஆர்தோடெக்ஸ்' பேர்வழி என்றுதான் சொல்வேன்... அவருக்குப் பொருத்தமானவள் நிச்சயம் கிடைப்பாள்... குறுகிய வட்டத்துக்குள் இருந்தபோது கண் மூடிக் கொண்டிருந்த என்னால்... விசாலமான பிரபஞ்சத்தில் சுற்றி வந்தபோது தான் எது சரி... எது சரியல்ல என்று புரிந்து கொள்ள முடிந்தது... என் கருத்துக்களை நீங்களும் ஏற்றுக் கொள்கிறீர்கள்தானே... சொல்லுங்கள்...''

அவள் சொல்வது நியாயம் என்று பட்டாலும்...

பாதிக்கப்படுவது தன் தம்பியாயிற்றே என்ற வருத்தம் இருக்கத்தான் செய்தது...

"இது... இந்த விஷயம் ராஜேந்திரனுக்குத் தெரியுமா" என்று வினவினாள்.

"ஓ... தெரியுமே... நான்தான் புறப்படும் முன் சொன்னேன்... அவர் இந்தியா வரப்போவதாய் சொன்னார்... நானும் இந்த விஷயத்தை சொன்னேன்..."

"அவன் இதை, இந்த விஷயத்தை எப்படி எடுத்துக் கொண்டான் ரஞ்சிதா.

தோள்களைக் குலுக்கினாள் அவள்.

"'சாட்'டில்தான் பேசினது... வாழ்த்துக்கள் என்று சொன்னார் அவ்வளவுதான்..."

"அதற்குப் பிறகு நீங்கள் பேசவில்லையா..."

"ஊகூம்... இந்தியா வரவேண்டி இருந்தால் பிஸியாக இருந்தேன்... அவரிடம் பேசவும் நேரமில்லை சௌம்யாக்கா..."

ஆக... ராஜேந்திரனுக்குத் தெரிந்துவிட்டது... எப்படி எடுத்துக் கொண்டான்... ஏமாற்றமும்... வேதனையும் அடைந்திருப்பானோ... கடவுளே... உள்ளம் கலங்கி தவித்தது.

அந்தக் கலக்கத்தில்... காரில் டிராப் செய்கிறேனே என்று முன் வந்த ரஞ்சிதாவின் உதவியை மறுத்துவிட்டுப் புறப்பட்டாள்.






ராஜேந்திரனின் வரவை ஆசையுடன் எதிர்பார்த்தாலும்... அய்யோ... அவன் வந்து விட்டால் என்ன ரகளையாகுமோ... ரஞ்சிதாவின் திருமண விஷயம் அவனை நொறுக்கிப் போட்டு விடுமோ என்ற கலக்கம் அவளுக்கு இருந்து கொண்டே இருந்தது...

அதனால்தான்... ராஜேந்திரனின் வருகையை 'திக் திக்' மனதுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனும் வந்தான்...

அவனிடத்திலும் நிறைய மாற்றங்கள் தெரிந்தன. உடம்பு சதைப் போட்டு... நிறமும் கூடியிருந்தது. முகத்தில் கொஞ்சம் முதிர்ச்சியும் வந்திருந்ததை கவனித்தாள்... படிப்பு தந்த களையும் அவன் முகத்தில் அப்பட்டமாய் வந்திருந்தது.

ரிம் லெஸ் கண்ணாடியில் வசீகரமாகத் தெரிந்த தம்பியைப் பார்க்கையில் உள்ளம் விம்மியது. பாக்கியம் சந்தோஷத்தில் பூரித்துப் போனாள். உணர்ச்சியில் கண்கள் கலங்கி விட்டன.

"ஹாய்... சௌம்யா அக்கா... எப்படி இருக்கே... ஹே... 'மம்..' என்ன ஆளே மாறிட்டீங்க... 'வெயிட்' போட்டு... தளதளன்னு ஆயிட்டீங்க... ஓ... பிள்ளை உசந்துட்டான்

என்கிற சந்தோஷம்... அதானே... மை ஸ்வீட் மம்.. என்னக்கா... மாமா ரொம்பவும் மாறிட்டாராமே... சந்தியா சந்தியான்னு உன்னைச் சுத்தி வருகிறாராம்... எப்படி... முறுக்கி நின்றவரை மாயம் செய்து முந்தானை முடிச்சில் இறுக்கிக் கட்டினே... ஆமாம். வாண்டுகள் எங்கே... 'ஸ்கூலா...' நான் வரும் விஷயம் தெரிந்து லீவு போட்டிருப்பாங்கன்னு நினைச்சேன்... அவர்களுக் கெல்லாம் ஏதேதோ வாங்கி வந்திருக்கிறேன்... அவர் களுக்குக் கொடுத்து... அவர்கள் குஷியில் குதிக்கிறதைப் பார்க்கலாம்னு ஆசையாய் வந்தால்..."

இந்த கலகலப்பு பேச்சும் கூட அவனிடத்தில் வந்திருக்கும் புது மாற்றம்தான்...

பழைய உம்மண்ணா மூஞ்சி இல்லை... மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் சௌம்யா...

அதே சமயம் நெருடலும் இருந்தது.

ரஞ்சிதா விஷயம் அறிந்திருந்தும்... இப்படி மலர்ந்த முகத்துடன்... கலகலப்பாய் பேசுகிறான் என்றால்... ரஞ்சிதா இன்னொருவனுக்கு மனைவியாகப் போகும் விஷயத்தால் அவனுக்குப் பாதிப்பு இல்லையா...

இல்லை. மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாய் வீட்டினரிடம் காட்டிக் கொள்ளாமல் இருக்க முயற்சிக்கிறானா... புரியவில்லையே...

இதை அவனிடம் எப்போது கேட்பது... எப்படிக் கேட்பது... அப்படிக் கேட்டால்... வெந்த புண்ணில் வேல் சொருகினாற்போல. இருக்குமோ... அந்த வலியில் துடிதுடித்து விட்டால்...

சௌம்யாவின் உள்ளம் தவித்தது.



சந்தியாவும் சௌம்யாவும் ஒருவருக்கொருவர் கேள்வி யுடன் பார்த்துக் கொண்டார்கள்...

"தனியாய் இருக்கும்போது அவனைக் கேட்டுப் பார் சௌமி... மனசுக்குள் வேதனையை சுமந்து கொண்டு... எதுவும் நடக்காத மாதிரி பாவ்லா காட்டுகிறானோ என்னவோ... மனத்தாங்கலுடன் கேட்டாள் தமக்கை.

"வேண்டாம்க்கா... அவனே வாய்விட்டுச் சொல் லட்டும்... ஏதோ நம்மிடம் சிரிச்சுப் பேசுகிறான்... பழையதைக் கிளறி விட்டு... இந்தச் சிரிப்பும் நின்று விடப் போகிறது... எதுக்கு..." என்று மறுத்து விட்டாள் தங்கை.

பெருமூச்சு விட்டாள் சந்தியா...

தம்பி மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியவில்லையே என்ற தவிப்பு அவளுக்கு...

போகட்டும்... நீண்ட நாளைக்குப் பின் வந்திருக் கிறான்... ஏதோ... சந்தோஷமாய் பேசுகிறான் சௌம்யா சொல்வதுபோல... வீணாய் ஏதாவது கேட்டு... இந்த சந்தோஷத்தைக் கெடுத்துக் கொள்வானேன்... வேண் டவே வேண்டாம்...

அந்த முடிவில் ரஞ்சிதாவின் நினைப்பையே ஒதுக்கி வைத்தாள்...

வீட்டில் தினமும் கொண்டாட்டமும்... கும்மாளமும் தான்... மகனுக்கு பிடித்த பதார்த்தங்களை.. தின்டிகளை.. வகைவகையாய்... தினுசு தினுசாய் செய்து தந்தாள் பாக்கியம்.

குழாய் புட்டு.. இடியாப்பம்... அடை அவியல்... சாம் பார் வடை... என்று வேளைக்கொரு ஐயிட்டம்...

அதிரசம்... முந்திரி பர்பி.. ரவா லட்டு... காராசேவு... கார முறுக்கு... என்று நாளுக்கொரு நொறுக்குத் தீனி என்று ஜமாய்த்தாள்...

ஏதோ பண்டிகை... வைபவம் மாதிரி வீட்டில் கலகலப்பும்... அமர்க்களமும் தெரியும்... சந்தியாவும்... சந்தானமும் குழந்தைகளுடன் அவ்வப்போது ஆஜராக... வீடே அமர்க்களப்படும்...

திடீர் என்று நினைத்துக் கொண்டு சினிமாவுக்குக் கிளம்புவார்கள்... இல்லை... 'வொண்டர் லா...' 'காஸ் மோஸ்..' 'மெட்ரோ' என்று செல்வார்கள்... அதுவும் இல்லையென்றால்... 'பிக்னிக்' என்று புறப்பட்டு விடுவார்கள்... எப்படியோ... தம்பி பழசை நினைத்து மரவட்டையாய் சுருண்டு போகாமல்... இந்த மட்டும் குஷியாக இருக்கிறானே... அதுவே போதும்... சந்தியாவும் சௌம்யாவும் நிம்மதியுடன் நினைத்துக் கொண்டனர்.

எதை எதையோ நினைத்து பயந்ததுக்கு மாறாய்... என்ன ஆகுமோ... ஏது நடக்குமோ என்று உள்ளூர நடுங்கியதுக்கு எதிராய்... எதுவுமே நடக்காதது போலல்லவா வளைய வருகிறான்...

உண்மையில் அவனுக்கு வேதனை இல்லையா... காதலி... கைவிட்டுப் போனாளே என்ற பரிதவிப்பு இல் லையா... தன்னை விரும்பியவள்... இப்போது இன்னொருவனுக்கு மனைவியாகப் போகிறாள் என்ற ஆத்திரம் இல்லையா...

ஒருவேளை... ச்சீச்சீ... இந்தப் பழம் புளிக்கிறது என்ற கதையா... பணக்கார வர்க்கத்தின் புத்தியே இப்படி...



சபல புத்தி... சஞ்சல மனசு... நம்பினது தப்பு என்று உதறி விட்டான் போலும்...

எல்லாம் நன்மைக்கே... நடப்பதெல்லாம் நன்மைக் குத்தான் என்பது சரியாகவே இருக்கிறது...

எதுக்கு மனசுக்குள் கண்டதை நினைத்து... குழப்பம் அடைய வேண்டும்... இப்போதைக்கு வீட்டில் ஆனந்தம் தாண்டவமாடுகிறது... போதுமே... அந்த சந்தோஷத்தை அனுபவிப்போம்...

அந்த முடிவில்... ஒரே கூத்தும்... கும்மாளமுமாய் பொழுதைத் கழித்தனர்.

ராஜேந்திரனுக்கு இருந்த படிப்புக்கும் தகுதிக்கும் கம்பெனிகள் போட்டி போட்டுக் கொண்டு வேலை தரத் தயாராக இருந்தன... நன்றாய் யோசித்து... அலசிப் பார்த்து... எதிர்காலத்தில் அருமையானதொரு ஒளி வாழ்வை தரும் என்ற நம்பிக்கையூட்டிய சிறப்பானதொரு வேலையை ஏற்றுக் கொண்டான்...

ஆரம்ப வருவாய் எழுபத்தைந்தாயிரம்!

அதைக் கேட்டதுமே பாக்கியம் மயங்கி விழாத குறைதான்.

மகனைப் பிரமிப்புடன் பார்த்தாள் அவள். இந்தப் பிள்ளையையா உருப்படாதவன் என்று திட்டினேன்... என்று உள்ளூர நினைத்து அதிசயப்பட்டாள்...

இனிமேல் எந்தவிதக் கவலையும் இல்லை... முக்கி முனகி செலவு செய்ய வேண்டியதில்லை. பிள்ளையின் கைவழியும் சம்பளத்தில் இனி ராணி மாதிரி... மகாராணி மாதிரிகூட வாழலாமே...

தாய் மனம் குதி போட்டது... பட்ட கஷ்டமெல்லாம் மாயமாகி... வாழ்வில் வசந்தம் பூத்த மகிழ்ச்சியில் திளைத்தாள் பாக்கியம்.

அன்று அனைவரும் சேர்ந்து... வேலூர் பொற்கோவில் சென்று வர திட்டம் போட்டு... அதற்காக தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில்... வாசலில் கார் வந்து நின்றது...

யார் இந்த நேரத்தில்... என்று எட்டிப் பார்த்த பாக் கியம்... அதீத நாகரீகமானப் பெண்ணைப் பார்த்து விட்டு வியந்தாள்.

யார் இவள்... யாரைத் தேடி வந்திருக்கிறாள் என்று யோசனையுடன் பார்க்க...

''ஹலோ... ஆன்ட்டி... என்னைத் தெரியலையா... நான் தான் ரஞ்சிதா...'' என்றாள் வந்தவள்.

''எந்த ரஞ்சிதா...'' என்று குழப்பத்துடன் கேட்டாள் பாக்கியம்.

''என்னை மறந்துட்டீங்களா ஆன்ட்டீ... ராஜேந்திர னோட சிநேகிதி... 'ஆஸ்பிடலில்' கூட வந்திருந்தேனே...''

''ஓ... அந்தப் பெண்ணா... இவள்!'' மலைத்துப் போனாள் பாக்கியம்.

அடடா... என்ன மாற்றம்! எளிமையாய்... அடக்கமாய் தெரிந்தாளே... இப்போது... என்ன கண்றாவி இது... வயிறு தெரியும்படி பேன்ட்டும்... மேல் சட்டையும். ஆம்பிளைப் பிள்ளை மாதிரி டிரெஸ்... சாமி வந்த மாதிரி தலையை விரித்துப் போட்டுக் கொண்டு... சினிமாக்காரி மாதிரி அலங்காரத்துடன்... அடக் கடவுளே... என்ன ஆச்சு இந்தப் பெண்ணுக்கு...



பரிதாபத்துடன் வந்தவளைப் பார்த்தாள் முதியவள்.

''ஆன்ட்டீ... ராஜேந்திரன் இருக்கிறானா... சௌம்யா அக்காவும் இருக்காங்க தானே...'' என்று விசாரிக்கும் போதே... ராஜேந்திரன் வந்தான்.

''ஹேய்... ரஞ்சிதா... வாட் எ சர்ப்ரைஸ்... என்ன ரொம்ப பிஸியாக்கும்... நிரஞ்சன் சார் நலம் தானே... அப்புறம்... கல்யாண விஷயம் எதுவரைக்கும் வந்திருக்கிறது... கிஷோரை அப்பப்போ சந்திக்கிறாயா...'' என்று கேள்வி களை அடுக்கினான் ராஜேந்திரன்.

''ஓகோ... இப்பத்தான் என் ஞாபகம் வந்ததாக்கும்... வந்து எத்தனை நாள் ஆச்சு... என்னை வந்து பார்க்கணும்னு உங்களுக்குத் தோணவில்லையே... ராஜ்... நம்ம நட்பு அவ்வளவுதானாக்கும்... விடுங்க... நான்தான் மறக்காமல் உங்களைத் தேடி வந்தேன்...'' என்று மனக்குறையாய் சொன்னாள் அவள்.

''இந்த 'டூப்'தானே வேண்டாம் என்கிறது... உன் கிட்டேயிருந்து போனும் இல்லை... எஸ்.எம்.எஸ்ஸும் கிடையாது. சரி... எல்லோரையும் மறந்து விட்டு... கிஷோர் பஜனையில் இருக்கிறாயோ என்னவோ... ஏன் தொந்திரவு பண்ணனும் என்று நினைத்தேன்... இப்போ... என்னைக் குற்றம் சொல்கிறாயாக்கும்... ரொம்ப தேவைதான்... ஆங் என்ன சாப்பிட்றே... ரஞ்சி... முதல்ல உட்கார்... அம்மா... ரஞ்சிக்கு ஏதாவது சாப்பிடக் கொண்டு வாயேன்...'' என்று சொன்னான் ராஜேந்திரன்.

''ஆமாம்... சௌம்யாக்கா இல்லையா என்ன... வேலைக்குப் போயாச்சா...'' என்று கேட்டாள் ரஞ்சிதா.

''இல்லை... வேலைக்குப் போகவில்லை. லீவு போட்டிருக்கிறாள்... கூடிய சீக்கிரம் வேலையை விடப் போகிறாள். இத்தனை நாள் கஷ்டப்பட்டது போதும் என்று சொல்லிவிட்டேன். எனக்கு வரும் சம்பளமே போதுமே...''

''வெரிகுட்... ராஜேந்திரன். குட் டிஸிஷன்... இந்த டிராஃபிக்கில் அடித்துப் பிடித்து போய் வருவது என்றால் உஃப்... ஹாரிபிள்.. அப்புறம்.. நான் வந்த விஷயத்தை சொல்ல மறந்துவிட்டேனே.. நேரில் வந்து 'இன்வைட்' பண்ணனும்தான்னு நான் வந்தது. பெரியவங்க... அம்மாகிட்டே கொடுத்துவிடட்டுமா ராஜ்...'' என்றவள்...

காபியுடன் வந்த பாக்கியத்திடம் அழைப்பிதழை நீட்டினாள்.

''ஆன்ட்டீ... வர்ற வியாழக்கிழமை என்னோட திருமணம்... நீங்க எல்லோரும் வந்து நடத்திக் கொடுக் கணும்...'' என்றாள் மலர்ந்த முகத்துடன்.

''சௌம்யா அக்காவிடமும் ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன் ராஜ்... அவர்களை கூப்பிடுங்களேன்... என்று ரஞ்சிதா சொல்லுகையில் மொட்டை மாடியில் துணி களை உலர்த்தி விட்டு கீழே இறங்கி வந்து கொண்டிருந் தாள் சௌம்யா.

கூடத்தில் ரஞ்சிதா இருப்பதைப் பார்த்துவிட்டு திகைத்தவள்... கலக்கத்துடன் தம்பி முகத்தையும் பார்த் தாள்...

இருவரும் சந்தித்து விட்டார்களே... இடையே மனத் தாங்கல் எதுவும் இல்லையே... சரி... இவள் எதற்கு வந்தாள்...



ஆறிக் கொண்டிருக்கும் காயத்தைக் கிளறி விடவா... மறக்க நினைக்கும் ஞாபகங்களை நினைவூட்டவா... எல்லாவற்றையும் மறந்து இப்போதான் தேறி வருகிறான் தம்பி... அதைக் கெடுத்து விடுவாள் போல...

'சுள்'ளென்று எழுந்த எரிச்சலை அடக்க சிரமப்பட்டு கொண்டிருந்த சௌம்யாவைப் பார்த்துவிட்டு...

''ஹேய்... சௌம்யாக்கா... ஹௌ ஆர் யூ... என்ன... தம்பியைப் பார்த்த சந்தோஷம் போல.. முகத்தில் ஜொலிப்பாத் தெரிகிறது... இந்த சந்தன நிற உடையில் 'சூப்பரா' இருக்கீங்கக்கா... சரி. நான் வந்த விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். வரும் 'தர்ஸ்டே' கல்யாணம்... கண்டிப்பாய் வரணும்க்கா... நிரஞ்சன் அண்ணாவும் சொல்லச் சொன்னார்க்கா... என் 'வெல் விஷர்' நீங்களாம்... உங்களைக் கண்டிப்பாய் வரச் சொன்னாங்க...'' என்று சொன்னாள்.

''பார்க்கிறேன்... எனக்கு... வேலை...'' என்று தயங்கி... நீட்டிய சௌம்யாவை இடைமறித்தாள் ரஞ்சிதா.

''நீங்கள் வேலையை விடப் போவதாய் ராஜ் சொன்னார்... பின்னே என்னக்கா... லீவு போட்டுவிட்டு... இல்லே... ரிஸைன் பண்ணிவிட்டு... கல்யாணத்திற்கு வந்து விடுங்களேன்... சௌம்யாக்கா... எனக்கு உடன் பிறந்த அக்கா... தங்கைன்னு யாரும் இல்லை. உங் களைத்தான் சகோதரியா நினைக்கிறேன்... எனக்காக வரமாட்டீங்களா... ப்ளீஸ்க்கா... வந்து... எனக்கு அலங் காரம் எல்லாம் நீங்கதான் பண்ணணும்...'' கெஞ்சும் குரலில் கேட்ட அவளை திகைப்புடன் பார்த்தாள் சௌம்யா...

"நானா... நான் எப்படி..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாதுக்கா... என்னை உங்கள் சொந்த சகோதரியா நினைத்து... எனக்குத் துணையா நீங்க இருந்து செய்யணும். ஏன்... செய்யக் கூடாதாக்கா... அந்த அளவு நான் வேண்டாதவளாகிப் போனேனா... என் மீது உங்களுக்கு பிரியம் இல்லை யாக்கா..." லேசாய் கண்கள் கலங்க... அவள் வருத்தத் துடன் கேட்கவும் சௌம்யாவின் உள்ளம் நெகிழ்ந்தது...

"அடடா... என்னம்மா இது... அதற்குள் கலங்கிட்டே. கண்டிப்பாய் நான் வந்து உனக்குத் துணையா இருக் கேன்... போதுமா..." என்றாள் ஆறுதலாய்.

"தாங்க்ஸ்க்கா...! ரொம்ப தாங்க்ஸ்... ராஜேந்திரன் நீங்களும் தான்... 'ஹெல்ப்' செய்யணும். என் அம்மாவும் உடம்புக்கு முடியாமல் இருக்காங்க... அவரால் நடமாட வும் முடியாது... அதனால்தான் உங்கள் எல்லோருடைய உதவியையும் கோருகிறேன்... எனக்குன்னு இருப்பது நீங்கள்தானே... வேறு யாரும் இல்லையே..."

அதைக் கேட்டதும் சௌம்யாவின் உள்ளம் மெழுகாய் கரைந்தது.

"இத்தனை சொன்னப்புறமும் நான் செய்யாமல் இருப்பேனா ரஞ்சிதா... நிச்சயம் கல்யாணத்துக்கு வந்து என்னால் ஆன உதவிகளைச் செய்வேன்... சரி தானே... கல்யாணப் பொண்ணு... நீ சந்தோஷமா இருக் கணும்... தெரியுமா..." என்று பரிவாய் சொன்னாள் சௌம்யா...

அதைக் கேட்டுவிட்டு புன்னகைத்தாள் ரஞ்சிதா.



அவள் விடைபெற்றுக் கொண்டு சென்றதும்... ராஜேந்திரனைத் திரும்பிப் பார்த்தாள்...

அவன் அங்கு இல்லவே இல்லை... தன் அறைக்குள் நுழைந்து கொண்டு விட்டான்.

இருக்காதா... பின்னே... முன்னாள் காதலியாயிற்றே... வலி இருக்கத்தான் செய்யும்...

அதை வெளிக்காட்ட விரும்பாவிட்டாலும்... வேதனை யின் குடைச்சல் இல்லாமலா போகும்.

இந்த ரணம் கொஞ்சம் கொஞ்சமாய் தான் ஆறும்... அவனுக்கு என்று ஒரு பெண் வராமலா இருப்பாள்... அப்படி வந்ததும் எல்லாம் சரியாகி விடும்... மனதுக்குள் சமாதானம் செய்து கொண்டாள் தமக்கை.

ரஞ்சிதாவிற்காகவாவது அந்தத் திருமணத்திற்கு போக வேண்டும் நிரஞ்சனை சந்திக்க வேண்டுமே..

அவன் முகத்தில் வெற்றியின் களிப்பு நிச்சயம் கொழுந்து விடும்... பார்த்தாயா... ஜெயித்து விட்டேன். என் ஸ்டேட்டஸுக்கு ஏற்றபடி மாப்பிள்ளை வந்து விட்டான்... எப்படி! என்பது போலப் பார்ப்பான்... அதை நினைக்கும்போது... கல்யாணத்திற்கு போகாமலே இருந்து விடலாமா என்று கூடத் தோன்றியது...

ஆனால் ரஞ்சிதாவிற்கு வந்து உதவுவதாய் வாக்குக் கொடுத்து விட்டோமே... அதைக் காப்பாற்றவாவது சென்றுதான் ஆக வேண்டும்...

நிரஞ்சனைத் தவிர்த்தால் ஆயிற்று... போனோமா... செய்தோமா... வந்தோமா என்று போய் வந்து விட வேண் டும்... தனக்குள் முடிவு எடுத்தாள்.

# 20



பிரம்மாண்டமான கல்யாண மண்டபத்தில் ரஞ்சிதா கிஷோரின் திருமண வைபவம் நடந்தது... இப்போது வரவேற்பு! அலங்கார ஜோடனை வந்தவர்களை மலைக்கச் செய்தது... செல்வச் சீமான் வீட்டுக் கல்யாணம் என்றால் சும்மாவா...

மண்டபம் முழுக்க 'ஆர்கிட்' மலர் அலங்காரம்... மேடையழகு... தேவலோகமோ என்று சொக்க வைத்தது.

அங்கே... ரம்பையோ.. இல்லை.. ஊர்வசியோ எனும் படி... தேவலோகக் கன்னிகையாய் நின்றிருந்தாள் ரஞ்சிதா... அருகே மிடுக்காய் நின்றிருந்த கிஷோரின் முகத்தில் பெருமிதம்... அவனது கண்கள் அவ்வப்போது கருவண்டுகளாய்... தன் காதலியை தாலி கட்டிய மனைவியை மொய்த்தன.

திருமணத்திற்கு சௌம்யாவும்... ராஜேந்திரனும் வந்திருந்தனர்...

ராஜேந்திரன் வரமாட்டான் என்று நினைத்தவளுக்கு அவன் சகஜமாய் கிளம்பியது பார்த்து வியப்பு...

பரவாயில்லையே... பையன் தேறிவிட்டான் போலும்... இந்தக் காலத்து பசங்களைப் புரிந்து கொள் ளவே முடியவில்லை என்று அம்மா சொல்வதும் ரொம்பவும் சரிதான்.



சரியான அமுக்குனி... என்று எண்ணினாள்.

அது மட்டுமா... திருமணத்தில்... ரஞ்சிதாவின் அருகே சென்று கைக்குலுக்கி... அவளுக்கு வாழ்த்துக் கூறி... கூடவே நின்று வீடியோ கேமிராவிற்கு 'போஸும்' கொடுத்து... உஸ்... மூக்கில் விரல் வைக்காத குறையாய் அதிசயத்துடன் பார்த்தாள் சௌம்யா... அவனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை...

மணப்பெண்ணின் தோழியாய்... ரஞ்சிதாவின் அருகிலேயே இருந்து... அவளைக் கவனித்துக் கொண்டாள் சௌம்யா. வந்திருந்தவர்களின் கண்களில் கேள்வி தெரிந்தது. யார் இந்தப் பெண்... இந்தக் குடும்பத்திற்கு மிக வேண்டியவளா... நெருங்கிய உறவா... இல்லை... ரஞ்சிதாவின் எதிர்கால அண்ணியாக இருக்குமோ... இந்த அளவு ஒட்டி உறவாடுகிறாள் என்றால்... ஏதோ விஷயம் இருக்க வேண்டும்... இந்தத் திருமணம் நடந்தேறியதும்... அடுத்தது வெளிவரும் போல... பார்க்கலாம்... கத்திரிக் காய் முத்தினால்.. கடைத் தெருவுக்கு வந்துதானே ஆகணும் என்று நினைத்தவர்களும் உண்டு.

பொறுக்க முடியாமல்... யாரோ ஒரு வயதான அம்மாள் கண்களை இடுக்கிக் கொண்டு கேட்டாள்.

"நீ இவங்களுக்கு என்னம்மா வேண்டும்... சொந்தமா என்ன... இருக்காதே... கோமளாவிற்கு... அதான்... ரஞ்சிதா வோட அம்மாவிற்கு யார் யாரு சொந்தம்னு எனக்கு நல்லாவே தெரியும்... எந்த வைபவத்திலும் உன்னை நான் பார்த்ததில்லையே... பொண்ணு..."

"நான் ரஞ்சிதாவின் சிநேகிதி..." என்றாள் பதிலாய்.

''ஆங்! அப்படிச் சொல்லு... அதானே பார்த்தேன். பார்க்க அம்சமா இருக்கே... உனக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே போலிருக்கு...'' என்றவளின் கண்கள் சௌம் யாவின் கழுத்தை ஆராய...

சௌம்யா கூச்சத்துடன் நெளிந்தாள்.

''இல்லை... பாட்டி...''

''என்னம்மா இது... பொண்ணுகளுக்கு காலாகாலத்தில் கல்யாணம் நடந்தால் அழகு... உனக்கு சரியான வயசில் ஆயிருந்தா... இத்தனை நேரம் நண்டும் சிண்டுமாய் இரண்டு வால்கள் இருக்கும்... இருக்கட்டும்... இன்னும் காலம் தாழ்த்தாம... சீக்கிரமே கல்யாணம் செய்துக்கோ... என்ன...'' என்று புத்திமதியாய் சொன்னாள் அந்த முதிய பெண்மணி.

''போனதும்... முதல் வேலை அதுதான்...'' என்று வாய்க்குள் முணுமுணுத்தாள் சௌம்யா... கொஞ்சம் எரிச்சலாய்.

''என்னம்மா சொன்னே...''

''நீங்க சொன்னபடியே செய்கிறேன்னு சொன்னேன் பாட்டி...''

''ஆங்... அப்படிச் சொல்லு... உன் தோழி மாதிரியே உனக்கும் கண்ணுக்கு லட்சணமாய் புருஷன் அமை வான்... பாரு... கூடிய சீக்கிரமே வந்து சேருவான்...'' என்று சொல்லிவிட்டுப் பொக்கை வாயை திறந்து சிரித்தபடி நடந்து சென்றாள் அந்தப் பெண்மணி...

''உஃப்...'' என்று பெருமூச்சு விட்ட சௌம்யா 'சட்'டென்று திரும்ப... யார் மீதோ இடித்துக் கொண்டு...



அதனால் நிலை தடுமாறி விழப்போக... 'சட்'டென்று இரண்டு வலுவான கரங்கள் பிடித்துக் கொண்டன.

அடக் கடவுளே... யாரோ ஒரு ஆண் மகன் மீது மோதிக் கொண்டது மட்டுமல்லாமல்... அவனது பிடியில் சிக்கும் படி ஆனதே என்று வெட்கி... முகம் கன்றியவள்... ''சாரி...'' என்றவாறு அந்தப் பிடியிலிருந்து விலகி நின்றாள்.

''ஹலோ... மெல்ல... பார்த்து... நல்லவேளையாய் நான் பிடித்துக் கொண்டேன்... கீழே விழுந்திருந்தால்... அடிபட்டிருக்கும்... அப்புறம் ஔவையார் மாதிரி இடுப்பைப் பிடித்துக் கொண்டு நடக்கும்படி ஆகியிருக் கும்...'' என்று குறும்பாய் பேசிப் புன்னகைத்தவன்... நிரஞ்சன் தான்.

''சாரி... இப்படி தழைய தழையப் பட்டுப் புடவை கட்டி வழக்கம் இல்லையா. அதான்... தடுமாறிப் போனேன்...'' என்றாள் அவள்... சமாளிப்பாய்.

'பிங்க்' வண்ணப் பட்டுச் சேலையில் வண்ண ரோஜாவாய் நின்றிருந்தவளை அப்போதுதான் முதன் முறையாய் பார்ப்பது போல் உற்று நோக்கியவன்... சின்னச் சிரிப்புடன் சொன்னான்.

''சொல்லக்கூடாது என்று நினைத்தாலும்... சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது... சாதாரண புடவை யிலே அழகாத் தெரியும் நீ... இந்தப் பட்டுப் புடவையில் பிரமாதமாய் தெரிகிறாய்... ப்யூட்டி ஃபுல்'' என்று சொல்லி யவனின் பார்வையின் தீர்க்கம் அவளை என்னமோ செய்தது...

அவனது வார்த்தைகளா... இல்லை... அவனது பார்வை யில் தெரிந்த தீவிரமா... அல்லது அவனின் மயக்கும் புன்னகையா... எல்லாமே சேர்ந்தா... தெரியவில்லை....

அவளது இதயத்தில் 'தம்தம்' என்ற அதிர்வு... உடம்புக்குள் 'ஜிவ்'வென்ற மின்னோட்டம்... மனசுக் குள்... ஆயிரம் பட்டாம் பூச்சிகளின் படபடப்பு....

நிரஞ்சன் மெச்சுதலாய் பேசுவான் என்று எதிர்பார்க் காததால் இப்படியோ... முகம் சிவந்து போய் நின் றிருந்தாள் அவள்.

அந்த நேரத்தில் யாரோ ஒருத்தர் அவனை அவசரமாய் அழைக்க... அவனும் விரைந்தான்... அவன் செல்வதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளை... தம்பியின் குரல் தட்டி அழைத்தது.

''என்ன... சௌமிக்கா... இங்கே நின்றிருக்கிறாய்... மணமேடையில் ரஞ்சிதா உன்னை எதிர்பார்க்கிறாள். என்னிடம் கேட்டாள்... அதான் தேடி வந்தேன்... உடனே போ...'' என்றான் ராஜேந்திரன்.

''ராஜேந்திரா... உன்னிடம் ஒன்று கேட்பேன்... மறைக்காமல் பதில் சொல்ல வேண்டும்...'' என்று தம்பியிடம் சொல்ல...

''என்னக்கா...'' என்று கொஞ்சம் வியப்புடன் கேட்டான் ராஜேந்திரன்... இந்தக் கல்யாண வீட்டில்... திடீர் என்று அப்படியென்ன கேட்கும் விஷயம்...

''ரஞ்சிதாவிற்கு யாரோ ஒருத்தனுடன் கல்யாணம் என்ற விஷயம் உனக்கு வேதனையைத் தரவில்லையா... இல்லை... அதை வெளிக்காட்டாமல் மறைக்கிறாயா... ஏன்னா... அவள் இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லைன்னு உயிர் விடத் துணிந்தவனாச்சே நீ... இப்போது எந்தப் பாதிப்பும் இல்லாத மாதிரி வளைய வருகிறாய் என்றால்... அதுதான் எனக்கு ஆச்சர்யமா



இருக்கு. இங்கே சிரித்துப் பேசிவிட்டு... வீட்டுக்கு வந்ததும்... நீ மனசொடிந்து போனால்... அது அம்மாவுக் குத்தான் சங்கடம்டா... அதான் கேட்டேன்...''

பதிலுக்கு சிரித்துவிட்டுச் சொன்னான் அவன்...

''ரஞ்சிதா தனக்கு ஏற்ற ஜோடியைத் தேடிக் கொண்டதில் எனக்கு வருத்தமே இல்லைக்கா... என்ன அப்படிப் பார்க்கிறே... நிஜத்தை தான் சொல்கிறேன் அக்கா... பிரபஞ்சம் ரொம்பப் பெரிசு... இந்தச் சின்ன ஊரில்... திரும்பத் திரும்பப் பார்த்து... பேசிப் பழகியபோது எங்களுடைய சிநேகம் இறுக்கமானது என்று நினைத் தோம்.... அவள் தன்னோட வீட்டின் நிலைமையை... தாயின் குணத்தை... தந்தையின் சாது சுபாவத்தை யெல்லாம் சொல்லும்போது... அதை அக்கறையா கேட்பேன்.... அவளுடைய மனச்சுமைக்கு தோள் கொடுத் தேன்... அதே மாதிரி... அவளுடன் என்னோட எண்ணங் களை... என் எதிர்காலக் கனவுகளை... என் விருப்பு வெறுப்புகளை பகிர்ந்து கொள்வேன்... எதற்கெடுத்தாலும் அவளைத் தேடிச் செல்வேன்... அவளும் தான்... அந்த ஈர்ப்பை நாங்கள் தவறாகப் புரிந்து கொண்டோம் போல... மேனாட்டுக்குச் சென்றதும்.... காதல் வேறு... ஈர்ப்பு வேறு என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது. பரந்து விரிந்த உலகத்தைப் பார்த்ததும்... இங்கிருக்கும் வரை இருந்த எண்ணம் மாறிவிட்டது உண்மைக்கா... பல பேர்களை சந்தித்தபோதுதான் உணர்ந்தேன்... ரஞ்சி தாவும் அதைத்தான் சொன்னாள்... தவிர... நான் சந்தித்தவர்களில் பலபேர்... முப்பது வயதானாலும்... படிப்பில் வேலையில்... திறமையில் சாதிக்க வேண்டும் என்று உத்வேகத்துடன் இருப்பதைப் பார்த்ததும்...

எனக்கு வெட்கமாகி விட்டது. அவர்களைப் பொறுத்த மட்டில் காதலும்... கல்யாணமும் இரண்டாம் பட்சம்தான்...

காதல்... கல்யாணம் எல்லாமே வாழ்க்கையில் ஒரு அங்கம்தான்... வாழ்க்கையில் சாதிப்பது மட்டும் தான் முக்கியம் என்று நினைத்து வாழும் ஜீவிகளைப் பார்த்த எனக்கு... அடச்சே! காதல் மட்டும் தான் வாழ்க்கை என்று நினைத்தோமே என்று உள்ளம் கூசிப் போனேன் தெரியுமா. அதை ரஞ்சிதாவிடம் தெரிவித்தேன். இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொள்வோம். அப்போதுதான் உணர்ந்தோம்... எங்களிடையே இருந்தது காதல் அல்ல... வெறும் கவர்ச்சி மட்டுமே... வி ஆர் நாட் 'மேட் ஃபார் ஈச் அதர்' கப்பிள்னு... அப்போதுதான் அவள் கிஷோர் பற்றி பேசினாள்... இருவரிடையே ஒருமித்தக் கருத்துக்கள்... எண்ணங்கள் இருந்ததால்... வாழ்க்கையில் இணைவது என்ற முடிவுக்கு வந்ததாய் சொன்னாள்... உண்மையில் எனக்கு அப்போது ஆத்திரம் வந்திருக்க வேண்டும். ஊகூம்... பொறாமையில் வெந்திருக்க வேண்டும்... அதுவும் இல்லை. மாறாய்... ரஞ்சிதாவிற்கு நல்ல வாழ்க்கை அமைந்ததில் சந்தோஷம்தான் வந்தது. ஆக... இது காதல் இல்லை... என்று தெரிந்து கொண்டேன் சௌமிக்கா..."

"அப்போ... உனக்குத் திருமண ஆசை ஏதும் இல்லையாடா..."

"அதுக்கு இப்போ என்ன அவசரம்னு தோணுது... செய்ய வேண்டிய கடமைகள் நிறைய இருக்குக்கா... நாலு வருஷம் போய்தான் திருமணம்... முதலில் நல்ல வேலையில் அமர்ந்து... கை நிறைய சம்பாதிக்கணும் என்று



நினைத்தேன். அது நடந்து விட்டது. அம்மாவை மகாராணி மாதிரி வைத்துக் கொள்ள வேண்டும்... உனக்கு... அக்காவுக்கு நிறைய செய்ய வேண்டும்... இந்த நினைப்பு மட்டும்தான் எனக்கு... இப்போ..." என்று சொன்ன தன் தம்பியைப் பார்த்து பெருமிதம் அடைந்தாள் அந்தத் தமக்கை...

"அக்கா... ரஞ்சிதா உன்னை அழைக்கிறாள் பார்..." என்று அவன் சொன்னதும்... மணமேடையை நோக்கி நடந்தாள் சௌம்யா.

அவளைப் பார்த்ததும் "சௌம்யாக்கா... அம்மாவுக்கு நமஸ்காரம் பண்ணனும்.. நீங்கதான் போய் அவங்களை அழைத்து வரணும்... ப்ளீஸ்..." என்று கேட்டுக் கொண்டாள் ரஞ்சிதா.

ரஞ்சிதாவின் தாய் கோமளாவின் உடல் நிலையில் மாற்றம் ஏதும் இல்லாததால்... அறையில் படுத்திருந்தார். அவரிடம் வந்த சௌம்யா... குனிந்து "அம்மா..." என்று மென்குரலில் அழைத்தாள்.

கண்களை மூடிக் கொண்டிருந்த கோமளா... மெல்ல கண்களைத் திறந்து பார்த்தாள்.

அவளைப் பார்த்ததும் சின்னதாய் புன்னகைத்தாள்.

"நீயாம்மா..."

அவருடைய தேவைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்புகளை அவளே ஏற்றுக் கொண்டிருந்ததால்... கோமளாவின் நன்மதிப்பை சௌம்யா பெற்றிருந்தாள்.. எல்லோரிடத்திலும் சிடுசிடுப்பைக் காட்டும் அந்தப் பெண்மணி... சௌம்யாவின் பொறுமையையும் நிதானத்

தையும்... கூடவே கரிசனத்தையும் கண்டு... அவளிடம் இன்முகத்துடன் பேச ஆரம்பித்தது ஆச்சர்யமே...

''அம்மா... மெல்ல எழுந்து உட்காருங்கள்... உங்களை 'வீல் சேரில்' உட்கார வைத்து... மணமேடைக்கு அழைத்துப் போக வந்திருக்கிறேன்... ரஞ்சிதாவும்... உங்கள் மாப்பிள்ளையும் உங்களை நமஸ்கரிக்கணு மாம்...''

''எனக்கா... என்னை மதித்தா.. அழைக்கிறாங்க... நம்ப முடியவில்லையேம்மா...'' கரகரத்த குரலில் சொன்னார் கோமளா.

''என்னம்மா இது... வீட்டுக்குப் பெரியவங்க நீங்க. உங்கள் மீது மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போகுமா...''

''இல்லேம்மா... அந்த மதிப்பை நான் தக்க வைத்துக் கொள்ளவில்லை... அது என் தப்புதான்... பணம் தான் பெரிசு... பணம் மட்டும்தான் பெரிசுன்னு... பணப்பிசா சாய் நடந்து கொண்டேன்... என் கணவரைக் கசக்கிப் பிழிந்தேன்... ஆனால் இப்போ... ஆரோக்கியம் குலைந்து உடம்பு வியாதியில் முடங்கிய போதுதான்... ஒரு மனுஷனுக்குத் தேவை பணமில்லை... ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் தான் என்று தெரிந்து கொண்டேன்... நான் செய்த தப்பை... இல்லை... தப்புகளை நினைத்து கண் ணீர் சிந்தாத நாள் இல்லைம்மா... என் உள்ளக் கசடுகளை... என் கண்ணீரால் கழுவி... சுத்தம் பண்ணிட் டேன்... இதை என் பிள்ளை நம்ப மறுக்கிறான்ம்மா... என் பொண்ணும் சந்தேகப்படுகிறாள். இந்த வயதான காலத்தில்... என் பிள்ளைகளோட அன்பை இழந்து தவிக் கிறேன் பார்... அதுதான் கொடுமையாக இருக்கிற தும்மா...''



''கவலைப் படாதீங்கம்மா... உங்களை நிச்சயம் உங்க மகனும் மகளும் புரிந்து கொள்வார்கள்...''

பெருமூச்சு விட்டார் கோமளா...

''எனக்கு அந்த நம்பிக்கை போய் விட்டதும்மா... நாளுக்கு நாள் அவர்களோட வெறுப்பு தான் வளருகிறது... நான் இறந்த பின்பாவது...''

''சேச்சே... நல்ல நாளும் அதுவுமாய் என்ன பேச்சும்மா... இது... பெத்த தாய் மீது கோபம் இருக்குமே தவிர வெறுப்பு வராது. நீங்க மாறினதுபோல... அவர் களின் மனம் மாறும்... நிச்சயமாய் நம்புங்கள்...''

எழுந்து அமர்ந்த கோமளா... சௌம்யாவின் கரங்களை தன் வற்றிய கைகளால் பிடித்துக் கொண்டு... ''எங்கிருந்தோ வந்திருக்கும் புண்ணியவதி நீ... மனசுக்கு இதமாய் பேசறேம்மா... நீ நல்லா இருக்கணும்...'' என்று சொன்னார்... மனம் நெகிழ்ந்து போய்...

அவரை சக்கர நாற்காலியில் அமர வைத்து... மெல்ல தள்ளிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள் சௌம்யா.

தாயைப் பார்த்ததும் முகம் சுளித்தான் நிரஞ்சன்.

அதைப் பார்த்துவிட்டு கோமளாவின் முகம் வாடியதை சௌம்யாவும் கவனித்தாள்...

அவர் மீது பரிதாபம் வந்தது... நிரஞ்சன் மீது கோபமும் வந்தது... தாயை மன்னிக்காதவர்... இவருக்கு அப்படி யென்ன கோபம்... சமயம் வந்தால் எடுத்துச் சொல்ல வேண்டும்... பாவம்... உங்கம்மா... அவர் முந்தி மாதிரி யில்லை... மாறி விட்டார் என்று சொல்லணும்...

மனசுக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

அந்த சமயமும் வந்தது...

ரஞ்சிதா கொல்கத்தா கிளம்புமுன்... எல்லோருக்கும் விருந்து கொடுத்தாள்...

சௌம்யாவிற்கு சிறப்பு விருந்தினருக்குரிய கௌரவத்தையும் தந்தாள்... தன் வேண்டுதலுக்கு மதிப்புத் தந்து தனக்கு வந்து உதவியவளாயிற்றே...

''அம்மா வரவில்லையா ரஞ்சிதா... அவர் கண்ணில் படவில்லையே...'' என்று விசாரித்தாள் சௌம்யா.

''அண்ணா விரும்பவில்லை... வீட்டிலேயே இருக்கட்டும் என்று சொல்லிட்டார்... போற இடத்துக்கெல்லாம் அவங்களை அழைத்து வருவது சௌகரியப்படாதுன்னு தான்...'' என்று பதில் வந்தது.

உண்மைதான்... அவரால் எழுந்து நடமாட முடியாது. சக்கர நாற்காலியில் முடங்கிக் கிடக்க வேண்டும் தான். ஆனால் அதை அசட்டையாக சொல்ல வேண்டுமா என்று நினைத்தாள் சௌம்யா.

''என்ன யோசனை... சௌம்யா... எந்தக் கோட்டையைப் பிடிக்கும் எண்ணம்...'' கேலிக் குரலில் நிரஞ்சன் கேட்க...

கண்கள் விரிய அவனைப் பார்த்தாள்... கருப்பு நிறத்தில் பேண்ட்டும்... ஆஷ் நிறத்தில் சட்டையும் அணிந்து... வெகு கவர்ச்சியாய் தெரிந்தான் நிரஞ்சன்... அவனது சிரிப்பும் பேச்சும் உள்ளத்தைக் கிளுகிளுக்க வைத்தாலும்...

தாயிடம் சுணங்குகிறானே என்ற நினைப்பில் முகம் வாடினாள்... இவனை எப்படி மாற்றுவது... எதைச் சொல்லிப் புரிய வைப்பது...



''என்ன சௌம்யா... எதையோ நினைத்து தவிக்கிற மாதிரி இருக்கிறது. என்ன விஷயம்...'' என்று கேட்டான் அவன்.

முதலில் தயங்கிவிட்டு... பிறகு சொன்னாள் அவள்.

''உங்களிடம் ஒன்று சொல்லணும்னு நினைக்கிறேன் உங்களது சொந்த விஷயத்தில் நான் தலையிடுவதாய் நீங்க நினைக்கா விட்டால்...''

''அடடா... உனக்கு இல்லாத சலுகையா... கோ... அஹெட்...''

''வந்து... உங்கள் அம்மா மீது இன்னும் நீங்க கோபப்படுவது சரியாகப் படவில்லை நிரஞ்சன். அவர் இப்போது மனம் திருந்தி விட்டார் தெரியுமா... இப்போ அவருக்குத் தேவை... உங்களோட அன்பும்... உங்களோட ஆறுதலான வார்த்தைகள்தான்... அதை ஏன் நீங்கள் தரக்கூடாது...''

சட்டென்று அவன் முகம் இறுகியது.

''பார்த்தீர்களா... சலுகை இருக்கிறது என்று சொல்லிவிட்டு... இப்போது எரிச்சலைக் காட்டுகிறீர்கள்... நாளுக்கு நாள் உடல் நலிந்து கொண்டு வரும் அவர்... இன்னும் எத்தனை நாள் உயிர் வாழ முடியும்... இருக்கும் காலம் வரையாவது கொஞ்சம் இனிமையாய் பேசினால்... கடைசி காலத்தில் சந்தோஷப்படுவார்கள் இல்லையா... அதற்காகத்தான் நான் சொல்வது... இதை ஏற்றுக் கொள்ள முடியுமானால்... செய்யுங்கள்... தாய் என்னும் வஸ்து திரும்பப் பெற முடியாத ஒன்று நிரஞ்சன்... அதைப் புரிந்து கொள்ளுங்கள்... ப்ளீஸ்...'' என்று சொல்லும்போது அவள் குரல் தழுதழுத்தது.

அவன் தலையசைத்தான்.

அதாவது ஏற்றுக் கொள்வதாய் அர்த்தமா... தெரிய வில்லை.




சன்னல் வழியே.. வெளியே தெரிந்த புல் படுக்கையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் சௌம்யா.

நல்ல வேலை கிடைத்து விட்ட தைரியத்தில்... பெரிய ப்ளாட்டை வாங்கி... அதில் குடும்பத்துடன் குடிபுகுந்து விட்டான் ராஜேந்திரன்.

வசதியான ஃபிளாட்... அந்தக் குடியிருப்பில் அத்தனை வசதிகளும் இருந்தன. ஜிம்... பார்க்... ப்யூட்டி பார்லர், ஸ்விம்மிங் பூல்... மசாஜ் சென்டர் என்று அனைத்தும்... அது மட்டுமா...

தாய்க்கும் தமக்கைக்கும் தினுசு தினுசாய் நகைகளும் வாங்கித் தந்தான்.

சந்தானத்திற்கு தொழில் தொடங்க பணம் தந்து உதவினான்... ஆக சொன்னபடியே தன் குடும்பத் தினருக்குச் செய்து விட்டான்.

சந்தோஷத்தில் பாக்கியம் இரண்டு சுற்றுப் பெருத்து விட்டாள்... முகத்திலும் சந்தோஷத்தின் பளபளப்பு... சௌம்யாவும் தம்பியின் வற்புறுத்தலில் வேலையை விட்டாயிற்று...



பொழுதைக் கழிக்க... வீட்டை ஒழுங்குபடுத்தினாள். உள் அலங்காரம் செய்தாள்... புத்தகம் படித்தாள். வீட்டில் எந்தக் குறையும் இல்லைதான்... இருந்தும் ஏதோ சொல்லத் தெரியாத வெறுமை... மனசுக்குள் சூழ்ந் திருப்பது ஏன் என்றுதான் தெரியவில்லை... எதையோ இழந்து விட்டது போல ஒரு தவிப்பு...

பழைய சூழ்நிலையை விட்டு வந்து... புது இடத்திற்கு வந்ததாலா... அலுவலக வாழ்க்கை முடிந்து விட்டதாலா... படித்த படிப்புக்கு பிரயோசனமின்றி வீட்டில் இருக் கிறோமே என்ற ஆற்றாமையாலா... எது காரணம் என்று தெரியவில்லை.

வாழ்க்கை என்னவோ இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருந்தது.

ராஜேந்திரன் தன் தமக்கைக்கு வரன் பார்க்க ஆசைப் பட்டது நிஜம்...

கல்யாணம் என்றாலே எரிந்து விழுகிறாள் உன் அக்கா. அவளாக வாய் திறந்து கேட்கட்டும்... அதுவரைக்கும் சும்மா இருப்பா என்று சொல்லி பிள்ளையை அடக்கி விட்டாள் பாக்கியம்.

'இல்லை... இல்லவே இல்லை... நான் பழைய சௌம்யா இல்லை... என் மனசு மாறிவிட்டது... கல் யாணத்துக்கு நான் தயார்ம்மா...' என்று கத்திச் சொல்ல வேண்டும் போல இருந்தாலும்... தயக்கம் விலங்கு போட்டது. சரி... யாருடன் முன்பின் தெரியாத ஒருவ னுடனா... அய்யோ... நினைக்கவே 'பகீர்' என்கிறதே... வேண்டவே வேண்டாம்...

அவன் பழகியவனாய்... பரிச்சயமானவனாய் இருக்க வேண்டும்... பார்க்க ஆண்மையுடன்... அழகும்

அறிவும்... கம்பீரமும் சேர்ந்து... நிரஞ்சனைப் போல... உடனே மனம் திடுக்கிட்டது... நிரஞ்சனைப் போலவா... அப்படியென்றால்...

கண்களை மூடிக் கொண்டாள். மூடிய கண்களுக்குள் குறும்பாய் புன்னகைத்தான் நிரஞ்சன்...

அப்போதுதான் உணர்ந்தாள். நிரஞ்சனைப் போல இல்லை... நிரஞ்சனையே விரும்புகிறது உள்ளம்... அதைத் தெளிவாய் உணர்ந்தாள் சௌம்யா...

எப்போது வந்த மாயம் இது... ஆண் வர்க்கத்தை வேம் பாய் வெறுத்த நெஞ்சில் அவன் எப்போது அரியாசனம் போட்டு அமர்ந்தான் என்று அவளாலே அறிந்து கொள்ள முடியாத ஒரு மயக்கம்...

இதயத்தின் லயத்துடன் சேர்ந்து மனம் முணு முணுத்தது மனம் விரும்புதே... உன்னை... உன்னை... கண் விழித்தாலும் கனவின் மயக்கம்தான்.

ஆனால் இதை எப்படி வெளிப்படுத்துவது... ஊமை கண்ட கனவு மாதிரி உள்ளுக்குள்ளே மறுக வேண்டி யிருக்குமோ... மனம் தவித்தது.

தன்னைப் போலவே... பெண்களை வெறுப்பவன்... ஆயிற்றே... ஏன்... பெற்ற தாயையும் ஒதுக்கினவனா யிற்றே... ஏதோ ரஞ்சிதாவுக்குப் பிடித்தமானவள் என்பதால் முகம் கொடுத்துப் பேசுகிறான்... மெச்சியும் பேசியிருக் கிறான்... அவ்வளவுதான்... அதனால் அவன் மனசும் மாறி விட்டது... பெண்ணினத்தின் மீதிருந்த வெறுப்பும் போயிருக்கும் என்று நினைத்தால் அது மடத்தனம்...

பெருமூச்சு விட்டாள் அவள்...



தன் காதலை மனப்பேழைக்குள் பொத்தி வைக்க வேண்டும்... அதை வெளிக்காட்ட முடியாது. ஊகூம் காட்டவும் கூடாது...

நிரஞ்சனைப் பார்க்க வேண்டும் என்று உள்ளம் விழைந்தது... அவனைப் பார்த்து நான்கு மாதங்கள் ஆகியிருக்குமா... ரஞ்சிதா தந்த பார்ட்டியில் கடைசியாய் சந்தித்தது.. நா...ன்...கு மாதங்கள்!

அவளது உள்ளத் துடிப்பை தெய்வம் உணர்ந்ததோ தெரியவில்லை.

நிரஞ்சனிடமிருந்து திடீர் என்று போன் வந்தது. தன் தாய் இறந்த செய்தியைத் தெரிவித்தான்.

அடக்கடவுளே... இப்படியா சந்திக்க வேண்டும் என்று வருத்தப்பட்டாள் சௌம்யா... காலம் தாழ்த்தாமல் புறப்பட்டு விட்டாள்.

மரணத்திற்குப் பின் அமைதி என்பதை அந்த இல்லம் சொல்லாமல் சொல்லியது.

வாசலில் துக்கச் செய்தியைக் கேட்டு ஓடி வந்த பந்துக்களும்... நண்பர்களும்... கும்பலாய் நின்றிருந்தனர்.

கோமளாவின் உடல் நடுக் கூடத்தில் படுக்க வைக்கப் பட்டிருந்தது... எல்லாம் முடிந்து போன... வெறும் கட்டையாய்... பூமாலைகளும் ரோஜாக்களும் போர்வை யாய் சாத்தப்பட்டு... நான் வந்த கதை முடிந்து விட்டது என்பது போல...

ஒரு ஓரமாய் நின்று விம்மிக் கொண்டிருந்த ரஞ்சி தாவை அணைத்துக் கொண்டு ஆறுதல் சொன்னாள் சௌம்யா.

அவளது தோளில் சாய்ந்து குலுங்கி அழுதாள் ரஞ்சிதா... அவளது முதுகை இதமாய் தடவிக் கொடுத்த வாறு "ரஞ்சிதா... அழக்கூடாது... தேகநலம் குறைந்து.. அம்மா பட்ட வேதனை இன்னும் தொடர வேண்டுமா... சொல்லு... பட்டப் படுக்கையில் விழுந்து... உடம்பெல் லாம் புண்ணாகி... நினைக்கவே கஷ்டமாக இல்லை. அம்மாவோட இழப்பு தாங்க முடியாதுதான்... ஒத்துக் கறேன்... ஆனால்... எத்தனை நாட்கள் அவரும் கஷ்டப் பட முடியும்... ம்ம்... மனசை தேற்றிக் கொள் ரஞ்சிதா... சின்னக் குழந்தையாட்டம் அழக்கூடாதும்மா" என்று தேற்ற நினைத்தாலும்... சௌம்யாவின் மனசுக்குள்ளும் துக்கம்தான்.

உலகில் தாயோட இழப்பை மட்டும் ஈடு செய்யவே முடியாதுதான். அது தெரிந்த விஷயமும் கூட... ஆனால் அதைச் சொல்ல முடியாதே... துக்கமும் வேதனையும் பொங்கி எழுமே...

"இதோ பார் ரஞ்சிதா... உன் அம்மா எங்கேயும் போக வில்லை... அவரோட ஆத்மா இங்கே... இந்த இடத்தில் தான் சுற்றிக் கொண்டிருக்கும். தன் அன்புக் குழந்தை களை விட்டுப் பிரிய மனமில்லாமல் இங்குதான் இருக்கும்... அழாதே..."

"எனக்கு இதயம் வெடித்து விடும் போல இருக்குக்கா. இருக்கும் வரை அம்மாவிடம் அன்பாய் பேசவில்லை. இப்போது அதுதான் என்னைக் குத்திக் குடைகிறது. என்ன இருந்தாலும் என்னைப் பெற்றெடுத்து சீராட்டி வளர்த் திருக்கிறார்... அதற்காகவாவது அவர்கிட்டே அன்பா இருந்திருக்கலாம்... எல்லாம் என் திமிர்... அம்மாவை மதிக்காமல்... கண்ணீர் உடைப்பெடுத்தது அவளுக்கு...



"உஷ்... அமைதியாக இரு... ரஞ்சிதா... மன்னிப்பது தெய்வீனம்... உங்கம்மா தெய்வமாகிவிட்டார்கள். நிச்சயம் மன்னிப்பாங்க ரஞ்சிதா... அது மட்டுமல்ல... உன் மீது இருக்கும் பாசத்தால், உன் வயிற்றில் குழந்தையாகக் கூடப் பிறக்கலாம்..."

அதைக் கேட்டதும் அவளது கண்களில் வெளிச்சம் தெரிந்தது.

"உண்மையாகவா சௌம்யாக்கா... அப்படியும் நடக்குமா..."

"நிச்சயம் நடக்கும்... பாரேன்..."

"என் அம்மா என் வயிற்றில் பிறந்தால்... என்னைவிட அதிர்ஷ்டசாலி யாரும் இல்லை... இனி அழமாட்டேன் சௌம்யாக்கா... என் அம்மா மீண்டும் என்னிடம் வருவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பேன்..." என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் சௌம்யா கண்களால் நிரஞ்சனைத் தேடினாள்.

அவன் கண்களில் படவில்லை.

"ரஞ்சிதா... உங்க அண்ணா எங்கே... காணோம்... அவரிடம் 'சாரி' சொல்ல வேண்டும்..." என்றாள் சௌம்யா.

ரஞ்சிதா அவன் இருந்த அறையைக் காட்ட... அதை நோக்கி சென்றாள் அவள்.

கட்டிலில் அமர்ந்து எங்கேயா வெறித்த வண்ணம் கல்லாய் அமர்ந்திருந்தான் நிரஞ்சன்.

"ஐம் சாரி நிரஞ்சன்... விஷயம் அறிந்ததும் வேதனைப் பட்டேன்... ராஜேந்திரனுக்கும் இன்ஃபர் மேஷன் கொடுத்திருக்கிறேன்... வந்து விடுவான்..."

அவன் எதுவும் பேசவில்லை...

''கடைசி நேரம்... உங்கள் அம்மாவின் அருகிலேயே இருந்தீர்களா...''

ஆம் என்பது போல தலையசைத்தான்.

''ஏதாவது பேசினார்களா...''

''இல்லை'' என்று தலையாட்டினான்.

''பாவம்... உங்கம்மா.. மனசுக்குள் என்ன நினைத்தார்களோ... உலகில் பெரிய இழப்பு என்றால் அது பெற்ற தாயுடையதுதான்... தாங்க முடியாத இழப்பு அது...''

அவளது வார்த்தைகளைக் கேட்டு நிமிர்ந்தவனின் கண்களில் கசிவு.

அப்போதுதான் வாய் திறந்தான்... உள்ளத்து வேதனையைக் கொட்டினான்.

''என்னால் தாங்க முடியவில்லை சௌம்யா... அம்மாவை ரொம்பவும் தண்டித்து விட்டேன்... எனக்கு மன்னிப்பே இல்லை... அவர் போன பின்புதான் தாயின் அருமையை புரிந்து கொண்டேன்... என்ன செய்வேன்'' என்று தன் கரங்களுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதான்...

''நிரஞ்சன்... ப்ளீஸ்... மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள்...'' என்று சமாதானப்படுத்தினாள் சௌம்யா.

நிமிர்ந்தவனின் கண்களில் ரத்த சிவப்பு தெரிந்தது.

''என் வேதனை உனக்குப் புரியாது சௌம்யா. இறப்பதற்கு முன் என்னை அருகில் வரச் சொல்லி... என் கையைப் பிடித்துக் கொண்டு... கொஞ்ச நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்... அவரது உதடுகள்



என்னை மன்னித்து விட்டாய் தானே... குமாரா என்று கேட்டது போல அசைந்தன... உடனே கண்களை மூடி விட்டார்... அந்தப் பார்வை... கண்களில் தெரிந்த கெஞ்சல்... முகத்தில் இருந்த ஏக்கம் எல்லாமே என்னை வதைத்துக் கொண்டு இருக்கின்றன... நெஞ்சை வாளால் அறுக்கின்றன... சௌம்யா... நான் என்ன செய்வேன்...''

அவனது வேதனையைப் பார்த்து அவளது மனம் துடித்தது.

காணாமல் போன குழந்தையைப் போல தவித்துக் கொண்டிருக்கும் அவனை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல்... அவனது தோளை தன் கரத்தால் தொட்டாள்.

அவ்வளவுதான்... சாய ஒரு தோள் இல்லையென்று ஏங்கினவன் போல்... குழந்தை மாதிரி... நின்றிருந்தவளின் நெஞ்சில் தலை சாய்த்து கண்ணீர் வடித்தான் நிரஞ்சன்.

துக்க மிகுதியில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல்... நெஞ்சில் முகம் புதைத்து அழும் அவனை கையால் அணைத்து.... இன்னொரு கரத்தால்... அவனது கேசத்தை வருடித் தந்த சௌம்யாவின் இதயம் அவனுக்காகப் பரிதாபப்பட்டது... அவனது வேதனையைத் துடைக்க தவியாய் தவித்தது.

சக்கரமாய் சுழன்றது காலம்... கோமளா இறந்து போய் ஆறு மாதங்கள் ஓடியிருக்கும். தொழில் சம்பந்தமாய் சிங்கப்பூர் சென்றிருந்தான் நிரஞ்சன்... மற்றபடி... எந்தவித மாற்றமுமின்றி வாழ்க்கை ஓடியது.

சௌம்யாவுக்குத்தான் வாழ்க்கை அலுத்துப் போனது. எதிலும் சுவாரஸ்யம் இல்லை... முன்னைப்போல ரூபா

வும் தீபாவும் அடிக்கடி வீட்டுக்கு வருவதில்லை... பெரிய வகுப்பு என்பதால் பாடச் சுமை அதிகம் என்ற காரணம்...

இப்போதெல்லாம்... தன்னைச் சுற்றி ஒரு சின்ன உலகத்தை சிருஷ்டித்துக் கொண்டு... அதில் வாழ்ந்தாள் சௌம்யா என்றுதான் சொல்ல வேண்டும்... அந்த உலகில்... அவளும்... நிரஞ்சனும் மட்டுமே... நிரஞ்சனின் நினைவு சஞ்சீவினியாய்... அவனின் வார்த்தைகள் அமிர்தத் துளிகளாய் அவளுக்கு இருந்தன... அவனைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பும்... பார்க்க மாட்டாமோ என்ற தவிப்பும் அவளை ஆட்கொண்டு வதைத்தன. சிங்கப்பூரிலிருந்து எப்போது வருவான் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு... அவன் வந்து விட்டான் என்ற செய்தி அமிர்த தாரையாய் இருந்தது...

ராஜேந்திரன் தான் அந்தச் செய்தியைக் கொண்டு வந்தது...

"அக்கா... நிரஞ்சன் குமார் வந்து விட்டார்... ரஞ்சிதா எனக்குச் சொன்னது... அது மட்டுமல்ல... இன்னொரு 'குட் நியூஸும்' இருக்கு... அது என்னன்னு 'கெஸ்' பண்ணு... பார்ப்போம்..."

யோசித்தாள் சௌம்யா... குட் நியூஸ் என்றால் என்ன வாக இருக்கும்... ஆங்... ரஞ்சிதா விஷயமாக இருக்குமோ...

''தெரிந்து விட்டது... ரஞ்சிதா தாய்மையடைந்திருக்கிறாள் அதுதானே...'' என்றாள் தம்பியிடம்.

"அதுவும் தான்... ஆனால்... அதைத் தவிர வேறொன்று இருக்கிறது..."

''புது கம்பெனியா... ஏதாவது காம்ப்ளெக்ஸா...'' அதுவும் இல்லையா...



''நிரஞ்சன் குமாருக்கு கல்யாணம் 'பிக்ஸ்' ஆகி விட்டது. சீக்கிரமே கல்யாணம்... கண்டிப்பாய் நாம் போக வேண்டும் சௌம்யாக்கா...''

எருதின் வேதனை காக்கைக்குத் தெரியாது என்பது போல... அவளது வேதனையை அறியாமல் ராஜேந்திரன் பேசினான்.

''அவர்கள் 'இன்விடேஷன்' கொடுக்க நாளைக்கே வருகிறார்களாம்... இது சர்ப்ரைஸாக இல்லை.''

அவன் சொல்வதைக் கேட்டு அவளுக்குள் அழுகை வெடித்தது.

தன் அறையை நோக்கி ஓடினாள்... தனிமையில் அழுவதற்கு...

சொன்னபடியே... மறுநாள் வந்து விட்டார்கள்... தட்டில் பூ... பழம்... வெற்றிலை பாக்குடன்... மேலே கர்வத்துடன் அழைப்பிதழ்!

ரஞ்சிதாவிடம் தாய்மையின் பூரிப்பு தெரிந்தது. முகத்தில் ஜொலிப்பும்... கண்களில் தெரிந்த பிரகாசமும் அவளது மகிழ்ச்சியைத் தெரிவித்தன... ஆனந்தமான வாழ்க்கையல்லவா...

நிரஞ்சனைப் பார்க்கவும் சக்தியில்லை அவளுக்கு. இனி அவன் யாருக்கோ சொந்தமாகப் போகிறான்... அவனை நினைப்பதும் தப்பு... நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

அவளை மணக்கப் போகும் பாக்கியசாலி யாரோ... பெரிய தொழிலதிபரின் மகளாக இருக்கலாம்... முக்கிய பிரமுகரின் சீமந்த புத்திரியாகவும் இருக்கலாம்... அவனது அந்தஸ்துக்கு ஏற்றவளாய்...

துக்கத்தில் இதயம் வெடித்து விடும் போல இருந்தது சௌம்யாவிற்கு...

ரஞ்சிதா தட்டை பாக்கியத்திடம் தந்தாள்.

"அழைப்பிதழைப் படித்துப் பாருங்கள் சௌம்யாக்கா... அருமையாக வந்திருக்கிறது..." என்று ரஞ்சிதா சொல்ல...

அசையாமல் நின்றாள் சௌம்யா... கண்ணீர் வரட்டுமா... வந்து விடுவேன்... வந்துட்டேன் என்று வெளிவரத் தொடங்க... முகம் கவிழ்ந்து கொண்டாள் அவள்... யாரும் அதைப் பார்த்துவிடக் கூடாது என்று.

"இரு ரஞ்சிதா... அக்காவிற்கு தயக்கம் போல... நான் படித்துக் காட்டுகிறேன்... ம்ம்... திருமண அழைப்பிதழ்... அன்புடையீர்..."

"முக்கியமானதை மட்டும் படி... ராஜேந்திரா..." என்றாள் பாக்கியம்.

"ஓகே... நிகழும் விரோதி வருடம்... ஆவணி மாதம் 7ம் தேதி... 23.8.2009 ஞாயிற்றுக்கிழமை... சதுர்த்தி திதியில் அஸ்தம் நட்சத்திரமும்.. அமிர்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில்... காலை 10.45க்கு மேல் 11.45க்குள்... சிரஞ்சீவி நிரஞ்சன் குமார் என்ற வரனுக்கும்... சௌபாக்கியவதி சௌம்யா என்ற கன்னிகைக்கும் திருமணம்..."

'விலுக்'கென்று தலை நிமிர்த்திப் பார்த்தாள் சௌம்யா.

சௌம்யாவா... சௌம்யா என்றா சொன்னான். ஒரு வேளை... மணப்பெண்ணின் பெயரும் அதுதானா... இருக்கலாம்... நான் ஒருத்திதான் சௌம்யாவா... என் பெயரில் எத்தனையோ பேர் இருக்கலாமே... மனமே.. ஆசையில் துள்ளாதே... மனதை அடக்கிக் கொண்டாள்.



"இப்படிக்கு... தங்கள் வரவை ஆவலுடன் எதிர் பார்க்கும்... ராஜேந்திரன்... பாக்கியம்... ரஞ்சிதா..."

சௌம்யா சிலையாகிப் போனாள்... தானா... மணப் பெண்ணா... எப்படி... கண்களை விரித்து... பிரமித்துப் போய் நின்றிருந்தவளைப் பார்த்து ராஜேந்திரன் விஷம மாய் புன்னகைக்க... ரஞ்சிதா கண்களை சிமிட்டினாள்...

'எப்படி எங்களின் சஸ்பென்ஸ்...' போல... அவர்களின் முகத்தில் வெற்றிக் களிப்பு....

அம்மாவும் இவர்களுடன் சேர்ந்து விட்டாள் போலும்...

அம்மா முகத்திலும் அதே...

எல்லோரும் சேர்ந்து என்னை அல்லாட வைத்து விட்டார்களே... அந்த அளவு முட்டாளாகிப் போனோமே என்று நினைத்தாலும்... நெஞ்சில் தேனின் தித்திப்பு...

ஆனந்தத்தில் இதயம் துடிக்க... மேனியில் சந்தோஷ சிலிர்ப்பு உண்டாக... நிரஞ்சனை ஏறிட்டாள். அவனும் கண்களில் குறும்பும் உதடுகளில் விஷமமும் தெரிய அவளைப் பார்த்தான். அந்தப் பார்வையில் அவள் முகம் சிவந்தாள். அவளது நிலையைப் பார்த்துவிட்டு எல் லோரும் 'ஓ'வென்று கைத்தட்டிச் சிரிக்க... வெட்கத்தில் முகத்தின் சிவப்புக் கூடியது.

"சௌம்யாக்கா... என்ன... இன்னும் பிரமிப்பு தீரவில் லையா... சிலையாட்டம் நிற்கறீங்க..." என்று பரிகாசம் செய்தாள் ரஞ்சிதா.

"சௌம்யாக்காவா... சரியாப் போச்சு... உறவு முறையை மாத்திடாதேம்மா... அபத்தமா படும்" என்று கேலி செய்தான் ராஜேந்திரன்.

''அதானே... இனி அண்ணின்னே கூப்பிடுகிறேன். போதுமா... ஆமாம்... அண்ணாகிட்டேயிருந்து என்ன பேச்சு மூச்சைக் காணோம்... அவருக்குமா பிரமிப்பு...''

''அட மக்கு... இத்தனை பேர் சுத்தி நின்னா... எப்படிப் பேசுவார்... வாங்க போகலாம்... இருவரும் தனிமையில் பேசிக் கொள்ளட்டும்... மனசுக்குள் நம்மைத் திட்டக் கூடாது பார்...'' என்று ராஜேந்திரன் சொல்ல... அனைவரும் அங்கிருந்து சென்றனர்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் மௌனமாய் நின்றிருந்தனர்.

யார் முதலில் ஆரம்பிப்பது என்று தெரியாமல்...

## 22



தன் நெஞ்சில் சாய்ந்திருந்த சௌம்யாவிடம் மென்மையாய் வினவினான் நிரஞ்சன்...

''என்னை மணக்க சம்மதமா... சௌம்யா...'' அதைக் கேட்டு விட்டு 'கலீர்' என்று சிரித்தாள் அவள்.

நிரஞ்சன் வியப்புடன் பார்த்தான்...

''இந்தக் கேள்வியே விசித்திரமாய் இருக்கிறது நிரஞ்சன். என்னைக் கேட்காமலே அழைப்பிதழை அச்சிட்டு விட்டு... என்னைக் கேட்காமலே அதை எங்கள் வீட்டில் தந்துவிட்டு... இந்தக் கேள்வியைக் கேட்டால்... என்ன



சொல்வேன்... முதலில் இந்தக் கேள்வியே தப்பு... இப்படி உங்கள் மார்பில் சாய்ந்து கொண்டிருக்கிறேனே... இதிலிருந்து தெரியவில்லை... எனக்கு மனப்பூர்வமாய் சம்மதம் என்று...''

''என்ன செய்வது... சௌமி... நீ அருகில் இருந்தால் வாய் வார்த்தைகள் கூட அர்த்தமில்லாமல் வருகிறது. அதைவிடு.. எனக்கு ஒன்று தெரிந்தாக வேண்டும். ஆண்கள் என்றாலே சுட்டெரிப்பது போல் பார்ப்பாயே இப்போது அந்த மாதிரி கோபம் எதுவும் இல்லையா... இல்லை... நான் மட்டும் விதிவிலக்கா...''

''எனக்கும் அதுதான் வியப்பு... எப்படி மாறினேன்... எப்போது அது நடந்தது என்று தெரியாமல் எனக்குள் வந்த மாற்றம்... நிரஞ்சன்... ஆரம்பத்தில் உங்க மீதிருந்த கோபம்... எரிச்சல் எல்லாமே நீர்த்துப் போய்... அது பின்பு காதலாய் மாறியது என்று நினைக்கிறேன். சரி.. அவ் விடத்தில் எப்படியோ...'' என்று சுட்டு விரலால் அவனது இதயப் பகுதியை தொட்டுக் கேட்டாள்.

''எனக்கும் அதே ஆச்சர்யம்... பெண்கள் என்றாலே விஷம் என்று நினைக்கும் நானா இப்படி அடியோடு மாறி விட்டேன் என்ற வியப்பு. அது எப்படி என்பது தான் புரியாத புதிராய் இருக்கிறது... அம்மா மீது இருந்த வெறுப்பு... கழண்டு ஓடிய காதலியிடம் கண்ட கசப்பு... இவைதான் பெண்களைப் பார்த்தால் முகம் சுளிக்கச் செய்தன... பெண்கள் எல்லோரும் பணப் பிசாசுகள் பணம் மட்டுமே அவர்களது குறி என்றெல்லாம் எண்ணியிருந்தேன்... ஆனால் நீ பணத்தை துச்சமாய் நினைத்தாய்... என்னிடமிருக்கும் பணத்திற்காக என் மீது விழுந்து

பழக நினைத்த பெண்கள் மத்தியில்... நீ மட்டும் வித்தியாசமாய் தெரிந்தாய்... நான் பணக்காரன் என்று தெரிந்தும் பணியாமல் நிமிர்ந்து நின்றாய் பார்... உங்கள் பணத்தை எடுத்து குப்பையில் போடுங்கள் என்றாய் பார்... அப்போதே நீ மற்ற பெண்களைப் போல இல்லை என்று நினைத்தேன்... பெண்களில் நல்லவர்களும் இருக்கிறார் கள் என்பதை உன் அம்மாவின் சகிப்புத் தன்மை... உன் அக்காவின் பொறுமை... உன் சுயமரியாதை இவற்றைப் பார்த்து உணர்ந்தேன்... என் மனமாற்றத்திற்கு இது மட்டுமே காரணம் என்று சொல்ல மாட்டேன்... என் தங்கையிடம் நீ காட்டிய அன்பு... என் தாயிடம் நீ காட்டிய அக்கறை இவையும் தான்..."

"உண்மையாகவா..." என்ற அர்த்தத்தில் விழிகள் விரியப் பார்த்தவளை இறுக அணைத்து... நெற்றியில் உதடுகளைப் பதித்துவிட்டு தொடர்ந்தான் அவன்.

"உண்மைதான் சௌமி... அன்று என் தாய்க்காக வாதாடினாய் பார்... அன்றே என் மனதில் சலனம்... என் தாயை இழந்து தவித்த அன்று... என்னை அரவணைத்து ஆறுதல் சொன்னாயே... அப்போதான் உணர்ந்தேன்... எனக்கு நீ வேண்டும்... எப்போதும் என்னுடன் இருக்க வேண்டும்... நீயில்லாமல் நான் வாழ்வதில் அர்த்த மில்லை என்று உணர்ந்தேன்."

"ஓகோ... அதனால்தான் என்னைப் பார்க்க கூட வரவில்லை போல... என்னை விட்டுப் பிரிந்து இருக்க சாத்தியமில்லை என்று நினைத்தவர்... அதெப்படி சிங்கப் பூருக்கு போனீர்களாம்..." என்று பொய்க் கோபத்துடன் கேட்டாள் சௌம்யா.



"உடனே ஓடி வந்து என் காதலை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற வேகம் வந்தது. ஆனால் அதற்கான நேரம் அதுவில்லையே சௌம்யா... அம்மா இறந்ததும் உடனே சொன்னால்... நீ என்ன நினைப்பாய்... என்ன மனுஷன் இவன்... பெற்ற தாய் செத்து நாட்களும் கழிய வில்லை... அதற்குள் காதல் என்று பிதற்றுகிறானே... இவனுக்கு மனுஷத்தன்மையே இல்லையே என்று நீ முகம் சுளிப்பாயே என்றுதான் வரவில்லை. என் கவனத்தை தொழிலில் மும்முரமாய் செலுத்தினால் பரவாயில்லை... வேதனையை மறக்க முடியும் என்று தான் சிங்கப்பூருக்குச் சென்று விட்டேன். ஆறு மாதமாவது விலகி இருக்கலாம் என்று இருந்தேன். கஷ்டமாகத்தான் இருந்தது... என் அம்மா உயிருடன் இருந்திருந்தால் நிச்சயம் உன்னை இருகரம் நீட்டி மருமகளாய் ஏற்று இருப்பாள்... அந்த அளவு உன் மீது அவருக்குப் பிரியம் தெரியுமா. என்னிடம் உன்னைப் பற்றி புகழ்ந்து பேசி னார்... என் மனைவியாய் நீ வருவதை என் தாயின் ஆத்மாவும் விரும்பும். வருடம் கழிய வேண்டும் என் பார்கள்... ஆனால் அதுவரை என்னால் காத்திருக்க முடியாது சௌமி... தனிமை என்னை வாட்டி வதைக்கிறது. சீக்கிரமே நம் திருமணம் நடக்க வேண்டும் என்றுதான் இப்படிச் செய்தேன்... உனக்கு மறுப்பேதும் இல்லையே..."

இல்லை என்று தலையசைத்தவள் திடீர் என்று நினைத்துக் கொண்டு கேட்டாள்.

"ஆமாம்... இந்த 'சஸ்பென்ஸ்' விஷயம் யாருடைய ஐடியா... எதற்காக இந்த டிராமா... எப்படித் தவித்துப் போயிட்டேன் தெரியுமா..."

அவளது கன்னத்தில் விரலால் கோலமிட்டபடி பதில் தந்தான் நிரஞ்சன். அந்த ஸ்பரிசத்தில் மெய் சிலிர்த்ததை உணர்ந்தாள் அவள்.

''ரஞ்சிதாவிற்கு எப்படியோ என் காதல் விஷயம் தெரிந்து விட்டது... உடனே ராஜேந்திரனுக்கு தெரிவித்து விட்டாள்... உன் விஷயம் என்ன என்று தெரிந்து கொள்ளும் ஆவல் அவளுக்கு... ராஜேந்திரனை விட்டு கூர்ந்து கவனிக்கச் சொன்னாளாம்... எங்கோ வெறிப்பது... எதையோ நினைத்துச் சிரிப்பது... தனிமையில் இனிமை காண முயன்றது போன்ற காதல் சிம்டம்ஸ் உன்னிடம் இருப்பதைப் பார்த்துவிட்டு ராஜேந்திரனுக்கும் நம்பிக்கை வந்ததாம். அதை கன்ஃபர்ம் செய்து கொள்ள வேண்டி... என் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது என்று சொல்லியிருக்கிறான். அதைக் கேட்டதும் உன் முகம் சூம்பி விட்டதாம்... அதனால் தைரியமடைந்து என்னிடம் பெண் கேட்டு வரலாமே என்றான் அவன்... ரஞ்சிதா.. உன்னை சீண்டிப் பார்க்கவேண்டும் என்ற முடிவில், அழைப்பிதழை அச்சடித்து விட்டாள்... இந்த விஷயத்தில் ராஜேந்திரனும் உடந்தை... நானில்லைம்மா...''

''அது சரி... கல்யாணத்தை இவ்வளவு சீக்கிரம் வைத்து விட்டீர்களே நிரஞ்சன்... ஏற்பாடுகளைப் பண்ண வேண்டாமா...''

''அந்தக் கவலையெல்லாம் உனக்கு வேண்டாம்... அதெல்லாம் என் பொறுப்பு... உதவிக்கு ராஜேந்திரன் இருக்கிறான்... உன் சிந்தையில் என் நினைப்பு மட்டும் இருந்தால் போதும்... தெரிந்ததா...''

''ப்ச்சு.. அது முடியாதே...''



''எது... என் நினைப்பா...''

''பின்னே... தூங்கும்போது உங்களை எப்படி நினைக்க முடியும்... ஊகூம்... இம்பாஸிபிள்...'' என்றாள் கேலி யாய்...

''ஏன் முடியாது... உன் கனவில் வந்துவிட மாட் டேனா...'' என்று அவன் விடாமல் சொல்ல... அவள் சிரித்தாள். முல்லைப் பற்கள் தெரிய அவள் சிரிக்கும் அழகை ரசித்தவன்... அவளது வதனத்தை கரங்களில் ஏந்தி... ''வரண்டு போன என் வாழ்க்கையில்... வசந்தமாய் வந்தவள் நீ... உன்னை சந்திக்க வைத்த அந்த இறைவ னுக்கு கோடிமுறை நன்றி சொல்வேன்... அவன் தானே உன்னை என் கண்களில் பட வைத்தது...'' எனும்போது...

அறைக்கதவு படார் என்று திறந்தது...

''இல்லவே இல்லை... நீங்கள் ரெண்டு பேரும் சேருவதற்குக் காரணம் நாங்கள்தான். எங்களால்தான் நீங்கள் சந்தித்தது... எங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்...'' என்று ராஜேந்திரனும்... ''கரெக்ட்... நாங்கள் வந்திருக்கா விட்டால்... நீங்கள் சந்திப்பதேது... சண்டை போடுவதேது... சமாதானமாவதேது... இப்படிக் காதலில் சிக்குவதேது...

கடைசியில் கல்யாணத்தில் இணைவதேது. உங்கள் காதலுக்கு பிள்ளையார் சுழி போட்டதே நாங்கள். எங்களுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டுமாக்கும்..'' என்று ரஞ்சிதாவும் கத்திவிட்டு... இருவரும் கரங்களைத் தட்டிக் கொள்ள...

சட்டென்று நிரஞ்சனும் சௌம்யாவும் விலகி நின்றனர்...

''மைகாட்... கொஞ்சமும் விவஸ்தை இல்லாமல்... எங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா... என்ன'' என்று கேட்டான் நிரஞ்சன்.

''பின்னே... எங்களுக்கு நன்றி சொல்வீங்கன்னு எதிர்பார்த்தால்... எங்களைப் பற்றிய பேச்சே இல்லையே... அதான்... உள்ளே புகுந்து விட்டோம்... இப்போ... நாங்க வெளியே போக வேண்டும் என்றால்... எங்களுக்கு நன்றி தெரிவித்தால்தான் உண்டு... எப்படி வசதி...'' என்று அழிச்சாட்டியமாய் சொன்னாள் ரஞ்சிதா...

''அம்மா தாயே,... உனக்கும் நன்றி... ராஜேந்திரனுக்கும் கோடி நன்றி... உங்க ரெண்டு பேரால்தான் நாங்க சேர்ந்தது போதுமா...'' என்று கையெடுத்துக் கும்பிட்டான் நிரஞ்சன்.

''அப்படி வாங்க வழிக்கு... இனிமேல் ஒவ்வொரு...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவள்... அண்ணன் கோபத்தில் முறைப்பதைப் பார்த்துவிட்டு...

''ஓகே... ஓகே... நாங்க போகிறோம்... உங்க காதல் ஸீனைத் தொடருங்க...'' என்று கூறிவிட்டு கதவை மூடினாள்... வெளியே இருவரும் உரக்க சிரிப்பது கேட்டது...

உள்ளே... காதல் சீனும் தொடர்ந்தது... கொழு கொம்பைச் சுற்றி பைங்கொடி ஒன்று காதலுடன் படர ஆரம்பித்தது...